வரு.75 இல. 39 ★

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.vaaramanjari.lk

24 பக்கங்கள் 100/-

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் වාරමංජරී

2023 ஒக்டோபர் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

October 01 Sunday, 2023










/Thinakaran.lk /ThinakaranLK















2024 இல் பயனுள்ள பிரதிநிதித்துவத்தை வழங்கும் ஒரு புதிய சர்வதேச திட்டத்துக்காக

# எம்மிடம் வளங்கள், தீர்வுகள் உள்ளன; எமக்கு தேவை உறுதிப்பாடு மட்டுமே

## இதற்கு மேற்குலகுக்கும் சீனாவுக்குமிடையே ஆக்கபூர்வமான உரையாடல் தேவை

## Berlin Global மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு




- பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் வழங்கிய ஒத்–துழைப்புக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவிப்பு
- அமெரிக்கா – சீனாவுக்கும், ஐரோப்பிய ஒன்றியம் – சீனாவுக்குமிடையேயும் ஆக்கபூர்வமான உரையாடல்கள் தேவை

முழு விபரம் பக்கம் 02 இல்

நீதவான் சரவணராஜா பதவி விலகல்;

## இராஜினாமா கடிதம் இன்னமும் கிடைக்கவில்லை

### நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு



உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவியை இராஜினாமா செய்த முல்லைத்தீவு மாவட்ட நீதவான் ரி.சரவணராஜா வின் பதவி விலகல் கடிதம் தமக்கு இதுவரையில் கிடைக்கவில்லையென, நீதி அமைச்சர் விஜேயதாச 06

## முல்லைத்தீவு மாவட்ட நீதவானை சட்ட மாஅதிபர் அழைத்தது ஏன்....?

### நீதிச்சேவைகள் ஆணைக்குழு விளக்கம்

முல்லைத்தீவு நீதவான், சட்ட மாஅதிபர் திணைக் களத்துக்கு அழைக்கப்பட்டமையானது, அவரது வழக்கு விசாரணையொன்றுக்கு அவர் சார்பாக நீதி மன்றத்தில் ஆஜராகவுள்ள சட்டத்தரணியு டன் கலந்தாலோசிப்பதற்காகவே தவிர, 06

Judicial Service Commission

### ஜனாதிபதி–ஜேர்மன் அதிபருக்கிடையே சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜேர்மன் அதிபர் ஓலாஃப் ஷோல்ஸ் (Olaf Scholz) ஆகியோருக்கிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு பேர்லின் நகரில் கடந்த வியாழக்கிழமை (28) நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம். ஜேர்மன் அதிபர் ஓலாஃப் ஷோல்ஸ் தலைமையில் நடைபெற்ற 'பேர்லின் குளோபல்' மாநாட்டுக்கு இணைந்ததாக நடைபெற்ற இந்தச் சந்திப்பையடுத்து, 'பலமுனை உலகில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல்' தொடர்பான அரச தலைவர் கலந்துரை யாடலிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார்.

முல்லைத்தீவு நீதவான் சரவணராஜா பதவி விலகல்;

## முழுமையான விசாரணையை நடத்துமாறு ஜனாதிபதி பணிப்பு

### சம்பவத்துக்கான மூல காரணத்தை கண்டறியுமாறு செயலாளரிடம் கோரிக்கை

முல்லைத்தீவு குருந்தூர்மலை விஹாரை தொடர்பான முறைப்பாடு களை விசாரணை மேற்கொண்டுவரும் முல்லைத்தீவு நீதவான் ரி.சரவணராஜா தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதா கக் கூறி பதவி விலகியமை தொடர் பாக முழுமையான விசார ணையை மேற்கொள்ளுமாறு 06

## சரவணராஜாவை தொடர்பு கொள்ள முடியாதுள்ளது


### சட்டத்தரணிகள் சங்க முன்னாள் தலைவர் சாலிய



தற்போது பதவி விலகி நாட்டை விட்டு வெளியேறி யுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் ரி.சரவண ராஜாவை தொடர்பு கொள்ள முடியாதுள்ளதாக, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் 06

மூத்த பத்திரிகையாளர்

## எட்மண்ட் ரணசிங்கவுக்கு பாராட்டு விழா



இலங்கையின் சிரேஷ்ட பத்திரி கையாளரும் 'திவயின' நாளிதழின் ஸ்தாபக ஆசிரியரும் ஆசிரியர்பீட பணிப்பாளருமான எட் மண்ட் ரணசிங்கவை 06

நாட்டில் சீரற்ற காலநிலை தொடரும்;

## நீர்நிலைகளில் நீர் மட்டங்கள் அதிகரிப்பு

### பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுவிப்பு



நாட்டில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக வளவ கங்கை, களு கங்கை மற்றும் சமனலவெவ நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் அதி கரித்து வருவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இதனால் பம்பஹின்ன, சமன லவெவ மற்றும் கல்தொட்டவினூ டாக கூரகல புனித பூமி மற்றும் தப்தர் ஜெய்லானி பள்ளிவாசல், தூவிலி எல்ல போன்றவற்றை பார்வையிட வரும் பொதுமக்கள் மிகவும் 06

அமைச்சர் பந்துல மீது அவதூறு குற்றச்சாட்டு;

## ரயில் சாரதி இந்திக்கவுக்கு நீதிமன்றம் தடையுத்தரவு

### பொய் பிரசாரங்களை மேற்கொண்டால் நடவடிக்கை



போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊட கத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன வுக்கு எதிராக பொய் குற்றச்சாட்டுகளை சுமத்தி அவரது 06

## முன்னாள் சபாநாயகர் நல்லூரில் வழிபாடு



யாழ்ப்பாண மாவட்டத்துக்கு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய உத் தியோகபூர்வ விஜயத்தை நேற்று முன்தி னம் (29) மேற்கொண்ட போது நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலும் வழி பாட்டில் ஈடுபட்டார். 06

வாரமஞ்சரி

## எங்கள் கருத்து

## தாயக நலன்களை மறந்த சுயநலம்!

இலங்கையர்களில் ஏராளமானோர் மேற்குநாடுகளுக்கு புலம்பெயர்வதில் இப்போது அதிக நாட்டம் கொண்டுள்ள தைக் காண முடிகின்றது. எமது மக்களில் பலர் கனடாவுக் குச் சென்று வாழ்வதில் அதிக விருப்பம் கொண்டுள்ளனர். அவர்கள் அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். பலர் ஏற்கனவே கனடா உட்பட பல நாடுகளுக்குச் சென்றும் விட்டனர்.

யுத்தம் உச்சத்தில் நிலவிய காலகட்டத்தில் வடக்கு, கிழக் கில் இருந்து தமிழர்கள் இவ்வாறுதான் மேற்குநாடுகளுக்குப் படையெடுத்தனர். அதற்கான காரணம் வேறாகும். உயிர்ப் பாதுகாப்பு ஒன்றுதான் அவர்களது நோக்கமாக இருந்தது. வேறெந்தக் குறிக்கோளும் இன்றி யுத்த அகதிகளாகவே அவர்கள் அன்று புலம்பெயர்ந்தனர்.

ஆனால் இலங்கையில் இன்று யுத்தம் என்பது இல்லை, அமைதிச் சூழல் நிலவுகின்றது. இவ்வாறான சூழலில் ஏராள மானோர் மேற்குநாடுகளுக்குப் படையெடுப்பதில் ஆர்வம் காட்டுகின்றனரென்றால், அதற்கு ஒரேயொரு காரணம்தான் உள்ளது. பொருளாதாரத்தை வலுப்படுத்திக் கொள்வதற்கா கவே அவர்கள் மேற்குநாடுகளில் வாழ்வதற்கு ஆசைப்படுகின்றனர். 06

## இலங்கைத் தமிழர் நலன் பேணும் ஆலோசனைக் குழுவின் அறிக்கை

### தமிழக முதல்வர் ஸ்டாலினிடம் வெள்ளியன்று கையளிப்பு



திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது

இலங்கைத் தமிழர் நலன்களை பேணும் ஆலோசனைகளை அளிப் பதற்காக அமைக்கப்பட்ட குழு வினர், தமது இடைக்கால அறிக் கையை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினிடம் 06

## பெண் பயணியின் நகைகளை திருடிய விமான நிலைய அதிகாரி

### ஸ்கானிங் இயந்திர பரிசோதனை அதிகாரி கைது



வெளிநாடு செல்வதற்காக வருகை தந்த பெண் ஒருவரின் தங்க நகைகளை திருடிய குற்றச்சாட்டில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் 06

மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில்

## பொதுமக்களின் கருத்து பெற நடவடிக்கை

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு முடிவு

இம்மாதம் (ஒக்டோபர்) முதல் அமுல்படுத்தப்படவுள்ள மின்சார கட்டண திருத்தம் 06

Public Utilities Commission of Sri Lanka (PUCSL)

## சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர்தினம் இன்று

### அலரிமாளிகையில் நிகழ்வு



2023ஆம் ஆண்டுக்கான சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வு பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் அலரி மாளி கையில் இன்று 06

**"2024ஆம் ஆண்டு என்பது நாம் செயற்பட வேண்டிய ஆண்டு. இன்றைய உலகளாவிய யதார்த்தங்களை சிறப்பாக பிரதிபலிக்கும் மற்றும் தேவைப்படுபவர்களுக்கு பயனுள்ள பிரதிநிதித்துவத்தை வழங்கும் ஒரு புதிய சர்வதேச திட்டத்தை நாம் கொண்டுவர வேண்டும். அதனை நாம் முன்வைக்க வேண்டும். எங்களிடம் வளங்கள் உள்ளன, எங்களிடம் தீர்வுகள் உள்ளன. அவற்றை செயற்படுத்துவதற்கான உறுதிப்பாடே எங்–களுக்கு தேவை"**



## 2024 இல் பயனுள்ள பிரதிநிதித்துவத்தை வழங்கும் ஒரு புதிய சர்வதேச திட்டத்துக்காக

# எம்மிடம் வளங்கள், தீர்வுகள் உள்ளன; எமக்கு தேவை உறுதிப்பாடு மட்டுமே

## இதற்கு மேற்குலகுக்கும் சீனாவுக்குமிடையே ஆக்கபூர்வமான உரையாடல் தேவை

### Berlin Global மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு

நாம் அதனை விரைவாக செய்ய வேண்டும். இதற்கு மேற்குலகுக்கும் சீனாவுக்குமிடையே ஆக்கபூர்வமான உரையாடல் தேவை. அமெரிக்காவுக்கும் சீனாவுக்குமிடையே ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை தேவை. அத்துடன், ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் சீனாவுக்குமிடையே ஆக்கபூர்வமான உரையாடல் தேவை. இல்லையென்றால் நாம் முன்னேற முடியாதென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜேர்மனியின் பேர்லின் நகரில் கடந்த வியாழனன்று (28) நடைபெற்ற 'பேர்லின் குளோபல்' (Berlin Global) மாநாட்டின் முதல் நாளில் அரச தலைவர்களுக்கான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாடிய போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றிய போது,

2024ஆம் ஆண்டு உலகளாவிய சவால்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய வலுவான சர்வதேச திட்டமிடலுக்காக மேற்குலக நாடுகளும், ஐக்கிய அமெரிக்காவும், ஐரோப்பிய சங்கமும் சீனாவுடன் தீர்மானமிக்க கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டிய தன் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

அதேபோல் 'ஒரே தீர்மானம் ஒரே பாதை' என்ற கூட்டு வேலைத்திட்டத்தின் காரணமாக இலங்கை போன்ற நாடுகள் மீது ஏனைய நாடுகள் சந்தேக கண்ணோட்டத்தை செலுத்தியுள்ளதாகவும் இதனால், தெற்குலக பொருளாதார செயற்பாடுகளுக்கு தாக்கம் ஏற்படக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இலங்கை போன்ற நாடுகள் அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகளிலிருந்து வரும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க பழகியுள்ளதாகவும் அது புதியதொரு விடயமல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகள் இலங்கைக்கு வழங்கியிருந்த ஒத்துழைப்புக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

இம்மாநாட்டில் ஜேர்மன் சான்ஸலர் ஒலாப் ஸ்கொல்ஸ் (Olaf Scholz), பெல்ஜியம் பிரதமர் அலெக்சாண்டர் டீ குரூ (Alexander de Croo), கசகஸ்தான் ஜனாதிபதி கெசெம் – ஜோமார்ட் டோகயெவ் (KassymJomart Tokayev), ஐரோப்பிய கவுன்ஸில் தலைவர் சார்ள்ஸ் மிஷெல் (KassymJomart Tokayev) உள்ளிட்டவர்களுடன் பல நாடுகளின் தலைவர்கள், வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் உலகளாவிய ரீதியிலுள்ள பொருளாதார கொள்கை மற்றும் நிதிமயமாக்கல் நிபுணர்களும் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

முதலாவதாக இந்த மாநாட்டில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்த பேர்லின் உலகளாவிய கலந்துரையாடலின் தலைவர் பேராசிரியர் ரொஷ்லெட் அவர்களுக்கு நன்றி. கடந்த இரு தசாப்தங்களாக உலக பொருளாதாரம் பெரும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றது. 2008ஆம் ஆண்டு ஐரோப்பா கடன் நெருக்கடிக்கு முகம்கொடுத்திருந்தது.





## பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் வழங்கிய ஒத்துழைப்புக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவிப்பு



அதனையடுத்து COVID19 பரவல் மற்றும் காலநிலை அனர்த்தங்கள் உள்ளிட்ட பாதிப்புக்களின் விளைவாக இறையாண்மைக் கடன் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது. அண்மைய வரலாறுகளில் இவ்வாறானதொரு நிலைக்கு ஒருபோதும் முகம்கொடுத்திருக்கவில்லை என்பதோடு, இவ்வாறான நெருக்கடிகள் வரும்போதெல்லாம் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளே பெருமளவில் பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்தன.

அதிக பணவீக்கம், எண்ணெய் விலை ஒரு கொள்கலனுக்கான விலை 100 அமெரிக்க டொலர்களாக உயர்வடைதல், உலக வங்கியின் நிதி மட்டுப்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு நாம் முகம்கொடுத்துள்ளோம். இலங்கையின் ஐரோப்பாவுக்கான ஏற்றுமதியில் இவ்வருடம் வரையில் எவ்வித அதிகரிப்பும் இல்லாமல் இருப்பதை உதாரணமாக கூற முடியும்.

அதனால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பெரும் நெருக்கடிக்கு முகம்கொடுத்திருப்பதை அறிய முடிவதோடு, அதிகரித்து வரும் ஏற்றுமதிச் செலவு, உணவு, வலுசக்தி பாதுகாப்பின்மை மற்றும் இறக்குமதி உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதோடு, அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் இலங்கை போன்ற நாடுகளை வலுவற்ற பொருளாதாரத்தை கொண்ட நாடுகளாக மாற்றி விடுகின்றன.

வலுவான பொருளாதாரத்தை கொண்டுள்ள நாடுகள் அனைத்து வகையான தற்காப்பு வழிமுறைகளையும் நிதி கையிருப்புக்களையும் பேணி வருகின்றன. எம்மை போன்ற நாடுகளுக்கு அவ்வாறான கையிருப்புகள் இல்லை. அதன் விளைவாகவே இறையாண்மைக் கடன் நெருக்கடிகள் ஏற்படுகின்றன. விரைவில் பொருளாதாரத்தை சீரமைக்க தவறினால் உலக பொருளாதாரம் பெரும் நெருக்கடிக்கு தள்ளப்படும்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பெரும் கடன் சுமையில் உள்ளன. இவ்வாறான புதிய முறைமைக்கு முகம்கொடுக்கும் பொறிமுறை சர்வதேச நாணய நிதியத்திடமும் இல்லை. இலங்கை வங்குரோத்து நிலையை அறிவித்த நேரத்தில் இலங்கைக்கு கிடைக்கவிருந்த அனைத்து நிதிச் சலுகைகளும் தடைப்பட்டன. அதனால் நாட்டுக்குள் அரசியல் நெருக்கடியும் தோன்றியது.

இலங்கை நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உலக வங்கியின் உதவியும் இலங்கையின் பழைய நண்பரான சமந்தா பவரின் உரமானிய உதவியும் கிடைத்திருக்காவிட்டால் நான் இந்த பதவியுடன் இங்கு வந்திருக்க வாய்ப்பு கிடைத்திருக்காது.

அதனால் வங்குரோத்து நிலையை அறிவிக்கும் நாடுகளுக்கு உதவிகளை வழங்குவதற்கான எந்த முறைமையும் இல்லை. இருப்பினும் இவ்வாறான நிலைமைகளுக்கு மத்தியில் பசுமை காலநிலை நிதியத்தில் பெரும் பங்கு வகிக்கும் ஜேர்மனியின் செயற்பாடு மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது.

காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்தல் மற்றும் கடன் நீடிப்பு உள்ளிட்ட இரு சவால்களுக்கும் இலங்கை போன்ற நாடுகள் முகம்கொடுக்க வேண்டியுள்ளதோடு, அதற்காக பயன்படுத்துவதற்கு எம்மிடத்திலுள்ள நிதியங்கள் போதுமானதாக இல்லை என்பது வருத்தற்குரிய காரணமாகும்.

எவ்வாறாயினும் சர்வதேச நாணய நிதியத்திடம் எமக்கான 100 பில்லியன்கள் உள்ளன. ஒன்றுமே இல்லை என்று கூறிக்கொண்டிருப்பதற்கு மாறாக, இருக்கும் தொகையை கொண்டு வேலைத்திட்டங்களை ஆரம்பித்த பின்னர், அடுத்த தொகையை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கை தொடர்பில் கவனம் செலுத்தும் போது ஆபிரிக்க வலயத்தின் குறைந்த வருமானம் ஈட்டும் நாடுகளின் தேவைகள் கணிசமாக அதிகரித்து வருகின்றன. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் தேசிய இலக்குகளை அடைவதற்கான தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்கு 5.9 ட்ரிலியன் டொலர்கள் அவசியப்படுகின்றன.

அதேபோல் நிகர பூச்சிய உமிழ்வை அடைந்துகொள்வதற்கு வலுசக்தி தொழில்நுட்பத்துக்காக 4 ட்ரிலியன்கள் அவசியப்படுகின்றன. இலங்கையின் காலநிலை சுபீட்சத்துக்கான இலக்குகளை அடைந்துகொள்வதற்கான நிதித் தேவைகள் தொடர்பாகவும் அவதானம் செலுத்த வேண்டும்.

2030ஆம் ஆண்டில் இலங்கைக்கு 26.5 டொலர் பில்லியன்கள் அவசியப்படும். சர்வதேச நாணய நிதியம் கூறுவதை போல நாம் அதிஷ்டமான நாடு என்றால், அடுத்த சில வருடங்களுக்குள் 3.5% பொருளாதார வளர்ச்சியை அடைந்துகொள்ள முடியும் என்றும் எதிர்பார்த்துள்ளோம். அதேபோல் இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்காக உலக அளவில் உள்ள தலைமைத்துவங்களும் தொடர்பாடல்களும் போதுமானதல்ல. அதனால் புதிய திட்டமிடல் ஒன்று அவசியப்படுகின்றது.

தற்போதுள்ள சர்வதேச நிதித் திட்டமிடல் 80 வருடங்களுக்கு முன்பாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும் நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். ஆசியா, மத்திய கிழக்கு, தென் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்காவின் சில நாடுகள் வளர்ந்துவரும் பொருளாதாரத்துடன் உலக பொருளாதார வல்லுனர்களாக மாறியுள்ளதன் பலனாக பல்வேறு மாற்றங்களை அவதானிக்க முடிந்தது. இருப்பினும், சர்வதேச திட்டங்களுக்கமைய சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தற்போதுள்ள சர்வதேச திட்டமிடல்கள் கடன் நீடிப்பை கடினமாக்கியுள்ளன. அதனால் சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவோம்" எனத் தெரிவித்தார்.

## அமெரிக்கா – சீனாவுக்கும், ஐரோப்பிய ஒன்றியம் – சீனாவுக்குமிடையேயும் ஆக்கபூர்வமான உரையாடல்கள் தேவை

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, பொருளாதார அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சென்ரா பெரேரா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரியில் 'பாராளுமன்ற அறிவகம்' விசேட நிகழ்வு

## பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் ஏற்பாடு









பதுளை மாவட்டத்தில் உள்ள 26 தமிழ்மொழி மூலப் பாடசாலைகளின் மாணவர் பாராளுமன்றங்களைச் சேர்ந்த மாணவ மாணவியரின் பங்களிப்புடன் பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரியில் 'பாராளுமன்ற அறிவகம்' நிகழ்ச்சித் திட்டத்தின் விசேட செயலமர்வு அண்மையில் நடைபெற்றது. இலங்கைப் பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பொதுமக்கள் வெளித்தொடர்புப் பிரிவு, தேசிய ஜனநாயக நிறுவனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த இந்த செயலமர்வில், எதிர்காலத்தின் இளைஞர் சமுதாயமான பாடசாலை மாணவர்களுக்கு பாராளுமன்றம் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட வேண்டிய தகவல்கள் இலகுவான முறையில் எடுத்துரைக்கப்பட்டன. பல்வேறு நடைமுறை அம்சங்களைக் கொண்ட இந்த நிகழ்வில் மாணவர்களும், ஆசிரியர்களும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

இந்தப் 'பாராளுமன்ற அறிவகம்' நிகழ்வில் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிர்வாகப் பணிப்பாளர் ஜீ.தட்சணராணி, பொதுமக்கள் வெளித்தொடர்பு அதிகாரி பி.ருத்ரகுமார் ஆகியோர் பாராளுமன்ற நடைமுறைகள் மற்றும் ஜனநாயகம் குறித்து மாணவர்களைத் தெளிவுபடுத்துவதற்கான வளவாளர்களாகக் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வு நடைபெற்ற பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவரும், இப் பாடசாலையிலிருந்து முதன் முறையாகப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்றவரும் என்ற பாடசாலை வரலாற்றைக் கொண்ட பாராளுமன்றத்தின் நிர்வாகப் பணிப்பாளர், ஜீ.தட்சணராணிக்கு பாடசாலை சமூகம் பொன்னாடை போர்த்தி கௌரவித்தது.

இந்நிகழ்வில் பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரியின் அதிபர் கே.சந்திரராஜா, பண்டாரவளை வலய ஆசிரிய ஆலோசகர் தேவகி, பாராளுமன்ற ஊடக முகாமையாளர் நிம்மி ஹாத்தியல்தெனிய, பொதுமக்கள் வெளித்தொடர்பு அதிகாரி இஷாரா விக்கிரமசிங்ஹ, ஊடக அதிகாரி மகேஸ்வரன் பிரசாத், ஊடக அதிகாரி சௌமிய ஏக்கநாயக, பொதுமக்கள் வெளித்தொடர்பு இணைப்பு அதிகாரி பியசிறி அமரசிங்க உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# விண்பாறை பென்னுவில் இருந்து பெறப்பட்ட மாதிரி மண் பிரபஞ்ச ரகசியங்களை துலக்குமா?



நாம் வசிக்கும் சூரிய மண்டலம் சுமார் 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியிருக்கக் கூடும் எனக் கணக்கிடப்படுகிறது. இதே காலப் பகுதியிலேயே பூமியும் உருவாகியிருக்க வேண்டும். சூரிய மண்டலமும் அதன் கிரகங்களும் எவ்வாறு தோன்றியிருக்கக் கூடும் என்பதற்கு பல கோட்பாடுகள் உள்ளன. தூசு மேகங்களும், அமில வாயுக்களும் கலந்ததால் ஏற்பட்ட பிரமாண்ட சுழற்சி வேகத்தின் விளைவாக சூரியனும் கோள்களும் உருவாகியிருக்க வேண்டும் என்பது பொதுவான விண் அறிவியலாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படும் கோட்பாடு.

பிரமாண்டமான ஒரு நட்சத்திர வெடிப்பு நிகழ்ந்ததால் கிரகங்கள் தோன்றின என்றொரு கோட்பாடும் உள்ளது. பிரபஞ்சம் எவ்வாறு ஆரம்பமானது என்பதற்கு பெரு வெடிப்பு கோட்பாடு முன்வைக்கப்படுகிறது.

சூரியனும் கிரகங்களும் தோன்றிய பின்னும் எச்சங்களான கோடிக்கணக்கான, பெரிதும் சிறிதுமான கற்பாறைகள் விண்ணில் சுற்றித் திரிகின்றன. கடைக்கோடி கிரகமான புளுட்டோவுக்கு அப்பால் ஊர்ட்ஸ் மேகம் என்றொரு விண்பாறை மேகம் காணப்படுகிறது. இது வால்நட்சத்திர மேகம் எனவும் அழைக்கப்படுகிறது. வியாழன் கிரகத்தின் பிரமாண்டமான ஈர்ப்பு விசையால் ஊர்ட்ஸ் மேகத்தில் இருக்கும் பனிப் பாறைகள் உள்ளீர்க்கப்பட்டு அவை வால் நட்சத்திரங்களாக சூரியனைச் சுற்றி வருவதை விண் அறிவியலாளர்கள் நிரூபித்துள்ளனர்.

இதேபோல வியாழனுக்கும் செவ்வாய்க் கிரகத்துக்கும் இடையே உடைந்த கிரகமொன்றின் பாகங்கள் சுற்றி வருகின்றன. இதை விண்பாறை வளையம் என அழைக்கிறார்கள். இது தவிர, ஏராளமான கற்கள், பாறைகள் சிறிதும் பெரிதுமாக சூரிய மண்டலத்தில் குறுக்கும் நெடுக்குமாகச் சுற்றி வருகின்றன. 2022 நிலவரப்படி 614,690 சிறு விண் பாறைகள் கணக்கெடுக்கப்பட்டு பெயர் சூட்டப்பட்டுள்ளது. மேலும் ஐந்து இலட்சம் விண் பாறைகளுக்கு இன்னும் பெயர் சூட்டப்படவில்லை. இவற்றில் ஏழாயிரம் விண் கற்கள்/பாறைகள் பூமிக்கு சமீபமானவை என அறியப்படுகிறது. இந்த பூமிக்கு சமீபமான விண்பாறைகளே பூமியைத் தாக்கி சேதம் ஏற்படுத்தக் கூடியவை. இவைபோக, எண்ணற்ற சிறு விண்கற்கள் தினமும் பூமியின் வளிமண்டத்தினுள் நுழைந்து எரிந்து சாம்பலாகின்றன.

உலகில் 80 கோடி ஆண்டுகளுக்கு முன் உயிரினம் தோன்றியதாக அறியப்படுகிறது. அதன் பின்னர் 12 மிகப் பெரிய அழிவுகள் பூமியில் இடம் பெற்றிருப்பதாகவும் அவற்றில் அதிகமானவை விண்பாறைகள் பூமியைத் தாக்கியதால் தான் நிகழ்ந்துள்ளன எனவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். அவ்வாறான ஒரு சம்பவத்திலேயே உலகில் வாழ்ந்து வந்த டைனோசர்கள் அழிந்தன என்ற ஒரு கோட்பாடு சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் முன்வைக்கப்பட்டு உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அரிசோனாவில் காணப்படும் ஒரு பெரும் பள்ளம் 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் விழுந்த விண் பாறையால் ஏற்பட்டது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒரு கி.மீ. குறுக்களவு கொண்ட 'இகார்ஸ்' என்ற விண்பாறை 1968ஆம் ஆண்டு பூமியில் இருந்து 40 லட்சம் மைல் தொலைவில் பூமியைக் கடந்து சென்றது. இது பூமியில் விழுந்திருந்தால் பாரிய விளைவுகள் ஏற்பட்டிருக்கும். 1972ஆம் ஆண்டு ஆயிரம் தொன் எடை கொண்ட ஒரு விண்பாறை பூமியின் வெளிப்புற மண்டலத்தை தொட்டுச் சென்றது. விஞ்ஞானிகள் அதை புகைப்படமாகவும் எடுத்தார்கள். 1989ஆம் ஆண்டு அரை மைல் அகலம் கொண்ட விண்பாறை பூமியைக் கடந்த சென்றது. இதில் என்ன விசேஷம் என்றால், அரை மணித்தியாலத்துக்கு முன்னர் அது கடந்து சென்ற இடத்தில் பூமி சஞ்சரித்துக் கொண்டிருந்தது என்பதுதான். அருந்தப்பு என்று சொல்வார்களே அப்படித்தான் நாம் பேரழிவு ஒன்றில் இருந்து தப்பிப் பிழைத்திருக்கிறோம்!

அரை மைல் விட்டம் கொண்ட ஒரு விண்பாறை பூமியை படு வேகத்தில் தாக்கினால் நிலநடுக்கம், பெருந்தீ, சுனாமி போன்ற பேரழிவுகளை மனிதகுலம் சந்திக்க வேண்டியிருக்கும்! விண்பாறை வெடிப்புக்கு சமீபத்திய உதாரணமாக 1908 ஜுன் மூன்றாம் திகதி ரஷ்யாவின் துங்கஸ்கா நதியோரமாக வீழ்ந்த விண் கல்லைச் சொல்வார்கள். அது வீழ்ந்த இடத்தைச் சுற்றி 40 கி.மீ. பரப்பளவு காடுகள் தீப்பற்றி எரிந்தன. பேரிடியோசை கேட்டதுடன் எழுந்த பேரொளி பத்திரிகை வாசிக்கக் கூடிய அளவுக்கு ஐரோப்பாவில் வெளிச்சத்தைத் தந்ததாம்! அப்போஃபிஸ் 99942 என்ற விண்பாறை 370 மீட்டர் சுற்றளவு கொண்டது. 2004ஆம் ஆண்டு கண்டறியப்பட இந்தப் பாறை 2029ம் ஆண்டு பூமியைத் தாக்கும் என முதலில் கண்டறியப்பட்டாலும் பின்னர் அவ்வாறான சாத்தியம் கிடையாது என விஞ்ஞானிகள் அக்கூற்றை நிராகரித்து விட்டார்கள். எனினும் 190 தடவைகள் விண்பாறைத் தாக்குதல் நிகழ்ந்திருப்பதாகவே விண்ணியலாளர்கள் கருதுகின்றனர்.

இரண்டு பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தென்னாபிரிக்காவை ஒரு பத்து கி.மீ அகலம் கொண்ட விண்பாறை தாக்கியது. இதனால் ஏற்பட்ட பெரும் பள்ளத்தின் சுற்றளவு 172 கி.மீட்டர். ஆழம் 40 கி.மீ. விண்பாறை வெடிப்பால் ஏற்பட்ட பெரும் பள்ளமாக இது அறியப்படுகிறது.

ஜெர்மனியில் ரைஸ் பள்ளம் என்ற பெருங்குழி காணப்படுகிறது. ஒரு கோடி 50 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் 2,625 அடி சுற்றளவு கொண்ட ஒரு விண்பாறை மோதியதால் இப்பள்ளம் ஏற்பட்டிருக்க வேண்டும் என புவியியலாளர்கள் கருதுகின்றனர். இப்பள்ளத்தின் சுற்றளவு 26 கி.மீட்டராகும்.

இவ்வாறு பல விண்பாறை மோதல்களால் பூமியில் அழிவுகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான, பூமிக்கு அண்மித்ததாக சுற்றிவரக் கூடிய ஒரு விண்பாறையே 101955 பென்னு என்ற விண்பாறை. 1999ஆம் ஆண்டு இது அடையாளம் காணப்பட்டது. சூரியனை ஒரு தடவை சுற்றிவர இது 437 நாட்களை எடுத்துக் கொள்கிறது. அரை




மைல் அகலம் கொண்ட இவ்விண்பாறை பூமியில் இருந்து 186,000 மைல் தொலைவில் உள்ளதாவது, இந்தத் தூரத்தில் தான் இது பூமியைக் கடந்து செல்கிறது. நிலவின் சுற்று வட்டப் பாதையை விட இத் தொலைவு குறைந்தது என்பது கவனத்துக்குரியது. அதன் சுழற்சியை அவதானிக்கும் விண் அறிவியலாளர்கள் 2300ஆம் ஆண்டுகளுக்குள் இது பூமியைத் தாக்கக்கூடிய வாய்ப்பு உள்ளதாகவே கருகிறார்கள். இது தாக்குமானால் பேரழிவு நிச்சயம். இது தாக்கும் இடத்தில் 6.4 கி.மீ அகலம் கொண்ட பள்ளம் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. பம்பரத்தை ஒத்த உருவம் கொண்ட பென்னு, வினாடிக்கு 28 ஆயிரம் மீட்டர் வேகத்தில் பயணிக்கிறது. எனவே விஞ்ஞானிகளின் கவனத்தை இப்பாறை ஈர்த்ததில் வியப்பிருக்க முடியாது. ஒரு விண்கலத்தை அனுப்பி அதை ஆராய்வது என்றும், விண்பாறையில் இறங்கி, மண் எடுத்து வந்த ஆராய்வது என்றும் முடிவெடுத்தது நாசா. இதன் பிரகாரம் ஓசிரிஸ் ரெக்ஸ் என்ற பெயர் கொண்ட கலம் 2018ஆம் ஆண்டு நாசாவினால் ஏவப்பட்டது. இரண்டு வருட பயணத்தின் பின்னர் பென்னுவை அடைந்த ஓசிரிஸ்ரெக்ஸ் கலம், அதை வலம் வந்தபடி அறிவியல் ரீதியாக ஆராயத் தொடங்கியது. பின்னர் அதில் இறங்கிய இக்கலம், விசேடமாக வடிவமைக்கப்பட்ட இயந்திர கையால் சுமார் 250 கிராம் அளவுக்கு எடைகொண்ட மண் மாதிரியை சேகரித்துக் கொண்டது. அதன் பின்னர் இரண்டு வருட பயணத்தின் பின்னர் பூமியில் இருந்து 63 ஆயிரம் மைல் தொலைவுக்கு வந்த விண்கலம், செப்டெம்பர் 24ஆம் திகதி மண்மாதிரி அடங்கிய சிறு கலத்தை பூமியை நோக்கி ஏவியது.

2004ஆம் ஆண்டு சூரிய காற்றின் சூரியத் துகள்களை கைப்பற்றி திரும்பி வந்த விண்கலம், 'பரசூட்' குடைவிரியாததால் பூமியில் விழுந்து சிதறியது. இம்முறை அவ்வாறு ஏதும் நடந்து விடக் கூடாது என்பதால் மிகக் கவனமாக இக்கலம் தரை இறக்கப்பட்டது. உட்டா மாநில பாலைவனத்தில் தரையிறங்கிய மண் மாதிரிகள் தற்போது ஆய்வுக்காக நாசாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இம் மண் மாதிரிகளை ஆராய்வதன் மூலம் சூரிய குடும்ப தோற்றத்தின் இரகசியங்களை அறிய முடியும் என்பது விண் அறிவியலாளர்களின் எதிர்பார்ப்பாகும். பென்னு விண்கல் அடிப்படையில் கரிம தாதுக்களினால் ஆனது என்றும் எனவே கரிய மூலக்கூறுகள் அடங்கியதாகவும், ஹைட்ரஜனும் கார்பனும் கலந்த நீராகக் கரிமம், அமீனோ அசிட், கடல் படுக்கையில் காணப்படக் கூடிய ஹைட்ரோ வெப்ப படிமங்கள் என்பன இம் மண் மாதிரிகளில் அடங்கியிருக்கக்கூடும் என்பதும் விஞ்ஞானிகளின் நம்பிக்கை.

இவை அனைத்தும் ஒரு கிரகத்தின் உயிரின தோற்றத்துக்கு இன்றியமையாதவை. விஞ்ஞானிகளின் எதிர்பார்ப்புகள் இம் மண் மாதிரிகளில் அடங்கியிருக்குமானால், பூமியில் உயிரின வளர்ச்சி எவ்வாறு உருவாகியிருக்க முடியும், விண்கற்கள் மூலம் இது சாத்தியமாகியிருக்கக் கூடுமா, பூமியை ஒத்த வேறு கிரகங்களில் உயிரின வளர்ச்சி ஏற்பட்டிருக்கலாமா? என்பது போன்ற ஆய்வுகள் இதுவரை மூடப்பட்டிருக்கும் கதவுகளைத் திறக்கக் கூடும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இதே சமயம், ஏற்கனவே நாம் பார்த்த மற்றொரு பூமிக்கு அண்மையில் சுற்றிவரக்கூடிய எப்போஃபிஸ் என்ற விண்பாறை 2029ஆம் ஆண்டு பூமிக்கு அண்மித்ததாக, 20 ஆயிரம் மைல் (32,000 கி.மீ) தொலைவில் வரும் போது அதன் மண் மாதிரிகளை எடுத்து வருவதற்காக 'ஓசிரிஸ்ரெக்ஸ் எபெக்ஸ்' என்ற விண்கலம் அனுப்பப்பட்டுள்ளது. மேலம், வில்ட்2 என்றழைக்கப்படும் வால் நட்சத்திரம் 2029ஆம் ஆண்டு பூமிக்கு அருகே வரும் அதன் மாதிரிகளை எடுத்துவரவும் நாசா திட்டமிட்டுள்ளது. இவ் வால்வெள்ளி 2029 மே மாதம் பூமிக்கு அருகாமையில் வரும் போது, ஐரோப்பா மற்றும் ஆபிரிக்க பிராந்திய மக்களால் வெறுங் கண்களால் பார்க்கக் கூடியதாக இருக்கும்.

மதங்கள் சொல்வது போல உலகம் மற்றும் பிரபஞ்சம் படைக்கப்பட்டது அல்ல என்பது முடிவான விஷயம். இது உருவானது. படைப்பு என்பது தொடர்ந்து நிகழ்ந்துவரும் ஒன்று. நாசா ஒரு வருடத்துக்கு முன்னர் ஜேம்ஸ் வெப் என்ற புதிய அண்டவெளி தொலை நோக்கியை விண்ணுக்கு அனுப்பி வைத்திருந்தது. அது 390 ஒளியாண்டுகளுக்கு அப்பால் ஒரு பிரபஞ்சம் உருவாகி வருவதையும் சுமார் 50 சூரியனை ஒத்த நட்சத்திரங்கள் தோற்றம் பெற்று வருவதையும் படமெடுத்து பூமிக்கு அனுப்பி வைத்துள்ளது. இவற்றை குழந்தை சூரியன்கள் என விஞ்ஞானிகள் அழைக்கின்றனர்.

ஆக, படைப்பு இன்றும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

**அருள் சத்தியநாதன்**

AUTOWHEEL
FAMILY RESTAURANT IS NOW OPEN
AA CEYLON
"Friday Special Buriyani
RS. 455/- PER PACK
During Weekends
Lamprais Available
Rs.865.00 per pack
Order Now.
VISIT -
Automobile Association of Ceylon
40, Sir Mohomed Macan Marker Mawatha Colombo 03
Tele. No: 0774369013 (Krishon)

ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
வெகுசன ஊடக அமைச்சு
Ministry of Mass Media

வெகுசன ஊடக அமைச்சின் கீழ் இயங்கிய
செலசினே தொலைக்காட்சி நிறுவனம்
2023 ஒற்றோபர் 01 ஆம் திகதி முதல்
பொதுச் திறைச்சேரிக்கு 100% பங்குகளைக் கொண்ட நிறுவனமாக
செலசினே மீடியா சொலூஷன்ஸ் (பீவீடீ) எல்.டீ.டி
எனும் பெயரில் இனிவரும் காலங்களில் செயற்படும்
என இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

SELACINE MEDIA SOLUTIONS
செலசினே மீடியா சொலூஷன்ஸ் (பீவீடீ) எல்.டீ.டி
இல.380/57, சரண வீதி, கொழும்பு 07.
தொலைபேசி : 011-4320777 | பொது முகாமையாளர் : 011-4324614
Email : info@selacine.lk | Website : www.selacine.lk

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்



அங்கீகரிக்கப்பட்ட பதவியின் பெருமையை அனுபவிக்கவும்...
பட்டப் படிப்பு பயிலிளவல்கள் உத்தியோகத்தர்களை அனுமதித்தல் - 2023/2024

பட்டப் படிப்பு பயிலிளவல்கள் / உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்காக தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பட்டப் பாடநெறிகள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் - இரத்மலானை

| பட்டப் பாடநெறி | காலம் | பாலினம் |
|---|---|---|
| பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கை | | |
| தந்திரோபாய கற்கைகள் மற்றும் சர்வதேச உறவுகள் விஞ்ஞானமாணி பட்டம் | 03 ஆண்டுகள் | ஆண் |
| மருத்துவ பீடம் | | |
| மருத்துவ மற்றும் சத்திர சிகிச்சையியல் மாணி பட்டம் (MBBS) | 05 ஆண்டுகள் | ஆண்/பெண் |
| பொறியியல் பீடம் | | |
| பொறியியல் விஞ்ஞான மாணி பட்டம் (சிறப்பு) • AERONAUTICAL ENGINEERING • BIOMEDICAL ENGINEERING • CIVIL ENGINEERING • ELECTRICAL & ELECTRONICS ENGINEERING • ELECTRONICS & TELECOMMUNICATION ENGINEERING • MECHANICAL ENGINEERING • MECHATRONICS ENGINEERING • MARINE ENGINEERING • NAVAL ARCHITECTURE & MARINE ENGINEERING • BUILDING SERVICES ENGINEERING | 04 ஆண்டுகள் | ஆண்/பெண் |
| சட்டப் பீடம் | | |
| சட்டமாணிப் பட்டம் (LLB) | 04 ஆண்டுகள் | ஆண்/பெண் |
| முகாமைதத்துவ சமூக விஞ்ஞான மற்றும் மனிதவியல் பீடம் | | |
| முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்பவியல் விஞ்ஞானமாணி | 03 ஆண்டுகள் | ஆண்/பெண் |
| விநியோகங்கள் முகாமைத்துவ விஞ்ஞானமாணி பட்டம் | 03 ஆண்டுகள் | ஆண்/பெண் |
| சமூக விஞ்ஞானங்களில் விஞ்ஞானமாணி பட்டம் | 03 ஆண்டுகள் | ஆண்/பெண் |
| தரவு பயன்பாட்டு விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி பட்டம் | 03 ஆண்டுகள் | ஆண் |
| பிற மொழிகளைப் பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் இளங்கலைப்பட்டம் (TESOL) | 03 ஆண்டுகள் | ஆண்/பெண் |
| கணனி பீடம் | | |
| கணனியியல் விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) (CSSL FULLY ACCREDITED) | 04 ஆண்டுகள் | ஆண்/பெண் |
| மென்பொருள் பொறியியல்மாணி பட்டம் (சிறப்பு) | 04 ஆண்டுகள் | ஆண்/பெண் |
| கணனி பொறியியல் விஞ்ஞானமாணி பட்டம் | 04 ஆண்டுகள் | ஆண் |
| தரவு அறிவியல் மற்றும் வணிக பகுப்பாய்வு விஞ்ஞானமாணி பட்டம் | 04 ஆண்டுகள் | ஆண் |
| குற்றவியல் நீதி பீடம் | | |
| விஞ்ஞானமாணி குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதி பட்டம் (சிறப்பு) | 03 ஆண்டுகள் | ஆண் |
| விஞ்ஞானமாணி பொலிஸ் பட்டம் (சிறப்பு) | 03 ஆண்டுகள் | ஆண் |

பட்டப் பாடநெறிகள் தெற்கு வளாகம் - சூரியவெவ

| பட்டப் பாடநெறி | காலம் | பாலினம் |
|---|---|---|
| நிர்மாண சூழல் மற்றும் வெளி விஞ்ஞான பீடம் | | |
| வாஸ்த்து விஞ்ஞானமாணி பட்டம் | 05 ஆண்டுகள் | ஆண்/பெண் |
| அளவையியல் விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) (ACCREDITED BY IQSSL) | 04 ஆண்டுகள் | ஆண்/பெண் |
| கணிய அளவயியல் விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) | 04 ஆண்டுகள் | ஆண்/பெண் |
| கணனி பீடம் | | |
| விஞ்ஞானமாணி தகவல் தொழிநுட்பம் (CSSL FULLY ACCREDITED) | 04 ஆண்டுகள் | ஆண்/பெண் |
| விஞ்ஞானமாணி தகவல் அமைப்பு (CSSL FULLY ACCREDITED) | 04 ஆண்டுகள் | ஆண் |
| தொழிநுட்ப பீடம் | | |
| விஞ்ஞானமாணி தகவல் தொழிநுட்பம் மற்றும் தொடர்பாடல் பட்டம் (சிறப்பு) | 04 ஆண்டுகள் | ஆண் |

தேவையான தகைமைகள்

- 2021 / 2022 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கலாம்.
- 2022 மற்றும் 2023 Cambridge / Edexel உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

● விண்ணப்பதாரர்
I. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் மற்றும் 2023.01.01 திகதிக்கு 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
III. க.பொ.த.(உ.த) பொதுப் பரீட்சையில் சித்தியினைப் பெற்றிருத்தல் (குறைந்தபட்சம் 30 புள்ளிகள்).
IV. இலங்கை பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகைமையினைக் கொண்டிருத்தல்.
V. மணமாகாதவராக இருத்தல் வேண்டும்.
VI. க.பொ.த.(சா.த) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் திறமை (C) சித்தியினைப் பெற்றிருத்தல் அல்லது கேம்பிரிஜ் /எடெக்சல் அல்லது அதற்கு சமனான ஏதேனும் வெளிநாட்டு தகைமையினை கொண்டிருத்தல். TESOL ஏற்றுக்கொள்ளப்படும். மற்றும க.பொ.த.(சா.த) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் "B" சித்தியினைப் பெற்றிருத்தல் அல்லது கேம்பிரிஜ் / எடெக்சல் அல்லது அதற்கு சமனான ஏதேனும் வெளிநாட்டு தகைமையினை கொண்டிருத்தல். TESOL ஏற்றுக்கொள்ளப்படும்.

● பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஆகக் குறைந்த உடல்கட்டமைப்பு அளவுகோல்களை அறிந்து கொள்வதற்கு இணையத்தளத்தை பார்வையிடவும். https://kdu.ac.lk

Online விண்ணப்பம்

விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முறை

- https://kdu.ac.lk எனும் இணையத்தளத்திற்குள் சென்று நிகழ்நிலை (online) மூலம் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- விண்ணப்பத்தாரிகள் தாம் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பட்டப்பாடநெறிக்கும் தலா ரூ.1,500/- (இலங்கை ரூபாய்) மீளச் செலுத்தப்படாத கட்டணமாக நிகழ்நிலையில் (online) மூலம் செலுத்த வேண்டும்.
உதாரணமாக :- மூன்று பட்டப்பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தாரி ரூ.4,500/- செலுத்த வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி
2023 அக்டோபர் 18

முக்கியமானது

- நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரர்கள் பற்றிய தீர்மானம் முற்றுமுழுதாக பல்கலைக்கழகத்திற்கு உரியது ஆகும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் கொத்தலாவல பல்கலைக்கழகம் அனுமதிக்கபடும் முன்னர் இலங்கை குடியரசுடன் ஒப்பந்தம் ஒன்றிலும் பிணை ஒன்றிலும் ஒப்பமிடல் வேண்டும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலிளவல் உத்தியோகத்தர்கள் பட்டப்படிப்பு பாடங்களை முடிப்பதற்கு முன்னும் பின்னும் பல்கலைக்கழகத்தினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு காலத்திற்கு கட்டாய இராணுவப் படிப்புக்கு நியமிக்கப்படுவார்கள்.
- வெற்றிகரமாக பட்டப் பாடநெறியைப் பூர்த்தி செய்யும் பட்டதாரி கெடட் உத்தியோகத்தர்கள் தரை / கடல் / வான் படையின் நிரந்தர படையணியின் உத்தியோகத்தர் ஒருவராக கட்டாய சேவைக்காலம் ஒன்றைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

கொடுப்பனவுகள்

மாணவர் பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.80,000/- வரை சம்பளம் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக பின்வரும் வசதிகளும் இலவசமாக வழங்கப்படும்.
அ. உணவும் தங்குமிட வசதியும்
ஆ. சீருடை
இ. இணை சேவைகள்
ஈ. விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்
உ. மருத்துவ வசதிகள்

அங்கீகாரம்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) - இலங்கை
உறுப்புரிமை பொதுநலவாய நாடுகளின் பல்கலைக்கழக சங்கம் - ஐக்கிய இராச்சியம் (UK)
சர்வதேச பல்கலைக்கழக சங்கம் (IAU)
World directory of Medical School இன் கீழ் பட்டியல் படுத்தப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை பெற எமது இணையத்தளத்தை பார்வையிடவும்: https://kdu.ac.lk

தொலைபேசி : 0112635039, 112632028 நீட்டிப்பு . 459, 460
011 2635268, 011 2638656, 071 0219505
மின்னஞ்சல் : arenlist@kdu.ac.lk

பதிவாளர்
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல
பாதுகாப்பு பல்கலைக்கழகம்
இரத்மலானை, 10390, இலங்கை.

# முஸ்லிம்களின் மறைந்து விட்ட இசை மரபுகளை ஆராயும் மினாரத்



1950களுக்கு முன்னர் முஸ்லிம்களிடையே காணப்பட்ட ஒலிக் கலைகள் மற்றும் பாடல் மரபுகளை திரும்பிப் பார்க்க வைக்கும் சிங்களத் திரைப்படத் தயாரிப்பாளர் நாதியா பெரேராவின் முயற்சி

இலங்கை வாழ் முஸ்லிங்களுக்கென தனியான இசைப் பாரம்பரியமொன்று இருக்கிறதா? இதற்கு முன்னர் இருந்ததா என்ற கேள்வி பலருக்கும் இருக்கும். இலங்கையிலுள்ள சிங்கள, தமிழ், கிறிஸ்தவ சமூகங்களுக்கென தனித்துவமான இசை மரபுகள் இருக்கும் நிலையில் முஸ்லிம்கள் மார்க்க ரீதியான கருத்து வேறுபாடுகளைப் பேசிக் கொண்டு தமது தனித்துவத்தை இழந்துள்ளார்களா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது.



முஸ்லிம்களின் இசை மரபு பற்றிய விடயம் மீண்டும் பேசுபொருளாவதற்கு இளம் சிங்கள திரைப்படத் தயாரிப்பாளர் நாதியா பிமானி பெரேராவின் விவரணத் திரைப்படம் தான் முக்கிய காரணம். இலங்கை முஸ்லிம்களின் ஒலிக் கலைகள் மற்றும் பாடல் மரபை அலசும் அவரின் ஆவணத் திரைப்படம் இன்று முஸ்லிம் சமூகத்தைத் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

' மினாரத் ' அவரது ஆவணப் படத்தின் நாமம். பள்ளிவாசல்களில் இரு பக்கமும் உருளை வடிவை ஒத்ததாக உயரமாக அமைக்கப்படும் கட்டட வடிவமே மினாரத் எனப்படுகிறது. அதனை பெயராகச் சூட்டி தனது விவரணப்படத்தை அழகாக நகர்த்திச் சென்றுள்ள நாதியா நாட்டின் பலபாகங்களுக்கும் சென்று படப்பிடிப்புக்களை மேற்கொண்டிருக்கிறார்.

பேராதனைப் பல்கலைக்கழக ஓய்வுபெற்ற பேராசிரியர் எஸ்.எம்.எம். அனஸ், மூத்த ஒலிபரப்பாளர் புர்கான் பீ இப்திகார்,கல்வியாளரும் சமூக ஆர்வலருமான ஜஸீம்மா இஸ்மாயில் உட்பட முக்கியஸ்தர்களின் கருத்துக்கள் இந்த விவரணத் திரைப்படத்துக்கு மெருகேற்றியிருப்பது முக்கிய அம்சமாகும்.

1950 களுக்கு முன்னர் வாழ்ந்த இலங்கை முஸ்லிம்களின் வாழ்வு, சமூக கலா ரசனையும் ரசா ஞானமும் கலந்தாக இருந்துள்ளது. ஆனால் 1950களின் பின்னர் அது மங்கத் தொடங்கியதாக இஸ்லாமிய அறிஞர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதனை மேற்கு அவுஸ்திரேலிய மெர்டொக் பல்கலைக்கழக கலாநிதி அமீரலி தனது கட்டுரைகளின் ஊடாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

முஸ்லிம்களின் இசை மரபில் பல்வேறு வகையான பாடல்களும் கவிதைகளும் காலம் காலமாக பாடப்பட்டு வந்துள்ளன. களிகம்பு, ஊஞ்சல் பாட்டு, பக்கீர் பைத், றப்பான், நாட்டுக் கவி, மீன் வலை இழுப்போரின் ஏலோலே பாடல்கள், திருமண நிகழ்வில் படிக்கும் வாழ்த்துப் பாடல், விருத்தம், பதம், நெல்வயலில் ஏர்பூட்டி உழுகையில் படிக்கும் பாடல், பெண்கள் களை பிடுங்குகையில், பறவை விரட்டுகையில் பாடும் பாடல், வயற்காட்டில் பரண் அமைத்து ஆண்கள் மற்றும் பெண்கள் போட்டி போட்டுப் பாடும் கவிப்பாடல். கிழக்கிலங்கையில் அறுவடை செய்த தானியங்களை மாட்டுவண்டியில் ஏற்றி எடுத்துச் செல்கையில் பாடும் காதல் சுவையுடனான பாடல் என இந்தப் பட்டியல் நீண்டு செல்கிறது. களிகம்பாட்டம் மற்றும் கோலாட்டம் போன்ற மரபுகள் இன்றும் சில பிரதேசங்களில் காணப்படும் அதேவேளை அண்ணாவியாரின் வழிகாட்டலுடன் அவை மேடையேற்றப் படுகின்றன.

## 6 ஆம் திகதி முதல் PVR Cinemas அரங்கில்





இவை தவிர மீலாத் விழாக்கள், பெருநாள் பண்டிகைகள், பள்ளிவாசல் கோடியேற்றங்களில் இஸ்லாமிய கீதம், பைத். கஸீதா என்பன பாடப்படுவது தான் இன்று காணக்கிடைக்கும் சில அம்சங்கள் எனலாம். அது மாத்திரமன்றி கிழக்கில் சில பகுதிகளில் நோன்பு நாட்களில் அதிகாலை எழுப்புவதற்காக பக்கீர் பாடல்கள் பாடப்படுகின்றன.

இந்த நிலையில் தான் இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் பங்களிப்புடன் முஸ்லிம்களின் இசை மரபு பற்றி ஆராயும் ஆவணப் படத்தை நாதியா தயாரித்தளித்துள்ளார். ஆரம்பத்தில் குறுந் திரைப்படமாக உருவாகி இன்று அது விரிவாக்கம் பெற்றுள்ளது.

கொழும்பு, காலி, வெலிகம, புத்தளம், கல்முனை, அம்பாறை என நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று பலரையும் சந்தித்து தனது ஆவணப்படத்தை தயாரித்திருக்கிறார் நாதியா.


இத் திரைப்படத்தைப் பற்றி கருத்துக் கூறியுள்ள பேராசிரியர் அனஸ், இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை மறுபரிசீலனை செய்வதாக அமைந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

“ஒரு காலத்தில் இலங்கை முழுவதும் உள்ள முஸ்லிம்கள் மத்தியில் நாட்டுப்புற இசை பிரபலமாக இருந்தது. இது சில காலகட்டங்களில் குறைந்துள்ளதோடு சில சந்தர்ப்பங்களில் மறைந்துவிட்டது. தற்போது கல்முனை தொடக்கம் நிந்தவூர், அக்கரைப்பற்று, காத்தான்குடி, ஓட்டமாவடி, ஏறாவூர் பிரதேசங்களில் கிழக்கு கரையோர மக்கள் மத்தியில் இந்த இசை மரபு இன்றும் வாழ்கிறது. ஆனால் அந்த இசைப் பொற்காலம் போய்விட்டது“ என அவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் அறிவிப்பாளரும் மூத்த கலைஞருமான புர்கான் பி.இப்திகாரும் பல முக்கிய விடயங்களை இந்த ஆவணப்படத்தில் கோடிட்டுக் காட்டிள்ளார்.


முஸ்லிம் நுண்கலைக்கழகத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புகள் முஸ்லிம் சேவையின் ஊடாக அளிக்கப்பட்ட பங்கு, உள்ளிட்ட பல விடயங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

“கலாசார அமைச்சின் கீழ் அமைக்கப்பட்டிருந்த முஸ்லிம் நுண்கலைக் கழகத்தின் ஊடாக இலங்கை முழுவதும் சென்று மறைந்து வரும் இசை மரபுகள் சார்ந்த போட்டிகள் நடத்தப் பட்டன. இதன் மூலம் மாணவர்களை ஊக்கப்படுத்தினோம். ஆனால் பின்னர், முஸ்லிம் நுண்கலை கழகம் கலைக்கப்பட்டது” என்று அவர் இதில் குறிப்பிட்டிருக்கிறார்.




கல்வியாளரும் சமூக ஆர்வலருமான ஜஸீமா இஸ்மாயில் சில விடயங்களை அழுத்தமாக கூறுயுள்ளார்.

“கிராமங்களில் இசைக்கருவிகள் வாசிப்பது பற்றியும் இறந்தவர்களுக்காக தானம் வழங்கும் வீடுகளில் பாடல் பாடப்படுவது பற்றியும் அறுவடை வீட்டுக்கு எடுத்து வருகையில் பாடப்படும் பாடல்கள் பற்றியும் தனது நினைவுகளை அவர் மீட்டியுள்ளார்.



மொகிதீன் பேக்கின் சிங்களப் பாடல்கள் பற்றியும் இந்திய நாகூர் கனியின் பாடல்களை அதே குரலில் பாடும் இலங்கை கலைஞர்கள் பற்றியும் கூட இந்த ஆவணப்படம் ஆராய்ந்துள்ளது. பாங்கு, வீடுகளில் பெண்களால் ஓதப்படும் விடயங்கள், பற்றியும் நாதியா ஆராய்ந்துள்ளார்.

ஊடகவியலாளர்களுக்கு விசேட காட்சியொன்று அண்மையில் காண்பிக்கப் பட்டது. இந்த நிலையில் மினாரத் ஆவணப்படம் எதிர்வரும் 6ஆம் திகதி முதல் பி.வி.ஆர். சினிமா அரங்கில் மாலை 5.45 மணிக்குக் காண்பிக்கப்பட இருக்கிறது. விவரணப் படங்களை திரையிட பொதுவாக திரையரங்குகளில் இடம் வழங்கப்படுவதில்லை. ஆனால் இந்த சந்தர்ப்பத்தை முஸ்லிம்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதோடு நாதியா பெரேராவின் முயற்சிக்கு நமது தரப்பாலும் பங்களிக்க வேண்டும். ஏனென்றால் முஸ்லிம்களின் தரப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிக்கு நாதியா ஆரம்பப் புள்ளியை வைத்துள்ளார். இந்த முயற்சி மேலும் மேம்படுத்தப்பட்டு முஸ்லிம்களின் ஒலிக் கலைகள் மற்றும் பாடல் மரபுகளை பேணி எதிர்கால சந்ததியைக் காக்க வேண்டியது எமது பொறுப்பாகும்.

**பாஹிம்**







சீரடி சாய் பாபா மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் சீரடி சாயி பாபாவின் ஜனன தினம் சாய் மந்திரில் வெகு சிறப்பாக தலைவர் எஸ். என். உதயநாயகன் தலைமையில் நடைபெற்றது. தலைவர் ஜீவரட்டிணம் தலைமையில்நடைபெற்ற விசேட பூஜையை அடுத்து சாய் அன்பர் ஸ்ரீ சுரேன் சீரடி சாய் பாபாவுக்கு வழங்கிய"கிரீடம்" ஒன்றை தலைவர் எஸ். என். உதயநாயகன் இருவரும் சீரடி சாய் பாபாவிற்கு அணிவிப்பதையும் பஜனை குழுவினரின் பஜனையையும் காணலாம்.

## சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் வருடாந்த கூட்டத்தொடரில் சட்டத்தரணி அஜ்ரா அஸ்ஹர்



சட்டத்தரணி அஜ்ரா அஸ்ஹர், சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் (International Bar Association) வருடாந்த கூட்டத்தொடரில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான மதிப்புமிக்க முழு புலமைப்பரிசிலை பெற்றுள்ளார். இந்த விருது சட்டத்துறையில் அவரது சிறந்த பணிக்கான ஓர் அங்கீகாரமாகும். அவர் அக்டோபர் 29 முதல் நவம்பர் 3, 2023 வரை பிரான்சின், பாரிஸில் நடைபெறும் சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவார்.சட்டத்துறையில் அஜ்ரா அஸ்ஹரின் பயணம் மற்றும் வளர்ச்சி மிகவும் பாராட்டத்தக்கதாக உள்ளது. புத்தளத்தை பிறப்பிடமாக கொண்டு, புத்தளம் பாத்திமா பெண்கள் தேசிய பாடசாலையில் கலைப்பீடத்தில் உயர் கல்வியை தொடர்ந்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்தில் இளங்கலை பட்டம் பெற்று, பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீடத்தில், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகமயமாக்கலில் முதுமாணி பட்டம் பெற்றார்,

அவர் கல்வியில் சிறந்து விளங்கியது மட்டுமல்லாமல், கொழும்பு பல்கலைக்கழகத்தின், சட்டபீடத்தில் வருகை விரிவுரையாளராகவும் (visiting lecturer), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின், சட்டபீடத்தில் உதவி விரிவுரையாளராகவும் கடமையாற்றினார்.

அவரது ஐந்தாண்டு தொழில் துறையில், சட்ட ஆராய்ச்சி (legal research), திட்ட முகாமைத்துவம் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பு உள்ளிட்ட பல்வேறு பாத்திரங்களில் அஜ்ரா அஸ்ஹர் தனது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார். அவர் தற்போது சட்டத்தரணியாக பணிபுரிந்து வருவதுடன், கொழும்பு அசோசியேட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளராகவும் கடமையாற்றுகிறார்.

தனது தொழில் துறையைத்தாண்டி, பல்வேறுபட்ட திட்டங்களுக்காக, பல உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு ஆலோசகராக செயல்பட்டமை குறிப்பிடத்தக்கது. தனது தன்னார்வப் பணியின் மூலமாக சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த அஜ்ரா அஸ்ஹர் செயல்பட்டுவருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் வருடாந்த கூட்டத்தில் பங்கேற்பது மற்றும் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துவது உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேச அளவிலான அங்கீகாரத்தை நம் நாட்டின் இளம் சட்டத்தரணிக்கு வழங்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

## நாயகி பரதநாட்டிய அரங்கேற்றம்







மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப் பெயரன் இசைமேதை ராஜ்குமார் பாரதியின் இசைத் தயாரிப்பிலும்,கலாசூரி திவ்யா சுஜேனின் ஆய்விலும் நடன அமைப்பிலும், இந்தியக் குயிலுவக் கலைஞர்கள் கீர்த்தனா வைத்தியநாதன், முனைவர் குரு பரத்வாஜ், ஈஸ்வர் இராமகிருஷ்ணன் ஆகியோரின் பேரிசைப் பங்களிப்பிலும் ரிஷிகேஷா செம்பையாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் அண்மையில் பிஷப்ஸ் கல்லூரி அரங்கில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு மனிதநேய அமைப்பாளர் திருமதி அபிராமி கைலாசபிள்ளை முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். அபிநயஷேத்ரா நடனப்பள்ளியின் பதினாறாவது மாணவியாக நாயகி என்னும் கருப்பொருளில் ரிஷிகேஷாவின் அரங்கேற்றம் நிகழ்ந்தது.

கொழும்பு வடக்கு விசேட நிருபர்







Hassim Omar Foundation ஏற்பாட்டில் உலர் உணவுப் பொதிகள் வழங்கும் திட்டத்தின் முதற்கட்டமாக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை (29) மாலை தெஹிவளை ஜயசிங்க மண்டபத்தின் முன்றலில் வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள்.



## பாரம்பரியம் நிகழ்ச்சியில் மௌலவி காத்தான்குடி பௌஸ்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் எதிர்வரும் 03ஆம் திகதி (03.10.2023) செவ்வாய் இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியில் மௌலவி கவிஞர் கலாபூஷணம் காத்தான்குடி பௌஸ் அதிதியாக கலந்து கொள்கிறார்.

மௌலவி இஸட்.எல்.எம். முஹம்மத், முஸ்லிம் சேவையின் பணிப்பாளராக இருந்த காலத்தில், முஸ்லிம் சேவையில், சன்மார்க்க நிகழ்ச்சிகள் வழங்கியதோடு, கலந்துரையாடல், கவியரங்கு போன்ற நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுள்ளார்.

காத்தான்குடியை பிறப்பிடமாக கொண்ட இவர், பலபிட்டிய ஜும்மா பள்ளிவாசலில், 10 வருடங்களும், பாணந்துறை அல் முபாரக் ஜும்ஆ மஸ்ஜிதில் 31 வருடங்களும் பணியாற்றி அப்பகுதி வாழ்மக்களின் பேரபிமானம் பெற்றார்.

சன்மார்க்க, தமிழ் இலக்கியம் சார்ந்த நூல்கள் பல எழுதியுள்ள இவர், இன்னும் பல நூல்கள் எழுத உள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சியை எம். எஸ். எம். ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம். ஜே. பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.




# உயர்தரப் பரீட்சையும் கால தாமதமும்

## நாடே எதிர்பார்த்துள்ள உயர் தரப் பரீட்சைக்கான திகதி வெளியீடு எப்போது?

லோரன்ஸ் செல்வநாயகம்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை குறித்த திகதியில் நடைபெறுமா அல்லது ஒத்தி வைக்கப்படுமா? என்பது தொடர்பில் இன்று வரை எந்த முடிவும் எட்டப்படவில்லை.

கடந்த சில வாரங்களாகவே அது தொடர்பில் பெரிதாக பேசப்பட்டு வருகின்றது. மாணவர்களின் வசதி கருதி அந்த பரீட்சை ஒத்தி வைக்கப்பட வேண்டும் என்றும், அவ்வாறு பரீட்சை ஒத்திவைக்கப்பட்டால் குறித்த பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகும் காலம், அடுத்தடுத்து வரும் பரீட்சைகள், உயர்தர பரீட்சையையடுத்து பல்கலைக்கழகம் செல்லுதல், பட்டப் படிப்பு மேற்கொள்வதற்கான காலம் அதற்கான வயது என அனைத்தும் தாமதமாகும் என்றும், அவ்வாறானால் எதிர்காலத்தில் முழு கல்வித்துறையிலும் வெவ்வேறு சிக்கல்களை எதிர் நோக்க நேரும் என்றும் கல்விமான்கள் மத்தியிலிருந்து கருத்துக்கள் வெளிப்பட்டு வருகின்றன.

அது தொடர்பில் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த விரிவான விளக்கமொன்றை வழங்கினார். அத்துடன் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம். பி ரோஹினி கவிரத்ன சபையில் எழுப்பிய கேள்விகளுக்கும் அமைச்சர் பதிலளித்தார்.

பாராளுமன்றத்தில் ரோஹினி கவிரத்ன எம்பிக்கு பதிலளிக்கும் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை தொடர்பில் அனைவரதும் கவனம் ஈர்க்கப்பட்டு வரும் நிலையில், க.பொ.த உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு விடுக்கப்படும் கோரிக்கைகள் பரீட்சைகள் ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

அது தொடர்பில் அவர் விரைவில் அறிவித்தலொன்றை வெளியிடுவார் என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்தார். எதிர்க்கட்சியினர் பலரும் அது தொடர்பில் கேள்விகளை எழுப்பிய போதும் முதலில் அது தொடர்பில் கேள்வி எழுப்பிய ரோஹினி கவிரத்ன எம்பி:

பரீட்சைகளுக்கான கால அட்டவணையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். பிள்ளைகளின் உரிமைகளை இல்லாமல் செய்து விடக்கூடாது. வடக்கு, கிழக்கு உள்ளிட்ட கஷ்டப் பிரதேசத்தில் காணப்படும் சில பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளின் பாடத்திட்டங்கள் இன்னும் கூட பூர்த்தி செய்யப்படவில்லை.

அத்துடன் இந்த ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இரண்டரை வருட உயர்தர வகுப்பில் கற்கும் காலமும் கிடைக்கவில்லை.

நவம்பர் மாதத்தில் பரீட்சையை நடத்த நடவடிக்கை எடுக்கும் போது குறுகிய காலத்தில் பாடங்களை முடிக்கவே அவர்கள் முயற்சிப்பர். அது மட்டுமன்றி இரண்டாவது தடவையாக பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமக்கான பாடப் பிரிவுகளை மாற்றும்போது அந்த மாணவர்களுக்கு இதனால் அநீதியும் இழைக்கப்படும்.இந்த விடயத்தில் அதிகாரிகளின் தவறுகளே நடந்துள்ளன.

இதனால் நவம்பர் 27ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள பரீட்சையை அந்த திகதியில் நடத்தாது பாடசாலை மூன்றாம் தவணை காலத்தை ஜனவரி 19ஆம் திகதியுடன் நிறைவு செய்து உயர்தரப் பரீட்சையை ஜனவரி 22 முதல் பெப்ரவரி 17 வரையில் நடத்த முடியும்.

அவ்வாறு முடிவை மேற்கொண்டால் பெப்ரவரி 19 ஆம் திகதி முதல் பாடசாலை முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும். அதேபோன்று அடுத்த வருடத்தின் மே மாதத்தில் பெறுபேறுகளை வெளியிடவும் முடியும்.

அவ்வாறு செய்தால் அடுத்த வருடத்தின் பரீட்சையை ஒக்டோபரில் நடத்தவும் முடியும். இதனால் பரீட்சையை ஜனவரி 22ஆம் திகதி வரையில் ஒத்திவைக்க நடவடிக்கை எடுப்பதே சிறந்தது என்று ரோஹிணி கவிரத்ன எம்பி அதை ஒரு ஆலோசனையாக முன் வைத்தார்.

இதன்போது சபையில் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர:

உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் ஒரு இலட்சம் வரையிலான மாணவர்கள் ஒரே குழுவாக இருந்து இந்த வேலைத்திட்டத்திற்கு பெரும் பலமாக உள்ளனர்.

குறிப்பாக 2010ஆம் ஆண்டு முதல் இந்த பரீட்சைக்காக அதிகளவான காலம் வழங்கப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டில் 219 நாட்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் 2021ல் 141 நாட்கள் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் 2023ல் 84 நாட்களே வழங்கப்பட்டுள்ளன. இது அநீதியானது என்றார். அதனையடுத்து அது தொடர்





பில் கருத்துக்களை முன்வைத்த எதிரணி சுயாதீன எம் பி வீரசுமன வீரசிங்க:

இது ஒரு இலட்சம் மாணவர்களுடன் தொடர்புடைய பிரச்சினை. இது தொடர்பில் முடிவுகள் எடுக்கப்படும் போது அவதானமாக செயற்பட வேண்டும். அது கவனத்திற்கொள்ளப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்வித்துறை அதிகாரிகள், பரீட்சைகள் ஆணையாளர் உள்ளிட்ட துறை சார்ந்தோரை அழைத்து விரிவாக கலந்துரையாடப்பட்டு அதற்கான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்றார் அவர்.

அதனைத் தொடர்ந்து அத்தனை கேள்விகளுக்கும் பதில் அளிக்கும் வகையில் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த விளக்கமளித்தார். அது தொடர்பில் அவர் தெரிவித்த போது,

ரோஹினி கவிரத்ன எம்பி சபையில் சிறந்த யோசனையொன்றை முன் வைத்துள்ளார். அதை நான் கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளேன்.

அந்த யோசனை பரீட்சைகள் ஆணையாளரின் கவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் அவர் விரைவில் அறிவிப்பொன்றை வெளியிடுவார் என்றும் அதன் போது அமைச்சர் தெரிவித்தார். பரிட்சைகள் ஆணையாளரின் கருத்துக்கு மறுநாள் அமைச்சர் சபையில் அந்த வகையில் இவ்வருடம் நவம்பர் மாதத்தில் நடத்த தீர்மானித்திருந்த 2023 க.பொ.த உயர்தரப் பரீட்சையை ஒத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதிகள் தொடர்பான விபரங்கள் அடுத்த வாரத்தில் பரீட்சைகள் ஆணையாளரால் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,உயர்தரப் பரீட்சை தொடர்பில் கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்களம் ஆகியன விடயங்களை ஆராய்ந்து மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாதவாறு தீர்மானங்களை முன்னெடுப்பது அவசியமாகும். 2023 உயர்தரப் பரீட்சையை ஒக்டோபர் மாதத்தில் நடத்தவதற்கே முதலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் 2022 பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் நடவடிக்கையில் ஏற்பட்ட தடைகள், அது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்கப் போராட்டங்களால் அந்த நடவடிக்கைகள் 3 மாதங்கள் தாமதமடைந்தமையினால் பெறுபேறுகள் செப்டம்பரிலேயே வெளியாயின. எனினும் அதற்கு முன்னரே 2023 உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இந்நிலையில் பெறுபேறுகள் வெளியான பின்னரும் மேலும் 44,473 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. இதன்படி மொத்தமாக 342,842 பேர் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். இந்நிலையில் பரீட்சையை ஒத்திவைக்குமாறு பெருமளவானவர்கள் கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர். பாராளுமன்றத்திலும் ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அந்த கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர். அதன்படி பரீட்சையை ஒத்தி வைக்கும் போது சில விடயங்களை கருத்திற்கொள்ள வேண்டும். கடந்த வருடங்களில் கொவிட் உள்ளிட்ட தவிர்க்க முடியாத காரணங்களால் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டன. இதனால் பெற்றோர்களும் மாணவர்களுமே பாதிக்கப்பட்டனர்.

இவ்வாறாக பரீட்சைகள் தாமதமாகி, பெறுபேறுகள் வெளியாவதில் தாமதம் ஏற்பட்டதால் பல்கலைக்கழக அனுமதி, உயர் கற்கைநெறிகளுக்கு உள்வாங்கல், வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு பிரவேசித்தல் என்பனவும் தாமதமாகி குறித்த வயதில் கற்கைகளை தொடர முடியாது போயுள்ளது. அவ்வாறே இந்த வருடத்திலும் 2023ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையை 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு ஒத்திவைப்பதால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை நாம் அனைவருமே கவனத்திற் கொள்ள வேண்டும். அவ்வாறு தீர்மானம் எடுத்தால் 2024 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள 2023ஆம் ஆண்டுக்கான சாதரண தரப் பரீட்சையை 2024 மே மற்றும் ஜூன் மாதங்களுக்கு ஒத்திவைக்க நேரிடும்.

அதேபோன்று 2023ஆம் ஆண்டுக்கான உயர் தரப் பரீட்சையின் பெறுபேறுகள் 2024 ஜூலையில் வெளியிடப்பட்டால் 2024ஆம் ஆண்டுக்கான உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களுக்கு இது போன்ற கூடுதல் காலம் வழங்கப்பட வேண்டும்.

அப்படியானால், 2024 உயர் தரப் பரீட்சை 2024 டிசம்பர் அல்லது 2025 ஜனவரி வரை தாமதமாகலாம்.

இவ்வாறு பாடசாலை பரீட்சைகள் மாற்றப்பட்டால் பாடசாலை கல்வி அட்டவணைகளும் தாமதமாகும். அதனால், முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைப்பதும் காலதாமதமாகலாம். உயர் தரப் பரீட்சை தாமதமாவதால் 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களின் இரண்டு குழுக்கள் சிறிது காலம் காத்திருக்க வேண்டி வரும். இதனால் வகுப்பறைகளில் இடப் பிரச்சினைகள் ஏற்படும்.

அத்துடன் உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதில் காலதாமதம் ஏற்படுவதால் பல்கலைக்கழக அனுமதியும் தாமதமாகும். அத்துடன் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் புலமைப்பரிசில்களும் கிடைக்காமல் போகும். அத்துடன் உயர் டிப்ளேமா கற்கைகளுக்கு பிரவேசிப்பதும் தாமதமாகும். அதன் ஒரு பிரதிபலனாக அரச துறையில் வெற்றிடங்களுக்கு ஊழியர்களை இணைத்துக்கொள்ளும் செயற்பாடுகளும் தாமதமாகலாம்.அதேவேளை, உயர்தரப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றும் வயது 18 ஆக உள்ள நிலையில், கடந்த 3 வருடங்களில் நாட்டில் ஏற்பட்ட நிலைமைகளால் அது 18 வயதை கடந்துள்ளது.

எவ்வாறாயினும் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் பெறுபேறுகள் வெளியான பின்னர் கிடைக்கப் பெற்ற மீண்டும் பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பங்கள் முன்னைய வருடங்களை விடவும் அதிகரித்த எண்ணிக்கையாக காணப்படுவதாலும் பரீட்சைக்கு தயாராவதற்கு போதுமான காலம் கிடைக்காமையினாலும் ஏற்படக் கூடிய பாதிப்புகளை கருத்திற்கொண்டு, பாடசாலை கால அட்டவணைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உயர்தரப் பரீட்சை தினத்தை மறுசீரமைக்க பரீட்சைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இதன்படி திருத்தப்பட்ட பரீட்சை திகதிகள் தொடர்பாக அடுத்த வாரமளவில் பரீட்சைகள் ஆணையாளர் வெளியிடுவார். எவ்வாறாயினும் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில் பெருமளவானவர்களும் அவர்களின் பெற்றோரும் பரீட்சையை ஒத்தி வைக்க வேண்டாம் என்று பல்வேறு முறைகளில் கோரிக்கைகளை விடுத்துள்ளனர். எவ்வாறாயினும் அநீதிக்குள்ளாகும் மாணவர்களுக்கு அந்த அநீதியை தவிர்த்துக் கொள்ளும் வகையில் பரீட்சைகள் திணைக்களம் ஒரு முடிவை எடுக்கும். அந்த திணைக்களத்துக்கு அதற்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் சபையில் தெளிவுபடுத்தினார்.

## பேத்தியின் பிள்ளை வந்து பூட்டியாக்கி நின்றாள் என்னை


சின்னஞ் சிறுசுகள்
சிரிச்சு விளையாடிச்சுகள்
இருந்தும் பாதுகாக்க
வாய்ப்பு இல்லாமல் போச்சு.
வாய்கால் தண்ணியில
ஓடி விளையாடும் பசலுகள்
தோஞ்ச கோலத்தில வர
தாய்ப்பெட்டையும் திட்டுவாள்.
தட்டை கொட்டி உணவை
பரப்பி விளையாடும் சிறுசு
ஊத்தை பிரட்டி உடுப்பை
கழட்டி போட்டு போகுதுகள்.
ஆத்தை வந்து தோய்க
அப்பன் வந்து செல்லம்
கொஞ்சி விளையாடுவான்.

இன்று ஒன்றும் இல்லையே!
தொலைஞ்சு போச்சே
சோகம் மனதில் வந்து
இறுக்கிப் போகிறது
மகிழ்ச்சியை பறித்தெறிஞ்சு.
ஈழத்தமிழ் பாட்டி
புலம்பினாள் இப்படி.
கலைந்து போன தன்
பேத்தி வாழ்வதுவால்.
போர் வந்து கொல்ல
தாயிழந்து போனதால்
அன்று மலர்ந்த பிஞ்சு
இன்று பாவம் தவித்திட.
என்ன செய்து கொள்ள
சொந்தம் இல்லாத வாழ்வு
வேரிழந்த மரம் போல்
மண் சாய்ந்து கிடக்கிறது.
நன்றே உண்டு உறங்கி
உடல் ஊதிப் பருத்தும்
மனதிலே உள்ள வலிக்கு
மருந்தென்ன உண்டிங்கு?
உலகோடி தேடினாலும்
சின்னஞ்சிறுக்கு தன்
தாய் போல் என்னாகுமோ
ஈடாகும் உறவேதோ?
சிறுவர் தினம் என்று
கூடிக் குதூகலிக்கும்
பிஞ்சு மனதில் பாரம்
தாங்கிட கூடுமோ இன்று.
பிறகென்ன காலம் ஓட
பேத்திக்கொரு பிள்ளை
பூட்டியாக்கினாள் தன்னை.
முகம் மலர்ந்தாள் பாட்டி.

கண்கள் குளமாகி வழிய
புன்னகை உதடு நிறைய
இரண்டும் கலந்த கோலத்தில்
அன்று கண்டேன் தாயை.
பிள்ளைக்கு பிள்ளை
என்றான பின்னும் இன்று
பிள்ளையை இழந்த மனதோடு
பிரிந்த பெருந் துயரோடு.
சிறுவர் தினத்தோடு
முதியோர் தினமும் கூட
நினைவுகள் மீண்டு வந்து
பாட்டியை வதைக்கிறது.
வாழ்க்கை கோலமது மாற
நினைவுகள் மறந்து தான்
மலையேறிய கதையாகிட
முதியோர் இல்ல வாழ்வு சேர.
எதை எண்ணி எப்படி
நொந்து மனதை தேற்ற.
இந்த இழிநிலை என்று மாறும்.
நன்று நின்று வாழ்ந்திட.
நன்றியை கூடவா மறந்து
நாய் போல அலைய விட்டு
தாய்ப் பாசம் புரிந்து வாழும்
ஒரு பிறப்பில்லையோ இனி.

அன்புடன் நதுநசி



## எட்மண்ட் ரணசிங்கவுக்கு...

பாராட்டும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை (03) பிற்பகல் 3.00 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவின் பிரகாரம் நாட்டிலுள்ள ஊடகவியலுக்காக அளப்பரிய சேவையாற்றிய மூத்த ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வாக இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது 93 அகவையிலுள்ள ரணசிங்கவின் ஏழு தசாப்தகால ஊடகப் பணியை அங்கீகரிக்கும் வகையில் தொகுக்கப்பட்ட எட்மண்டின் பத்திரிகை புரட்சியின் வெளியீடும் அங்கு வெளியிடப்படவுள்ளது.

தற்போது அமெரிக்காவில் வசிக்கும் ஐலண்ட் மற்றும் ரிவிர பத்திரிகைகளின் முன்னாள் பிரதம ஆசிரியர் உபாலி தென்னகோன் இந்நிகழ்வில் சிறப்புரை ஆற்றவுள்ளார். 2009ஆம் ஆண்டு தென்னகோன் மீதான கும்பல் தாக்குதலுக்கு பின்னர், அவர் நாட்டில் பொதுநிகழ்வில் பங்கேற்பது இதுவே முதல் முறையாகும்.

1952ஆம் ஆண்டு லேக் ஹவுஸ் நிறுவனத்தின் 'டெய்லி நியூஸ்' பத்திரிகையின் ஊடகவியலாளராக தனது ஊடகத்துறை வாழ்க்கையை தொடங்கிய எட்மண்ட் ரணசிங்க, தாம் செய்தி ஆசிரியராக இருந்த போது லேக் ஹவுஸ் நிறுவனத்தை அரசாங்கம் கையகப்படுத்தியமைக்கு எதிராக 1973 இல் பிரதி ஆசிரியர் பதவியை வகித்த தனது சேவையிலிருந்து விலகினார்.

1977 இல் லேக் ஹவுஸ் நிறுவனத்தில் மீண்டும் 'தினமின' ஆசிரியராக பதவியேற்று, பின்னர் சிலுமின பத்திரிகையின் ஆசிரியரானார். எட்மண்ட் ரணசிங்கவின் காலத்தில் சிலுமின பத்திரிகை 300,000 பிரதிகளை தாண்டி விற்பனை செய்த சாதனை இன்றும் உடைக்கப்படாமல் உள்ளது.

1981ஆம் ஆண்டு 'திவயின' நாளிதழின் ஆரம்ப ஆசிரியராக நியமிக்கப்பட்ட ரணசிங்க, இலங்கையில் பத்திரிகைத்துறையை புதிய திசைக்கு கொண்டு சென்று, அதி உச்சத்துக்கு கொண்டு சென்றார். ஆசிரியர் பணிப்பாளராகவும் இருந்த ரணசிங்க, 2016 இல் மீண்டும் தனது 86ஆவது வயதில் 'சிலுமின' ஆசிரியரானார்.

## இராஜினாமா கடிதம்...

ராஜபக்ஷ தெரிவித்தார். முல்லைத்தீவு நீதவானின் பதவி விலகல் தொடர்பாக சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய தகவலிலேயே, நீதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, குருந்தூர்மலை விவகாரம் தொடர்பான தீர்ப்பை அடுத்து, உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதவான் ரி.சரவணராஜா தனது பதவியிலிருந்து விலகி, நாட்டை விட்டும் வெளியேறுவதாக அறிவித்திருந்தார்.

தனது பதவி விலகல் கடிதத்தை நீதிச்சேவைகள் ஆணைக்குழு செயலகத்துக்கு நீதவான் சரவணராஜா கடந்த 23ஆம் திகதி அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், முல்லைத்தீவு மாவட்ட நீதவான் ரி.சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பான கடிதம் தமக்கு இதுவரையில் கிடைக்கவில்லையெனவும், நீதி அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள ஐந்து வழக்குகளுக்கு பிரதிவாதியாக நீதவான் ரி.சரவணராஜா பெயரிடப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அத்துடன், தமக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தால், ஒரு நீதவானாக அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் சரவணராஜாவுக்கு இருப்பதாகவும், அவர் சுட்டிக்காட்டினார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் கடந்த வாரம் கொழும்புக்கு பயணம் செய்ததாகவும் அவரது வாகனத்தை விற்பனை செய்துள்ளதாகவும், நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது மட்டுமல்லாது சரவணராஜாவின் கொழும்பு பயணத்தின் போது, அவர் மேற்குலக நாடுகளின் தூதுவர்களை சந்தித்துள்ளதாகவும், இது தொடர்பாக தாம் தனிப்பட்ட விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும், நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட நீதவானுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டிருந்த நிலையில், அனைத்து நீதவான்களுக்கும் வழங்கப்பட்ட அதே பாதுகாப்பு அவருக்கும் வழங்கப்பட்டதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

# முல்லைத்தீவு நீதவான் விடயத்தில் நீதியான விசாரணை அவசியம்

### ஆனந்தகுமார்

உயிர் அச்சுறுத்தல் மற்றும் தொடர்ச்சியான அழுத்தங்கள் காரணமாக, தான் வகித்துவந்த நீதவான் பதவி மற்றும் பொறுப்புகளை விட்டு விலகியுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட நிதிமன்ற நீதவான் ரி.சரவணராஜா தெரிவித்துள்ள பின்புலத்தில் நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டுமென, ஜனாதிபதியின் கீழியங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூவரடங்கிய குழு உறுப்பினர் சுப்பையா ஆனந்த குமார் தெரிவித்தார். இந்த விவகாரம் தொடர்பாக உரிய விசாரணையை நீதி அமைச்சு மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், இதற்காக விசேட குழுவொன்றையும் நியமிக்க வேண்டுமென்று நீதி அமைச்சிடம் கோரிக்கை விடுப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# பிளாஸ்டிக் தடை இன்று முதல் அமுலுக்கு!

ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்குகள் மற்றும் குறுகிய கால பிளாஸ்டிக் உற்பத்திகளை தடை செய்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இன்று முதல் அமுலுக்கு வருவதாக, மத்திய சுற்றாடல் அதிகாரசபை அறிவித்துள்ளது. இந்த வர்த்தமானி அறிவித்தலை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் சுபுன் எஸ்.பத்திரகே தெரிவித்தார். இதற்கமைய, இன்று ஒக்டோபர் முதலாம் திகதி முதல் இது தொடர்பாக திடீர் சோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கைத் தமிழர்...

நேற்று முன்தினம் (29) கையளித்தனர். இந்த அறிக்கையை சென்னை தலைமைச் செயலகத்தில் வைத்து முதல்வரிடம் மேற்படி குழுவின் தலைவரும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சருமான செஞ்சி கே.எஸ்.மஸ்தான் சமர்ப்பித்தார்.

பல்வேறு காலகட்டங்களிலும் இலங்கையிலிருந்து வரும் தமிழர்களுக்கு நலத் திட்டங்களை மாநில அரசு செயற்படுத்தி வருகிறது. தற்போது இலங்கைத் தமிழர்கள் சுமார் 58,357 பேர் மறுவாழ்வு முகாம்களிலும் 33,479 பேர் முகாம்களுக்கு வெளியிலும் தங்கியுள்ளனர்.

இலங்கைத் தமிழரின் நலன்களை பேணவும் அவர்களுக்கு நீண்டகால தீர்வுகளை அளிக்கவும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் மஸ்தான் தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டது.

## பெண் பயணியின் நகைகளை...

விமானசேவை பாதுகாப்பு பிரிவில் ஸ்கானிங் இயந்திரத்தை பரிசோதனை செய்யும் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மினுவாங்கொடை, ஹீனடிய பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாடு செல்ல விமான நிலையம் வந்த பெண்ணின் தங்க மாலை மற்றும் பென்டனை இச்சந்தேக நபர் திருடியதாக செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சந்தேகநபரிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில், திருடியதாக கூறப்படும் தங்க மாலையை நகைக் கடையொன்றில் விற்பனை செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மேலதிக விசாரணையை பொலிஸார் முன்னெடுத்த போது, சந்தேகநபர் விற்பனை செய்ததாக தெரிவிக்கப்படும் தங்கமாலையானது, விற்பனை செய்யப்பட்ட பின்னர் உருக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

மேலும், இந்தப் பெண்ணிடமிருந்து திருடிய பென்டன் மற்றும் இன்னுமொரு பெண்ணின் கைப்பையிலிருந்து திருடியதாக தெரிவிக்கப்படும் சிறியளவிலான தங்க மோதிரங்கள் மற்றுமொரு நகைக் கடையொன்றில் அடகு வைக்கப்பட்டுள்ளமையும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

முல்லைத்தீவு நீதவான் விவகாரம்

# முழுமையான விசாரணைக்கு அமைச்சர் ஜீவன் வலியுறுத்து



சட்டத்தின் ஆட்சியை நிலை நாட்டுவதில் நீதவான்கள் முக்கிய பங்கு வகிப்பதுடன், முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவானாக கடமையாற்றிய ரி.சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளதாக தெரிவிக்கப்படும் விவகாரம் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டுமென, நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அமைச்சரவை கூட்டத்தில் பிரஸ்தாபிக்கவுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் பணியாற்றிய நீதவான் ரி.சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பாக நான் மிகவும் கவலையடைகிறேன். குருந்தூர்மலை விவகாரம் தொடர்பாக வழங்கப்பட்ட தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை நீதித்துறையின் நிலையை கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது.

## சரவணராஜாவை தொடர்பு...

தலைவரும் சட்டத்தரணிகள் கூட்டிணைவின் உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

நீதவான் சரவணராஜாவின் பதவி விலகல் விடயத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாக சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து ஆராய்ந்து வருவதாகவும், ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் சரவணராஜா, உயிர் அச்சுறுத்தல் மற்றும் மிகையான அழுத்தங்கள் காரணமாக தனது அனைத்து பதவிகளிலிருந்தும் விலகுவதாக தெரிவித்து நாட்டை விட்டும் வெளியேறுவதாகவும் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், அவரை தொடர்புகொள்ள முற்பட்டும், அது சாத்தியமாகவில்லையென்பதுடன், நீதவான் சரவணராஜாவின் பதவி விலகல் கடிதம் மற்றும் அவர் கூறியதாக சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் வெளியாகியுள்ள விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம்" எனத் தெரிவித்தார்.

## சர்வதேச சிறுவர்...

(01) நடைபெறும். இன்று முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும் சிறுவர் தின நிகழ்வின் கருப்பொருள் 'குழந்தைகள் எல்லாவற்றையும் விட விலைமதிப்பற்றவர்கள்' என்பதாகும்.

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சும் பிரதமர் அலுவலகமும் இணைந்து நடத்தும் இந்நிகழ்வில், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்கவும் பங்கேற்கிறார்.

இதேவேளை, இந்த ஆண்டுக்கான முதியோர் தினத்தின் கருப்பொருள் 'மாறும் உலகில் முதியோர்களின் பின்னடைவு' என்பதாகும்.

## ரயில் சாரதி இந்திக்கவுக்கு...

நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியமை தொடர்பாக ரயில்வே சாரதி இந்திக்க தொடங்கொடவுக்கு எதிராக நீதிமன்றம் தடையுத்தரவு விதித்துள்ளது.

ரயில்வே திணைக்களத்தில் கட்டுமான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டமை தொடர்பாக அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு எதிராக ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் பொய்யான மற்றும் அவதூறான குற்றச்சாட்டுகளை வெளியிட்டமையால் அமைச்சரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து, கொழும்பு மாவட்ட இலக்கம் 01 நீதிமன்றத்தில் அவரது சட்டத்தரணிகளால் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து விசாரணை நடைபெற்ற போதே, நீதிமன்றம் இந்த தடையுத்தரவை விதித்துள்ளது.

ரயில்வே திணைக்களத்தின் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தங்களை வழங்கியது தொடர்பாக சம்பந்தப்பட்ட இந்திய நிறுவனத்திடம் அமைச்சர் பந்துல குணவர்தன இலஞ்சம் பெற்றுக்கொண்டதாக ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் இந்திக்க தொடங்கொட பொய் பிரசாரங்களை மேற்கொண்டிருந்தார்.

இதனால் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து அமைச்சர் பந்துல குணவர்தன தனது சட்டத்தரணிகளினூடாக நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்தார்.

ஜனாதிபதி சட்டத்தரணி வி.கே.சொக்சி, டி.எஸ்.ரத்நாயக்க மற்றும் மினோலி அலெக்சாண்டர் ஆகியோர் அடங்கிய சட்டத்தரணிகள் குழுவினர், சட்டத்தரணி தம்மிகாவின் ஆலோசனையின் பேரில் நீதிமன்றத்தில் விடயங்களை தெளிவுபடுத்தினர்.

இதனையடுத்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மாவட்ட நீதிமன்றம், ரயில்வே சாரதியான இந்திக்க தொடங்கொடவுக்கு எதிராக இந்த தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

அந்த வகையில் அவர் எந்த விதத்திலும் பேச்சுவார்த்தைகளில் கருத்துகளை முன்வைத்தல், தாம் அல்லது வேறு நபர்களினூடாக நேரடியாக அல்லது மறைமுகமாக இழிவுபடுத்தும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அல்லது தொடர்ச்சியாக நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்படுதல், ஊடகங்கள் மூலமோ அல்லது சமூக வலைத்தளங்கள் மூலமோ அல்லது வேறுவழியில் முறைபாட்டாளர்களை இழிவுபடுத்தும் வகையில் எந்த விடயங்களையும் தெரிவிப்பதற்கு அவருக்கு உரிமை கிடையாதென நீதிமன்றம் அந்த தடையுத்தரவில் தெரிவித்துள்ளது.

இந்த மனுவை ஒக்டோபர் 11ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவும் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக இந்திக்க தொடங்கொடவுக்கு எதிராக அமைச்சர் பந்துல குணவர்தன, குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்திலும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிலும் முறைப்பாடுகளை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொதுமக்களின் கருத்து...

தொடர்பாக பொதுமக்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்த வருடத்தில் மூன்றாவது முறையாக மின்சாரக் கட்டண திருத்தம் மேற்கொள்வதற்காக இலங்கை மின்சாரசபை இரண்டு முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளதாக, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமுல்படுத்தப்படவுள்ள கட்டண திருத்தத்துக்கு பதிலாக அமைச்சரவையின் தீர்மானத்துக்கமைய, இந்த விசேட கட்டண திருத்த யோசனை இலங்கை மின்சாரசபையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் மஞ்சுள பெர்னாண்டோ மேலும் தெரிவித்த போது,

"மின்சார கட்டணங்கள் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை ஆலோசனைக்கமைய, வருடம் தோறும் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் மின்சார கட்டண திருத்தத்துக்கான முன்மொழிவுகளை இ.மி.ச. முன்வைக்கலாம். இந்நிலையில், அடுத்த வருடத்தின் ஜனவரி முதல் அமுலுக்கு வரும் வகையில் கட்டண திருத்தத்தை மேற்கொள்ள முடியும்.

எவ்வாறாயினும், இலங்கை மின்சார சபையின் நிதி நிலைமை, மின்சார உற்பத்தி மற்றும் மின்சாரத்துக்கான கேள்வி ஆகியவை முன்னறிவிக்கப்பட்ட நிபந்தனைகளிலிருந்து வேறுபட்டுள்ளமையால், இலங்கை மின்சார சபை முன்வைத்துள்ள தகவல்களின் அடிப்படையில், ஜனவரி மாதத்துக்கு திட்டமிடப்பட்டிருந்த கட்டண திருத்தத்தை முன்னோக்கி கொண்டு வருவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் ஜனவரியில் மீண்டும் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்படாதென குறிப்பிட வேண்டும். இந்த வருடத்தில் 31 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுமென்று இ.மி.ச. மதிப்பிட்டுள்ளது" எனத் தெரிவித்தார்.

## எங்கள் கருத்து

# தாயக நலன்களை மறந்த சுயநலம்!

அந்நாடுகளுக்குச் சென்றால் வசதிவாய்ப்புகளுடன் வாழலாமென்று அவர்கள் நினைக்கின்றனர்.

போதுமான கல்வித்தகைமையும், தொழில்வாய்ப்பும் இல்லாதவர்கள் பணமீட்டும் நோக்கில் வேறுநாடுகளுக்குச் செல்ல விரும்புவதென்பது வேறுவிடயம். ஆனால் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள் போன்ற உயர்தொழில்களில் உள்ளோரும் மேற்குநாடுகளை நாடுவதுதான் வியப்பாக உள்ளது. இலங்கையில் அவர்களுக்கு போதிய வருமானம் இருந்தும் கூட, அவர்கள் இலங்கையை விட்டு இடம்பெயர்ந்து மேற்குநாடுகளில் வாழ்வதற்கே ஆசைப்படுகின்றனர்.

புலம்பெயர விரும்புவதற்கு அவர்கள் கூறுகின்ற காரணம் பொருளாதார நெருக்கடி ஆகும். வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்து விட்டதாகவும், மேற்குநாடுகளுக்குச் சென்றால் அதிகவருமானம் பெற்று வசதியாக வாழலாம் என்றும் அவர்கள் கூறுகின்றனர். நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவுகின்றதென்பதற்காக தாய்நாட்டை கைவிட்டுச் செல்ல நினைப்பதென்பது சுயநலம் சார்ந்த சிந்தனையென்பதுதான் உண்மை.

மருத்துவர்கள், பொறியியலாளர்களை உருவாக்குவதற்காக இந்த நாடு எத்தனை தொகைப்பணம் செலவிட்டிருக்குமென்பதைப் பற்றியோ, அப்பணம் நாட்டு மக்களின் வரிப்பணம் என்பதையிட்டோ புலம்பெயர்வாசிகள் ஒருகணம் நினைத்துப் பார்ப்பதில்லை. அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் கற்றுத்தான் மருத்துவர்களும், பொறியியலாளர்களும் உருவாகினர் என்பதை மறந்துவிடலாகாது. அவர்களது நான்கைந்து வருடகால கற்கைநெறிக்காக அரசாங்கம் எத்தனை இலட்ச ரூபாவை செலவிட்டிருக்குமென்பதை பட்டம் பெற்றோர் நினைத்துப் பார்க்க வேண்டும்.

மக்களின் வரிப்பணத்தில் மருத்துவ, பொறியியல் பட்டம் பெற்றுவிட்டு, அந்த வரிப்பணத்தைச் செலுத்திய மக்கள் நோயாளியாகிக் கிடக்கையில், அவர்களை மறந்தபடி வெளிநாடு செல்வோரை நினைக்கையில் மனம் வெதும்புகின்றது.

நாட்டில் பொருளாதார நெருக்கடியென்பது எக்காலமும் தொடரப் போவதில்லையென்பதை அவர்கள் புரிந்துகொள்வது அவசியம். என்றோ ஒருநாள் எமது நாடு மீண்டெழும் என்பதையும் அவர்கள் நினைவிற் கொள்ளல் வேண்டும்.

## நீர்நிலைகளில்...

விழிப்புணர்வுடன் நடந்துகொள்ளுமாறு, சமனலவெவ மற்றும் கல்தொட்ட பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஆற்றங்கரைகளில் கூடாரம் அமைத்து தங்குதல், செல்ஃபி எடுத்தல், நீராடுதல், மீன் பிடித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதை முற்றாக தவிர்த்துக் கொள்ளுமாறும் பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

மாத்தறை மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழையினால் நில்வள கங்கை பெருக்கெடுத்துள்ளதை தொடர்ந்து, அங்கு பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், போக்குவரத்துகளுக்கும் தடை ஏற்பட்டுள்ளது. அக்குரஸ்ஸ மாத்தறை பிரதான வீதியின் பரகடுவ பிரதேசம் நீரில் மூழ்கியுள்ளது. இதனால் இந்த வீதியினூடான போக்குவரத்து மேலும் பாதிக்கப்படலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அக்குரஸ்ஸ ஹொரகொடவினூடான மாத்தறை வீதியை பயன்படுத்துமாறும் பொதுமக்களிடம் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அக்குரஸ்ஸ சியம்பலாகொட வீதியின் பாணடுகம பகுதியும் நீரில் மூழ்கியுள்ளது. அக்குரஸ்ஸ கம்புறுப்பிட்டிய வீதி மற்றும் அக்குரஸ்ஸ மாகந்துர வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால், வாகனப் போக்குவரத்துகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாகவும், பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## முன்னாள் சபாநாயகர்...

நேற்றுமுன்தினம் காலை தொடக்கம் மதியம் வரை மானிப்பாய், சுதுமலையிலுள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்ற இரண்டாம் மொழி கற்கைநெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய கலந்துகொண்டார். இதன் பின்னர், அவர் மாலை 4.00 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு சென்று, அங்கு நடைபெற்ற விசேட பூஜைகளிலும் கலந்துகொண்டார். யாழ்ப்பாணம் ஸ்ரீவிஹாரைக்கும் அவர் சென்றதுடன், நாக விஹாராதிபதி ஸ்ரீவிமலரத்தன தேரரையும் அவர் சந்தித்து கலந்துரையாடினார்.

## முழுமையான விசாரணையை...

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார். தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக இதற்கு முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொலிஸாருக்கோ அல்லது நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுக்கோ அறிவிக்காமல் நீதவான் பதவி விலகியதாலேயே ஜனாதிபதி இவ்வாறு பணித்துள்ளார்.

எனவே, இந்தச் சம்பவத்துக்கான மூல காரணத்தை உடனடியாக ஆராயுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார்.

இந்நிலையில், இந்த விடயம் தொடர்பாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோருடன் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க கலந்துரையாடியுள்ளார். இந்தக் கலந்துரையாடல்களினூடாக முல்லைத்தீவு நீதவான், இதற்கு முன்னர் தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக எங்கும் முறைப்பாடு செய்யவில்லையென்பது தெரியவந்துள்ளது.

கடந்த 24ஆம் திகதி வெளிநாடு சென்ற நீதவான், தனது இராஜினாமா கடிதத்தை செப்டெம்பர் 23ஆம் திகதி நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

சட்ட மாஅதிபருக்கு எதிராக முல்லைத்தீவு நீதவான் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக சட்ட மாஅதிபரிடம் ஜனாதிபதியின் செயலாளர் கேட்ட போது, வழக்கொன்றை வாதாடுமாறு நீதிச்சேவைகள் ஆணைக்குழுவினூடாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய, நீதவானுடன் தனது அலுவலகத்தில் கலந்துரையாடியதாக, சட்ட மாஅதிபர் தெரிவித்துள்ளார்.

சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் மூன்று சிரேஷ்ட சட்டத்தரணிகளின் முன்னிலையில் முல்லைத்தீவு நீதவானுடன் சட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடியதாகவும் ஜனாதிபதி அலுவலகம் மேற்கொண்ட விசாரணையில் சட்ட மாஅதிபர் தெரிவித்துள்ளார்.

அது மட்டுமல்லாமல், பல தூதரகங்களின் அதிகாரிகளுடன் நீதவான் நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததாக புலனாய்வு அமைப்புகள் ஜனாதிபதி அலுவலகத்துக்கு அறிக்கை அளித்துள்ளன. இந்த விடயங்கள் அனைத்தையும் கருத்திற்கொண்டு இது சனல் 4 இன் மற்றுமொரு நாடகமா அல்லது உண்மையில் அவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதா என்பதை ஆராயுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

## முல்லைத்தீவு மாவட்ட நீதவானை...

நீதிமன்ற உத்தரவை மாற்றியமைக்குமாறோ அல்லது அழுத்தம் கொடுக்கவோ அல்லவென்று நீதிச்சேவைகள் ஆணைக்குழு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் என்ன நடந்ததென்ற நிதர்சனம் புரியாமல், வெவ்வேறு நபர்கள் இந்தப் பிரச்சினை தொடர்பாக முடிவெடுக்க முயற்சிப்பதையும் கருத்து தெரிவிப்பதையும் அவதானிப்பது மிகவும் வருத்தமளிப்பதாகவும், அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கற்றறிந்த நீதவான், சட்ட மாஅதிபர் தன்னை அவரது திணைக்களத்துக்கு வரவழைத்து தனது உத்தரவை மாற்றச் சொன்னாரென்ற நீதவானின் குற்றச்சாட்டு முற்றிலும் தவறானதாகுமென்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 07 எழுத்தாணை விண்ணப்பங்களில் மூன்றில் நீதிபதி, தனது அதிகார பூர்வ / தனிப்பட்ட கோதாவில் ஒரு பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ளார்.

இந்த வழக்குகள் 11.10.2023 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இந்நிலையில்14.09.2023 அன்று சட்ட மாஅதிபரின் உதவி கோரியும் அவருக்காக ஆஜராகுவதற்கு அரச சட்டவாதி ஒருவரை ஏற்பாடு செய்து தருமாறும் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவிடம் எழுத்துமூலம் முல்லைத்தீவு நீதவான் கோரியிருந்தார்.

நீதிச்சேவைகள் ஆணைக்குழு, தனது 15.09.2023 எனத் திகதியிட்ட கடிதத்தின் மூலம் நீதவான் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு சட்ட மாஅதிபரை கோரியிருந்தது.

இந்தப் பின்னணியில் அதிகாரிகளின் தேவையான ஒப்புதலுடன் 21.09.2023 அன்று நீதவானுடன் அவருக்கு எதிரான வழக்கு தொடர்பாக ஆலோசனை நடத்த சட்ட மாஅதிபர் முடிவு செய்தார்.

நீதவான், சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் ஒரு சேவை நாடுனராகவே, சட்ட மாஅதிபர் திணைக்கள அலுவலர்கள் அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்வதற்காக திணைக்களத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

எனவே, இது உண்மையில் சட்டத்தரணி சேவை நாடுனருக்கிடையேயான உறவின் அடிப்படையில் அமையப்பெற்ற ஒரு சந்திப்பாகும்.

திணைக்களத்துடனான கூட்டத்தில் மிகவும் ஆர்வத்துடன் பங்கேற்றுவிட்டு, அவருக்கே நன்கு தெரிந்த காரணங்களுக்காக, அவர் இந்த அபத்தமான/ பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இந்த சந்திப்பின் உண்மையான நோக்கத்துக்கு அவர் ஒரு திருப்பத்தை கொடுப்பது மிகவும் நெறிமுறையற்றதும் தொழில்முறையற்றதுமாகுமென்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# மாணவரை பகடைக்காய்களாக பயன்படுத்தி போராட்டங்களை முன்னெடுக்கக் கூடாது!

## கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் கூறுகின்றார்

**'நாம் எமது மதியைப் பயன்படுத்தியும், கலந்துரையாடல்கள் மூலமுமே பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். இதனை விடுத்து மாணவர்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தி தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுக்கக் கூடாது. நாடு பொருளாதார ரீதியில் சவால்களுக்கு முகங்கொடுத்திருந்தாலும் கல்வித்துறையைத் தொடர்ந்தும் முன்னேற்றிச் செல்வதற்கு அரசாங்கம் உறுதியுடன் உள்ளது' என்று கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார். இலங்கையின் உயர் கல்வித்துறை வாய்ப்புக்களை விஸ்தரிப்பது குறித்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

**கே: கல்வியே மாணவர்களின் எதிர்காலமாகக் கருதப்படும் சூழ்நிலையில் உயர்கல்வியை நோக்கி மாணவர்கள் செல்லும் வாய்ப்புகள் பற்றி நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: பல தசாப்தங்களின் பின்னர் கல்வி என்பது தற்பொழுது சேவை மாத்திரமன்றி, அடிப்படை மனிதஉரிமைகளில் ஒன்று என்பது உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கல்வியானது இலவசமாக அரசாங்கத்தின் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கை அமரர் கன்னங்கராவினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. அக்காலத்துடன் ஒப்பிடுகையில் தற்பொழுது கல்வித்துறையானது இலங்கையிலும், உலகிலும் பாரிய மாற்றங்களுக்கு உட்பட்டதாக பரிணமித்துள்ளது.

கல்வியானது பொதுமக்கள் உடைமையாக்கப்பட்டுள்ளமையால் கட்டாயப் பாடசாலைக் கல்வி என்பதன் ஊடாக பாரபட்சமின்றி பல இலட்சம் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர்.

இலங்கையின் புள்ளிவிபரங்களை எடுத்துக் கொண்டால் சனத்தொகையில் 8.8 மில்லியன் பேர் பாடசாலைக்குச் செல்பவர்களாக இருக்கின்றனர். இலங்கையில் காணப்படும் இயற்கை வளங்களுக்கு அப்பால் மனிதவளம் முக்கியமானதொன்றாக விளங்குகிறது. நாட்டில் சிறந்த மனித வளத்தைக் கட்டியெழுப்புவதில் இந்தக் கல்வித்துறை முக்கிய பங்காற்றுகிறது. இவ்வாறான பின்னணியில் நாடு பொருளாதா ரீதியில் சவால்களை முன்னெடுத்திருந்தாலும் அரசாங்கம் கல்வித்துறையைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் நாம் இருக்கின்றோம்.

இலங்கையில் உள்ள பல்கலைக் கழகக் கட்டமைப்புக்களில் முதலாவது பட்டத்தைப் பெற்றுக் கொள்ளும் ஒன்றரை இலட்சம் மாணவர்களும், இரண்டாவது மற்றும் மூன்றாவது பட்டங்களைப் பெறும் 50 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்களும் காணப்படுகின்றனர். சிறந்ததொரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கான முதலீடாகவே கல்விக்கான முதலீட்டை நாம் பார்க்கின்றோம்.

**கல்வியியலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர். இதனால் புத்திசாலிகள் இழக்கப்பட்டு வருகின்றனர் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்**

**கே: உலகளாவிய ரீதியில் தொழில்நுட்பம் மற்றும் நடைமுறை என்பன மாறுபட்டுவரும் சூழ்நிலையில், இதனை இலங்கைக்குப் பெற்றுக்கொடுக்க எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?**

பதில்: இலங்கை தீவாக இருந்தாலும் உலக நாடுகளிலிருந்து தனிமைப்பட்டு நாம் முன்னேறிச் செல்ல முடியாது. உலகத்துடன் இணைந்து முன்னேறக்கூடிய கல்வித்துறையை நாம் உருவாக்க வேண்டும். ஜேர்மனின் பேர்லின் சுவர் உடைக்கப்பட்ட பின்னர் சந்தை தீர்மானிக்கும் அல்லது சந்தையால் தீர்மானிக்கப்படும் பொருளாதாரப் போக்கு ஒன்று உருவாகியது. நுகர்வுக்கு முன்னுரிமை அளிக்கும் நிலைப்பாடொன்று காணப்படுகின்றது என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். இதன்போது, நுகர்வுக்கு ஏற்ற வகையிலான உற்பத்தி என வரும்போதே தகவல் தொழில்நுட்பம் என்ற விடயம் முன்னோக்கி நிற்கிறது. இவ்வாறான சூழ்நிலையில் தகவல் தொழில்நுட்பத்தை நோக்கி கல்வி செல்ல வேண்டும் என்ற நிலைப்பாடு பெரும்பாலும் காணப்படுகிறது.

அடுத்த வருடத்துக்கான வரவுசெலவுத் திட்டம் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகிறது. உயர்தரத்தை முடித்த பின்னர் மாணவர்கள் வேலையின்றி இருப்பதை விட, உயர்கல்வி கற்கும்போதே தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் கல்வி மறுசீரமைக்கப்பட வேண்டும் என கல்வியியலாளர்கள் பலர் வலியுறுத்தி வருகின்றனர். எனினும், கல்வி என்பதை தொழில்வாய்ப்பை மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கான கருவியாகப் பார்க்க முடியாது. ஒருவர் வளர்ச்சியடைந்து வரும்போது உலகத்தைப் புரிந்து கொள்வதற்கான மூளைப் பயிற்சியே கல்வியின் ஊடாக நாம் வழங்க வேண்டும் என்பது எனது நிலைப்பாடாகும். விமர்சன ரீதியான சிந்தனை மற்றும் பிரச்சினைத் தீர்வு என்பன கல்வியின் ஊடாக மாணர்களுக்குப் புகட்டப்பட வேண்டும். அத்துடன், மாணவர்கள் நாட்டின் பிரஜைகளாக வளர்ந்து வரும்போது அவர்களின் ஊடாக நாட்டுக்குப் பெற்றுக்கொள்ளக் கூடிய சேவைக்கு ஏற்ற வகையிலான பயிற்சிகளும் வழங்கப்பட வேண்டும். எனவேதான் தொழில் வாய்ப்புக்களை மாத்திரம் இலக்கு வைத்து இந்த மாணவ சமூகத்தைக் கட்டியெழுப்பக் கூடாது.

இலங்கையில் உள்ள பெரும்பாலான பல்கலைக் கழகங்களில் கலைத்துறையிலேயே அதிகமான மாணவர்கள் காணப்படுகின்றனர். ஆரம்பம் தொட்டு இலங்கை இடதுசாரிக் கொள்கையில் அதிக நாட்டம் காட்டி வந்தமையால் மனிதநேயம் தொடர்பான கலைத்துறை மீதான கற்பித்தல்களிலேயே ஈடுபாடு அதிகமாக இருந்தமையால் பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் கலைத்துறை சார்பான நிகழ்ச்சித்திட்டங்கள் கூடுதலாகக் காணப்படுகின்றன. கலைத்துறை என்பது ஒருவரைப் பூரணப்படுத்துவதற்கு அவசியமானது. உதாரணமாக எடுத்துக் கொண்டால் தகவல் தொழில்நுட்ப பட்டத்தைப் பெற்று இலட்சக்கணக்கான சம்பளத்தை ஒருவர் பெற்றுக் கொள்ளும்போது அவர்களுக்கான கலைப்படைப்புக்களை யார் மேற்கொள்வது? எனவே, கலைத்துறைக்கான தேவையை முற்றாக நிராகரித்துவிட முடியாது.

**உலக நாடுகளிலிருந்து தனிமைப்பட்டு நாம் முன்னேறிச் செல்ல முடியாது. உலகத்துடன் இணைந்து முன்னேறக்கூடிய கல்வித்துறையை நாம் உருவாக்க வேண்டும்**

**கே: இத்துறையை மேம்படுத்துவதற்குக் காணப்படும் சவால்கள் யாவை?**

பதில்: இலங்கையின் கல்வித் துறையை எடுத்துக் கொண்டால் இதனைப் போல் தொழிற்சங்கங்கள் அதிகம் உள்ள வேறு துறையைக் காண முடியாது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல், கொவிட் தொற்று நோய், அதனைத் தொடர்ந்து பொருளாதார நெருக்கடி எனப் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் உயர்தரத்தைப் பூர்த்தி செய்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் விடைத்தாள்களைத் திருத்தும் பணியிலிருந்து ஆசிரியர்கள் விலகியிருந்தனர். தொழிற்சங்கப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் இவ்வாறான தீர்மானத்தை எடுத்திருந்தனர். உலகில் இவ்வாறு இடம்பெற்ற முதல் சம்பவமாக இது அமையும் என நான் நினைக்கின்றேன். இது துரதிர்ஷ்டவசமானது. நாம் மதியைப் பயன்படுத்தியும், கலந்துரையாடல்கள் மூலமுமே பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். இதனை விடுத்து மாணவர்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தி தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுக்கக் கூடாது.



**உயர்தரத்தை முடித்த பின்னர் மாணவர்கள் வேலையின்றி இருப்பதைவிட, உயர்கல்வி கற்கும்போதே தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் கல்வி மறுசீரமைக்கப்பட வேண்டும்**

**கே: உயர்கல்வியைப் பொறுத்தவரையில் விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவுகிறது. குறிப்பாகப் பெரும்பாலானவர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர். இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதா?**

பதில்: உயர்கல்வி வாய்ப்புக்களை விஸ்தரிப்பது தொடர்பான பாராளுமன்ற விசேட குழுவின் அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கை தொடர்பில் பரந்த கருத்தாடல் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியில் கல்வியியலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

இதனால் புத்திசாலிகள் இழக்கப்பட்டு வருகின்றனர் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். பல்கலைக்கழகங்களில் இருக்க வேண்டிய விரிவுரையாளர்களின் எண்ணிக்கையில் 20 வீதப் பற்றாக்குறை காணப்படுகிறது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளது.




# மக்களின் வருமானத்தை அதிகரிக்க திட்டம் அவசியம்!

இலங்கையின் பொருளாதாரம் சிக்கலான தோற்றத்தைப் பெற்றுள்ளது. வருவாய் குறைந்துள்ளதுடன், அந்நிய செலாவணிப் பற்றாக்குறை வெளிநாட்டு வர்த்தகத்தைப் பாதித்துள்ளது. இதனால், பொதுமக்களின் வாழ்வு சிரமமாக உள்ளது.

கைக்குக் கிடைக்கும் வருமானம் அன்றாடச் செலவுக்கு ஈடுகொடுப்பதில்லை. அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் நாளாந்தம் அதிகரித்து வருவதுடன், சந்தை நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் முயற்சிகள் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. உணவு, மருந்து, எரிபொருள் ஆகியவற்றின் விலைவாசி உயர்வால் பாதிப்படைந்த மக்கள், துன்பமான நிலைமையை மாற்றக் கோருகின்றனர். பொருளாதார நெருக்கடியின் விளைவாக எழுந்துள்ள இந்நிலைமையைக் கட்டுப்படுத்த சர்வதேச நாணய நிதியம் உதவியுள்ளது. பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த எடுக்கப்பட்ட தீர்மானங்களினால் மக்கள் சிரமத்திற்குள்ளாகியுள்ளமை தவிர்க்க முடியாதது.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் மத்தியில், ஏழை மக்கள் அதிக அழுத்தத்தில் உள்ளனர், குறைந்த வருமானம் உள்ளவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பெரு நகர மற்றும் சிறிய நகர்ப்புறங்களில் உள்ள ஏராளமான மக்கள், வீடு கட்டுவதற்கு வாங்கிய கடனையும், கல்விக்கான செலவுகளையும் சமாளிக்க முடியாமல் திணறி வருகின்றனர். பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும், ஏழைகளுக்கு உதவித்தொகை வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

'அஸ்வெசும' என்ற உதவித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் உதவி கிடைக்காத, ஆதரவற்றவர்களுக்கு பொருளாதார வளர்ச்சி மூலம் மாற்றத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

வாழ்வுக்கான போராட்டம் என்பது பொறுப்பு வாய்ந்த துறைகளின் கவனத்திற்கு உரிய விடயமாகும். பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த அதிகளவு அர்ப்பணிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த அர்ப்பணிப்புக்கு பின்னர் பொருளாதாரம் ஸ்திரம் அடைந்திருந்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை. சர்வதேச நாணய நிதியத்தின் யோசனைகளின்படி, பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளுடன் பொருளாதார சீர்திருத்தங்கள் மூலம் வருமானத்தை அதிகரிக்க ஒரு திட்டம் தேவை.

சர்வதேச அளவில் நவீன, போட்டித் தன்மை கொண்ட பொருளாதார அமைப்புகளைக் கருத்தில் கொண்டு, காலாவதியான அமைப்புகளைக் கைவிட வேண்டும். கோஷமிடும் அரசியலால் நாட்டுக்கும் மக்களுக்கும் மறக்க முடியாத அனுபவங்கள் கிடைத்துள்ளன.

இலங்கையின் தேசிய வருமானத்தில் நூற்றுக்கு 80 வீதம் அரசாங்க ஊழியர் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்காக செலவிடப்படுகிறது. கடன் வட்டியில் எழுபது சதவீதத்தை மீளச்செலுத்த வேண்டும். இந்த இரண்டு பிரிவுகளை மட்டும் கருத்தில் கொண்டாலும், இலங்கையின் பொருளாதாரத்தின் தலைவிதி தெளிவாகத் தெரிகிறது. தேசிய வருமானத்தைப் பொருட்படுத்தாமல் தொடர்ச்சியாக பின்பற்றப்படும் கொள்கைகளே தற்போதைய நிலைமைக்கு வழிவகுத்துள்ளன. ஸ்திரப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தில் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும், இது வெற்றிகரமாக செயல்படுத்தப்படாத பிரிவாகும்.

அத்தியாவசிய சேவைகளின் விலைகள் அவ்வப்போது மாற்றியமைக்கப்படுகின்றன, மேலும் இந்த நிறுவனங்களின் செயல்திறனின்மை, முகாமைத்துவ பலவீனம். ஊழல் மற்றும் வீண்விரயம் போன்ற அனைத்து சுமைகளும் நுகர்வோர் மீது சுமத்தப்படுகின்றன. ஒரு யூனிட் மின்சாரம் தயாரிப்பதற்கான செலவு மற்றும் கட்டணம் அல்லது எரிபொருள் இறக்குமதி செலவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கட்டணங்களை நிர்ணயிப்பதில் நுகர்வோர் எதிர்கொள்ளும் சிரமத்தை புறக்கணிப்பது பொருத்தமானதல்ல. நவீன தொழில்நுட்பம் மற்றும் புதிய உற்பத்திகளைப் பயன்படுத்தும் சர்வதேச சமூகம் எரிபொருள் செலவைக் குறைக்கும் முறைகளைப் பயன்படுத்துகிறது.

இந்தியாவில் ஒரு யூனிட் மின்சாரத்தின் விலை இலங்கையை விட குறைவு. கைத்தொலைபேசி டேட்டாவிற்கு மிகக் குறைந்த கட்டணம் வசூலிக்கும் நாடுகளில் ஒன்றாக இந்தியா மாறியுள்ளது. குறைந்த விலையில் எண்ணெய் மற்றும் எரிவாயு வழங்கும் நோக்கில் புதிய முறைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. எரிபொருள் செலவுகள் குறைக்கப்படும் போது சமூகம் பயன்பெறுகிறது. பொதுப்போக்குவரத்தில் தள்ளுபடி கட்டணம் உண்டு. பஸ்களில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யலாம். அரச திட்டங்களை நடத்துவதில் இருந்து அரசாங்கம் பின்வாங்கி முக்கிய பொருளாதார மையங்கள் கூட தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இலங்கை மக்கள் அரச நிறுவனங்களைப் பாதுகாத்து அவற்றின் வேறுபாடுகளை ஈடு செய்ய உலகின் ஏனைய நாடுகளில் உள்ள போட்டி முறைமைகளை ஆராய வேண்டும். சில அரசியல்வாதிகளும் எதிர்க்கட்சிகளும் அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்களை தேசிய வளங்கள் என்று அழைக்கின்றனர். அவற்றின் பலவீனங்கள், பொருளாதாரத்திற்கு செய்யும் கேடு மற்றும் மக்கள் மீது செலுத்தும் அழுத்தம் போன்றவற்றை ஆய்வு செய்ய வேண்டும். ஸ்ரீலங்கா டெலிகொம் மறுசீரமைப்பின் பின்னர் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் அடைந்துள்ள முன்னேற்றத்தை கருத்தில் கொள்வது பொருத்தமானது. இங்கே இரண்டாவது நடவடிக்கைக்காக முடிவெடுப்பதன் மூலம், வாடிக்கையாளர்கள் ஐந்தாம் தலைமுறை வேகமான தரவு பரிமாற்றத்துடன் உட்கட்டமைப்பைப் பெறலாம். பொருளாதாரம் ஸ்திரமான பிறகு, சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் புதிய கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

வருமானத்தை அதிகரிக்கவும் பொருளாதாரத்தை விரைவுபடுத்தவும் முதலீடுகள் தேவை. தொழில்கள் மற்றும் வர்த்தகங்களை அதிகரிப்பதோடு ஏற்றுமதி உற்பத்திக்கான திட்டமொன்று தேவை. உள்நாட்டு அல்லது வெளிநாட்டு தொழில்முனைவோருக்கு புதிய முதலீடுகளுக்கு இடம் தேவை. இது வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது. அரசின் வரி வருவாயை அதிகரிக்கலாம். நாட்டுக்குத் தேவையான தொழில்நுட்பம் கிடைக்கும். தற்போதுள்ள சிக்கலான வரி முறைகள், அதிகாரத்துவம் மற்றும் நிறுவனங்களுக்கு இடையேயான தொடர்பு இல்லாமை என்பன முதலீட்டிற்கு உகந்தவை அல்ல. மேலும் வர்த்தகத்துக்கு அதிக வரிகள் விதிக்கப்படுகின்றன. அவற்றில் வேலை செய்யும் முகாமையாளர்களுக்கு சம்பாதிக்கும் போது செலுத்தும் வரியை அதிகளவு செலுத்த வேண்டியுள்ளது. திறமையானவர்கள் இதனை தாங்க முடியாது வெளிநாடுகளுக்கு செல்கிறார்கள்.

பெட்ரோலியம், தண்ணீர் கட்டணங்களின்படி, கைத்தொழில், விவசாயம் மற்றும் சேவைத் துறைகளுக்கான செலவு அதிகரித்துள்ளது. சாதாரண மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பல்வேறு வழிகளில் வணிகங்களையும், தொழில்களையும் பாதித்துள்ளன. முதலீடு செய்வதற்கு பதிலாக, வங்கியில் பணத்தை வைப்பு செய்து வட்டி பெறலாம். மற்றைய நாடுகளில் குறைந்த செலவில் தொழில் தொடங்கலாம் அதற்கு பங்களாதேஷும் வியட்நாமும் உதாரணம். கடந்த ஆண்டு பங்களாதேசத்தின் ஆடை ஏற்றுமதி வருமானம் 50 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். பல இலங்கையர்கள் அங்கு ஆடைத் தொழிற்சாலைகளை நடத்தி வருகின்றனர். பங்களாதேசத்துக்கு வியாபாரத்தை கொண்டு செல்வது குறித்து ஆராய வேண்டும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

**நாட்டின் பல்வேறு பகுதிகளில் அண்மைக் காலமாகப் பல்வேறு குற்றச்செயல்கள் அதிகரித்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்திருக்கும் சூழ்நிலையில், இனந்தெரியாத நபர்களால் நடத்தப்படும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் பதிவாகி வருகின்றன.**



# நெருக்கடியிலிருந்து நாடு மீண்டெழும் வேளையில், முன்னேற்றத்தைச் சீர்குலைக்கும் வன்முறைகள்!



## தீவிரமான நடவடிக்கை மேற்கொண்டு, வன்முறைகளை ஒடுக்க வேண்டியது அவசியம்!

அண்மைக் காலத்தில் மாத்திரம் இடம்பெற்ற 72 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 45 பேர் கொல்லப்பட்டிருப்பதாக ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ளன. இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்கவின் மாமனாரான காலியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவரும் இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர்களில் அடங்குகின்றார்.

இதற்கு முன்பு சில நாட்களுக்கு முன்னதாக மாளிகாவத்தை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஆறு வயதுக் குழந்தையொன்றும் காயமடைந்திருந்தது. மோட்டார் சைக்கிள்களில் வரும் இனந்தெரியாத நபர்கள் இந்தத் துப்பாக்கிச் சூடுகளை நடத்திவிட்டுத் தப்பிச் செல்வதாகவே அறிக்கையிடப்பட்டுள்ளன. இவற்றை யார் மேற்கொள்கின்றார்கள் அதற்கான நோக்கம் என்ன என்பது பற்றிய விடயங்கள் இதுவரை உரிய தரப்பினரால் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்படவில்லை.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நாட்டை மீட்டு சரியான பாதைக்குக் கொண்டு செல்ல அரசாங்கம் கடுமையான முயற்சிகளை எடுத்திருக்கும் சந்தர்ப்பத்தில், இவ்வாறான சம்பவங்கள் முன்னேற்றத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துபவையாக அமைகின்றன. அதிகரித்துள்ள குற்றச்செயல்களை, குறிப்பாக படுகொலைச் சம்பவங்களை நிறுத்துவதற்கு மூன்றுமாத கால அவகாசம் வழங்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஊடகங்களின் மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டு ஏறத்தாழ ஒருமாதகாலம் கடந்துள்ள நிலையிலும் படுகொலைகள் தொடர்ந்து வருகின்றமை மக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

போதைப்பொருள் கடத்தல்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரம் போன்றன கணிசமாக அதிகரித்திருப்பதும் இந்த நிலைமைக்குக் காரணமாக இருக்கலாம் என பாதுகாப்புத்துறையினர் சுட்டிக்காட்டுகின்றனர். விசேடமாக நாடு பொருளாதார ரீதியில் சந்தித்துள்ள சவால்கள் குறித்து அரசாங்கமும், ஒட்டுமொத்த அரசபொறிமுறையும் கவனம் செலுத்தியிருக்கும் நிலையில், பாதாள உலகக் குழுவினர் தமது கைவரிசையைக் காட்ட ஆரம்பித்துள்ளனரா என்ற கேள்வியும் எழுகிறது.

### அண்மைக் காலமாக ஆங்காங்கே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்!

எந்தவொரு காரணத்துக்காகவும் தேசிய பாதுகாப்புக்கான முக்கியத்துவத்தைக் குறைக்கத் தயார் இல்லையென அரசாங்கம் தொடர்ச்சியாகக் கூறிவரும் சந்தர்ப்பத்தில், அதிகரித்துள்ள பாதாள உலகக் குழுவினரின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டியதும் அவசியமாகிறது.

நாட்டில் வேகமாகப் பரவிவரும் போதைப்பொருள் அச்சுறுத்தலை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து அது பற்றிய அவதானிப்புக்களையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழுவொன்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு தொடர்ச்சியாகக் கூடி இவ்விடயத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினரைச் சந்தித்து கலந்துரையாடி வருகின்றது. இது ஒருபுறமிருக்க, போதைப்பொருள் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துவதன் தேவை குறித்துப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். குறிப்பாக போதைப்பொருள் வியாபாரத்தில் உள்ள முக்கிய நபர்களைக் கைதுசெய்யாது போதைப்பொருள் பயன்படுத்துபவர்களை மாத்திரமே சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரிகள் கைதுசெய்வதாகவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதுவிடயத்தில் பொலிஸார் தொடர்ந்தும் பொறுப்புடனும், மேலும் வினைத்திறனுடனும் செயற்பட வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது. முறைப்பாடுகள் பொலிஸ் நிலையத்தைத் தேடிவரும்வரை காத்திருக்காது திடீர் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டு குற்றவாளிகளைக் கைது செய்வதில் மேலும் கடுமையாக உழைக்க வேண்டும்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் சிலரே போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்பில் இருக்கின்றனர் என்ற பரவலான குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படும் சூழ்நிலையில், இது விடயத்தில் பொலிஸார் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். இல்லாவிட்டால் முப்படையினரின் உதவியுடன் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டு போதைப்பொருள் வியாபாரத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் பட்சத்தில் பாதாள உலகக் குழுக்களினால் மேற்கொள்ளப்படுகின்ற படுகொலைகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த முடியும்.

இதற்கு முன்னரும் நாட்டில் ஏற்படக் கூடிய சாதாரண சூழ்நிலைகளைப் பயன்படுத்தி பாதாள உலகக் குழுவினர் தலைதூக்கியமை நினைவிருக்கலாம். தற்பொழுதும் கடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். பொலிஸாருக்குத் தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டு அதற்கான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நாடு தொடர்பில் பிழையான அர்த்தப்படுத்தல்கள் சர்வதேசத்துக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் உண்டு. அரசாங்கம் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்துவரும் நிலையில், உயர் பொறுப்புக்களில் உள்ள அதிகாரிகளும் இதனை உணர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

இது இவ்விதமிருக்க, தேசிய பாதுகாப்பை கேள்விக்கு உட்படுத்தும் விதத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நடந்துகொள்வதாகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் பாராளுமன்றத்தில் கூறியிருந்தார். பாராளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற உயிர்த்தஞாயிறு தாக்குதல் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியிருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகளில் பாதுகாப்புத் தரப்பினரும், விசாரணை மேற்கொண்ட தரப்பினரும் உரிய முறையில் செயற்பட்டுள்ளனர். இருந்தபோதும் அதனைக் கேள்விக்குட்படுத்தும் விதத்தில் சிலர் செயற்படுகின்றார்கள் என்றும் இதற்கு இடமளிக்கப் போவதில்லையென்றும் அவர் கூறியிருந்தார்.

ஒரு சிலரின் செயற்பாடுகளால் அரசாங்கத்தின் உயர்பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் புலனாய்வு அதிகாரிகள் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும், எதிர்காலத்தில் அவ்வாறான அதிகாரிகள் எவ்வாறு நம்பிக்கையுடன் நாட்டுக்காகப் பணியாற்றுவார்கள் என்றும் கேள்வியெழுப்பியிருந்தார். சனல் 4 தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட விடயங்கள் குறித்து நம்பிக்கைத் தன்மை இல்லையென்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

**பி.ஹர்ஷன்...**

---

**கனடாவில் கொலை செய்யப்பட்ட காலிஸ்தான் தீவிரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் அரங்கேற்றிய தீவிரவாதத் தாக்குதல்களை இந்திய அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர்.**



# கனடாவில் கொலை செய்யப்பட்ட தீவிரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் அரங்கேற்றிய தாக்குதல் சம்பவங்கள்!

காலிஸ்தான் தீவிரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை செய்யப்பட்டதன் தொடர்ச்சியாக இந்தியாவுக்கும், கனடாவுக்கும் இடையே இராஜதந்திர மோதல் தற்போது நிலவி வரும் நிலையில், அவர் இந்தியாவில் அரங்கேற்றிய தீவிரவாத செயல்கள் குறித்து இந்தியா அறிக்கை மூலம் தகவல் வெளியிட்டுள்ளது.

கனடாவில் செயற்படும் பல்வேறு காலிஸ்தான் அமைப்புகளின் தலைவராக செயல்பட்டவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார். இவர் கடந்த ஜூன் மாதம் கனடாவின் வான்கூவர் நகருக்கு அருகே மர்மநபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இச்சம்பவமானது கனடாவில் உள்ள காலிஸ்தான் அமைப்புகளை கொந்தளிக்க வைத்துள்ளது.

இத்தகைய சூழலில், ஹர்தீப் சிங்கின் கொலைக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பகிரங்கமாக அறிவித்தார். அவரது கூற்றுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள இந்தியா, "எந்தவித ஆதாரமும் இல்லாமல் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கருத்துத் தெரிவிப்பது சரியாக இருக்காது" என தெரிவித்தது.

இவ்வாறு இரு நாடுகளுக்கு இடையே வார்த்தை மோதல் தொடர்ந்ததை அடுத்து, இந்தியா மற்றும் கனடாவில் உள்ள இருநாட்டுத் தூதரக அதிகாரிகளும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.



இது ஒருபுறமிருக்க, கனடாவில் வாழும் இந்தியர்களை உடனடியாக வெளியேறுமாறு காலிஸ்தான் அமைப்புகள் மிரட்டி வருகின்றன. இவ்வாறு பதற்றமான சூழல் நிலவி வரும் நிலையில், கனடாவில் கொலை செய்யப்பட்ட ஹர்தீப் சிங் நிஜ்ஜார் இந்தியாவில் அரங்கேற்றிய சதி வேலைகளையும், தீவிரவாத செயல்களையும் இந்திய அதிகாரிகள் பட்டியலிட்டுள்ளனர். இந்தப் பட்டியலை ஒரு ஆங்கிலத் தொலைக்காட்சியும் வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:

பஞ்சாபின் ஜலந்தர் பகுதியைச் சேர்ந்த ஹர்தீப் சிங் நிஜ்ஜார், காலிஸ்தான் பயங்கரவாதி குர்னேக் சிங்கால் அந்த இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டார். 1980களிலும், 90களிலும், காலிஸ்தான் கமாண்டோ படையில் இணைந்து பல சதி வேலைகளில் ஈடுபட்டு வந்த ஹர்தீப் சிங், 1996இல் கனடாவில் தஞ்சம் புகுந்தார்.

பின்னர் அங்குள்ள காலிஸ்தான் இயக்கங்களில் சேர்ந்து, அங்கிருந்தபடியே இந்தியாவில் பல தீவிரவாத தாக்குதல்களை அரங்கேற்றினார். பாகிஸ்தானுக்குச் சென்று ஆயுதப் பயிற்சி பெற்று திரும்பிய ஹர்தீப் சிங், பஞ்சாப்பில் தீவிரவாத தாக்குதல்களை நடத்த நிதி திரட்டினார்.

2014 ஆம் ஆண்டு ஹரியானாவில் உள்ள சீக்கியர்களின் புனிதத் தலமான தேரா தச்சா சௌதாவில் மிகப்பெரிய தாக்குதலை நடத்த அவர் திட்டமிட்டார். ஆனால் அவரால் இந்தியாவிற்கு வர முடியவில்லை என்பதால் அந்த முயற்சி தோல்வி அடைந்தது.

பஞ்சாப்பில் உள்ள காடையர் குழுக்களுக்கு பணம் கொடுத்து, காலிஸ்தான் இயக்கத்திற்கு எதிராக இருப்பவர்களை கொலை செய்தார்.

### இந்தியா—கனடா இடையில் இராஜதந்திர முறுகல் தீவிரம்!

இவ்வாறு இந்தியா தகவல் தெரிவித்துள்ளது.

இதுஇவ்வாறிருக்கையில், கனடாவில் மேலும் ஒரு காலிஸ்தான் தீவிரவாதி சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பஞ்சாப்பின் மோகா பகுதியைச் சேர்ந்தவர் சுகா துனேகே என்கிற சுக்தூல் சிங். கடந்த 2017 ஆம் ஆண்டு போலி கடவுச்சீட்டு மூலம் அவர் கனடாவுக்கு தப்பிச்சென்றார். சுக்தூல் சிங் காலிஸ்தான் ஆதரவுப் படைகளுடன் இணைந்து செயல்பட்டு வந்துள்ளார். காலிஸ்தான் சார்பு படையான டேவிந்தர் பாம்பிஹா கும்பலில் இணைந்து செயல்பட்டு வந்தார் சுக்தூல் சிங்.

மேலும் பஞ்சாப், ஹரியானா, டெல்லி மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் டேவிந்தர் பாம்பிஹா கும்பலுக்கு ஆதரவாக நிதியுதவி அளித்து வந்தார் சுக்தூல் சிங். இந்நிலையில் சுக்தூல் சிங் கனடாவில் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். கனடாவின் வின்னிபெக் பகுதியில் இரண்டு கும்பலுக்கு இடையே இடம்பெற்ற துப்பாக்கி மோதலில் சுக்தூல் சிங் அடையாளம் தெரியாத நபரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

காலிஸ்தான் தீவிரவாதிகள் கனடா உட்பட பல்வேறு நாடுகளிலும் உள்ளனர். இவர்கள் தனித்தனி குழுக்களாகவும் அமைப்பாகவும் உள்ளனர். ஆயுதங்களை கடத்துவது, போதைப்பொருட்களை கடத்துவது போன்ற முறைகேடு சம்பவங்களிலும் அவர்கள் ஈடுபட்டு வருவதாக இந்தியா குற்றம்சாட்டி வருகிறது.

கனடாவில் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ள சுக்தூல் சிங் மீது பஞ்சாப் மற்றும் அருகில் உள்ள மாநிலங்களில் 20 இற்கும் மேற்பட்ட கொலை உள்ளிட்ட குற்றச்செயல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. கனடாவில் இருந்தபடியே இந்தியாவில் பல்வேறு சதி செயல்களிலும் சுக்தூல் சிங் ஈடுபட்டு வந்தார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

**எஸ்.சாரங்கன்...**

# நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதில் இலங்கையில் முன்னேற்ற அறிகுறிகள்!

வார இறுதி **அரசியல் குறிப்பேடு**

சம்யுக்தன்

எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயுத் தட்டுப்பாடு, வீதிகளில் மக்கள் வரிசைகள், மக்கள் போராட்டங்கள் என்று பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் நாட்டைப் பொறுப்பேற்றுக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார ரீதியில் ஏற்பட்ட பாதிப்பைச் சரி செய்வதற்குத் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

நாட்டின் தலைமையைப் பொறுப்பேற்பதற்கு எவரும் தயாராக இல்லாத சந்தர்ப்பத்தில் தாமாக முன்வந்து பொறுப்பை ஏற்றுக்கொண்ட அவர், மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளின் காரணமாக சீரான பாதையை நோக்கி நாடு செல்லத் தொடங்கியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கு கடந்த அரசாங்கம் யோசித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், உறுதியான முடிவை எடுத்து சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்ததில் ஆரம்பித்து பல்வேறு முன்னேற்றகரமான செயற்பாடுகள் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சர்வதேச மட்டத்தில் காணப்படும் தொடர்புகள் நாட்டைப் பொருளாதார ரீதியில் முன்கொண்டு செல்வதற்குப் பெரும் உதவியாக அமைந்து வருகின்றன. கடந்த காலத்தில் ஏற்பட்ட கசப்புணர்வுகள் காரணமாக ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று சிறிது காலத்துக்குள் ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் புதுப்பிக்கப்பட்டு, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கான கடன் மறுசீரமைப்பு விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்க ஜப்பான் உதவியிருந்தது. ஜனாதிபதிக்கு சர்வதேச நாடுகள் மத்தியில் காணப்பட்ட வரவேற்புக்கு இது சிறந்ததொரு உதாரணமாகக் காணப்படுகிறது.

இவ்வாறான பின்னணியில் அண்மையில் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு பல்வேறு உலகத் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார். நாட்டின் எதிர்கால முன்னேற்றத்துக்கும், காலநிலை மாற்றம் குறித்த சர்வதேச சவால்களை முகங்கொடுப்பதற்கும் இந்தச் சந்திப்புக்கள் பெரும் உந்துசக்தியாக அமைந்துள்ளன.

உலக வங்கியின் தலைவர் அஜய் பங்காவுடன் நடத்திய சந்திப்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் முன்னெடுக்கப்படும் பொருளாதார மற்றும் சமூக மறுசீரமைப்பு வேலைத் திட்டங்கள் பாராட்டப்பட்டன. இலங்கையின் புத்தாக்கப் பாதைக்கான பிரவேசம் குறித்தும் உலக வங்கியின் தலைவர் மகிழ்ச்சியைத் தெரிவித்திருந்தார்.

தென்கொரிய ஜனாதிபதி யூன் செக் யெயோல் உடன் நடத்திய கலந்துரையாடலில், தென்கொரியா இலங்கைக்கு வழங்கிவரும் தொடர்ச்சியான உதவிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்றி பாராட்டியிருந்ததுடன், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக்களை மேலும் ஏற்படுத்த உதவுவதாக தென்கொரிய ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்ததுடன், தெற்காசிய பிராந்தியத்தின் நாடுகளாக, இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை இரு நாட்டுத் தலைவர்களும் விரிவாக கலந்துரையாடியதுடன், கடந்த சவாலான காலகட்டத்தில் இலங்கைக்கு பங்களாதேஷ் வழங்கிய அசைக்க முடியாத ஆதரவுக்கான நன்றியைத் தெரிவித்திருந்தார்.



இது மாத்திரமன்றி நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹால், ஈரான் ஜனாதிபதி கலாநிதி செய்யித் இப்ராஹீம் ரைசி, அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் ஆகியோரையும் ஜனாதிபதி நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார். எதிர்காலத்தில் இலங்கைக்கும் அந்த நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவது மற்றும் வர்த்தக ரீதியான ஒத்துழைப்புக்களை அதிகரிப்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இந்தச் சந்திப்புக்களின் போது கலந்துரையாடப்பட்டன. இலங்கைக்குத் தொடர்ந்தும் தம்மாலான உதவிகளை வழங்குவதாக இந்த உலகத் தலைவர்கள் உறுதியளித்திருந்தனர்.

உலக நாடுகளின் தலைவர்களை மாத்திரமன்றி, சர்வதேச அமைப்புக்களின் பிரதானிகளையும் சந்தித்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் செயற்பாடுகள் குறித்து விளக்கமளித்திருந்தார். சட்டரீதியாக மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ள மறுசீரமைப்புக்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்ற பின்னர் நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள மறுசீரமைப்பு நடவடிக்கைகள் என்பவை குறித்து ஜனாதிபதி இதன்போது விரிவான விளக்கங்களை வழங்கியிருந்தார்.

இதன் ஒரு அங்கமாக நியூயோர்க் நகரத்தில் உள்ள ஐ.நா சபையின் இணைக்காரியாலயத்தில் ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனத்தின் பிரதானி சமந்தா பவரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் பற்றி சுருக்கமான விளக்கமளித்த ஜனாதிபதி, அதனை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு அரசாங்கத்தின் அர்ப்பணிப்பையும் இங்கு எடுத்துரைத்திருந்தார்.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவிற்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பு மற்றுமொரு முக்கியத்துவமான சந்திப்பாக அமைந்தது. இலங்கையின் நிதித்துறை சீர்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருடன் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

இலங்கையில் பணவீக்கத்தைக் குறைத்ததுடன், நாட்டில் வர்த்தகத்திற்கு பொருத்தமான சூழலை உருவாக்கியமை மற்றும் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து கிறிஸ்டலினா ஜோர்ஜீவா மகிழ்ச்சி தெரிவித்திருந்தார். சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் மீளாய்வுப் பணிகளுக்காக இலங்கை வந்திருக்கும் சூழ்நிலையில் இந்த உயர்மட்டச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. இலங்கையில் ஏற்பட்டுவரும் முன்னேற்றம் குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் சாதகமான கருத்தை வெளியிட்டிருப்பது நம்பிக்கை ஏற்படுத்தும் சமிக்ஞையாக அமைந்துள்ளது.

அதேநேரம், சமூக ஊடக நிறுவனமான நியூயோர்க் மெட்டா (முகப்புத்தகம் போன்ற சமூக ஊடகங்களின் உரிமையைக் கொண்ட நிறுவனம்) நிறுவனத்தின் உலகளாவிய விவகாரங்களுக்கான தலைவர் சேர். நிக் கிளெக் அவர்களையும் ஜனாதிபதி நியூயோர்க்கில் சந்தித்திருந்தார். இதன்போது, இணையத்தளம் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் வெறுப்புப் பேச்சுக்கள் மற்றும் போலிச் செய்திகளை மட்டுப்படுத்த இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் புதிய நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுத்துக் கூறினார்.

அது தொடர்பில் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தபடவுள்ள உத்தேச சட்டமூலத்தின் மூலம், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உயர்நீதிமன்றத்தின் ஊடாக எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.

இதுபோன்ற உயர்மட்டச் சந்திப்புக்களுக்கு அப்பால், ஐ.நா பொதுச்சபை அமர்வுக்கு சமாந்தரமாக நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்ட ஜனாதிபதி, தனது அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகள் மற்றும் இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை பற்றிய தெளிவான விளக்கங்களை வழங்கியிருந்தார்.

நியூயோர்க் நகரில் நடைபெற்ற கடல்சார் நாடுகளுக்கான 3 ஆவது இந்து – பசுபிக் தீவு நாடுகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டு உரையாற்றியிருந்த ஜனாதிபதி, இந்துபசுபிக் பிராந்தியத்தில் பெரும் வல்லரசுப் போட்டி நிலவிய போதிலும், இந்து சமுத்திரம் மற்றும் தென்பசுபிக் சமுத்திர தீவு நாடுகளின் சுதந்திரம், அவற்றின் உள்ளக விவகாரங்களில் தலையிடாமை மற்றும் அவர்களின் தனிப்பட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பிராந்தியத்தின் அனைத்து நாடுகளும் அர்ப்பணிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

இதற்கும் அப்பால், ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தின் 78 ஆவது அமர்வில் உரையாற்றியிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உலக நாடுகள் பொதுவாக எதிர்கொண்டுள்ள காலநிலை மாற்றத்தின் தாக்கம் குறித்துச் சுட்டிக்காட்டியிருந்ததுடன், இதிலிருந்து உலகைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியிருந்தார். இது விடயத்தில் தமது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருக்கின்றது என்பதையும், இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுள்ள முன்னேற்றகரமான நடவடிக்கைகள் பற்றியும் ஜனாதிபதி விளக்கமளித்திருந்தார்.




# இலங்கை வங்கி

## பெறுமதி வாய்ந்த காணி விற்பனைக்கு

| ஆதன இலக்கம் | நகரம் | ஆதனம் | காணியின் தன்மை | அளவு |
|---|---|---|---|---|
| 171 | கொழும்பு 07 | முன்னாளில் வரையறுக்கப்பட்ட காரயினே ஏர் கண்டிஷனிங் தனியார் நிறுவனமானது கொழும்பு 07, வாட் பிளேஸ், இல. 114/3 என்ற முகவரியில் அமைந்துள்ளது | காணி மற்றும் கட்டடம் | 16.2 பேர்ச் |
| 180 | மினுவாங்கொட | ‘‘ஹிக்கஹவத்த’’, என அறியப்படும் காணியானது மினுவாங்கொடை, கொழும்பு வீதி, இல. 82இல் அமைந்துள்ளது | வெற்றுக் காணி | 1 ரூட் 2.0 பேர்ச் |
| 351 | குருநாகல் | ‘‘கூன்காஹவத்த’’, எனப்படும் காணியானது வெல்லவ, இஹல அஸேத்தும, புவக்கஹகொட்டுவவில் அமைந்துள்ளது. | காணி மற்றும் கட்டடம் | 1 ஏக்கர் 2 ரூட் |
| 429 | பேருவளை | ‘‘திவுலகஹவத்த மற்றும் மடமேவத்தவின் காணித்துண்டுகள் 1 மற்றும் 2 எனப்படும் காணி, பண்டாரவத்தை, மரதானை வீதி, 27/9 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தில் அமைந்துள்ளது. | காணி மற்றும் வீடு | லொட் 1 - 2.75 பேர்ச்<br>லொட் 3 - 27.5 பேர்ச் |
| 439 | பிலியந்தலை | முன்னாளில் “ரங்கன ஹோல்டிங்ஸ் கம்பனி”, ‘‘மாரகஹவத்த’’ எனப்படும் காணி, கெஸ்பேவ, தும்போவில, பாட்டியாவத்த வீதி, இல.03இல் அமைந்துள்ளது. | காணி மற்றும் வீடு | 6.68 பேர்ச் |
| 451 | மாவத்தகம | ‘‘சியம்பலகஹமுல்லஹென (வத்த) மற்றும் வெட்டகெதரஹேன (வத்த) மீதென்வெல, பல்லேகம, மாவத்தகம | காணி மற்றும் வீடு | 1 ரூட் 1 பேர்ச் |
| 459 | இரத்தினபுரி | திஹான ரெஸ்ட் ஹவுஸ், ‘‘தெகல்பனேஹென (பகுதி) எனப்படும் காணி, இரத்தினபுரி, குடவ, ரத்கங்கா சந்தியில் அமைந்துள்ளது. | காணி மற்றும் ஹோட்டல் | 15.0 பேர்ச் |
| 472 | ரம்புக்கன | முன்னாளில் M/S ஹிலக்ஸ் சிலோன் பிரைவட் லிமிடட், “கொடகெலேகும்புர” ரம்புக்கன பெலிகொடபிடிய, கொரியாகம்மான கிராமம், மாவனெல்ல வீதி, இல.169இல் அமைந்துள்ளது. | காணி மற்றும் வீடு | 29.9 பேர்ச் |
| 473 | தியபெதும | முன்னாளில் சிறிலக ரைஸ், மில்ஸ் தியபெதும, கட்டுகெலியாவ, புரானகம, இல.114இல் அமைந்துள்ளது. | காணி மற்றும் அரிசி ஆலை | 1 ஏக்கர் |
| 479 | குருநாகல் | ‘‘உயந்தான எஸ்டேட்’’ எனப்படும் சவுந்தரவல்லிவத்த மற்றும் தும்முலங்க’’ குருநாகலை, உயந்தான கிராமத்தில் அமைந்துள்ளது | காணி மற்றும் வீடு | 15.0 பேர்ச் |
| 484 | மாகொல | முன்னாளில் பிளன்எஸ் அலுமினியம் ‘‘மூனமல்கஹவத்த’’, எனப்படும் காணி பியகம, பமுனுவில கிராமம், இல. 98/2 இல் அமைந்துள்ளது. | வெற்றுக் காணி | 25.3 பேர்ச் |
| 485 | மாத்தளை | ‘‘ஹுலங்கமுவ எஸ்டேட்’’, எனபடும் காணியானது மாத்தளை, தொடன்தெனிய, இல. 44/5இல் அமைந்துள்ளது. | காணி மற்றும் வீடு | 27.2 பேர்ச் |
| 497 | கம்பஹா | ‘‘இன்திகொல்ல எஸ்டேட்’’ கம்பஹா, அலுத்கம, மொருபொல 3ம் ஒழுங்கை, இல. 92/04இல் அமைந்துள்ளது. | காணி மற்றும் வீடு | 10.0 பேர்ச் |
| 501 | பாணந்துறை | முன்னாளில் M/S சிசிற க்ரைண்டிங் மில்ஸ் ‘‘ஜம்புகஹவத்தையின் நான்கில் ஒரு பகுதி,’’ என்ற காணி, பாணந்துறை, மஹவாத்துவ, புகையிரத வீதி, இல. 01இல் அமைந்துள்ளது. | வெற்றுக் காணி | 30.0 பேர்ச் |
| 502 | கடவத்தை | முன்னாளில் M/S டில்கி என்டர்பிரைசஸ், ‘‘நெதுன்கஹவத்த மற்றும் அலுபோகாவத்த’’, என்ற காணி கடவத்தை, பஹல கரகஹமுன கிராமம், 437, 437/01, 437/01/01 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தால் அமைந்துள்ளது. | காணி மற்றும் வீடு | 37.7 பேர்ச் |
| 508 | நுவரெலியா | வரையறுக்கப்பட்ட ஹைடெக் ஹாட்வெயார் தனியார் நிறுவனம் “கட்டுமானகெலே” என்ற காணி நுவரெலியா, கட்டுமான கிராமத்தில் அமைந்துள்ளது. | காணி மற்றும் ஹோட்டல் | 30.0 பேர்ச் |
| 511 | பொல்கஹவெல | ‘‘வேபொட பில்லேவ’’ என்ற காணி பொல்கஹவெல, பிதுரவெல கிராமத்தில் அமைந்துள்ளது. | வெற்றுக் காணி | லொட் 1 - 14.4 பேர்ச்<br>லொட் 3 - 15.3 பேர்ச்<br>லொட் 4 - 15.0 பேர்ச்<br>மொத்தம் 44.7 பேர்ச் |
| 512 | வத்தளை | ‘‘ஹெடவககஹகுருந்துவத்த’’ (ஹேகித்தவத்த), வத்தளை, ஹேகித்த, அரசாங்க வீட்டுத்திட்டம், இல.114இல் அமைந்துள்ளது. | காணி மற்றும் வீடு | 4.41 பேர்ச் |
| மானுக் | கலவான | “மெனிக் வெலி மற்றும் கேஸ்டன் வெலி தேயிலைத் தொழிற்சாலை” என்ற ஆதனமானது கலவானவில் அமைந்துள்ளது. | காணி மற்றும் தொழிற்சாலை கட்டடங்கள் | லொட் 8 - 2 ஏக்கர் 3 ரூட் 39.5 பேர்ச்<br>லொட் 9 - 1 ஏக்கர் 2 ரூட், 2.7 பேர்ச் |

மேற்படி ஆதனங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஆர்வமுள்ளவர்களிடமிருந்து (பிரதான கொள்வனவாளர்களிடமிருந்து மட்டும்) விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை 2023-10-18ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இதன் பொருட்டு மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா மற்றும் மீளளிக்கப்படும் 50,000.00 ரூபாயைச் செலுத்துதல் வேண்டும். இதை இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் வைப்புச் செய்யலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஆதன இலக்கம் சகிதம் “PROP/07/2023” எனக் குறிப்பிடப்பட்ட முத்திரைக் குறியிடப்பட்ட உறையினுள் இட்டு 2023-10-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். 2023-10-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும் கேள்விகளைத் திறக்கும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு விண்ணப்பதாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

கேள்விதாரரினால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை இலங்கை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு: தயவு செய்து வார நாட்களில் தொடர்புகொள்ளவும்:

**முகவரி:**

**இலங்கை வங்கி**
**ஆதன கையகப்படுத்தல் பிரிவு,**
**3வது மாடி, தலைமை அலுவலகம்,**
**இலங்கை வங்கிச் சதுக்கம்,**
**இல. 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.**

**தொலைபேசி: உதவிப் பொது முகாமையாளர் (அறவீட்டு நிறுவனம்) - 011-2203410 / 011-2386080**
**சிரேஷ்ட முகாமையாளர் - 011-2321170 / 011-2203429 / 076-9627068**
**உதவி முகாமையாளர் - 011-2203470 / 0718418898**
**மின்னஞ்சல்: mgrforeclosed@boc.lk**

**“www.boc.lk” எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து Special Notices கீழுள்ள Properties for sale என்பதைப் பார்க்கவும்.**

1975 BOC CALL CENTRE www.boc.lk

A (lka) Fitch Rating, AAA Brand Finance Rating.
Bank of Ceylon is a Licensed Commercial Bank supervised by the Central Bank of Sri Lanka.

Head Office, BOC Square,
No.1, Bank of Ceylon Mawatha, Colombo 1.

BANK OF CEYLON BOC Bankers to the Nation

# மின்சக்தியை அடிப்படையாகக் கொண்ட போக்குவரத்தே காலத்தின் தேவை

**புதைபடிவ எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட போக்குவரத்திலிருந்து மின்சக்தியை அடிப்படையாகக் கொண்ட போக்குவரத்திற்கு மாறுவது காலத்தின் தேவையாகும் என்று சீனாவின் நிலையான போக்குவரத்து மன்ற மாநாட்டில் சிறப்புரை ஆற்றிய அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன.**

2023ம் ஆண்டின் உலகளாவிய நிலையான போக்குவரத்து மன்றத்தின் மாநாடு சீனாவின் பீஜிங் நகரில் வெற்றிகரமாக நிறைவடைந்தது. ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் சர்வதேச அமைப்புகள் பலவற்றின் பிரதிநிதிகள், பல வெளிநாடுகளின் போக்குவரத்து அமைச்சர்கள் உள்ளிட்ட விசேட பிரதிநிதிகள் 60க்கும் மேற்பட்டோர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.

'நிலையான போக்குவரத்து உலகளாவிய அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்காக ஒன்றிணைந்து செயல்படுதல்' என்ற தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்ற இந்த மாநாட்டில், ஆரம்ப நிகழ்வு, பொதுக்குழுக் கூட்டம், சீனாவின் முன்னணி கட்டுமான நிறுவனங்களின் பிரதிநிதிகளின் கூட்டம் மற்றும் கண்காட்சி, போக்குவரத்து அமைச்சர்களின்



வட்டமேசை மாநாடு உள்ளிட்ட பல சிறப்பு நிகழ்வுகள் உள்ளடங்கியிருந்தன.

இதனோடிணைந்து, 15வது சீன சர்வதேச போக்குவரத்து தொழில்நுட்பம் மற்றும் உபகரண கண்காட்சியும் (China TRANSPO) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன 2023ஆம் ஆண்டின் உலகளாவிய நிலையான போக்குவரத்து மன்றத்துக்காக இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்தி கலந்து கொண்டார்.

மாநாட்டில் சிறப்புக்குரிய முக்கியத்துவம் கிடைத்த "உயர்தர சர்வதேச உட்கட்டமைப்பு வசதிகள் உறவுகளை ஊக்குவித்தல் மற்றும் பிராந்திய பொருளாதார உறவுகளின் மேம்பாட்டை ஊக்குவித்தல்" என்ற தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்ற அமர்வில் முக்கிய சிறப்புரையினை ஆற்றியது அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவாகும்.

மாநாட்டில் கலந்து கொண்ட அனைத்து நாடுகளின் போக்குவரத்து அமைச்சர்கள் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளின் விசேடக் கவனத்தை ஈர்த்த அமைச்சரின் உரையில் பல்வேறு சிறப்பம்சங்கள் உள்ளடங்கியிருந்தன.

□ போக்குவரத்து துறையின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் பிராந்திய அபிவிருத்திக்கான ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்பு.

□ UNDP, UNEP, UNESCAP போன்ற சர்வதேச அமைப்புகள் மற்றும் ஏனைய அமைப்புக்களுடன் சிறந்த சர்வதேச உறவுகளை உருவாக்கிக் கொள்ளுதல்.

□ புதைபடிவ எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட போக்குவரத்திலிருந்து மின்சக்தி அடிப்படையிலான போக்குவரத்து முறைகளுக்கு மாறுதல்.

□ சர்வதேச நிபுணர்கள் மற்றும் நிபுணர் அமைப்புகளின் ஒத்துழைப்புடன் கொள்கைகள் மற்றும் உத்திகளை உருவாக்குதல்.

□ போக்குவரத்துத் துறையுடன் தொடர்புடைய அனைத்து சேவைகளையும் டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் குறிப்பாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு போக்குவரத்துத் துறையை நவீனமயமாக்குவதற்கு செயற்பாட்டுச் சூழலை உருவாக்குவதற்காக நிதி மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்தல்.

போன்ற விடயங்கள் தொடர்பில் அமைச்சர் இம்மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.




அத்துடன் காலநிலை மாற்றத்தின் காரணமாக மசகு எண்ணெய், நிலக்கரி அகழ்வு மற்றும் சுரங்கம், நீர்மின் உற்பத்தியில் காணப்படும் வரையறைகள் காரணமாக இலங்கையில் மாத்திரமன்றி உலகத்திற்கே பாரிய பிரச்சினையாக மாறிவரும் எரிசக்தி நெருக்கடி தொடர்பிலும் பல்வேறு விடயங்களை அமைச்சர் தனது உரையில் முன்வைத்தார்.

எரிசக்தி நெருக்கடி பற்றிய தெளிவான புரிதலுடன், புதைபடிவ எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட போக்குவரத்திலிருந்து மின்சக்தியை அடிப்படையாகக் கொண்ட போக்குவரத்து முறைக்கு மாறுவது இந்த நேரத்தில் காலச்சிறந்தது என்றும், இதற்காக, புதுப்பிக்கத்தக்க மின்சக்தி, சூரிய மின்சக்தி, காற்றாலை மின்சக்தி, அலை மின்சக்தி மற்றும் போக்குவரத்து துறைக்காக தேவைக்கு ஏற்ப மின்சார வாகனங்களை ஊக்குவிப்பது மிகவும் முக்கியமானது என்றும் அமைச்சர் இதன்போது சுட்டிக் காட்டினார்.

"பசுமைப் பொருளாதாரம்" மற்றும் "பசுமை போக்குவரத்து" எண்ணக்கருவை செயற்படுத்தும் போது புதிய தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் மேம்படுத்தல், முன்னேற்றம் அடைந்த உட்கட்டமைப்பு வசதிகள், கொள்கை மற்றும் சட்ட உருவாக்கம், கல்வி மற்றும் பயிற்சிகள் போன்ற துறைகளுக்கு முன்னுரிமை வழங்குவதற்கான முக்கியத்துவமும் இதன்போது அமைச்சரின் உரையில் உள்ளடக்கியிருந்தது.

இலங்கையின் பாரம்பரிய போக்குவரத்து முறைகளை நவீன போக்குவரத்து அமைப்புகளாக மாற்றும் போது, வீதி உட்கட்டமைப்பு வசதிகள் துறைகளுக்குத் தேவையான முதலீடுகளை பெற்றுக் கொள்வதில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது அமைச்சரால் வெளிநாட்டு பிரதிநிதிகளுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. அபிவிருத்தியடைந்து வரும் நாடாக இலங்கையின் மேல் மாகாணத்தில் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ள இலகு இரயில் திட்டம் (LRT) மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகள் திட்டம், மீண்டும் ஆரம்பிப்பதற்காக அரச மட்டும் தனியார் ஒருங்கிணைப்பு திட்டம், ( PPP) BOO மற்றும் BOT போன்ற முதலீட்டுத் திட்டத்தின் கீழ் இவ்வாறான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்காக பலம்மிக்க நாடுகள் மற்றும் நன்கொடை நிறுவனங்களின் நிதிப் பங்களிப்பு இந்நேரத்தில் இலங்கைக்கு மிகவும் அவசியமானது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.




அந்நாட்டின் முன்னணி நிர்மாணத்துறை நிறுவனங்களான china communication construction company (CCCC) மற்றும் china harbor engineering company(CHEC) நிறுவனங்களின் விசேட கண்காணிப்பு செயற்பாடுகளிலும் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன கலந்து கொண்டார்.

போக்குவரத்து துறையின் முன்னேற்றத்துக்காக அந்த நிறுவனங்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய தொழில்நுட்ப கட்டுமான வடிவமைப்பு முறைகள் தொடர்பான அறிமுகம் அந்த நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பிரதானிகளால் செய்யப்பட்டது.

இந்த விஜயத்தின் போது, அமைச்சர் சீன வர்த்தக சம்மேள னத்தின் (TBD) பிரதிநிதிகள், இ லங்கைக்கு சொகுசு பஸ்களை ஏ ற்று மதி செய்யும் Yutong பஸ் நிறுவ னத்தின் தலைவர்கள் உள்ளிட்ட ப ல நிறுவனங்களின் தலைவர்களுடன் இலங்கை போக்குவரத்து மற்றும் நெ டுஞ்சாலை துறைகளில் முதலீடு செய்வது தொடர்பாக பல கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டார்.

**எம்.எஸ்.முஸப்பிர்**

# எட்மண்டின் பத்திரிகைப் புரட்சி





**எட்மண்ட் ரணசிங்க இலங்கை பத்திரிகைத் துறையில் புதிய திருப்புமுனையை ஏற்படுத்திய 'திவயின' பத்திரிகையின் ஆரம்ப ஆசிரியராவார். தற்போது இந்நாட்டில் இருக்கும் அனுபவம் மிக்க பத்திரிகையாளருமான அவரின் தேசிய ஊடகப் பணியைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஒக்டோபர் 03ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் உள்ள சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மூத்த ஊடகவியலாளர் எட்மண்ட் ரணசிங்கவின் சகாப்தப் பணிகளைப் பாராட்டி 'எட்மண்டின் பத்திரிகைப் புரட்சி' நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளதோடு, இந்த விழாவில் சிறப்புரையை சிரேஷ்ட ஊடகவியலாளர் உபாலி தென்னகோன் ஆற்றவுள்ளார்.**

தற்போது தனது வாழ்க்கைப் பயணத்தில் தொன்னூற்றி மூன்று வருடங்களைக் கழித்துள்ள திறமைமிக்க ஊடகவியலாளர் எட்மண்ட் ரணசிங்கவின் அபாரமான ஊடகத்துறை, அவருக்கும் சிலுமின பத்திரிகைக்கும் இடையிலான தொடர்பு மற்றும் அவரது வாழ்க்கை ஆகியவற்றின் பிரதிபலிப்பே இதுவாகும்.

இலங்கைப் பத்திரிகைத் துறையில் அவர் ஒரு விருட்சமாகும். அவர் புதிய தலைமுறைக்கு வழிகாட்டிய பத்திரிகை உலகின் ஒளிரும் நட்சத்திரமும் கூட. அந்த விருட்சத்தின் நிழலில் வளர்க்கப்பட்ட பல செடிகள் இப்போது பெரிய மரங்களாகி இன்னும் பல தலைமுறைகளுக்கு வழிகாட்டுகின்றன. அந்த தனித்துவமான விருட்சம் மூத்த பத்திரிகையாளர் எட்மண்ட் ரணசிங்கவாகும். அவரது பெயர் இந்நாட்டு மக்களுக்கு மிகவும் நெருக்கமானது 'திவயின' நாளிதழின் ஸ்தாபக ஆசிரியராக, தேசிய மற்றும் கலாசார ரீதியில் சாதாரண மக்களின் அபிலாஷைகளை சரியாக இனங்கண்டு, சவால்மிகுந்த பத்திரிகைத் துறையினை இந்நாட்டுப் பத்திரிகைத் துறையில் விதைத்த சளைக்காத பத்திரிகை ஆசிரியர் என்ற வகையிலாகும். பாரம்பரிய இதழியலைத் தாண்டிய புரட்சிகரப் பத்திரிகையின் ஆசிரியராகத் துணிச்சலாலும் ஆற்றலாலும் செழுமைப்படுத்தப்பட்ட எட்மண்ட் ரணசிங்கவுக்கு பத்திரிகைத் துறையின் பிறப்பிடமாக அமைந்தது பத்திரிகைத் தாய் வீடானதில் சிலுமினவுக்குப் பெருமையாகும்.

1930 ஆகஸ்ட் 14ம் திகதி அவிசாவளை, புவக்பிட்டியவில் பிறந்த அவருக்கு பெற்றோர் வைத்த பெயர் தொன் எட்மண்ட் விக்ரமரத்ன ரணசிங்கவாகும். அவரது தந்தை அவிசாவளை பெலயார் தோட்டத்தின் பிரதான எழுதுவினைஞராகப் பணியாற்றிய தொன் ஆர்னோலிஸ் ரணசிங்கவாகும். தாய் மேரியன் விக்ரமரத்ன. ரணசிங்க தம்பதியினருக்கு எட்மண்ட் உள்ளிட்ட ஐந்து பிள்ளைகளாகும். சிறிய வயதில் எட்மண்ட் ஆரம்ப கல்வியை இரத்தினபுரி பர்கியூஷன் மகளிர் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை அவிசாவளை சென் மேரி வித்தியாலயத்திலும் கற்றார். அந்தக் காலத்தில் இருந்த சிரேஷ்ட பள்ளிச் சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைந்த எட்மண்ட் என்ற இளைஞருக்கு சில மாதங்களிலேயே முதல் தொழிலாக தும்மோதர பாடசாலையில் ஆசிரியராக நியமனம் கிடைத்தது. அந்தக் காலத்தில் ஆசிரியர் தொழிலுக்கு உயர் வரவேற்பு கிடைத்த போதிலும் வித்தியாசமான யோசனைகளைக் கொண்ட வித்தியாசமான இளைஞரான எட்மண்ட், அந்த வேலையை அதிகம் விரும்பவில்லை. நேர்மையுடனும் விடாமுயற்சியுடனும் நாட்டுக்கு சேவை செய்வதையே தனது முதல் நோக்காகக் கொண்ட எட்மண்ட் ரணசிங்கவின் மனது அடிக்கடி கூறிய விடயம், இது தனக்குப் பொருத்தமான வேலையல்ல என்பதாகும். இரண்டு வருடங்களில் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் லேக்ஹவுஸ் நிறுவனத்தினால் பிரசு







ரிக்கப்பட்ட டெய்லி நியூஸ் பத்திரிகையின் விளம்பரம் ஒன்றைப் பார்த்து அவரது சிந்தனையில் புதிய உத்வேகம் உண்டானது. ஒரு பத்திரிகையாளனாக ஆக வேண்டும் என்ற தனது கனவை மேலும் தள்ளிப் போட விரும்பாத எட்மண்ட் உடனே தனது ஆசிரியத் தொழிலுக்கு விடை கொடுத்தார்.

இருபத்தொரு வயதில் எட்மண்ட் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக இருந்த எஸ்மண்ட் விக்ரமசிங்கவை 1952ம் ஆண்டில் சந்தித்தார்.

"அது 1952ம் ஆண்டு பொதுத் தேர்தல் சூடு பிடித்த நேரமாகும். மேற்கூறப்பட்ட நேர்முகத் தேர்வு ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் இடம்பெற்றது. என்னுடன் மீமன பிரேமதிலக, எஸ் சுபசிங்க, தர்மபால வெதசிங்க ஆகியோரும் அந்தத் தேர்வில் கலந்து கொண்டிருந்தனர். அந்த நேர்முகத் தேர்வில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றாலும் எம்மை ஆசிரிய பீடத்தில் இணைத்துக் கொள்ளவில்லை. எம்மை "பொலிடிகல் டெஸ்க்" கின், பிரசார வேலைகளுக்கே பயன்படுத்தினார்கள். தேர்தலின் பின்னர் எம்மை டெய்லி நியூஸ், தினமின பத்திரிகைகளின் பாராளுமன்ற செய்தி சேகரிப்பிற்காக நியமித்தார்கள். இதில் ஆச்சரியமான விடயம் என்னவென்றால் அன்று என்னோடுநேர்முகத் தேர்வில் கலந்து கொண்ட நான்கு பேரும் பின்னைய காலங்களில் சிலுமின ஆசிரியர்களானோம்" என எட்மண்ட ரணசிங்க தனது கடந்த கால பத்திரிகைத் துறையின் நினைவுகளை பகிர்ந்து கொண்டார்.

1952 மார்ச் 21ம் திகதி அவர் ஊடகவியலாளராக லேக்ஹவுஸ் நிறுவனத்தின் டெய்லி நிவூஸ் பத்திரிகையில் 75 ரூபாய் மாதாந்த சம்பளத்திற்கு இணைந்து கொண்டார். தேர்தலின் பின்னர் பாராளுமன்றச் செய்தியாளராகப் பணியாற்றிய எட்மண்ட், அதில் முழுப் பயன்களைப் பெற்று தனது பத்திரிகைத் துறை ஆற்றலை வளர்த்துக் கொண்டார். இலங்கைப் பாராளுமன்றம் அப்போது புத்திஜீவிகளின் புகலிடமாக இருந்ததோடு, பாராளுமன்ற நடவடிக்கைகள் ஆங்கில மொழியிலேயே இடம்பெற்றன. பண்டாரநாயக்க, என். எம், பீட்டர் கெனமன், ரொபட் குணவர்தன, தஹநாயக்க ஜே. ஆர், நடேசன், சுந்தரலிங்கம், ஈரியகொல்ல, கந்தைய்யா, பொன்னம்பலம் போன்ற திறமையான அரசியல்வாதிகளின் உரைகள் மற்றும் வாதப்பிரதிவாதங்களுடன் தொடர்புடைய நாடாளுமன்ற அறிக்கைகளை சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரிப்பது எட்மண்டுக்கு ஏராளமான நடைமுறை அனுபவங்களை அளித்ததோடு, வேகமான மற்றும் துல்லியமான செய்தி அறிக்கையிடல்களால் அவர் ஏனைய ஊடகவியலாளர்களைப் பின்தள்ளிவிட்டு முன்னேறிச் சென்றார். இதனால் அதிக நாட்கள் செல்ல முன்னர் தினமின பத்திரிகையின் பிராந்திய செய்தி ஆசிரியராக அவர் முன்னேறினார். அந்நேரம் தினமினவின் ஆசிரியராகப் பணியாற்றியவர் தர்மபால வெத்தசிங்கவாகும். எட்மண்ட் ரணசிங்கவிடம் இருந்தது படிப்படியாக முன்னேறி வந்த அனுபவங்களினாலும், திறமைகளாலும் பூரணமடைந்த ஒரு பயணமாகும். பின்னைய காலத்தில் அவர் ஜனதா பத்திரிகையின் செய்தி ஆசிரியராகப் பணியாற்றியதோடு, பின்னர் தினமினவின் ஆசிரியராகவும் நியமனம் பெற்றார்.

ஆரம்பத்திலிருந்தே நேர்மை மற்றும் சுதந்திரமான சிந்தனையினைக் கொண்ட எட்மண்ட் ரணசிங்க, 1970ம் ஆண்டு காலப்பகுதியில் ஆட்சிக்கு வந்த சமகி பெரமுண அரசாங்கத்தினால் லேக்ஹவுஸ் நிறுவனத்தை அரசாங்கத்திற்கு சுவீகரிப்பதற்கு எதிர்ப்பைத் தெரிவித்து லேக்ஹவுஸிலிருந்து இராஜினாமாச் செய்தார். 1977ம் ஆண்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துடன் அவர் மீண்டும் லேக்ஹவுஸ்'டன் இணைந்து கொண்டார். பத்து சத பல்கலைக்கழகம் என்று அக்காலகட்டத்தில் அழைக்கப்பட்ட சிலுமின நாளிதழில் ஒளிரும் அளவுகோலாக மாறும் அதிர்ஷ்டம் 1980ம் ஆண்டில் அவருக்குக் கிடைத்தது. எட்மண்ட் ரணசிங்க 1980 தொடக்கம் 1981 ஜூலை வரை சிலுமின பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றியதோடு, அந்நேரத்தில் ஆசிரியர் பீட அங்கத்தவர்களின் எண்ணிக்கை பத்தாக இருந்தது. பிரதி ஆசிரியர் ஏ. டப்ளிவ். பீ. கே. குணவர்தன, கட்டுரை ஆசிரியர் தயாசேன குணசிங்க, பீ. பி. இலங்கசிங்க, லக்ஷ்மன் ஜயவர்தன, நந்தசேன சூரியாராச்சி, பர்ஷி ஜயமான்ன, சாந்த சேனாதீர, சித்திரப் படக் கலைஞர் குணபால ஹேமச்சந்திர மற்றும் புகைப் படக் கலைஞர் ராஜா பெரேரா ஆகியோரே அவர்களாகும். அதுமாத்திரமின்றி, 2016 ஜூலை 01ம் திகதியிலிருந்து 2017 மார்ச் 31ம் திகதி வரையான காலப்பகுதியிலும் எட்மண்ட் ரணசிங்க இரண்டாவது தடவையாகவும் சிலுமினவின் ஆசிரியராகப் பணியாற்றினார். இதனடிப்படையில் சிலுமின பத்திரிகையின் ஆசிரியராக அவர் இரண்டு வருடங்களும், மூன்று மாதங்களும் பணியாற்றியுள்ளார்.

கடந்த 2022ம் ஆண்டில் சிலுமின பத்திரிகையின் 92வது வருட நிறைவு விழாவின் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வதற்காக சிலுமின பத்திரிகையின் அலுவலகத்திற்கு வந்த சந்தர்ப்பம் எட்மண்ட் ரணசிங்கவுக்கு மனதுக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்திய தருணமாகியது. சிறந்த இலக்குகளையுடைய தலைமுறையினை உருவாக்கிய ஆத்ம திருப்தியாலும், பணிவான பெருமையாலும் அவரது கண்கள் பிரகாசித்தன. அவரது மகிழ்ச்சியான உணர்வுக்கு மற்றொரு காரணமும் இருந்தது. அது தொடர்பில் எட்மண்ட் ரணசிங்க இவ்வாறு நினைவுபடுத்தினார்.

"சிலுமினவும் நானும், எம்மிருவருக்கும் ஒரே வயது. சில மாத இடைவெளிகள் மாத்திரமே உள்ளது. 1930 மார்ச் 30ம் திகதி சிலுமினவின் பிறந்த நாள். அதற்கு ஐந்து மாதங்களுக்குப் பின்னரே நான் பிறந்தேன். அதேபோன்று 1980ம் ஆண்டில் சிலுமின பத்திரிகைக்கு 50 ஆண்டு நிறைவடைந்த போது அதன் ஆசிரியராகப் பணியாற்றக் கிடைத்தது எனது வாழ்வில் அபூர்வமான சந்தர்ப்பமாகும் என்பதோடு, ஒரு பத்திரிகையாளனாக கிடைக்கக் கூடிய அதிகூடிய மகிழ்ச்சியாகவும் குறிப்பிட முடியும்"

எட்மண்ட் ரணசிங்க என்பவர் தனது தனிப்பட்ட சலுகைகளுக்காகவும், பட்டம் பதவிகளுக்காகவும் பதவியைக் காட்டிக் கொடுக்காத ஒரு துணிச்சலான எழுத்தாளராகும். நிறுவனத்தின் நிருவாகத்தினரோடு ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக அவர் லேக்ஹவுஸிலிருந்து வெளியேறியது சிலுமினவின் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நிலையிலாகும். அந்நேரம் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தில் முக்கிய அமைச்சரும், பிரபல எழுத்தாளருமான டீ. பி. இலங்கரத்னவின் நெடுங்கதை ஒன்று பகுதி பகுதியாக சிலுமினவில் பிரசுரமாகிக் கொண்டிருந்தது. இந்தக் கதையை உடன் நிறுத்துமாறு நிருவாகம் விடுத்த வேண்டுகோளுக்கு எட்மண்ட் ரணசிங்க எதிர்ப்பை வெளியிட்டார். அந்தக் கதையினால் சிலுமினவின் விற்பனை அதிகரித்ததை சாட்சிகளோடு அவர் நிருவாகத்திற்கு விளக்கப்படுத்திய போதிலும், அப்படியாயின் கதையைச் சுருக்கி சீக்கிரமாக கதையை முடிக்குமாறு நிருவாகம் உத்தரவிட்டது. "திறமையான எழுத்தாளரின் நாவலை வெட்டுவது என்பது திறமையான சிற்பி ஒருவர் செதுக்கிய சிலையின் அங்கங்களை உடைப்பது போன்ற கொடூரமான செயலாகும். இலங்கரத்னவின் அரசியல் கருத்துக்கள் இந்தக் கதையில் இல்லை. அந்த யோசனையுடன் என்னால் உடன்பட முடியாது" எட்மண்ட் அவ்வாறு கூறியவாறு நிருவாகத்தினரின் முன்னால் தனது அதிருப்தியைத் தெரிவித்தார். அது மாத்திரமின்றி வேறொரு எழுத்தாளரின் அறிவுசார் உரிமைகளுக்காக நிபந்தனைகளின்றி முன்னின்ற அவர் லேக்ஹவுஸில் இருந்து விலகினார்.

அனைத்து எழுத்தாளர்களும் தங்கள் சொந்தக் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு பத்திரிகையினுள் ஒரு திறந்த தளத்தை உருவாக்கிக் கொடுத்த இந்த பத்திரிகை ஆசிரியர், தனது வழிகாட்டுதலின் கீழ் எழுத்தாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் என ஒரு பெரிய குழுவை உருவாக்கியுள்ளார். அரசியல், பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் அவர் எழுதிய கட்டுரைகள் மற்றும் பத்திகள் வாசகர்களிடையே மிகவும் பிரபலமடைந்ததோடு, அவர் சிலுமின மற்றும் திவயின பத்திரிகைகளில் ஆசிரியத் தலையங்கங்கள் மற்றும் கட்டுரைகள் மூலம் மக்களின் ஞானத்தை தட்டி எழுப்பினார். ஒரு பத்திரிகையாளராகவும், தேசியப் பத்திரிகையின் ஆசிரியராகவும் மிகவும் பொறுப்பான பணியில் ஈடுபட்டிருந்தபோது, 'ஒரு தேசத்தின் கண்ணீர், ஒரு பரம்பரையின் உரிமையாளர்கள், ஸ்ரீயலதா மற்றும் சோம ஹாமதுருவோ பௌத்த அரசியல்' ஆகிய நான்கு படைப்புகளை எழுதினார்.

கடந்த ஆ கஸ்ட் 14ம் திகதி வாழ்க்கைப் ப யணத்தில் 93 வருடங்களைக் கடந் த அவர், இன்று மிகவும் இலகுவான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றார். துணிச்சலான பத்திரிக்கையாளராக நாட்டிற்காக தனது கடமையை நிறைவேற்றிய பெருமை அவரது வயோதிப வாழ்க்கையை இலகுவாக்கியிருக்கின்றது. 1958ம் ஆண்டு ஏப்ரல் 25ம் திகதி எட்மண்ட் ரணசிங்க திருமண பந்தத்தில் இணைந்து கொண்டதோடு, ஆசிரியராகப் பணியாற்றிய மிலினா குமாரகேவைக் கரம் பிடித்தார். எட்மண்ட் மிலினா தம்பதியினரின் மூத்த மகள் நிர்மலா ரணசிங்க பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கில இலக்கியம் தொடர்பான பட்டம் பெற்ற ஒரு ஆங்கில ஆசிரியராகும். அவரது கணவர் ஒரு சிவில் பொறியியலாளரான லக்பிரிய ரத்நாயக்கா என்பவராகும். இளைய மகள் தர்ஷனி ரணசிங்க, கணினி தரவு உத்தியோகத்தர் என்பதோடு, அவரது கணவர் வர்த்த வியாபாரியான லக்சிரி விக்ரமாராச்சியாகும்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

**சுரேகா நில்மினி இலங்ககோன்**
**தமிழில்: எம். எஸ். முஸப்பிர்**


# அந்தமான் தமிழர் சங்க நூலகத்திற்கு நூல்கள் கையளிப்பு



தமிழ்நாட்டில் திருச்சியிலிருந்து வெளிவரும் இனிய நந்தவனம் மாத இதழ் ஏற்பாட்டில் அந்தமான் தமிழர் சங்கத்தில் 26.09.2023 அன்று இலக்கியச் சந்திப்பு நடைபெற்றது. இந்நிகழ்வில். தமிழகத்திலிருந்து எழுத்தாளர்கள், கவிஞர்கள், மற்றும் சமூக சேவகர்களுடன். அந்தமான் தமிழர் சங்க நிர்வாகிகளும் கலந்துகொண்டனர்.

அந்தமான் தமிழர் சங்க செயலாளர், வே.காளிதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அந்தமான் தமிழர் சங்கத்தால் நடத்தப்படும் நூலகத்திற்கு இனிய நந்தவனம் பதிப்பக நூல்களை, இனிய நந்தவனம் மாத இதழின் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் வழங்கினார், மேலும் பத்தாண்டுகளுக்கு மேலாக சிறப்பாக பணியாற்றிவரும் அஜந்தா ஓவியப் பயிற்சி நிறுவனத்தின் நிறுவனர் மனோகரன், நெடுஞ்சாலைத்துறை அதிகாரி சுப்பையா ஆகியோருக்கு "வெற்றித்தமிழன்" என்ற விருதும் வழங்கப்பட்டது.

நிகழ்வில் எழுத்தாளர்களும் கவிஞர்களும் தங்கள் இலக்கிய அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.




# மொழிவாணனின் பொன்விழா

ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணன் கலைத்துறை, ஊடகத்துறை, எழுத்துத்துறை ஆகியவற்றில் பிரவேசித்து 50 வருடங்களாகின்றன. இவரது இந்த பொன்விழாவையொட்டி கொழும்பு, மருதானை டவர் மண்டபத்தில் எதிர்வரும் 2023.10.22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.31க்கு விசேட நிகழ்வொன்று நடைபெறவுள்ளது.

இதனை முன்னாள் அமைச்சர் பிரபா கணேசன் ஏற்பாடு செய்துள்ளார். இதில் ஆடல் பாடல்களுடன் நகைச்சுவை நாடகங்களும் அரங்கேறவுள்ளன. இந்த பொன் மாலைப் பொழுதில் அரங்கேறவுள்ள கல கலா ஊர்வலத்தில் கலந்து கொண்டு உலா வர அனைவரையும் அழைக்கிறார்கள் ஏற்பாட்டாளர்கள்.

## காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகத்தின்

# பத்தாவது பௌர்ணமி கவியரங்கு

(ரீ.எல் ஜவ்பர்கான் மட்டக்களப்பு குறுப் நிருபர்)



காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் பத்தாவது பௌர்ணமி கவியரங்கு விசேட மீலாத் கவியரங்காக கடந்த வியாழக்கிழமை காத்தான்குடி கலாநிதி அலவி ஷரீஃப்தீன் முன்னோடிகள் பாடசாலை மண்டபத்தில் இலக்கியக் கழகத்தின் தலைவர் கவி மாமணி ரீ.எல். ஜவ்பர்கான் தலைமையில் நடைபெற்றது. கவி அரங்கிற்கு கவிஞர் நூன் அப்துல் ரஹீம் தலைமை வகித்தார்.

கவிஞர்களான வில்லூர் பாரதி முரளிதரன், சாகிர் ஹூஸைன், உசனார் ஜாபிர், எச் எம் இக்பால் கான், கலைமதி ரபாய்தீன், முகைதீன் சாலி, ஜெஸ்மின் ரமீஸ், இல்மி அஹமட் லெப்பை, ஏ எல் எம் சப்ரி, இக்பால் பலாஹி ஆகியோர் "இறைத்தூதர் இன்றேல்" என்னும் தலைப்பில் கவி மழை பொழிந்தனர்.

முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் யூ எல் எம் என் முபீன் மற்றும் காத்தான்குடி இஸ்லாமிய வழிகாட்டல் நிலைய செயலாளர் எஸ். எம். ஜாபிர் உட்பட பலர் முன்னிலை அதிதிகளாக கலந்து கொண்டனர்.


# தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343

Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

**207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு**

0777438169 - மாத்தளை மாவட்டத்தில் 50 ஏக்கர் சிறந்த தோட்டத்துடன் பங்களா ரம்யமான இடத்தில். தென்னை, கொக்கோ, ஏலம், கராம்பு, தேக்கு, இடை ப்பயி ர் ஆட்டுப்பட்டி, ஊழியர்களின் குடி யிருப்புக்கு சாதாரண 2 வீடுகள். வரு டாந்த வருமானம் 10 மில்லியனுக்கு மேல். 300 மில்லியனுக்கு. (கொடுக்கல் வாங்கல் பேசித் தீர்க்கலாம்.) 0777282147. 060142

**214 மின்சார/ இலத்திரனியல் உபகரணங்கள் விற்பனைக்கு**

புத்தம் புதிய துணி கழுவும் இயந்திரங்கள் விற்பனைக்கு சிங்கர், 12Kg - 10 Kg LG- 8Kg - LG DRYER - 0775746001- கொட்டாவ. 060910

## வேலைவாய்ப்பு

**312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்**

நிட்டம்புவ நகரில் தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு தொலைபேசி பழுதுபார்க்கும் ஒருவர் உடனடியாகத் தேவை. தொடர்பு 0741526775. 061653

**318 வெற்றிடங்கள் டிரைவர்கள்**

லொறி வாகனமொன்றிற்கு தேங்காய் சிரட்டை ஏற்றுவதற்கு வேலையாட்கள் தேவை. 0762309176, 0761526740. 061652

**319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்**

வயது சென்ற பெண்ணொருவரை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. வயது 25 - 40. கொட்டாவ. 0777660344. 060902

**322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்**

வெள்ளவத்தையிலுள்ள Construction ஒன்றிற்கு Tile பாஸ், லேபர்ஸ் தேவை. Metro habitat (Pvt) Ltd. No -14, Rudhra mawatha, Colombo - 6. 0777 3805 58, 0777380622, 0773629518. 061774

**323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்**

முட்டையிடும் கோழிப் பண்ணையில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு சிங்களம் பேசக்கூடிய ஆண் ஊழியர் தேவை. சம்பளம் 60,000/= ஹோமாகம, கொடகம. 0707489793. 061926

**325 தொழில்துறை பொது**

மோட்டார் வாகனம், முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பவியலாளர் உடன் தேவை. வயது 20 35. அனுபவம் மிகவும் நல்லது. எக்ஸ்பிரஸ் கார் வோச், ஹோகந்தர, தலவத்துகொட. 0775746001. 060905

## காணி/தோட்டம்

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

நாராஹேன்பிட்ட, எல்விட்டிகல மாவத்த, 30 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட இரு மாடி வீடு விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.10.15 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவு. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. என்ற முகவரிக்கு ஆகக்குறைந்த விலை கோரிக்கை 300. 0773427535 061431

**617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு**

கொழும்பு எல்லையில் பேலியகொட கோவிலுக்கு முகப்பாக சுவஸ்திக பூங்காவில் 30 பேர்ச்சிலுள்ள வீடொன்று விற்பனைக்குண்டு. அதிவேக நெடுஞ்சாலைக்கு பக்கத்தில். 0272246292, 0718391873. 061863

**618 வீடு சொத்து களுத்துறை மாவட்டம் விற்பனைக்கு**

பாணந்துறை 19 பேர்ச் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட மூன்று மாடி வீட்டுடன் காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.10.15 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவு. 242, யூனியன் பிளேஸ் , கொழும்பு 02. என்ற முகவரி க்கு ஆகக்குறைந்த கோரிக்கை 6 மில்லியன். 0773427535 061434

**620 வீடு சொத்து புத்தளம் மாவட்டம் விற்பனைக்கு**

வென்னப்புவ 71.5 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட வீட்டுடன் காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.10.15 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 0 2 என்ற முகவரி க்கு ஆகக்குறைந்த கோரிக்கை 35.8 மில்லியன். 0773427535. 061444

**621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு**

0777282147 கண்டி குண்டசாலை வீதி சொக்லட் கம்பனிக்கு முன்னால் படிவத்த பாதைக்கு 150 அடி அகலமான இடைப்பயிர், மதில் கேட்டுடன் 80 பேர்ச் தரைமட்டமான பெறுமதியான காணி வியாபாரத்திற்கு அல்லது வீடு கட்டுவதற்கு பொருத்தமானது. 85 மில்லியன். கொடுக்கல், வாங்கல் பேசித் தீர்க்கலாம். 0777438169. 060164

**628 வீடு சொத்து கேகாலை மாவட்டம் விற்பனைக்கு**

தெரணியகல, 434 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.10.15 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவு. 242, யூனியன் பிளேஸ் , கொழும்பு 02. என்ற முகவரி க்கு ஆகக்குறைந்த கோரிக்கை 4.7 மில்லியன். 0773427535 061441

**629 வீடு சொத்து இரத்தினபுரி மாவட்டம் விற்பனைக்கு**

பலாங்கொடை புத்த ஜயந்தி மாவத்த 10.6 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.10.15 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவு. 242, யூனியன் பிளேஸ் , கொழும்பு 02. என்ற முகவரி க்கு ஆகக்குறைந்த கோரிக்கை 1.1. 0773427535 061439

பலாங்கொடை புத்த ஜயந்தி மாவத்த 25 பேர்ச், நேஷன்ஸ் டிர ஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.10.15 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவு. 242, யூனியன் பிளேஸ் , கொழும்பு 02. என்ற முகவரி க்கு ஆகக்குறைந்த கோரிக்கை 2.5. 0773427535 061437

**641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு**

கொட்டாஞ்சேனை கொழும்பு 13, ஶ்ரீ குணானந்த மாவத்தை 4 மாடி வீடு குத்தகைக்கு சகல வசதிகளும் உண்டு. 07737 73734/ 07404 00077. 061387

### தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
- அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
- அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

### தினகரன் வாரமஞ்சரி திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்

classified@lakehouse.lk

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்

பியுமி - 077 7 278 948 - 011 2 429 383
கயனி - 011 2 429 347 - 011 2 429 342/343

# தினகரன் வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

























Advertise Here

5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT

adzsuo@gmail.com



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்



# உருமாற்றம் பெறும் ரஷ்ய – உக்ரைன் போர்

உக்ரைன் ரஷ்யப் போர் புதிய திசையில் நகரத் தொடங்கியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஏறக்குறைய அதனை முழுநீளப் போராக மாற்றும் முயற்சியில் ரஷ்யாவும் மேற்குலக நாடுகளும் இயங்குகின்றன. ரஷ்ய – உக்ரைன் போரை நீடிப்பதில் அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளான நேட்டோ அணியினரும் அதிக கவனம் கொண்டுள்ளனர். ஐரோப்பாவின் பொருளாதார மற்றும் எரிபொருள் நெருக்கடி இரண்டாம் உலக போர்ச்சூழலை நினைவு கொள்வதாகவே தெரிகிறது. இதனால் போர் ஒன்றுக்கான களத்தை ஐரோப்பா விரும்புகிறதா என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது. இக்கட்டுரையும் மேற்கு ரஷ்யப் போருக்கான சூழல் பற்றிய தேடலாக அமையவுள்ளது.

ஒன்று, ரஷ்யா தனது பாதுகாப்புச் செலவை 68 சதவீதமாக அதிகரித்துள்ளது. 28.09.2023 ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் ரஷ்யா இரட்டைப் போரை எதிர்கொண்டிருப்பதாகவும் அதாவது உக்ரைனை மட்டுமல்ல மேற்குல நாடுகளின் கூட்டணியையும் எதிர் கொண்டு போர் புரிய வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளது. அதனால் பாதுகாப்புச் செலவினத்தை 10.8 கோடி ரூபிளால் அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டைவிட பாரிய அதிகரிப்பாகவே உள்ளது.

இரண்டு, அமெரிக்காவுக்கு அண்மையில் விஜயம் செய்த உக்ரைன் ஜனாதிபதி (21.09.2023) ஜெலன்ஸ்கி பாரிய இராணுவ நிதி உதவியையும் அதற்கான ஆயுத தளபாடங்களையும் பெற்றுக் கொண்டார். 128 மில்லியன் அ.டொ. நிதியுதவியை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்தார். ரஷ்யாவால் கைப்பற்றப்பட்ட கிரிமியாவிலுள்ள ரஷ்ய இராணுவ தளம் மீதான உக்ரைன் தாக்குதலுக்கு பின்னர் அதிக நம்பிக்கை உக்ரைன் இராணுவத்துக்கு ஏற்பட்டுள்ளதாகவும் உக்ரைன் மீட்டெடுக்கப்படும் எனவும் ஜெலன்ஸ்கி அமெரிக்க ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

மூன்று, அதேநேரம் ஜெலன்ஸ்கியின் கனடா விஜயம் அதிக முக்கியத்துவம் (22.09.2023) உடையதாக மாறியுள்ளது. ஜி20 மாநாட்டை அடுத்து கனடா இந்திய இராஜதந்திர முறுகல் ஏற்பட்டதுடன் ரஷ்யாவை கண்டிக்காத வகையில் கூட்டுப்பிரகடனம் வெளியானதை அடுத்து ஜெலன்ஸ்கியின் கனடா விஜயம் நிகழ்ந்துள்ளது. அதேவேளை ஜெலன்ஸ்கியுடன் கனடா சென்ற மூத்த நாஜி படைகளின் இராணுவ வீரர் கனடா பாராளுமன்றத்தில் கௌரவிக்கப்பட்டமையால் அதிக நெருக்கடியை கனடாப் பிரதமர் எதிர்கொண்டுள்ளார். அதற்காக அவர் இஸ்ரேலிடம் மன்னிப்பும் கோரியுள்ளார். மறுபக்கத்தில் உக்ரைன் – கனடா உறவு ஜெலன்ஸ்கியின் விஜயத்தினால் பலமடைந்துள்ளதாகவே தெரிகிறது. கனடா நேட்டோவின் அங்கத்துவ நாடு என்ற வகையில் ஜெலன்ஸ்கியின் விஜயம் முக்கியமானதாக அமைந்துள்ளது.

நான்கு, பிரித்தானியாவின் புதிய பாதுகாப்பு அமைச்சர் (28.09.2023) கிரான்ட் ஹெப்ஸ் உக்ரைனுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டுள்ளார். அடுத்துவரும் குளிர்காலத்துக்கு முன்னர் உக்ரைனின் வான் பாதுகாப்பினை பலப்படுத்த வேண்டும் என இரு தலைவர்களும் உரையாடியுள்ளனர். ரஷ்யாவின் வான் தாக்குதலை முறியடிக்கும் விதத்திலும் அதனை எதிர்கொள்ளும் நோக்குடனும் உக்ரைனை பலப்படுத்த வேண்டும் என பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஐந்து, ரஷ்யாவின் முன்னாள் பிரதமரும் ஜனாதிபதியாவும் விளங்கிய டிமிற்றி மெட்வடோவ் மேற்கு நாடுகளின் கூட்டணியான நேட்டோ நாடுகளை நோக்கி எச்சரிக்கை செய்துள்ளார். முழுமையான போருக்கு தயாராகுமாறும் ரஷ்யா போருக்கு தயாராக (22.09.2023) உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். அவர் ரஷ்ய ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது ரஷ்யா உக்ரைனுடன் மட்டும் போர் புரியவில்லை அனைத்து மேற்கு நாடுகளுடனும் போர் புரிவதாகவும் நேட்டோவின் ஆயுத தளபாடங்களையும் அதன் போரியல் உத்திகளையும் ரஷ்யா எதிர்கொண்டு போர் புரிவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆறு, ரஷ்யாவின் கூட்டு நாடான வடகொரியா தனது அணுவாயுதங்களை மேலும் அதிகரிக்க வேண்டும் என அதன் தலைவர் கிம் ஜோன் உன் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். புதிய பனிப்போர் ஒன்றுக்காக உலகம் தயாராகிவிட்டது. அதில் அமெரிக்காவை எதிர்கொள்வதற்கும் கொரியக் குடாவில் ஏற்பட்டுவரும் பதற்றத்தை கையாளவும் வடகொரியா தனது அணுவாயுதங்களின் அளவை அதிகரிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். அவரது ரஷ்ய விஜயத்தின் பின்னர் இத்தகைய தகவல் வெளியாகியுள்ளமை கவனத்திற்குரியதாகும். இத்தகைய தகவல்கள் அனைத்தும் ரஷ்யாவை மட்டுமல்லாது மேற்கு நாடுகளும் போருக்கு தயாராகும் சூழலை வெளிப்படுத்துவதாக தெரிகிறது. ரஷ்யாவின் பாதுகாப்பு செலவீனம் பாரியளவில் அதிகரிக்கப்படுவதும் புதிய வகை ஆயுதங்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற ரஷ்ய ஜனாதிபதியின் திட்டமிடலும் அதிக குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அதில் உக்ரைன் போரை எதிர் கொள்ள முடியாது அத்தகைய நகர்வுகளை மேற்கொள்கியதாக கருதினாலும் மேற்கு நாடுகளுடன் ஒரு போரை உக்ரைனுக்குள்ளால் ரஷ்யா நிகழ்த்தி வருகிறது என்பது கவனத்தில் கொள்ள வேண்டும். உக்ரைனின் அண்மைக்கால தாக்குதல்களால் ரஷ்யா போரில் அதிக நெருக்கடியை எதிர்கொள்வதாக தெரிகிறது. ஆனால் மறுபக்கத்தில் மேற்கு ஊடகங்களும் நேட்டோவின் ஆயுதங்களும் உக்ரைனுக்கு கைகொடுப்பதாக அமைந்தாலும் களநிலையானது அடிக்கடி மாற்றத்தை எதிர் கொள்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ரஷ்யாவின் நகர்வுகளை அவதானித்தால் முழுநீள போருக்கு தயாராவதாகவே விளங்கிக் கொள்ள வேண்டும். உக்ரைனுடன் நிகழ்த்தும் போர் என்பது ரஷ்யாவுக்கு சுலபமானதாக அமைந்தாலும் நேட்டோவுடன் நிகழ்த்தும் போரானது அத்தகையதாக அமைய வாய்ப்பில்லை என்றே தெரிகிறது.

உக்ரையின் நேட்டோவில் இணைந்துவிடக் கூடாது என்ற நோக்கத்திலேயே ரஷ்யா போரைத் தொடக்கியது. ஆனால் தற்போது உக்ரைன் இராணுவ ரீதியிலும் ஆயுததளபாட உதவி அடிப்படையிலும் நேட்டோ நாடாகவே இயங்குகிறது. தற்போது நேட்டோ எதிர் ரஷ்யா எனும் நிலையே காணப்படுகிறது. ஆனால் ஒரு வாய்ப்பு மட்டுமே ரஷ்யாவுக்கு சாதகமானதாக அமைந்துள்ளது. அதாவது நேட்டோ படைகளும் ஆயுதங்களும் வெளிப்படையாக இல்லாது மறைமுகமாக வழங்கப்படுவதும் அதற்கு எதிராக ஒரு போரை ரஷ்யா நிகழ்த்துவதுமே முக்கியமான பக்கமாகும்.

ஏனைய தளத்தில் உக்ரைன் நேட்டோ நாடாகவே செயல்படுகிறது. இந்தப் போர் பிராந்தியத்தில் நேட்டோ மீதான தாக்குதலை ரஷ்யா மேற்கொள்ளவும் வாய்ப்பினை தந்துள்ளதாகவே தெரிகிறது.

மறுபக்கத்தில் நேட்டோ அணியினதும் குறிப்பாக அமெரிக்காவினதும் உலகளாவிய வியூகம் பலவீனமடைந்துள்ளதாக விமர்சனங்கள் உண்டு. ஆனால் அமெரிக்காவும் அதன் இராணுவக் கூட்டணியும் ரஷ்யாவின் விஸ்தரிப்பினை தடுத்து விட்டதாகவும் ரஷ்ய, சீன, இந்தியக் கூட்டு பலவீனப்படுத்தப்பட்டு விட்டதாகவும் கருதுகிறது. ஏறக்குறைய இரண்டுமே அரங்கேறியுள்ளது. ஒருபக்கம் ரஷ்யாவின் பொருளாதாரம் நெருக்கடிக்குள் நகர்கிறது. மறுபக்கத்தில் இராணுவ ரீதியில் பாரிய சவால்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. அதேநேரம் தனது நட்புச் சக்திகளுடன் சுமுகமான உறவை பேணமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது ரஷ்யாவின் ஆட்சிக் கட்டமைப்பையும் குழப்பமாக்கியுள்ளது. புட்டினுக்கு பின்னர் ரஷ்யா என்ற கேள்வி அதிக நெருக்கடியை எதிர்கொள்ள முனைகிறதா என்ற சந்தேகத்தை தருகிறது. ஆனால் ரஷ்யாவின் உட்கட்டுமானம் அதிக குழப்பகரமானது அல்ல. அது உள்நாட்டுத் தேவைகளை நிரப்பீடு செய்யும் திறனுடையது. அதற்காக அந்த மக்கள் இரண்டாம் உலக மகா யுத்த காலத்து ரஷ்யர்கள் கிடையாது என்பதும் அமெரிக்கா மீதும் மேற்கு மீதும் அவர்கள் கொண்டுள்ள கோபம் தனித்துவமானதாக நீடிக்குமா என்பதும் கேள்வியாகவே உள்ளது.

அமெரிக்கா மற்றும் அதன் நேட்டோ அணியினரைப் பொறுத்தவரை ரஷ்ய, உக்ரைன் போரால் பொருளாதார இழப்பீடுகள் அமைந்தாலும், அரசியல் மற்றும் இராணுவ ரீதியிலும் மேற்குலகத்தின் மேலாதிக்கத்தை பாதுகாப்பதில் கவனமாக செயல்படுகின்றன. ரஷ்யாவின் எழுச்சியானது மேற்குலகத்துக்கு ஆபத்தானதாக மாறும் நிலையை தடுத்துள்ளதாகவே அவர்கள் கருதுகின்றனர். ரஷ்யா தனது புவிசார் அரசியலை கட்டமைக்கும் முயற்சியில் பிராந்திய நாடுகளை மேற்கிடமிருந்து பிரிப்பதற்கும் ரஷ்யாவின் தனித்துவத்தை நிலைநாட்டுவதற்கும் முயன்றது. அதனையே சோவியத் யூனியனின் மீளுருவாக்கம் என்ற கோசத்தினால் மேற்கு முறியடித்துள்ளது. ஆனாலும் போலந்து உக்ரைனுக்கு ஆயுதம் வழங்குவதில்லை என்ற முடிவு அதிக குழப்பத்தை நேட்டோவுக்கு ஏற்படுத்தியுள்ளது. அவ்வாறு பிராந்திய நாடுகள் செயல்படுமாயின் உக்ரைன் போர் நேட்டோவுக்கு சுமையாக மாறுவதுடன் உக்ரைனது தனிமை உறுதிப்படுத்தப்படும். ஏற்கனவே நேட்டோவுக்குள் குழப்பம் நிலவுகிறது. பிராந்திய நாடுகளும் குழப்படைந்தால் உக்ரைன் போர் மேற்குக்கு அபாயமாக அமையும். தற்போதைய நிலை மேலும் மோசமடையும். இவை யாவற்றையும் தனக்கு சாதகமாக மாற்றிக் கொண்டு இயங்கும் சீனா, ரஷ்ய – உக்ரைன் போரில் சாதகத்தை அனுபவித்து வருகிறது. சீனா – அமெரிக்காவுடன் ஒரு பனிப்போரை எதிர்கொள்ளவே முனைகிறது. ரஷ்ய உக்ரைன் போரின் விளைவும் உலகளாவிய ரீதியில் அதுவாகவே தெரிகிறது.

எனவே உலகம் முழுமையான போருக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளத் தயாராகிறது என்பதை அவதானிக்க முடிகிறது. அதிலும் அணுவாயுதமே அதிக முக்கியத்துவத்தை பெறுகின்றது. அது போராக அமைவதைவிட எச்சரிக்கையாக அமையலாம் என்ற எதிர்பார்க்கை காணப்படுகிறது. அமெரிக்காவின் போர் உத்திகள் மீளவும் திருடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவை கடந்தகாலத்திலும் நிகழ்ந்துள்ளன. இது அமெரிக்காவின் பலவீனத்தை மட்டுமல்ல அதன் உலகளாவிய வலுவை பலவீனப்படுத்துவதாகவே தெரிகிறது. ரஷ்ய – உக்ரைன் போர் பாரிய பொருளாதார நெருக்கடியை தந்துள்ளது மட்டுமல்ல உலகளாவிய ரீதியில் மீளவும் நாடுகளுக்கிடையிலும், முழுநீள போரையும் ஆரம்பிக்க முனைகிறதா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது. ஐரோப்பா இரண்டாம் உலக போருக்கான சூழலை நோக்கி நகர்வதாகவே உணரப்படுகிறது.



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர், வரி &
முகாமைத்துவ ஆலோசகர்

# இலங்கையை சிதைக்கும் ஊழல்

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் வரி செலுத்துவோருக்கு ஊழல் தடுப்பு அறிவிப்பு 24.08.2023 அன்று வெளியிடப்பட்டது.

ஒரு சமூகத்தின் தார்மீக அடித்தளமான வருவாய். நிர்வாகத்தில் ஊழலால் சிதைக்கப்படுகிறது, இது நேர்மையின்மைக்கு வழிவகுப்பதோடு, ஒருமைப்பாட்டிற்கு கலக்கத்தை ஏற்படுத்துகின்றது. இறுதியில் சமூக ஒற்றுமை மற்றும் நம்பிக்கையின் முறிவு ஏற்படுகிறது.

“ஊழலைக் கொல்லாவிட்டால் அது இலங்கையைக் கொன்றுவிடும்” இலங்கையைச் சிதைக்கும் “ஊழல்” வைரஸ்

மிக முக்கியமான அரசாங்க வருவாயைப் பாதுகாப்பதற்காக, ஒரு வரி நிர்வாகத்தில் லஞ்சம் தொடர்பான விஷயங்களை விரைவாகவும் திறமையாகவும் கையாள்வது விரும்பத்தக்கது. வரி நிர்வாகத்தில் லஞ்சம் வாங்குவதை அகற்ற அல்லது குறைக்கும் முயற்சியில் வரி அதிகாரிகளை குறிவைக்கும் நடவடிக்கைகள் பயனுள்ளதாக இருக்காது. ஏனெனில் இது வரி அதிகாரிகள் தாங்களாகவே நடத்தும் ஒன்று அல்ல.

வரி செலுத்துவோர், வரி வல்லுநர்கள் மற்றும் வரி அதிகாரிகள் ஈடுபடும் போது பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் அல்லது குறைக்கப்பட வேண்டும் என்றால் இந்தக் குற்றத்தைச் செய்வதைத் தவிர்ப்பதற்கான அவர்களின் விருப்பத்தை ஊக்குவிக்க மூன்று தரப்பினரும் திறம்பட உரையாற்ற வேண்டிய சூழ்நிலை எழுகிறது.

மறுபுறம், லஞ்சம் சம்பந்தப்பட்ட சம்பவங்களை வரி ஏய்ப்பு வழக்குகளாக வேறுபடுத்தி அறியலாம். ஏனெனில் வரி செலுத்துவோர் தனது வரிப் பொறுப்பை இந்த சட்டவிரோத வழியில் குறைக்க / தவிர்க்க வேண்டும். அதே சூழ்நிலையானது வழக்கைத் திறந்தே வைத்திருக்கிறது. ஏனெனில் செலுத்த வேண்டிய வரியின் சரியான அளவு எப்போது வேண்டுமானாலும் மதிப்பிடப்படும். அதாவது, ஒரு மதிப்பீடு செய்யப்படுவதற்கு முன் கடக்கக்கூடிய நேரத்தின் வரம்பு ("டைம் பார்") லஞ்சம் கொடுப்பதன் மூலம் வேண்டுமென்றே ஏய்ப்பு செய்வதற்கு பொருந்தாது.

உள்நாட்டு வருவாய்த் திணைக்களம் (IRD) சாத்தியமான ஊழல் தொடர்பான நுழைவுப் புள்ளிகளைக் குறைப்பதற்கும் அகற்றுவதற்கும் நோக்கமாக பல செயற்திறன்மிக்க நடைமுறைகளை செயற்படுத்தியுள்ளது.

ஊழலை ஒழிக்க உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்தில் (IRD) பின்வரும் செயலூக்கமான நடவடிக்கைகள் மற்றும் முன்முயற்சிகள் செய்யப்படுகின்றன.

**0% சகிப்புத்தன்மை:**

லஞ்சம் / கோரப்பட்ட லஞ்சம் உட்பட எந்தவொரு ஊழலையும் பொறுத்துக்கொள்ள முடியாது. அநீதி இழைக்கப்பட்ட தரப்பினர், லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் உள்ளிட்ட உரிய அதிகாரிகளிடம் புகார் செய்வதற்கு முன், மொபைல் போன்கள், சிசிடிவி மற்றும் பிற சாதனங்களில் செய்யப்பட்ட ஆடியோ மற்றும் வீடியோ பதிவுகள் மூலம் இத்தகைய ஊழலுக்கான அடிப்படை மற்றும் உறுதியான ஆதாரங்களை சேகரிக்குமாறு லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழு (CIABOC) மற்றும் CGIR கூறுகின்றனர்.




**தொடர்பு முறை (Method of communication):**

புகார்களைச் செய்ய விரும்பும் எந்தவொரு நபரும் CIABOC க்கு தொடர்பு கொள்வதன் மூலம் புகார் அளிக்க முடியும். ஏனெனில் CIABOC அத்தகைய புகார்களை விசாரிப்பதற்கான தொடர்புடைய அதிகாரியாக செயலாற்ற இருக்கின்றனர். CIABOCஆல் IRD வளாகத்தில் (தரை தளம்) புகார் பெட்டி ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் எந்த புகாரும் செய்யக்கூடிய வசதி செய்யப்பட்டுள்ளது.

CGIR க்கு புகார் அளிக்க, பின்வருவனவற்றைப் பயன்படுத்தக்கூடிய வசதி செய்யப்பட்டுள்ளது.

**தபால்:** செயலகம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், P O Box 515, கொழும்பு 02

**மின்னஞ்சல்: cgir@ird.gov.lk**
**தொலைபேசி: +94 112135400**
**தொலைநகல்: +94112337777**

**குற்றச்சாட்டிற்கான ஆதாரம்:** IRD இன் ஊழியர் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும் என்கின்ற காரணத்தினால் புகாருடன் பின்வரும் விபரம் கோரப்படுகின்றது.

புகார்தாரரின் பெயர், முகவரி மற்றும் தொடர்பு விவரங்களுடன் அல்லது புகார்தாரர் பெயர் தெரியாதவராக இருக்க விரும்பினால் துணை ஆவணங்கள் கொடுக்கபட வேண்டும்.

**பாதுகாப்பு உத்தரவாதம்:** IRD இன் எந்தவொரு பணியாளருக்கும் எதிரான புகாரின் எந்தவொரு பாதகமான விளைவுகளிலிருந்தும் புகார்தாரரின் பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. சக அதிகாரிகளின் எந்த விதமான பழிவாங்கலும் மற்றொரு சக அதிகாரிக்கு எதிராக புகார் அளித்தால் பொறுத்துக்கொள்ளப்படாது. மற்றும் அத்தகைய அதிகாரி மீது உடனடி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்ற உத்தரவாதம் கொடுக்கப்பட்டுள்ளது.

**தணிக்கை இடைநிறுத்தம் (Suspension of Audit):** வரி செலுத்துவோர் தங்கள் நிறுவனத்தின் தணிக்கையை நடத்தும் வரி அதிகாரிக்கு எதிராக உரிமை கோரினால் (உரிமையாளர், பங்குதாரர், இயக்குனர், அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி அல்லது வேறு ஏதேனும் முதன்மை ஊழியர்), தணிக்கை நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படும். உரிமைகோரலைச் செய்த வரி செலுத்துவோருக்கு மற்ற வரி செலுத்துவோரின் அச்சுறுத்தல் குறைவாக இருப்பதாக உணர இது உதவும்.

விசாரணை நடவடிக்கை நியமனம்: IRD ஊழியர்களுக்கு எதிராக செய்யப்பட்ட ஊழலினை விசாரணை செய்வதற்கு நேர்மை மற்றும் கடந்தகால பதிவுகளைக் கொண்ட அதிகாரிகள், மற்றும் உள்நாட்டு வருவாய் சேவையிலிருந்து குறைந்தபட்சம் ஒரு அதிகாரியை உள்ளடக்கிய சிறப்புக் குழு குற்றச்சாட்டுகளை ஆராய்வதற்காக ஸ்தாபனச் சட்டத்தின் அடிப்படையில் பூர்வாங்க விசாரணையை நடத்துவதற்கு CGIRஆல் நியமிக்கப்படும்.

**முறையான விசாரணை:** குற்றச்சாட்டுகள் அனைத்தும் முறையாக விசாரிக்கப்படும். அத்தகைய அதிகாரிக்கு எதிரான முதன்மையான வழக்கு அறிக்கையை சமர்ப்பித்தால் முறையான விசாரணை முடியும் வரை குற்றம் சாட்டப்பட்ட அதிகாரி பொதுவான இடத்திற்கு (Poolற்கு) மாற்றப்படுவார்.

**CIABOCக்கு பரிந்துரை:** குற்றச்சாட்டில் கணிசமான உண்மை இருப்பதாக குழுவின் 50%க்கும் அதிகமான உறுப்பினர்கள் கருதினால், அத்தகைய வழக்கு CIABOC/PSCக்கு அறிக்கையுடன் அடுத்த நடவடிக்கைக்காக பரிந்துரைக்கப்பட வேண்டும் என்கின்ற முறைமை அமுலுக்கு வரும்.

**புகாரின் மீதான நிலமை/கருத்து (Feedback on the complaint):** புகார்தாரர் புகார் அளிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று (3) மாதங்கள் பிறகு தனது அடையாளத்துடன் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஊழல் குற்றச்சாட்டைச் செய்த ஊழியர்களுக்கு எதிராக சமர்ப்பித்த குற்றச்சாட்டின் முன்னேற்றத்தை/ நிலையை CGIRஇடம் கோரலாம்.

குறைவான மனித தலையீடு: மனித தலையீட்டை முடிந்தவரை குறைப்பதற்கு: பதிவு செய்தல், மின்தாக்கல், மின்பணம் செலுத்துதல், IRD உடனான மின்தொடர்பு போன்ற மின்சேவைகளின் அதிகபட்ச பயன்பாடு ஊக்குவிக்கப்படும்.

**கட்டுப்பாடற்ற அதிகாரங்களைக் குறைத்தல் (Reduction of discretionary powers):** அதிக விருப்புரிமைகள் அதிக ஊழல்களுக்கு வழிவகுக்கும். எனவே, சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அனைவருக்கும் நியாயமாகவும் சமமாகவும் ஒருங்கிணைந்த மற்றும் நிலையான நிர்வாகத்தை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு வெளியிடப்படும்.

வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்: ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கும், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்வதற்கும், வரி செலுத்துவோர் விவகாரங்கள் தொடர்பான அனைத்து அறிவுறுத்தல்கள், சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் மதிப்பீடுகள், நிர்வாக மதிப்பாய்வுகள், உரிமைகள் மற்றும் கடமைகள் போன்றவை IRDஇன் இணையத்தளத்தில் (www.ird.gov.lk) கிடைக்கும் வகையில் வசதி ஏற்படுத்தப்படும்.

**நேர்மைக்கான ஊக்கம்:** லஞ்சம் வழங்க முயற்சிக்கும் வரி செலுத்துவோர் மீது ஆதாரங்களுடன் புகார் செய்ய ஊழியர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். மற்றும் வரும்காலங்களில் ஊக்குவிக்கப்படுவார்கள்.

"தவறான செயல்களின் ஆயுதக் களஞ்சியத்தில் மிகவும் ஆபத்தான கருவிகள் நல்லவர்களின் அலட்சியமும் அமைதியும் ஆகும். " மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர்.

வரி செலுத்துவோர்; வேலைவாய்ப்பு, முதலீடுகள், வணிகங்கள் மற்றும் பிற ஆதாரங்கள் உட்பட எந்தவொரு மூலத்திலிருந்தும் வருமானத்தைப் பெற்ற பின்னர் சரியான வரியை சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட அனைத்து நன்மைகளையும் பெறுவதால் செலுத்தவும். இதன் மூலம் இலங்கையின் வளர்ச்சிக்கு பங்களிக்குமாறு வலுவாக ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.



# நனவாகும் ஜனாதிபதியின் செயற்கை நுண்ணறிவு பல்கலைக்கழகக் கனவு



உலகில் எந்தவொரு நாடும் அந்நாட்டின் எதிர்கால அபிவிருத்தி அபிலாஷைகளை கருத்தில் கொண்டு தான் தனது கல்விக் கொள்கையை வகுக்கும். ஆனால் எமது நாட்டின் கல்விக்கொள்கை அவற்றைக் கருத்தில் கொண்டு தற்போதைய சவால்களை வெற்றி கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டதாக இல்லை. அதன் விளைவாகத் தான் தற்போதைய பல்கலைக்கழக மாணவர்கள் துரதிர்ஷ்டகர நிலைமைக்கு முகம் கொடுத்திருக்கின்றார்கள். ஆரம்பக்கல்வி முதல் 13 வருடங்கள் வரையும் கல்வி கற்று கடும் போட்டிமிக்க உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி அதிக புள்ளிகளுடன் சித்தியெய்தும் குறிப்பிட்ட தொகை மாணவர்களுக்கு மாத்திரம் தான் பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்கப்பெறுகிறது. அப்படியிருந்தும் இம்மாணவர்கள் தொழில் வாய்ப்புக்காக வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு முகம் கொடுக்கின்றார்கள். இந்நிலைக்கு இந்நாட்டின் உயர்கல்வி முறைமையில் காணப்படும் குறைபாடுகளே காரணமே அன்றி வேறில்லை.

இன்றைய காலகட்டத்தில் வடக்கு, தெற்கு என்ற பேதமின்றி மாணவ சமூகம் முகம் கொடுத்துள்ள எதிர்காலம் குறித்த நம்பிக்கையற்ற தன்மைக்கும் சமூக அங்கீகாரம் வீழ்ச்சியடைவதற்கும் கல்வி கொள்கையை வகுக்கும் போது பயன்படுத்திய தூர நோக்கற்ற விடயங்கள் முக்கிய பங்காற்றியுள்ளன. என்றாலும் தற்போதைய அரசாங்கம் பாடசாலைக் கல்வியை மாத்திரமல்லாமல் பல்கலைக்கழகக் கல்வியையும் மேலும் மேம்படுத்தும் நோக்கில் பாராட்டத்தக்க பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிப்படி, இந்நாட்டின் கல்வி முறைமையை மேம்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அவை குறிப்பிட்டுக் கூறத்தக்க வேலைத்திட்டங்கள் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

கல்விக்கான உரிமை என்பது உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமையாகும். ஐக்கிய நாடுகளின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான பிரகடனத்தின் 26ஆவது ஷரத்தின் ஊடாகக் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை அடிப்படை உரிமை என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் ஊடாக ஒவ்வொரு பிள்ளையும் அடிப்படைக் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டாய உரிமையைப் பெற்றுக்கொண்டுள்ளது. அந்த உரிமை எந்தவித வரையறைகளுக்கும் உள்ளாகாத வகையில் பெற்றுக்கொள்ள முடியுமான உரிமை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அப்பிரகடனத்தை இலங்கையும் ஏற்றுக்கொண்டுள்ளது.

அதேநேரம், மனித உரிமைகள் தொடர்பான உலகளாவிய சாசனத்தின் 13ஆம் 14ஆம் ஷரத்துகளின் ஊடாகவும் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை அடிப்படை உரிமை என குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் அரசியலமைப்பிலும் கல்வி அடிப்படை உரிமை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த வகையில், இந்நாட்டின் பல்கலைக்கழகக் கல்விக் கட்டமைப்பை மாத்திரமல்லாமல் முழுக் கல்வி முறைமையையும் மேம்படுத்தி இலவசக் கல்விக் கொள்கையை வலுப்படுத்தும் வகையில் பாரிய நிதியொதுக்கீட்டுடன் அண்மைக்காலமாக பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன் பிரதிபலன்களில் ஒன்றாக 92 வீதத்திற்கும் மேற்பட்டவர்கள் எழுத்தறிவைப் பெற்றவர்களாக விளங்குகின்றனர். இது வளர்முக நாடொன்றில் எதிர்பார்க்க முடியாத எழுத்தறிவு வீதமாக இருப்பதோடு தெற்காசியாவிலேயே உயர் மட்ட எழுத்தறிவு வீதமும் கூட.

தற்போது நாட்டில் 15 அரச பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவற்றில் கொழும்பு, பேராதனை, களனி, மொரட்டுவ, றுஹுனு, ஜயவர்தனபுர பல்கலைக்கழகங்கள் முன்னணி பல்கலைக்கழகங்களாக விளங்குகின்றன. என்றாலும் உயர்கல்வித் துறையை மேலும் மேம்படுத்தி விஸ்தரிக்கும் வகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சட்டத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பயனாக சில உயர்கல்வி நிறுவனங்கள் பட்ட கற்கை நெறிகளை முன்னெடுத்து பட்டங்களை வழங்கும் வாய்ப்புகளைப் பெற்றுக்கொண்டுள்ளன.

அதேநேரம், உலகில் அறிவின் கேந்திர நிலையமாக இந்நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் நிமித்தம் கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்கள் உழைத்து வருகின்றன.

இவ்வாறான சூழலில் சவுதி அரேபியாவின் நிதியுதவியில் தனியார் பல்கலைக்கழகமாக மட்டக்களப்பு தனியார் பல்லைக்கழகக் கல்லூரி புனானையில் அமைக்கப்பட்டது. ஆனால் இந்நாட்டின் வரலாற்றில் எந்தவொரு உயர்கல்வி நிறுவனமும் முகம் கொடுக்காத இடையூறுகளையும் தடங்கல்களையும் இக்கல்லூரி எதிர்கொண்டது. இது ஷரிஆ பல்லைக்கழகம் என்றும், உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலுடன் சம்பந்தம் என்றெல்லாம் முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்களால் அன்றைய அரசாங்கம் இப்பல்கலைக்கழகத்தை 2019இல் இராணுவத்தின் பொறுப்பின் கீழ் கொண்டு வந்தது. அதனைத் தொடர்ந்து கொவிட் 19 தனிமைப்படுத்தல் மையமாகவும் கொவிட் 19 சிகிச்சை மத்திய நிலையமாகவும் இப்பல்கலைக்கழகக் கட்டடங்கள் பயன்படுத்தப்பட்டன.



ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியும் பாதுகாப்பு ஆலோசகருமான சாகல ரட்நாயக்க தலைமையிலான உயர் மட்ட கலந்துரையாடலில்

ஆனால் இப்பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகத் தலைவரான முன்னாள் ஆளுனர் கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்வின் கூற்றுப்படி, 'மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான 35 ஏக்கர் காணி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பதவிக்காலத்தில் இப்பல்கலைக்கழகத்தை அமைப்பதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 2013இல் மலிக் அப்துல்லாஹ் பல்கலைக்கழகக் கல்லூரி என்ற பெயரில் தொழிற்பயிற்சி நிலையமாக ஆரம்பிக்கப்பட்ட இப்பல்கலைக்கழக கல்லூரி, 2014இல் பெற்றிக்கலோ பல்கலைக்கழகக் கல்லூரி என்று பெயர் மாற்றப்பட்டுள்ளதோடு, 2015இல் வர்த்தகங்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் பெற்றிக்கலோ கெம்பஸ் பிரைவேட் லிமிட்டட் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பின் 2016இல் பெற்றிக்கலோ கெம்பஸ் ஒப் ஸ்ரீலங்கா எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு இலங்கை முதலீட்டு சபையில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இப்பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பதற்காக சவுதி அரேபியாவின் அலி அப்துல்லாஹ் அல் ஜிபாலி மன்றத்தின் ஊடாக சலுகைக் கடனாக ஆறு தவணை அடிப்படையில் 3600 மில்லியன் ரூபா பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இக்கடனை இப்பல்கலைக்கழகம் செயற்படத் தொடங்கி 15 வருடங்கள் கழிந்ததும் செலுத்த ஆரம்பிக்க வேண்டும்.

ஆனால் இப்பல்கலைக்கழகத்திற்காக செலவிடப்பட்டுள்ள மொத்த செலவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள கலாநிதி ஹிஸ்புல்லாஹ், நவீன உலகுக்குப் பொருத்தமானதும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டதுமான கற்கைநெறிகளை முன்னெடுப்பதற்கு ஏற்ற வசதிகளைக் கொண்டு இப்பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது. பாதுக்கவிலுள்ள ஸ்ரீ லங்கா தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்துடன் (Sri lanka Technological Campus) இணைந்து பொறியியல், தகவல் தொழில்நுட்பம்,



மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் கையளிக்கப்படுகையில்

விவசாய தொழில்நுட்பம் போன்ற பல முக்கிய கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டிருந்த கருத்திட்ட அறிக்கையில், 2019இல் 3670 மாணவர்களும் 2020ஆம் ஆண்டாகும் போது 5380 மாணவர்களும் என்றபடி 2025ஆம் ஆண்டாகும் போது 10 ஆயிரம் மாணவர்களை உள்வாங்குவது இலக்காகக் கொள்ளப்பட்டிருந்தது. என்றாலும் தவறான புரிதல்கள் மற்றும் பிழையான பார்வைகள் காரணமாக அரசாங்கம் இப்பல்கலைக்கழகத்தை பொறுப்பேற்றதோடு கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டமை மற்றும் முன்னெடுத்து செல்லும் செயற்பாடுகள் குறித்து தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் மூலம் விஷேட கணக்காய்வு அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கையில் தேசிய மட்டத்தில் பேசுபொருளாக இருந்த இப்பல்கலைக்கழகத்தை அமைத்தல் குறித்து பாராளுமன்றத்தின் பொதுநிறுவனங்கள் குறித்த செயற்குழுவும் விசாரணைகளை மேற்கொண்டது.

கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகி வந்த இப்பல்கலைக்கழகத்தை அரசாங்கம் பொறுப்பேற்பதாக 2020 நவம்பர் 27ஆம் திகதி அன்றைய கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் பாராளுமன்றத்தில் அறிவித்தார். அதனைத் தொடர்ந்து இப்பல்கலைக்கழகம் அரசாங்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

'இவ்வாறு அரசாங்கத்தினால் இராணுவத்தின் பொறுப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட இப்பல்கலைக்கழகம் தொடர்பில் விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டன. இப்பல்கலைக்கழகம் குறித்து முன்வைக்கப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் விமர்சனங்களும் உண்மைக்கு புறம்பான பொய்கள் என உறுதியானதைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்தைத் தம்மிடம் மீள ஒப்படைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்தேன். அக்கோரிக்கை குறித்து ஜனாதிபதி விஷேட கவனம் செலுத்தினார்' என்றும் முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழகமொன்றுக்கு அவசியமான அனைத்து வசதிகளையும் வளங்களையும் கொண்டுள்ள இப்பல்கலைக்கழகம் மூடப்பட்டுக் கிடப்பது தேசிய குற்றமாக கருதப்படுகிறது. அதனால் இந்நாட்டின் எதிர்கால சந்ததியினரின் நலன்களுக்கு இவ்வளத்தையும் வசதிகளையும் பயன்படுத்திக் கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. குறிப்பாக பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் தளமாக இப்பல்கலைக்கழகத்தை பயன்படுத்த முடியும். இந்நிலையில் இப்பல்கலைக்கழகத்தை சட்ட ரீதியாகவே கலாநிதி ஹிஸ்புல்லாஹ்விடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் ஜனாதிபதியின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டன. அதன்படி பல மட்ட சந்திப்புக்களும், பேச்சுவார்த்தைகளும், கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டன.



வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையின் முன்னாள் தகுதிகாண் அதிகாரி மங்கள சேனரத்

அந்த வகையில் ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய இராணுவத்தினர் இப்பல்கலைக்கழகத்தை மீண்டும் தம்மிடம் ஒப்படைத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள கலாநிதி ஹிஸ்புல்லாஹ், ஜனாதிபதிக்கும் இதன் நிமித்தம் ஒத்துழைப்பினை நல்கிய ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரட்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் விக்கும் லியனகே உட்பட இப்பல்லைக்கழகம் மீண்டும் எம்மிடம் கிடைக்கப்பெற உதவி, ஒத்துழைப்புக்களை நல்கிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

இப்பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் இலங்கை தொழில்நுட்பவியல் கெம்பஸ் (SLTC) ஊடாக முன்னெடுக்கப்படும். குறிப்பாக பொறியியல், தொழில்நுட்பவியல், விவசாய தொழில்நுட்பம் உள்ளிட்ட பல கற்கை நெறிகளை ஆரம்பிக்க ஏற்கனவே உடன்படிக்கை செய்துள்ளோம். அந்த உடன்படிக்கையின் அடிப்படையில் மீண்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இது தொடர்பில் எஸ்.எல்.ரி.சி பல்லைக்கழகத்தினருடன் கலந்துரையாடி முடிவுகளை எடுப்போம். இப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தை எஸ்.எல்.ரி.சி பல்லைக்கழகம் முன்னெடுக்கும். அதற்கேற்ப துணைவேந்தர், பீடாதிபதி, விரிவுரையாளர்கள் உள்ளிட்ட கல்வி சார் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு, மாணவர்கள் உள்வாங்கல் உள்ளிட்ட அனைத்தையும் எஸ்.எல்.ரி.சி மேற்கொள்ளும். விரைவில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஆட்சேர்ப்பும் மாணவர் உள்வாங்கலும் இடம்பெறும்' என்றும் குறிப்பிட்டுள்ள ஆளுநர் ஹிஸ்புல்லாஹ், இவ்வருட இறுதிக்குள் இப்பல்கலைக்கழகம் ஜனாதிபதி தலைமையில் திறந்து வைக்கப்படும்' என்றும் கூறியுள்ளார்.

அதேநேரம் ஜனாதிபதி வழங்கியுள்ள ஆலோசனைக்கு அமைய இப் பல்கலைக்கழகத்தில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்படும். அதன் ஊடாக ஜனாதிபதியின் கனவு நனவாவதோடு இலங்கையின் செயற்கை நுண்ணறிவு கற்கை நெறிகளைக் கொண்ட முதலாவது பல்கலைக்கழகமாகவும் இப்பல்கலைக்கழகம் விளங்கும். உலகளாவிய ரீதியில் தற்போது செயற்கை நுண்ணறிவு கற்கை நெறிகள் வளர்ச்சி பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் இது முஸ்லிம்களுக்கு மாத்திரம் உயர்கல்வி வழங்கக்கூடிய பல்கலைக்கழகமல்ல. மாறாக சகல இன, மத மாணவர்களுக்கும் இங்கு உயர் கல்வி பெற்றுக்கொடுக்கப்படுவதோடு கல்வி பெறும் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களைச் சேர்ந்த மாணவர்கள் தத்தம் சமய வழிபாடுகளில் ஈடுபடவும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்பதையும் குறிப்பிடத் தவறவில்லை முன்னாள் ஆளுநர்.

இவ்வாறான சூழலில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளரும் வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலை முன்னாள் தகுதிகாண் அதிகாரியுமான மங்கள சேனரத்தைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றது. மட்டக்களப்பு மாவட்டத்துடனும் அம்மாவட்ட மக்களுடனும் நீண்ட காலமாகத் தொடர்புகளை பேணிவரும் இவருடன் இப்பல்கலைக்கழகம் குறித்து கலந்துரையாடக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. அவர் குறிப்பிடுகையில், 'முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்வை 2005 முதல் நான் அறிவேன். அவர் நற்பண்புகளுடன் நெருங்கிப் பழகிச் செயற்படக் கூடியவராவார். அவர் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலைகள், பொதுவசதிகள் உட்பட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக பெரிதும் சேவையாற்றியுள்ளார். பள்ளிவாசல்களுக்கு மாத்திரமல்லாமல் பௌத்த விகாரைகள், இந்துக் கோவில்கள் மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் பல்வேறு சேவைகளை அவர் செய்துள்ளார். வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கக்கூடியவராக உள்ளார்.

அவர் இப்பல்கலைக்கழகத்துக்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்துள்ளார். இது பாரியதொரு தொகையாகும். நாட்டுக்கு சுமை ஏற்படாத வகையில் சவுதி அரேபியாவில் இருந்து இம்முதலீட்டுத் தொகையை அவர் பெற்றுக்கொண்டுள்ளார்.

பொதுவாக சிலர் முதலீடுகளை மேற்கொள்வதற்காக பணத்துடன் வருவர். அவர்களது நேர காலத்தை நாம் வீணடிக்கக் கூடாது. அந்த முதலீடுகள் ஊடாக நாட்டுக்கு நன்மைகளைப் பெற்றுக் கொள்ளவே முயற்சிக்க வேண்டும்.


இருந்த போதிலும் சிலர் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதையும் விமர்சனங்கள் மேற்கொள்வதையுமே வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர். நாடொன்றின் முன்னேற்றத்திற்கு இவை பங்களிக்கக் கூடியவை அல்ல. எமது நாடு தொடர்ந்தும் பின்னடைந்து காணப்படுவதற்கு பணிகள் ஒழுங்குமுறையாக மேற்கொள்ளப்படாமையே காரணமாகும். அதன் விளைவாக பல முதலீடுகளைப் பயன்படுத்த முடியாத நிலைக்குக்கூட கடந்த காலங்களில் நாடு உள்ளானது.

இப்பல்லைக்கழகம் குறித்தும் பலவித விமர்சனங்களும் குற்றச்சாட்டுக்களும் கடந்த காலங்களில் தெரிவிக்கப்பட்டன. பேராதனை, யாழ்ப்பாணம், தென்கிழக்கு உள்ளிட்ட பல்கலைக்கழகங்கள் அந்தந்த பிரதேச கலாசார அடையாளங்களுக்கு அமைய அமைக்கப்பட்டுள்ளமை போன்று இப்பல்கலைக்கழகமும் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவ்வளவு தான். ஆனால் இப்பல்கலைக்கழகத்தின் ஊடாக உச்ச பயனை நாட்டுக்கு பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி நாட்டைக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு வெளிப்படைத்தன்மையுடன் பணியாற்றி வருகின்றார். அதன் பயனாக எதிர்காலம் குறித்து நம்பிக்கையுடன் செயற்படக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. அது தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

நானறிந்த வகையில் மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகமானது ஒரு ஷரிஆ பல்கலைக்கழகம் அல்ல. இப்பல்கலைக்கழகத்தின் நிர்வாகமும் முகாமைத்துவமும் எஸ்.எல்.ரி.சி இனால் முன்னெடுக்கப்படுகிறது. இது நாட்டுக்கு சுமையான பல்கலைக்கழகமும் அல்ல. சவுதி அரேபியாவில் நிதியுதவி பெற்று அமைக்கப்பட்டுள்ள இப்பல்கலைக்கழகம், கிழக்கு மாகாணத்தை சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு உயர்கல்வி பெற்றுக்கொடுப்பதற்காக அமைக்கப்பட்ட போதிலும் முழு நாட்டு மாணவர்களும் இங்கு உயர்கல்வி பெற்றுக்கொள்ள முடியும் என உறுதியாக நம்புவதாகவும் தெரிவித்தார்.

சுமார் பத்தாயிரம் மாணவர்கள் தங்கி இருந்து உயர் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான வசதி வாய்ப்புக்களையும் வளங்களையும் கொண்டுள்ள இப்பல்கலைக்கழகத்தை இன, மத பேதங்களுக்கு அப்பால் எதிர்கால பரம்பரையினரின் சுபீட்சத்துக்காகப் பயன்படுத்திக் கொள்வது யுகத்தின் தேவை என்றால் அது மிகையாகாது.



மர்லின் மரிக்கார்...









# அண்ணலெம் நபிகள்

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

வர்ணிக்க முடியாத வார்த்தைகளாய்
அழகிய நற்பண்புகள்
வரமாகக் கொண்டனர்
அண்ணலெம் நபிகள்
சிறந்த குணங்களோடு
சீலமாய் ஒழுகினார்
செவ்வனே வாழ்விலே
செங்கோல் ஓச்சினார்
நிலவுலகிற்கு ஏகிய
நிலவொளி அவர்கள்
நித்திய ஜீவிதமே
நானிலத்தில் நபிகள்
மக்கள் நலனில்
அக்கறைமிகு ஆகாயம்
திக்கெலாம் புகழுது
திருத்தூதரின் சகாயம்
வாழ்க்கையில் எப்போதும்
பேணினார் தூய்மை
இளமை முதற்கொண்டு
இயம்பினார் வாய்மை
இதயங்களின் ஆழத்தில்,
நபிகளாரின் கண்ணியம்
வேரூன்றித் தளைத்தது
நிலையான புண்ணியம்
நெஞ்சிலே நிறைந்தது
நிகரிலா நேர்மை
கண்களில் விரிந்தது
கருணையின் கூர்மை
நீதி வழுவா
ஆட்சித் தலைமை
நிரந்தர வேதம்தந்த
ஆன்மீக ஜோதி
ஏழைகளுடன் ஏழையாய்
சேர்ந்து இருப்பார்
தோழருடன் தோழராய்ச்
சங்கமித்த திருமுகம்
இறையும் திருமறையும்
இருவிழிகளில் ஏந்தினர்
கறையிலாப் பேரொளியாய்
உலகிலே எழுந்தனர்
எதிரியும் துளிகூட
குறைகூற மாட்டான்
எந்தையின் நேர்மையில்
எந்தவோர் பழுதுமில்லை
அகந்தை அகற்றி
அன்பினை வளர்த்தார்
ஆதரவாய் யாவர்க்கும்
இன்சொல் உரைத்தார்
மகத்தான அதிகாரம்
மாண்புமிகு செல்வாக்கு
இறுதிக்காலம்வரை எம்பெருமான்
எளிமையைத்தான் கடைப்பிடித்தார்
வலிமைமிகு வல்லரசதிபர்
வாழ்ந்த வாழ்க்கையிலே
வானளவு பணிவு
வழியெல்லாம் வறுமை
உலகமே துச்சம்
மறுமையின் அச்சம்
மஹ்ஷரும் சொர்க்கமுமே
மாநபியின் நோக்கம்
சொல்லடிகளால் சோதனை
கல்லடிகளால் வேதனை
சொல்லொணாக் கொடுமைகள்
சதாகாலமும் பொறுமையாய்
சற்குணவேந்தர்
நற்குணங்களின் தாயகம்
நம் நபிகள் நாயகம்
சிந்தையில் மீட்டுவோம்
சீரியவாழ்க்கையைப் போற்றுவோம்



# பெறுமதியானவர்கள்

இணுவில் வாகீசன்

பெறுமதிகள் பண்டங்களல்ல
பெறுமதிகள் நம் பிள்ளைகள்
பெறுமதியானவர்கள் இவர்கள்
பெறுமதியென்ற நம் வீட்டின்
பெறுமதிகளை விட உயர்ந்தவர்கள்
பெறுமதியென பாதுகாப்போம்
பெறுமதிகளென சேமிப்போம்
பெற்ற பேறென வளர்ப்போம்
பெறுமதியான உலகில் நாளை
பெறுமதியான தலைவர்கள்
பெறுமதியானவர்கள் சிறுவர்கள்
பெருமதி படைத்தவர்கள் இவர்கள்
பெறுமதிகளில்லை ஒப்பிட
பெரு மதிகளில்லை இணையாக
பெற்ற பேறென காப்போம் வாரீர்

# என் உள்ளம்

அருட்கவி
அக்கரையூர் அப்துல் குத்தூஸ்

பெற்றோர்க்கு என் உள்ளம்
பெரும் சுவனம்
பிரியத்தோடு வசிக்கிறார்கள்
பிள்ளைகளுக்கு அது
தாய்வீடு
பிரியாமல் இருக்கிறார்கள்
அன்பானவர்களுக்கு
ஆயுள் சிறை
இறக்கும்வரை
எங்கேயும் போகார்கள்
ஆசான்களுக்கு
அரியாசனம்
ஆயுள் வரை
அமர்ந்திருக்கிறார்கள்
பாசமுள்ளோர்க்கு
படுக்கைஅறை
பகலிரவாய்
படுத்துறங்குகிறார்கள்
நண்பர்களுக்கு நந்தவனம்
நாளாந்தம்
நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்
வழிச் சிநேகர்களுக்கு
வரவேற்பறை
உரையாடி விட்டுப் போகிறார்கள்
சந்தர்ப்பவாதிகளுக்கு
சாப்பாட்டறை
உண்ணும் வரை
உட்கார்ந்திருக்கிறார்கள்
வில்லன்களுக்கு
விளையாட்டு மைதானம்
விளையாடிவிட்டு
வெளியேறிப் போகிறார்கள்
மனிதமற்றோர்க்கு
மட்பாண்டக் களஞ்சியம்
தூளாக்கிவிட்டு
தொலைந்து போகிறார்கள்
கயவர்களுக்கு
கண்ணாடி மாளிகை
கல்லெறிந்து விட்டு
காணாமல் போகிறார்கள்
கிறுக்கன்களுக்கு
கிரிக்கட் பந்து
ஓங்கி அடித்துவிட்டு
ஓடி மறைகிறார்கள்
உதவாக் கரைகளுக்கு
உதைப் பந்து
பாய்ந்து உதைத்து விட்டு
பறந்து விடுகிறார்கள்
விநயமானவர்களுக்கு
விழா மண்டபம்
வீற்றிருந்து விட்டு
விடை பெறுகிறார்கள்
போக்கிரிகளுக்கு புதைகுழி
முகம் காட்ட முடியாதவாறு
மூடப் படுகிறார்கள்
புரிதல் உள்ளோர்க்கு
பூங்காவனம்
பொழுதுகளை நன்றாகப்
போக்கிக் கொண்டிருக்கிறார்கள்
ஆம்
என் இதயத்தில் ,
சிலர் சதா
சிலர் அவ்வப்போது
சிலர் தற்காலிகமாக
சிலர் நிரந்தரமாக
சிலர் நிர்ப்பந்தமாக
சிலர் விருப்போடு
சிலர் விருப்பின்றி
சிலர் கடமைக்காக
சிலர் காதலுக்காக
சிலர் உரிமைக்காக
சிலர் உறவுக்காக
சிலர் உடைமைக்காக
உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்
சிலருக்கு
சொக்கும் சொர்க்கம்
சிரஞ்சீவியாய் வாழ்கிறார்கள்
பலருக்கு பாழான நரகம்
பதறியடித்து வெளியேறுகிறார்கள்
சிலர்
ஆயுட்கால அனுமதியோடு
ஆட்சி நடாத்துகிறார்கள்
அநேகர்
அனுமதி இல்லாமல்
ஆட்டிப் படைக்கிறார்கள்

# வரம்

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

நம்மால் ஒரு சோகம்
யாரையும் தாக்கிட
அனுமதித்திடா வாழ்வு
எத்தனை நலமானது
நம்மால் யாரும்
உடைந்தழவில்லையெனும்
உத்தரவாதம்
எத்தனை உயர்வானது
நம்மால் யாரேனும்
மகிழ்ச்சியை உணர்கிறார்களெனும் திருப்தி
எத்தனை ஆத்மார்த்தமானது
நம்மால் யாரும்
வெறுத்து ஒதுக்கப்படவில்லையெனும் உணர்வு
மனதுக்கு எத்தனை ஒத்தடமானது
ஏதேனும்
ஆறுதல் தேவைப்படுகையில்
நாம் தான் முதன் முதலில்
நினைவுக்கு வருகிறோமெனும் பூரிப்பு
எத்தனை பெறுமதி மிக்கது
மொத்தத்தில்
நம்மால் ஒரு சந்தோஷம்
திருப்தி
ஆறுதல்
அரவணைப்பு
அக்கறை
அங்கீகாரம்
கண்ணியம்
நேசத்தை
அடுத்தோருக்கு
கொடுக்க முடிவதெல்லாம்
பெரும் வரம்
அதனால் தான்
எல்லோராலுமது
முடிவதில்லை!



# உன்னைத் தேடி..

டி. எல். நஸீம்
கிண்ணியா 01

காதல் கடிதம் தீட்டி..
கையில் தர நினைத்து..
வந்திருந்தேன் நானும் ..
உன் வீட்டுப் பக்கம் ..
வேப்பங் குச்சு..
கரும்பாய் இனிக்குதே..
உன் வீட்டு நாயை...
கட்டிப்போட மறந்துட்டியே..
சாரைப்பாம்பு தீண்டியது போல..
கை கால்கள் நடுங்குதடி..
மர உச்சியில்..
நான் நிற்கையில..
பேனா முதுகிலே..
என் பேரில்லை...
முனைத் தெருவிலே..
துணைப் பேர் உண்டு...
தேகமின்றி ஆனபோது..
தென்றலாய் தேடி வந்து..
கட்டியணைப்பேனே..
காக்கா முனை வந்து..
உன் கண்கள் ..
காட்டித் தந்தது..
நீ அழகான..
கவிதை என்று..
தெருவெல்லாம்..
உன்னைத் தேடினேன்..
உன் இருப்பிடம்..
என் இதயமென்று தெரியாமல்...

# நேர்மையின் நிழல்!

இலக்கியச் செம்மல்
இல்மி அஹமட் லெப்பை
பிலேன்டீ விற்று நாளும்
பேராசிரியராக்கினான் பிள்ளையை
எல்லையற்ற துயருக்குள்ளும்
எல்லோருமே கற்றார்தான் !
மலர்களோ அறிந்திடா
மர வேருற்ற சலனங்கள்
மெழுகுருகும் வெளிச்சமே
மேலோங்கும் இந்நிலத்தில் !
கடுகெதியாய் மாநகர் சென்றுவர
கையினிலே காசிரா தவரிடம்
தள்ளாடும் வயதுவரை
தயவு மிதிவண்டிச் சவாரியே!
ஓடியுமில்லை லோனுமில்லை
ஒருசதமும் கலப்படமுமில்லை
ஓடிஓடி உழைப்பின் மிச்சம்
ஒவ்வொரு பிள்ளையும் உச்சம் !
கட்லட்டு பெட்டீசு வடையும்
கூடவே பருப்புக்கறி பாணும்
பிட்டும் சொதியும் என்னாளும்
பிசகாமல் கிட்டும் இவர்கடையில் !
கூட்டிக் கணக் கெடுக்கமாட்டாரு
குறைபாடாய்க் கொடுத்தாலும்,
பட்டாசுபோல வெடிக்கவுமாட்டாரு
புன்முறுவலே பூக்கும் முகத்தில்!
கடன் கொடுப்பாரு பாராது
கல்லாப்பெட்டிக்கோ வந்துசேராது!
கடலில் கரைத்த உப்பாகும்
கலங்காத மனது இவர் சிறப்பாகும் !
படித்தவன் வரமாட்டான்
பணக்காரன் சேரவுமாட்டான்
படித்தானாய் வந்தான் பிள்ளை
படையெடுக்கார் மாப்பிள்ளைக்காய்!
வடைத்தட்டில் கைபோட்டு
வாய்ருசிக்கத் திண்டார்
கடைசிக் கட்லட்டும் சுவையில்
குறைவே யில்லை என்றார்!
காருதருவோம் கடைக்
குட்டிக்கு வீடும் கட்டுவோம்
மாறுதலில்லாமல் மகனை
மருமகனாய் தாருங்களென்றார்!
தின்னச் சோறின்றி பல
தினங்கள் கடந்தபோதும்
அன்னாந்து பார்க்காத
அசனாரு ஹாஜியாரு
அட்டைகவ்வியது போல்
அடுப்படிவரை நடக்காரு
குட்டை வற்றியதும் விராலை
கொண்டோட நிற்காரு !



# தீயோரை தீய்த்துவிடு!

பூவை சரவணன்

பிரபஞ்சம் முழுக்க
பழிமிஞ்சி ஏங்குதம்மா
பாஞ்சாலி நின்வரவால்
தீய்ந்தொழிந்தார் தீயோரே
குறைகளைய என்தாயே
குவலயத்தில் வாருமம்மா
குலமாதர் குலம்காக்க
கொம்பனையே வாருமம்மா
ஐவருக்கும் தேவிநீ
ஆக்ரோஷ நாயகியே
கரம்கூப்பி தொழுகின்றோம்
கனவில் உதித்தவுனை
மெய்யை மினுக்கி
மேதினியில் வாழ்வோரை
நெய்யப் புடைத்து
நீள்நெருப்பில் எறிந்துவிடு
தீயில் உதித்தநீயே
தீயோரை தீய்த்துவிடு
வாய்மை தவறியோரை
வதைத்து அழித்துவிடு
அரசியலில் பிழைத்தோர்கள்
அரங்கேற்றம் காணுகின்றார்
காலங்காலமாய் இவர்கள்
கதைபல பேசுகின்றார்
பாண்டிதர் பதியமர்ந்த
பத்தினியே திரௌபதையே
வேண்டுதலை தீர்த்துவிடு
வேதவல்லி நாயகியே!



# இதயக் குழிகள்

அஸாத் எம் ஹனிபா



கன்னக் குழிகள்
முகப்பருக்கள்
வெளியில் தெரிவது போல்
உள்ளத்து வழுக்கள்
எண்ணக் கருக்கள்
யாருக்கும் புரிவதில்லை
ஊனமான உள்ளத்தின்
ஈனச் செயல்கள்
ஏமாற்றிய வசைகள்
வாழ்வின் வடுக்கள்
அரசியல் அசிங்கங்கள்
கழிவறைக் குழிகள்
மாணிக்க கல் தங்கக் கடல்
செழிப்பான உழைப்பு
சோரம் போன பிழைப்பு
பதுக்கிய வரிகள்
பரிதாப அழிவுகள்
சங்கமமான சவக்குழிகள்
உக்கிர வன்மம்
வக்கிர வன்புணர்வு
சிதையும் கருக்கள்
புதையும் பெண்மை
தடயங்கள் சிவந்த மண்ணில்
மனிதப் புதை குழிகள்
பேசாத உண்மைகள்
ஒழிந்து போகட்டுமென
பழி போட்டு வழி காட்டும்
கிழிந்த முகவரிகள்
அழிந்து அனைவரும்
அடைக்கலமாகும்
நிரந்தர நரகக் குழிகள்
அபலையின் விழிகளில்
சாபமிடும் மௌன வேதனைகள்
காளையரின் ஆண்மையில்
ஆழமான குழிகள்
சீழ் வடியும் குருதி நிரம்பி
வழிந்தோடும் இதயக் குழிகள் !

# விதவைத் திருமணம்

கலாபூசணம்
டிவங்சோ மலாய் கவி

வியர்வை
காய முன்பே
வேதனம்
ஆண்டான்
அடிமை பேதமை
ஒழித்தே
உழைத்திடும்
வருமானம்
ஓரிடத்தில்
குவியாமல்
பொருளீட்டும்
முறைபற்றி
போதனைகள்
செய்திட்டார் பூமான்
நபியவர்கள்
கம்யூனிஸ
சோஷலிசக்
கொள்கைகளுக்கு
முன்மாதிரியாய்
கோமான் நபியவர்களின்
கொள்கைகளும்
கோட்பாடுகளும்
அமைதியிழந்து
தவிக்கும்
ஆன்மாக்களுக்கு
அண்ணல் எம்
பெருமானாரின்
சொல்லோடு
செயலும்
வாழ்வியலாகிட
சாந்தியோடு
சமாதானம்
தழைத்தோங்கிடும்

# வாழ்வோமே மனிதராய்...

எமா

சொர்க்கம் என்றால் என்னடா மனிதா?
மரணமில்லா மனிதன் மண்ணில் யாரடா?
நாமெல்லாம் வாழப்போவது எவ்வளவு காலதிற்கடா?
அதற்கிடையில் ஏனிந்த கோரத்தாண்டவம்?
எதற்கிந்தப் பலப்போராட்டம்?
வாழும் காலமட்டும் வாழ்வோமே
எம் சொர்க்கத்தில் மனிதராய்...

# உயிரில் கலந்தவளே

கிண்ணியா
ஜெனீரா தௌபீக்
ஹைருல் அமான்

உண்மை உரைப்பவளே
உல்லாசம் புரிபவளே //
உயிரில் கலந்தவளே
உயர்வாய் மதிப்பவளே //
உறவாய் வந்தவளே
உற்சாகம் தந்தவளே //
உறக்கம் கலைந்தவளே
உவகை கொண்டவளே //
உணவை ருசிப்பவளே
உணர்வால் உயர்ந்தவளே //
உள்ளத்தில் வாழ்பவளே
உலகத்தை ஈர்த்தவளே //
உடையை ரசித்தவளே
உடலை மறைத்தவளே //
உதட்டால் புன்னகிப்பவளே
உபத்திரவம் செய்யாதவளே //
உழைப்பில் சிறந்தவளே
உதவி செய்பவளே //
உறுதியாய் நிற்பவளே
உரிமையை வென்றவளே //
ஊழலை வெறுப்பவளே
ஊதியம் பெறுபவளே //
ஊருக்கு உபதேசிப்பவளே
ஊக்கத்திற்கு உதாரணமானவளே



# இலங்கையின் எதிர்கால செழுமைக்கு எரிபொருள் வழங்க உறுதியளித்த சினோபெக்

இலங்கையின் ஆற்றல்மிக்க எரிபொருள் சில்லறை விற்பனை சந்தையில் தனது அதிகாரபூர்வ நுழைவை அறிவித்தது சினோபெக்.

இந்த முக்கியமான சந்தர்ப்பம் இலங்கையின் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகத்தின் ஆரம்பத்தையும் குறித்தது.

இந்த நுழைவுடன், சினோபெக் அதன் நன்மைகளை முழுமையாக வழங்குவதற்கும், நாட்டிற்கு நிலையான, நீடித்த மற்றும் உயர்தர எண்ணெய் தயாரிப்புகளை வழங்குவதற்கும், விநியோகஸ்தர்களுடன் இணைந்து நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஆற்றல் ஸ்திரத்தன்மைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவதற்கும் உறுதி பூண்டுள்ளது.

சினோபெக் மற்றும் இலங்கையின் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சுக்கு இடையில் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ், சினோபெக் இலங்கை முழுவதும் தற்போதுள்ள 150 நிரப்பு நிலையங்களை உரிமையாக்குவதற்கும் மேலும் 50 நிரப்பு நிலையங்களில் முதலீடு செய்வதற்கும் 20 வருட உரிமத்தைப் பெற்றுள்ளது.

சினோபெக், இலங்கை மக்களின்



சிறந்த வாழ்க்கைக்கு வலுவூட்டுவதற்காக, எண்ணெய் வகைகள் கொள்வனவு, சேமிப்பு, விநியோகம் மற்றும் விற்பனை ஆகியவற்றின் முழு செயல்முறைக்கும் சேவை செய்யும் திறனை தொடர்ந்தும் மேம்படுத்தும்.

உலகின் மிகப்பெரிய எரிபொருள் சுத்திகரிப்பு நிறுவனமாகப் புகழ்பெற்று, வருடாந்த உற்பத்தித் திறனை 250 மில்லியன் தொன்கள் தாண்டிய பெருமையுடன், சினோபெக், அதன் நுகர்வோரின் தேவைக்கேற்ப உயர்மட்ட எரிபொருள் தயாரிப்புகளின் நிலையான விநியோகத்துக்கு உத்தரவாதம் அளிப்பதற்காக, அதன் பரந்த வளங்கள் மற்றும் உலகளாவிய வர்த்தக வலிமையைப் பயன்படுத்த தயாராக உள்ளது. நிலையான மற்றும் உயர்தர எரிபொருள் விநியோகத்தை வழங்குவதற்கான இந்த அர்ப்பணிப்பு இலங்கையின் சுற்றுலாத் துறைக்கு ஊக்கமளிப்பதுடன் மட்டுமல்லாமல் மற்றைய தொழில்துறைகளின் வளர்ச்சியையும் மேம்படுத்துகிறது.

சினோபெக் புதுப்பிக்கப்பட்ட மற்றும் நவீனமயமாக்கப்பட்ட சேவைகளுடன் உரிமம் பெற்ற பெற்றோல் நிலையங்களின் முறையான மாற்றத்தைத் தொடங்கியுள்ளது.

இலங்கை எரிபொருள் நிரப்பு நிலையங்களின் சூழலை படிப்படியாக மேம்படுத்துவதற்கு வசதிகள் மற்றும் உபகரணங்களை மேம்படுத்தி, அவற்றின் பாதுகாப்பான மற்றும் தடையற்ற செயல்பாட்டை உறுதிசெய்து, விநியோகத்தர்களுடன் ஒப்புக்கொண்டபடி, தளம் மாற்றும் திட்டத்தை நிறுவனம் ஆரம்பிக்கவுள்ள அதேவேளை, சினோபெக் மும்மொழி வாடிக்கையாளர் சேவையை அறிமுகப்படுத்துவதுடன், நிரப்பு நிலையங்களின் சேவைத் தரம் மற்றும் நுகர்வோரின் சேவை அனுபவத்தை மேம்படுத்தவுள்ளது.

# பணியாற்றுவதற்கு சிறந்த பணியிடங்களில் ஒன்றாக Ex–Pack தொடர்ந்தும் தெரிவு

நிலைபேறான ஊழியர் அனுபவங்களில் சர்வதேச தரங்களை பேணுகின்றமைக்காக, காபன் நடுநிலை சான்றிதழ் பெற்றதும், நாட்டின் முன்னணி அலைவு நெளிவான பொதித் தீர்வுகள் உற்பத்தியாளருமான ExPack Corrugated Cartons PLC, இலங்கையில் பணியாற்றுவதற்கு சிறந்த நிறுவனங்கள் வரிசையில், சிறியளவிலான பணியிடங்கள் பிரிவில் ஐந்தாமிடத்தில் தரப்படுத்தப்பட்டிருந்தது.




ஐந்தாவது தடவையாக இந்த கௌரவிப்பு ExPack நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், ஊழியர் நலன் மற்றும் ஆரோக்கியமான பணியிட கலாசாரத்தை பேணுதல் போன்றவற்றில் நிறுவனம் காண்பிக்கும் முன்னுரிமையான செயற்பாடுகளை கௌரவிக்கும் வகையில் இந்த கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆசியாவில் சிறிய மற்றும் நடுத்தரளவு பிரிவில் பணியாற்றுவதற்கு சிறந்த இடங்களில் ஒன்றாகவும் ExPack கௌரவிக்கப்பட்டிருந்தது.

களனியில் அமைந்துள்ள நவீன வசதிகள் படைத்த தொழிற்சாலையில் 300 உறுதியான பணியாளர்கள் காணப்படுவதுடன், நாட்டில் தொடர்ச்சியாக நிலவிய சிவில் யுத்தம் முதல் கொவிட் தொற்றுப் பரவல் மற்றும் பொருளாதார தளம்பல்கள் நிறைந்த நெருக்கடியான சூழல்களிலும், இவர்கள் நிறுவனத்தின் மீதான தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி பணியாற்றி வருகின்றனர். அணியினர் படிப்படியாக உறுதித் தன்மையை வெளிப்படுத்தி செயலாற்றி வருகின்றனர். நிறுவனம் அனைவரினதும் கருத்துக்களுக்கும் செவிமடுக்கும் கொள்கையை பின்பற்றுவதுடன், தற்போது கொண்டுள்ள நிறுவன கலாசாரத்தில் இது மிகவும் முக்கிய பங்கை வகிக்கின்றது.

# நாற்பது வருட கால சிறப்பை கொண்டாடும் Flora Tissues



மென்மையான, பயன்படுத்திவிட்டு அழித்துவிடக்கூடிய டிஷு கடதாசி தயாரிப்புகள் உற்பத்தியில் ஈடுபடும் இலங்கையில் பெருமைக்குரிய நாமமும், சந்தை முன்னோடியான புகழ்பெற்ற Flora டிஷு தயாரிப்புகளின் உற்பத்தியாளராகவும் திகழும் Pee Bee மனேஜ்மன்ட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடெட், தனது 40 வருட பூர்த்தியைக் குறிக்கும் வகையில் விசேட நிகழ்வை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. இதன் போது, புதிய தயாரிப்புகள் அறிமுகம் செய்வது தொடர்பான தனது தூரநோக்குடைய திட்டங்களை அறிமுகம் செய்திருந்ததுடன், துரிதமாக அதிகரித்து செல்லும் சவால்கள் நிறைந்த சந்தை சூழ்நிலையிலும் ஊழியர்களையும், விநியோகத்தர்களையும் அழைத்து இந்த நிகழ்வை முன்னெடுத்திருந்தது.

2023 செப்டெம்பர் 9 ஆம் திகதி தனது 40 வருட பூர்த்தியைக் குறிக்கும் நிகழ்வை, கோல்டன் ரோஸ் பகுதியில் முன்னெடுத்திருந்தது. இதன் போது, நிறுவனத்தில் பணியாற்றும் விநியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை கௌரவித்திருந்தது.

1983 ஆம் ஆண்டு முதல் பலர் Flora டிஷுக்களுடன் இணைந்து தமது தொழில் வாழ்க்கைப் பயணத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

ஒன்று முதல் மூன்று தசாப்த கால அனுபவத்தைக் கொண்டிருந்த இவர்களுக்கு நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரிடமிருந்து கௌரவிப்பு சின்னம் வழங்கப்பட்டிருந்தது.

8K தரத்திலான திரைப்படTrailer களை கொண்டு வர ஒன்றிணையும்

# Samsung மற்றும் Warner Bros. Pictures

இத்தொழில் சார் கூட்டானது அனைத்து ஆயிரக்கணக்கான சர்வதேச ரீதியிலான சில்லறை விற்பனையாளர்களுக்கு பிரபலமான திரைப்பட Trailer களை வழங்குவதன் மூலம், முன்னெப்போதையும் விடவும், நுகர்வோரை மகிழ்விக்கும் முகமாக அதிநவீன 8K தரத்திலான திரைப்படங்களினை அவர்கள் கையருக்கே கொண்டுவருகின்றது.

தொடர்ச்சியாகப் 17 ஆண்டுகளாக உலகிலேயே முன்னணித் தொலைக்காட்சி தயாரிப்பாளரான Samsung Electronics, ஆனது Warner Bros. Pictures உடன் ஒரு அர்த்தபூர்வமான கூட்டுவணிகச் செயற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றது.



இக்கூட்டுவணிகச் செயற்பாட்டினைத் தனது நியோ QLED 8K திரைகளில் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்ற திரைப்பட Trailer களைக் காண்பிக்கின்றது. இதன் மூலம் சர்வதேச ரீதியில் 65,000 க்கும் மேற்பட்ட Retail Store களில் பார்வையாளர்களைக் கவர்ந்து வருகின்றது.

"இத்தொழில் சார் கூட்டானது 8K யினை உள்ளீர்க்கும் ஒரு அற்புதமான முயற்சியாகும். இது NEO QLED 8K இன் சிறப்பியல்புகளினை வெளிக்கொணருகின்றது. அது மட்டும் அல்லாது சினிமா தரத்தினில் திரைப்படங்களைப் பார்த்து ரசிப்பதற்கு அதன் பாவனையாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கின்றது" என்று Samsung Electronics Visual Display Business இன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட உப தலைவர் Cheolgi Kim அவர்கள் கூறினார்.

Samsun ஆனது Warner Bros. உடன் தனது கரங்களினை கோர்த்துக் கொண்ட நிகழ்வானது Ultra – Premium TV தொழில்நுட்பம் ஊடாக அதன் பாவனையாளர்கள் தமக்குப் பிடித்த திரைப்படங்களை முழு மனநிறைவுடன் கண்டு அனுபவிக்கும் வாய்ப்பினையும் Samsung ஆனது பெற்றுத் தந்திருக்கின்றது. 8K Content இற்கான கேள்வியினைப் பரீட்சித்துப் பார்த்து அதன் தேவைதனை நன்கு புரிந்து கொள்ளும் முகமாக, Samsung மற்றும் Warner Bros. என்பன இந்த ஆண்டின் தொடக்கக் காலப் பகுதியிலேயே அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உள்ள 450க்கும் மேற்பட்ட சில்லறை விற்பனை ஸ்தாபனங்களில் 'Creed III' Trailer ரைக் காட்சிப் படுத்துவதன் மூலமாக தமது கூட்டுவணிகச் செயற்பாட்டினைப்பரீட்சித்துப் பார்த்தனர்.

# இலகுக் கொடுப்பனவுத் திட்டங்களை அறிமுகம் செய்யும் செலான்



மனம் விரும்பும் தேவைகளுக்கு அத்தியாவசியமான செலான் கார்ட்ஸ், அனைத்து பாடசாலைக் கட்டணக் கொடுப்பனவுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட புத்தகசாலைக் கொள்வனவுகளுக்கு 3 மாத 0% வட்டிவீதத்தில் இலகுக் கொடுப்பனவுத் திட்டங்களை அறிமுகம் செய்ததன் ஊடாக குடும்பங்கள் மற்றும் மாணவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட புதுமையான முன்னெடுப்பொன்றை ஆரம்பித்து வைத்தது.

இந்த புதிய சலுகையுடன், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களின் பொருளாதாரச் சுமையை தளர்த்துவதற்கு செலான் கார்ட்ஸ் முயற்சிப்பதோடு, ஒவ்வொரு பிள்ளையும் தரமான கல்வியைப் பெற்றுக்கொள்வதை உறுதி செய்கிறது. இந்த 0% வட்டிவீத இலகுக் கொடுப்பனவுத் திட்டங்கள், தமது செலவுகளை குடும்பங்கள் சிறப்பாகக் கையாளுவதற்கு ஊக்குவிக்கும் அதேவேளை மாணவர்களின் கல்விசார் வெற்றிகளுக்கு அவசியமான கருவிகளைப் பெற்றுத்தரும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

செலான் வங்கியின் வாடிக்கையாளர் வங்கிச்சேவை பிரதி பொது முகாமையாளர் யூஜின் செனவிரத்ன குறிப்பிடும்போது, "எதனையும் முற்றிலும் மாற்றியமைக்கும் கல்வியின் ஆற்றல் மற்றும் பிள்ளையொன்றின் எதிர்காலத்தை உருவாக்குவதில் அதன் இன்றியமையாத தாக்கத்தின் மீது செலான் கார்ட்ஸ் மனப்பூர்வமான நம்பிக்கை கொண்டுள்ளது. வெறுமனே ஒரு நிதித்தீர்வாக மட்டுமன்றி, ஒவ்வொரு பிள்ளையின்; கனவுகளுக்குமான எமது மெய்யான அர்ப்பணிப்பின் ஓர் உருவகமாக இந்த 0% வட்டி இலகுக் கொடுப்பனவுத் திட்டங்களை அறிமுகம் செய்வதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்" என்று தெரிவித்தார்.

# தொழில் முனைப்புடன் பணிபுரிவோருக்கென விசேட உள்வாரி MBA கற்கை நெறிகள்

பல்கலைக்கழகமானது தொழில் முன்னேற்றத்திற்காக தங்களது அறிவையும் திறனையும் உயர்த்திக்கொள்ள எதிர்பார்க்கும் இலங்கையர்களை வலுவூட்டுவதற்காக வடிவமைக்கப்பட்ட, பரவலாக பேசப்படும் அதன் MBA நிகழ்ச்சித்திட்டத்தின் அறிமுகத்துடன் பட்டப்பின் கற்கைகளை வழங்குவதில் பாரியதொரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட, SLTC MBA நிகழ்ச்சித்திட்டமானது கற்கைநெறி, செயற்றிட்ட அடிப்படையிலான கற்றல் அல்லது ஆய்வு மைய கற்கை என்பவற்றை உள்ளடக்கி, தங்களது கற்கைகளை பூர்த்திசெய்வதற்காக மாணவர்களிற்கு மூன்று தனிச்சிறப்பான வழிகளை வழங்கும், இலங்கையின் மிகவும் நெகிழ்வுத்தன்மைமிக்க நிகழ்ச்சித் திட்டமாகும்.

இம்முதன்மையான நிகழ்ச்சித் திட்டத்தின் துவக்கவிழாவானது கொழும்பு 01 இன் டிரேஸ் எக்ஸ்பேர்ட் சிட்டியில் அமைந்துள்ள SLTC பல்கலைக்கழகத்தின்




கொழும்பு வளாகத்தில் இடம்பெற்ற உத்தியோகபூர்வ வைபவத்தில் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வானது பிரதம விருந்தினராக கலாநிதி. ரணில் சுகததாசவினால் மேன்மைப்படுத்தப்பட்டதுடன் SLTC இன் துணைவேந்தர்/ பிரதம நிறைவேற்றதிகாரியுமான சிரேஷ்ட பேராசிரியர், விரேஞ்ச கருணாரத்ன, மேலதிக செயலாளர்

கல்வி அமைச்சு (அரசசார்பற்ற உயர் கல்வி நிறுவனம்), திருமதி சந்திமா ஜானகி, SLTC பேரவை ஆளுகை குழு உறுப்பினர்கள், சிரேஷ்ட பேராசிரியர் டென்சில் ரோசா மற்றும் திரு. மங்கள யாப்பா மற்றும் SLTC பதிவாளர் கோசாம்பிகா தேவேந்திர ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

# SLT–MOBITEL'இன் நம்பமுடியாத '7xFun' Add–on வசதி

களிப்பூட்டும் மற்றும் புத்தாக்கமான புதிய சேவை வழங்கல்களை எதிர்பார்க்கும் இளம் பாவனையாளர்கள் மற்றும் சகல குடும்ப அங்கத்தவர்களின் அர்ப்பணிப்பை கௌரவித்து, தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLTMOBITEL, தனது ஹோம் புரோட்பான்ட் பாவனையாளர்களுக்கு நம்பமுடியாத களிப்பூட்டும் அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதற்காக புதிய '7xFun' Addon data bundle ஐ அறிமுகம் செய்துள்ளது.




YouTube, Viber, WhatsApp, Facebook, IMO, Instagram மற்றும் TikTok போன்ற சமூக ஊடக கட்டமைப்புகளுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட addon data bundle ஆக அமைந்திருப்பதுடன், இளம் வயதினர் மற்றும் குடும்பத்தாருக்கு வலுச்சேர்க்கப்படுகின்றது. SLTMOBITEL'இன் 7xFun addon என்பது 20GB மீளத் தொடரும் டேட்டா பண்டலாக அமைந்திருப்பதுடன், ஏழு நாட்களுக்கு செல்லுபடியாகும். ரூ. 195 எனும் சகாய விலையில் ஏழு அப்ளிகேஷன்களை பயன்படுத்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது. மேலும், SLTMOBITEL ஹோம் புரோட்பான்ட் பாவனையாளர்கள், அடிப்படை புரோட்பான்ட் பக்கேஜ்களுக்கு பதிவு செய்து கொண்டு, data addons ஐ கொள்வனவு செய்யலாம். Data addons மீள தொடர்வதாக அமைந்திருப்பதுடன், எந்நேரத்திலும் பதிவு நீக்கம் செய்து கொள்ளலாம். இளம் வாடிக்கையாளர்களுக்கும் அவர்களின் குடும்பத்தாருக்கும் தற்போது தமக்கு பிடித்த சமூக ஊடக அப்ளிகேஷன்களை SLTMOBITEL 7xFun Addon data bundle க்கு பதிவு செய்து கொண்டு அனுபவித்து மகிழலாம். இலகுவாக செயற்படுத்திக் கொள்ள முடியும் என்பதால் சிக்கல்களற்ற SLTMOBITEL 7xFun addon data bundle ஊடாக, தினசரி வாழ்க்கைக்கு அவசியமான இணைய வசதி வழங்கப்படுகின்றது.

# 2023 உலக ஓசோன் தினத்தை கொண்டாடும் NDB



2023 ஆம் ஆண்டு உலக ஓசோன் தினத்தை நினைவுகூரும் வகையில், ஆனவிலுந்தவ சதுப்புநிலத்தின் இயற்கை மீளுருவாக்கத்தை துரிதப்படுத்தும் செயல்பாட்டுடன் தொடர்புடைய அறிவியல் தரவு சேகரிப்பு நடவடிக்கைகளுக்கு, NDB வங்கியின் ஊழியர்கள் தங்கள் நேரத்தையும் முயற்சியையும் முன்வந்து வழங்கினர்.

இந்த நிகழ்வானது வங்கியின் 'பணியாளர் தன்னார்வத் தொண்டு' திட்டத்தின் ஒரு பகுதி ஆகிய அதே வேளை இந்தத் திட்டம், வங்கியின் பெருநிறுவன நிலைத்தன்மை மற்றும் மனித வளத்துறைகளால் ஒன்றிணைந்து செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தின் தன்னார்வலர்கள் வயம்ப (Wayamba) பல்கலைக்கழகத்தில் வங்கி மற்றும் நிதிப் பிரிவில் தேர்ச்சி பெற்று NDB வங்கியின் பட்டதாரி பயிற்சி திட்டத்தில் சேர்ந்தவர்கள் ஆவர்.

ஊழியர்களின் பங்கேற்பை அதிகரிப்பது, ஒருங்கிணைந்த குழுவை உருவாக்குவது, பரந்த பார்வைக்கான புதுமையான அனுபவங்களை வழங்குவது, இன்றைய உலகின் சவால்களை எதிர்கொள்ள தேவையான பரஸ்பர ஒத்துழைப்பை அதிகரிப்பது மற்றும் சமூக மற்றும் சுற்றுச்சூழல் நல்வாழ்வுக்கு பங்களிப்பதற்கான வாய்ப்புகளை வழங்குவது ஆகியவை திட்டத்தின் முதன்மை நோக்கங்களாகும்.

# எதிரொலி



“நான் போகமாட்டன்". நான் போகமாட்டன்" அக்காவோட அவவோட வீட்டுக்கு நான் போகமாட்டன்.”

ஜெனீபருடைய சத்தத்தில் அந்த வார்டே அதிர்ந்து போகிறது. சற்று முன்புவரை அங்கிருந்த எல்லோருடனும் சகஜமாகப் பேசிச் சிரித்துக் கொணடிருந்தவள் இப்போது அந்த வார்டிலுள்ள அனைவரும் அதிர்ச்சியோடு பார்க்கும்படியாக கத்திக்கதறி அரற்றிக் கொண்டிருக்கிறாள்.

அந்த வார்டின் முன்புறமாகக் கம்பிகளாலான ஓர் அறை. அதில் ஜெனீபர், அக்கா மரியா, டாக்டர் சுஜாதா, நர்ஸ்மார் சிலர் எனக் குழுமியிருக்கிறார்கள். வார்டிலே இருபது நோயாளிகள். அவர்களில் பலருக்கு உடனிருந்து உதவி செய்ய வந்திருக்கும் உறவினர்கள், பராமரிப்புச்சேவை செய்யும் சிலர் ஆகியோரோடு அந்த மனநல சிகிச்சை வார்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. கூச்சல், கூப்பாடு என்று அங்கே பெரிதாய் ஒன்றுமில்லை. மின்சார வலிப்புச் சிகிச்சை முடித்த சிலர் உணர்வற்ற நிலையில் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். ஒருசிலர் கூடிக்கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் தங்கள் துன்ப துயரங்களை மெல்லிய அழுகையோடு பகிர்ந்து கொள்கிறார்கள். ஓரிருவர் தத்தம் கட்டில்களிலேயே மௌனத்தில் உறைந்து போயிருக்கிறார்கள். மூலைப்புறமாக அமைத்திருந்த இருகம்பிக்கூடு அறைகளில் ஒன்றில் மட்டும் ஒருபெண் ஏதேதோ சொல்லி அரற்றிக் கொண்டிருக்கிறாள்.

பார்வையாளர் நேரம் முடிந்து வந்தவர்களும் சுகமான நோயாளர்களும் வெளியேறிவிட்டார்கள். அந்த வார்டிலே ஜெனீபருடைய சத்தம்தான் இப்போது பெரும் ஓலமாய் கேட்டுக் கொண்டிருக்கிறது.

“உனக்கு இப்போ நல்ல சுகம் ஜெனீபர். உன்னை டிஸ்சார்ஜ் பண்ணியிருக்கிறம். இனி அடுத்த மாசம்தான் உனக்கு திருப்பியும் மருந்து தரவேணும். உன்ன கூட்டிப்போக அக்கா வந்திருக்கிறா. இந்த வார்டில யாரும் தொடர்ந்திருக்க முடியாது. இருக்கவும் கூடாது. நீ சந்தோசமா அக்காவோடு போ. சொல்வதைக் கேள் ஜெனீபர்....”

தலைமை நர்ஸ் ரேணுகா அவளிடம் கனிவாகப் பேசி; நிலைமையை எடுத்துச் சொல்கிறாள்.

“எனக்கு அக்காவோடு போகேலாது... அப்பாவ வரச்சொல்லுங்கோ. நான் அவரோட போறன்...”

ஜெனீபர் விடாப்பிடியாய் நிற்கிறாள்.

“மிஸ், அப்பா இத்தாலியில இருக்கிறார். நினச்ச மாதிரி அவரால இஞ்ச வரேலாது..”

மரியா பட்டென்று பதில் சொல்லுகிறாள்.

ஒரு வருஷத்துக்கு முன்பு அப்பா, அம்மா, ஜெனீபர் என மூன்று பேரும் இத்தாலியிலிருந்து இலங்கைக்கு விடுமுறையில் வந்திருந்தபோதுதான் அந்த இழப்பு ஏற்பட்டது. அம்மாவுக்கு திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டு அது மரணத்தில் முடிய, அப்பா சில நாட்களில் தனியாகவே இத்தாலி நோக்கிப் புறப்பட்டுப் போனார்; அம்மா இல்லாமல் ஜெனீபர் கஷ்டப்படக் கூடாதென்றும், அவளைக் கட்டிக் காப்பது தனக்குக் கஷ்டமென்றும் உணர்ந்து ஜெனீபரை மூத்த மகள் மரியாவிடம் விட்டுப் போனார் அவர்.

அப்பா போய் இரண்டு மாதங்களின் பின் அங்கே இத்தாலியப் பெண்ணொருத்தியைத் திருமணம் செய்த செய்தியை அறிவித்தபோது கலங்கித்தான் போனாள் ஜெனீபர். ஒருசில மாதங்களிலேயே அப்பா_மகள் உறவின் இடைவெளி யாரோ, யாரோ என்ற நிலையிலே நீண்டு போகிறது. மாதா மாதம் ஜெனீபரின் செலவுக்கென ஒருதொகைப் பணம் வரும். அன்றைக்கு மட்டும் பிள்ளைகளோடு அவளையும் வெளியே அழைத்துச் செல்வாள் மரியா. விதவிதமான உணவுகளோடு வினோதமாய் அன்றைய நாள் கழியும் அவளுக்கு. மற்றைய நாட்களில் ‘தண்டச்சோறு’ என்ற பட்டமும் கடுகடு வென்ற பேச்சும் அவளைச் சுட்டுப் பொசுக்கிப் போடும்.

“அக்கா எனக்கொரு வேல பார்த்துக்கொடேன்...”

அக்காவைக் கேட்கிறாள் அவள்.

“நீ இன்னும் சின்னப்பொண்ணு. வயசு பதினெட்டு கூட நிரம்பேல்ல, ஆபீசுக்கெல்லாம் போகேலாது”

“அப்போ நான் தொடர்ந்து படிக்கவாவது வழிசெய் அக்கா...”

“அதுக்கெல்லாம் செலவுபண்ண என்னட்ட காசு இல்ல...”

“அப்பாட்ட சொன்னால் அனுப்புவார்தானே..”

“ஓம், உனக்கு செலவுக்கு காசே கம்மியாத்தான் அனுப்புறார். இதிலை வேற படிக்கவெண்டு கேட்டா அதையும் அனுப்பமாட்டார். பின்ன நான்தான் செலவு பண்ண வேணும். எனக்கும் ரெண்டு பொம்புள பிள்ளையளிருக்கு...ரெண்டுமூணு வருஷத்தால அப்பாவ வரச் சொல்லி கல்யாணம் ஒன்ற முடிச்சு வைக்கிற வரைக்கும் வீட்டோட இரு. எனக்கும் பிள்ளையளுக்கும் உதவியா இருக்கும்...”

கடுமையான அவளின் பேச்சை எதிர்த்துப் பேசமுடியாது ஊமையாகிப் பொகிறாள் ஜெனிபர்.

“மரியா நீ யோசிக்காதை, அவளோட படிப்புக்கு நான் செலவுபண்ணுறன்...”

“என்ன...?”

நெற்றிப் புருவம் உயர, முறைத்த பார்வையோடு கேட்கிறாள் அவள். அந்த வார்த்தையின் அதிகாரத்தில் அடங்கிப் போகிறார் அவள் கணவர் ரொபர்ட். ஜெனீபரைப் பார்க்கையில் பரிதாபமாக இருக்கிறது அவருக்கு.

ரொபர்ட், மரியாவைத் திருமணம் செய்யும் போது எட்டே வயதான சிறுமி அவள். அவளைப் பார்க்கையில் டெங்குக் காய்ச்சலால் சிறுவயதில் இறந்துபோன தன் தங்கை திரும்பக் கிடைத்தது போன்ற உணர்வு அவருக்கு. இத்தாலியிலே பெற்றோரோடு இருந்த ஜெனீபர் இன்று ஓர் அழகிய யுவதி. செல்லமாக வளர்ந்தவள். இன்று உறவு இருந்தும் உரிமையற்றவளாக... உதாசீனப்பட்டு பாவப்பட்ட ஜென்மமாய்... சே, சின்னப்பெண்ணாக இருக்கும் போது காட்டிய அன்பையும் ஆதரவையும் இப்போது காட்ட முடியாதுள்ளதே என வருந்துகிறது அவர் மனம்.

அந்த வீட்டுக்கு இப்போது வேலைக்காரி வருவதில்லை. எல்லோருடைய அழுக்கு உடைகளையும் தோய்ப்பது, அயர்ன் பண்ணுவது முதல் டிபன் பொக்ஸ், லன்ச்பொக்ஸ்களுக்கு சாப்பாடு சமைத்து நிரப்புவது, பாடசாலை போக பிள்ளைகளைத் தயார்ப்படுத்துவது, வீடு, வாசல் தோட்டத்தை சுத்தமாய் அழகாய் வைத்திருப்பது என அப்பப்பா..ஒரே வேலை. ஓர் இயந்திரமாகிப் போகிறாள் அவள்.

நாளாக நாளாக உடலும் மனமும் சோர்ந்து போகிறது அவளுக்கு. களைப்பு, தவிப்பு, விரக்தி, வெறுப்பு எல்லாம் சேர தன்னை மறந்து போகிறாள். உணவில்லை; குடிப்பில்லை; குளிப்பில்லை; சுருண்டு சுருண்டு படுப்பது மட்டுமே சுகமாக இருக்கிறது அவளுக்கு. அக்காவின் ஏச்சும் பேச்சும் அதட்டலும் மிரட்டலும் இப்போது அவளை எதுவுமே செய்வதில்லை.

ஒருநாள் மாலை. மரியாவின் கைபேசியை எடுத்து அதிலுள்ள சில இலக்கங்களுக்கு உரியவர்களோடு ஏதேதோ பேசிக் கொணடிருக்கிறாள் ஜெனீபர். தூங்கி எழுந்து வந்த மரியா அதைக்கண்டு கொதித்துப் போகிறாள். ஏச்சும் பேச்சும் அடியும் உதையும்..வீடு இரண்டு படுகிறது.

“மம்மி..யூ ஆர் வெரி பேர்ட்..”

சித்திக்குப் பரிந்து பேசிய சியாமளாவின் கன்னத்தில் விழுகிறது ஓர்அறை. இளையவள் ரெஜினா எதுவுமே பேசாமல் வாயைப் பொத்திக்கொண்டு ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொள்கிறாள்.

“ அம்.. மா..அ.ம்.மா...” ஜெனீபர் விம்முகிறாள்.

விம்மலோடு ‘அ..ம்,.மா...’ என்ற அந்த சொல் மட்டும் அங்கே விட்டு விட்டுக் கேட்கிறது. கன்னங்களிலும் கைகால்களிலும் ஏற்பட்ட தழும்புகளை கண்களிலிருந்து வழியும் கண்ணீர் தொட்டுச் செல்கிறது. எரியும் வேதனையைத் தாங்க முடியாமல் துடிக்கிறாள் அவள்.

“சும்மா நடிக்காதேயடி, என்ர கண் முன்னால நில்லாம எங்கேயாவது போய்த் தொலை...”

மரியாவின் வார்த்தைகள் விஷ ஊசிகளாக அவளைக் குத்துகின்றன. வலியோடு மெல்ல எழுந்து அகன்று போகிறாள். நேரம் மெல்ல ஊர்ந்து போகிறது. வெளியே போயிருந்த ரொபரட் திரும்பி வருகிறார்.

வீட்டின் அசாதாரண சூழ்நிலை புரிகிறது அவருக்கு. மரியாவிடமிருந்து ஜெனிபரை விடுவிப்பது தொடர்பாக யோசிக்கத் தொடங்குகிறார் அவர்.

இரவு உறங்கப் போகும் சமயம் மாத்திரை போத்தலொன்றுடன் ஜெனிபரைக் காண்கிறாள் மரியா.

‘எதற்கு’ என்று கேட்க ஜெனீபர் சொன்ன பதிலால் அதிர்ந்து போகிறாள். அப்பாவுக்குத் தெரியப் படுத்துகிறாள். நீண்ட நேரம் கதைத்துவிட்டு அவர் சொல்கிறார்.

“சைக்கியாரிட்ஸ் ஒருத்தரிட்டை காட்டிப் பார்ப்பம். எவ்வளவு செலவெண்டாலும் அனுப்பி வைக்கிறன். இஞ்சை மட்டும் எடுக்கேலாது.”

தன்னிடம் சாட்டப்பட்ட பொறுப்பினால் குமைந்து போனவள் தணியாத கோபத்தோடு ரொபர்ட்டோடு கதைக்கிறாள்.

“இவள் ஏடாகூடமாக எதையாவது செய்து போட்டால் நாங்களல்லோ பிரச்சினைக்கு ஆளாக வேண்டி வரும். நாளைக்கே சைக்கியாரிட்ஸ் ஒருத்தரிட்டை கூட்டிப் போவம்....”

மறுநாள் மரியாவும் ரொபர்ட்டும் விசேட மனநல வைத்தியர் ஒருவரிடம் ஜெனிபரை அழைத்துப் போகிறார்கள். டாக்டர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் ஏதேதோ பதிலாய் சொல்கிறாள் அவள். அம்மா இறந்ததையும் தந்தை விட்டுச் சென்றதையும் வேறுகல்யாணம் செய்ததையும் விபரமாகச் சொல்கிறாள் மரியா. ஜெனீபரின் கைகளிலே காணப்பட்ட தழும்புகளும் கண்களிலே காணப்பட்ட ஏக்கமும் டாக்டருக்கு மீதியைப் புரிய வைக்கின்றன.

“மனசு ரொம்ப குழம்பிப் போயிருக்கிறா. வார்டில அட்மிட் பண்ணினால்தான் சுகமாக்க முடியும்”

“ஓகே டாக்டர்...”

சிகிச்சை முறைகள், மருத்துவச் செலவுகள் பற்றி டாக்டர் விபரிக்கிறார்.

“பிரைவேட்ல அந்தளவு செலவுபண்ண எங்களால முடியாது டொக்டர். நான் அரசாங்க ஆஸ்பத்திரிக்கு கூட்டிப்போறன்... நீங்க கடிதம் ஒண்டுமட்டும் தயவு செய்து தாங்கோ டொக்டர்...”

அப்பா கைவிட்டால் செலவுப்பொறுப்பு தனக்காகிவிடும் என்ற பயத்தில் தனியார் வைத்திய சிகிச்சை முறைக்கு மறுப்புத் தெரிவித்து, டாக்டரின் கடிதம் ஒன்றைப்பெற்றுக் கொண்டு எல்லோருமாய் வெளியேறுகிறார்கள்.

தன்னைச் சுற்றிலும் நடப்பது எதுவுமே புரியாத நிலையில் அரசாங்க மனநல காப்பகம் ஒன்றில் ஜெனீபர் அனுமதிக்கப்பட்டு மாதங்கள் இரண்டு கடந்து போய் விட்டன. மருந்து, மாத்திரைகள், மின்வலிப்புச் சிகிச்சை என சிகிச்சைகள் அளிக்கப்பட்டு இப்போது நன்கு தேறியவளாய், தன்னைப்புரிந்து கொண்டவளாய் இருக்கிறாள் அவள். வட்டமான அந்த அழகான முகத்திலே அழகிய சிரிப்பைப் பார்க்க முடிகிறது. காதோரம் சுருண்டு விழுந்து கிடக்கும் தலைமயிர் அவள் முகத்துக்கு அலாதியான அழகைத் தருகிறது. கலகலவென்ற அவளின் பேச்சும் சிரிப்பும் அந்த வார்டிலே ஓர் இனிய இசையாய் கேட்கிறது.

எல்லோருக்கும் பிடித்த ஒருத்தியாய் வலம் வந்த அவளை அடுத்தமாத சிகிச்சைக்குத் திகதி குறித்து இன்று டிஸ்சார்ஜ் பண்ணியிருக்கிறார்கள். இடைக்கிடை கணவரோடு மரியா வந்துவிட்டுப் போகும் போது ஒன்றும் சொல்லாதவள் இன்று வீட்டுக்கு அழைத்துப் போகப் போகிறார்கள் என்பதை அறிந்ததும் ஏற்பட்ட அதிர்ச்சியின் வெளிப்பாடுதான் “நான் அக்காவோடு போகமாட்டேன்...” என்னும் கூப்பாடாய் போயிற்று.

டாக்டர், நர்ஸ்மார் என எல்லோரும் எவ்வளவோ இதமாய் எடுத்துச் சொல்லியும் அவள் கேட்டபாடாய் இல்லை. டாக்டர் சுஜாதா அனுதாபத்தோடு அவளைப் பார்க்கிறார். சிகிச்சைகளின்போது அவள் அக்காவின் கொடுமைகளை அழுதழுது சொன்னதெல்லாம் அவர் மனதில் ஒருபடம் ஓடிக்கொண்டிருக்கிறது. பரிதாபத்தோடு ஜெனீபரைப் பார்க்கிறார் அவர்.

“ ஓகே ஜெனீபர் , நீ உன் கட்டிலுக்குப் போ.”

டாக்டர் சுஜாதா கூறியதும், அக்கா மரியாவைத் திரும்பியும் பார்க்காமல் ஓடிவந்து கட்டிலில் ஏறிப்படுத்துக் கொள்கிறாள் அவள்.

எல்லோர் முன்னிலையிலும் தன்னை அவமதித்த அவளை வெறுப்போடு பார்த்தபடி பற்களை நறநற வென்று கடிக்கிறாள் மரியா.

“கோவப்படாதீங்க. அவள் ஒரு மனநோயாளி. கொஞ்சம் சமாளிச்சுத்தான் போகணும். நாங்க பக்குவமா அவளுக்கு எடுத்துச் சொல்லுறம். நீங்க நாளைக்கு வந்து அவள கூட்டிப் போங்க.”

மரியாவிடம் டாக்டர் சுஜாதா கூறுகிறார்.

“நாளைக்கு சண்டே. எனக்குப் பார்ட்டி ஒன்டு இருக்குது. வர இயலாது. கிடந்து சாகட்டும்.”

படபடவென்று பொரிந்து தள்ளிவிட்டு வேகமாக வார்டிலிருந்து வெளியேறுகிறாள் மரியா. ஆஸ்பத்திரிக்கு வெளியே காரோடு காத்து நிற்கும் ரொபர்டை கோபத்தோடு முறைத்துப் பார்த்தபடி கார்க்கதவைத் திறந்து ஏறிக் கொள்கிறாள். கறுப்புநிற ஜீன்சும் சிகப்புநிற டீசர்ட்டுமாக பெருங்கோபத்துடன் நிற்கும் அவளைப் பார்க்கப் பயந்தவராக காரை ஸ்டார்ட் பண்ணுகிறார் ரொபர்ட்.

“மம்மி... ஜெனிசித்தி வரேல்லயா?” இளைய மகள் ரெஜினா ஏக்கத்தோடு கேட்கிறாள்.

“வாயை மூடிக்கொண்டு வா.” அந்த அதட்டலில் மகள்மார் இருவரும் மௌனித்துப் போகிறார்கள்.

“என்ன நடந்தது?.” கொஞ்ச தூரம் வந்ததும் ரொபர்ட் மெதுவாக விசாரிக்கிறார்.

“ஹ்..ம் வரமாட்டாளாம். நம்மட வீட்டுக்கு வர முடியாதாம். எக்கேடும் கெட்டுப் போகட்டும். இனி கூப்பிடப் போகமாட்டன். அவள் எங்கட வீட்ட வரவும் கூடா. சொல்லிப் போட்டன்...”

ரொபர்டின் முகத்துக்கு நேரே விரலை உயர்த்தி அவர் முகத்தைப் பார்த்தபடி அழுத்தமாகக் கூறுகிறாள் மரியா. பெருமூச்சு விட்டபடியே காரை ஓட்டி வந்து வீட்டுவாசலில் நிறுத்துகிறார் அவர்.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை.

காலையிலேயே வீடு அமர்க்களப்படுகிறது. பெறுமதியான, அழகான உடுப்புகளையெல்லாம் மரியா உடுத்தி உடுத்தி கண்ணாடி முன் நின்று அழகு பார்க்கிறாள். கடைசியில் ஜெனிபர் இத்தாலியிருந்து கொண்டு வந்திருந்த உடையொன்று அழகாக பொருத்தமாக இருக்க அயர்ன் பண்ணுவதற்காக மேசையருகே வருகிறாள். பக்கத்து அறையில் பிள்ளைகள் இருவரும் விளையாடும் சத்தம் கேட்க மெல்ல எட்டிப் பார்க்கிறாள்.

ஜெனீபருடைய உடுப்பு ஒன்றை உடுத்தியபடி ரெஜினா சுருண்டு படுத்துக் கிடக்கிறாள். சியாமளா ஜீன்சும் பேண்டும் அணிந்து, கைகளை இடுப்பில் குத்தி மிடுக்காய் நின்றபடி பேசுகிறாள்.

“என்னடி... சும்மா சும்மா படுத்துக் கிடக்கிறாய்.? ஒரு வேலயும் இப்போ செய்யுறதில்ல..கேட்டால் ஒரே தலைவலி..தலைவலி. ஊத்தை உடுப்பெல்லாம் மலைபோல குவிஞ்சு கிடக்கு. கிச்சனில எச்சில் பாத்திரமெல்லாம் அப்படியே கிடக்கு. வீடு வாசலெல்லாம் ஒரேகுப்பை. சும்மா சோறு சாப்பிடுற உனக்கு இதையெல்லாம் செய்யுறதுக்கென்ன..? டொய்லட் பாத்ரும் எல்லாம் நாறுது. எழுந்திரடி. போய் வேலைகளைப் பார். ம்...ம்..எழுந்திரு.”

ரெஜினாவைக் காலால் எகிறியபடி சியாமளா மரியாவாக மாறி நிற்கிறாள். மரியா பேச்சற்று உறைந்து போய் நிற்கிறாள். அயர்ன் பண்ணுவதற்காக கையில் வைத்திருந்த உடை நழுவி கீழே விழுகிறது.

“ஏய், கைக்குள்ள என்ன பொத்தி வச்சிருக்கிறாய்..? காட்டு.”

சியாமளாவின் அதட்டலுக்குப் பயந்து ரெஜினா கையை விரிக்கிறாள். அவள் கையிலிருந்து சில மாத்திரைகளும் மணிகளும் தரையெங்கும் சிதறி ஓடுகின்றன.

“ஏதுக்கடி இந்த மாத்திரை மணிகளெல்லாம்...?”

ஜெனீபர் அன்றொரு நாள் தனக்குச் சொன்ன அதே பதிலை ரெஜினா இப்போது கூறுகிறாள்.

“இதைக் குடிச்சிட்டு நான் செத்துப் போறன்.”

“ நோ.....”

மரியாவின் அலறல் சத்தம் அந்த அறைச்சுவர்களில் மோதித் தெறித்து எதிரொலிக்கிறது.


பிள்ளைகள் இருவரும் மிரண்டு போய் எழுந்து நிற்கிறார்கள். கையில் இருந்த மொபைல் போனை போட்டுவிட்டு ஓடி வருகிறார் ரொபர்ட். மரியா குலுங்கிக் குலுங்கி அழும் சத்தம் அந்த வீடெங்கும் கேட்கிறது.

நடந்தது எதையும் அறியாத ரொபர்ட் அவளை ஆதரவாக அணைத்தபடி அமைதிப்படுத்த முயல்கிறார். பிள்ளைகள் இருவரும் அவளின் கால்களைக் கட்டிக் கொண்டு அவளை மிரள மிரளப் பார்க்கிறார்கள்

மரியா அழுகிறாள்; ஏங்கி ஏங்கி அழுகிறாள். அவளின் விசும்பலினூடே “ஜெனி..ஜெனி.” என்ற வார்த்தை மட்டுமே அப்போது அங்கே கேட்டுக் கொண்டிருக்கிறது.

எம். ஏ. ரஹீமா

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 89




திரு/திருமதி.செல்வி ..............................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..............................................

..............................................

..............................................

.............................. ..............................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 89
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 89

### இடமிருந்து வலம்

1. அறிவுத் திறமை
5. ஆவல்
7. மீன் பிடிக்கவும் உதவும் (திரும்பியுள்ளது)
8. கல்யாணப் பெண்
9. தன்னைத்தானே சுட்டும் சொல் (திரும்பியுள்ளது)
12. வியப்பு (குழம்பியுள்ளது)
14. துணிவுமிகு அழைப்பு
16. ஓர் உறுப்பு
17. அழகு (குழம்பியுள்ளது)
19. ஒரு நீர்நிலை
20. கணிதத்தில் வரும் பெருக்கல் குறி
21. பூமி
23. சிறுவர்களின் விளையாட்டுப் பொருள் (குழம்பியுள்ளது)
24. நிலப்பகுதி (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. பாதை
2. ஒரு தானியம்
3. காலன்
4. வெட்கம் (தலைகீழ்)
5. இறுமாப்பு
6. முற்கால போர்வீரர்களின் ஆயுதங்களில் ஒன்று
10. அமைதி
11. வேகம் மிகுந்த காற்று
12. ஆகாயம்
13. ஒரு காரியத்தைச் சாதிக்கக் கையாளும் சாதுர்யமான வழிமுறை (குழம்பியுள்ளது)
15. குரங்கு
18. பிரமுகர்கள் ஊர்வலமாகச் செல்வது (குழம்பியுள்ளது)
22. கணவனைக் குறிக்கும் (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 88

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. பக்குவம்
4. சிசு
6. முடை
7. உவகை
8. தன்மை
10. பசி
11. அம்பு
13. தடை
14. புலி
15. தனம்
18, வன்மை
19. ஆறு
20. வடிவம்
22. அம்மை
23. தாலி

**மேலிருந்து கீழ்**

1. பசுமை
2. குமுதம்
3. வடை
4. சிகை
5. சுவடு
7. உசிதம்
9. அன்பு
12. புதன்
14. லிகிதம்
16. மைதானம்
17. சிறுவன்
18. வறுமை
19. ஆடி
21. வலி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 88

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ. 500.00 | இரண்டாம் பரிசு ரூ. 350.00 | மூன்றாம் பரிசு ரூ. 150.00 |
|---|---|---|
| **மனோரஞ்சன் ஜனேஷ்காந்த்**<br>இல 69, வட்ட விதானை வீதி<br>கல்முனை | **ஏ.சி.ஏ. நியாஸா**<br>331, மங்கெதர,<br>துல்கிரிய | **ஏ.எம்.ஸம்ரூஸ்**<br>மே/பா ஏ.எல். கலீல்,<br>113, தரையோடு தொழிற்சாலை வீதி,<br>இறக்காமம் |

### பாராட்டு பெறுவோர்

1. **ஏ.டபிள்யூ.எம் நியாஸ்** – மாவனெல்ல
2. **கே.புண்ணியநேசன்** – காரைதீவு 05
3. **ஏ.எம்.காசிம்** – உக்குவளை
4. **எம்.பி. அகிலன்** – திருகோணமலை
5. **என்.கே.வேணி** – பலாங்கொடை
6. **ரஜினி புண்ணியமூர்த்தி** – மட்டக்களப்பு
7. **இல்யாஸ் தாஸிம்** – பாணந்துறை
8. **பி. பேரின்பராஜா** – மட்டக்களப்பு
9. **கே.எம்.எம் பாரூக்** – கும்பியன்கொட
10, **எம்.எச்.சீ.என். சம்ரா** – வெலிகமை

# சிறுவர்களின் எதிர்காலம் சிறக்கும் வழிகாட்டல்கள்



சிறுவர்கள் அன்புக்கும் ஆதரவுக்கும் உரியவர்கள். அவர்கள் எமது வீட்டுக்கும் நாட்டுக்கும் தேவையானவர்கள். சிறுவர்கள் இல்லாத வீடும் சிறுவர்கள் இல்லாத நாடும் அழகாக மாட்டாது. சிறுவர்கள் எமது வளங்கள், எமது செல்வங்கள். எதிர்காலத்தில் எமது வீட்டுக்கும் நாட்டுக்கும் நற்பிரஜைகளாக வர இருப்பவர்கள். இதனை நாம் கருத்திற்கொண்டு சிறுவர்களை வழிநடத்த வேண்டியது எமது கடமையாகும். எமது வீட்டில் வளரும் சிறுவர்கள், பள்ளியில் பயிலும் சிறுவர்கள் யாவரும் தங்கள் எதிர்காலத்தை சிறப்பிக்க இருப்பவர்கள். அதனால் ஆசிரியர்களும் பெற்றார்களும் சிறுவர்களை பாதுகாத்து வழிநடத்த வேண்டியது கட்டாய கடமையாகும். ஆசிரியர்கள் சிறுவர்களுக்கான கல்வியையும் ஒழுக்க விழுமியங்களையும் நற்பண்புகளையும் போதிக்கிறார்கள். அவர்கள் சமூகத்தில் நல்லவர்களாக வர வழிகாட்டுகிறார்கள்.

அதேபோல பெற்றார்கள் தங்கள் பிள்ளைகளை வளர்க்கும் விஷயத்தில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். அவர்கள் வீட்டிலேயே ஒழுங்காகப் படிப்பதற்கான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். இவற்றோடு விளையாடுவதற்கும் சுயமாக தொழிற்படுவதற்கும் சிறுவர்களுக்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவர்களுடன் அன்பாகக் கதைத்து அவர்களை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும். அவர்கள் செய்யும் சிறுசிறு தவறுகளுக்காக பெற்றோர் ஆவேசப்படக் கூடாது. அவர்களது இளம் உள்ளங்கள் எப்போதும் அமைதியாக இருக்க வேண்டும். அவர்களது தவறுகளை சுட்டிக்காட்டி திருத்த வேண்டும்.

அவர்களுக்கு அன்பு காட்டி ஆதரிக்கும் போது, அவர்களது இளம் உள்ளங்கள் விரிவடைகின்றன. பெற்றார்கள் ஒருநாளும் தேவையற்ற கீழ்த்தரமான வார்த்தைகளால் சிறுவர்களை ஏசக்கூடாது. அவர்களை மன அழுத்தங்களுக்கு உட்படுத்தக்கூடாது. பிள்ளைகள் முன்னிலையில் தாய் தந்தையர் பேசிக்கொள்வது, சண்டை போடுவது கூடாது. இதனால் பிள்ளைகளின் மனம் வேதனை அடையக்கூடும். பெற்றார் எப்போதும் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக நடந்து கொள்ளவேண்டும்.

சிறுவர்கள் செய்யும் நல்ல காரியங்களை புகழ்வதும் தீய காரியங்களை கண்டிப்பதும் பெற்றார்களின் கடமை. பிள்ளைகள் எப்போதும் இனிய வார்த்தைகளால் பேசிப் பழக்க வேண்டும். பெரியவர்களுக்கு மரியாதை செய்வதற்கும், நல்லவர் சொல்கேட்டு நடப்பதற்கும், ஒழுக்கம் பேணுவதற்கும், கடவுளை வழிபடுவதற்கும் தங்களது பிள்ளைகளுக்கு வழிகாட்ட வேண்டும்.

சிறுவர்கள் திருந்திவிட்டால் எமது வீடும் நாடும் சிறப்படையலாம் அல்லவா?

இது இப்படியிருக்க, இன்றைய சிறுவர்கள் சன்மார்க்க ரீதியில் வளர்கிறார்களா? வளர்க்கப்படுகிறார்களா? என்று கேட்கத் தோன்றுகிறது. இது இன்று ஒரு பாரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. பள்ளி சென்று பாடங்களை படிக்காமல் காலம் கடத்தும் சிறுவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள், போதனைகளை அலட்சியப்படுத்தும் சிறுவர்கள் என பலர் இருக்கின்றனர்.

நாட்டின் எந்தப் பகுதியை நோக்கினாலும் அங்கெல்லாம் வழிதவறிச் செல்லும் சிறுவர்களை அவதானிக்க முடிகிறது. சிகரெட், பீடி புகைப்பவர்கள், போதைப் பொருள் பாவிப்பவர்கள், கைபேசி, கணினி, தொலைக்காட்சி இவற்றில் காலத்தை கடத்துபவர்கள் என்றெல்லாம் சிறுவர்களை இனம்காணமுடிகிறது. இவர்கள் அனைவரும் தங்களது நாளாந்த முக்கிய அலுவல்களை செய்வதில் தவறி விடுகிறார்கள். இவர்கள் நிலை இப்படி இருக்க ஒழுக்கமுள்ள நல்ல சிறுவர்களும் நம் மத்தியில் இருக்கிறார்கள். இவர்களை முன் மாதிரியாகக் கொண்டு ஏனைய சிறுவர்களும் செயல்பட வேண்டும்.

ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 01ஆம் திகதி நாடெங்கிலும் சிறுவர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. சிறுவர்கள் தொடர்பான போட்டிகள் விளையாட்டுகள், விழாக்கள் வைபவங்கள் என பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன்போது சிறுவர்களுக்கான பரிசுகள் அன்பளிப்புகள் வழங்கப்படுகின்றன. இப்படியாக சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் விழாக்கள் நடாத்தப்படுவது வரவேற்கக் கூடியதாகும்.

**சிறுவர் துஷ்பிரயோகங்கள்**

இதன் அடுத்த பக்கமாக நாம் பார்க்கும் போது மன வேதனைப்பட வேண்டியுள்ளது. இன்று நாடெங்கும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நடைபெறுவது சர்வ சாதாரணமாகிவிட்டது. இது பற்றிய செய்திகளை நாம் நாளாந்தம் கேள்விப்படுகிறோம். சிறுவர் கல்விக்கு தடைபோடுவது, வேலைப்பளுவை சுமத்துவது, பட்டினியில் வைப்பது, அடித்துத் துன்புறுத்துவது, அவர்களது உரிமைகளை பறிப்பது இவையெல்லாம் சிறுவர் துஷ்பிரயோக வரிசையிலே உள்ளடங்குகின்றன. இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

**சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள்**

இன்று நாடெங்கும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் நாளாந்தம் நடைபெற்று வருவதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இது மிகவும் வெட்கத்துக்குரிய செயலாகும். ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் என அதிகமான சிறுவர்கள் இன்று பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக நாம் கேள்விப்படுகிறோம்.

இதுவெல்லாம் சிறுவர்களின் நல்வாழ்க்கையை கெடுக்கும் சம்பவங்கள் அல்லவா? தங்களிடம் பாடம் படிக்க வரும் சிறுவர்களை தமது பாலியல் தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்ளும் ஆசிரியர்கள், தந்தைமார், நல்லவர்கள், உறவினர்கள், படித்தவர்கள், மதகுருமார் என பலராலும் இம்மோசமான செயல்பாடுகள் நடைபெற்று வருவதாக ஊடகங்கள் அம்பலப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இவர்கள் எல்லோரும் குற்றவாளிகள் அல்லவா? இது தொடர்பாக நாளாந்தம் பொலிஸ்; விசாரணை, நீதிமன்ற விசாரணை நடைபெற்று வருவதையும் அறிகிறோம். இதனால் நாம் தலைகுனிய வேண்டியுள்ளது. இப்படியான நிகழ்வுகள் குறைந்துவிட்டதாகவோ, இல்லாமல் போய் விட்டதாகவோ சொல்வதற்கில்லை. இது கவலைக்குரியதாகும்.

அதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், சிறுவர்களின் நல்வாழ்வுக்கு களங்கம் ஏற்படுத்தும் இத்தகைய நபர்களை இனங்கண்டு சட்டத்தின் முன் விசாரிக்க வேண்டும். உரிய தண்டனை வழங்கப்படவேண்டும்.

**எம்.ஏ.அத்தாஸ் மாத்தறை**

# சர்வதேச சிறுவர் தினம்

## உண்மையில் பயனுள்ளதா?

உலகத்திலுள்ள அனைத்து பிள்ளைகளுக்காகவும் உருவாக்கப்பட்ட தினமான சர்வதேச சிறுவர் தினம் இன்றாகும். இன்று சர்வதேச சிறுவர் தினம் அனைவரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

எனினும் இலங்கையில் வறுமையில் வாடும் சிறுவர்கள் இத்தினத்தைக் எவ்வாறு கொண்டாடுவர்? பிள்ளை என்பவர் உண்மையில் மலர் போன்றவர். மலர் மென்மையானது, வாசனை மிக்கது, அழகானது. இவ்வுலகத்தில் வாழும் அனைத்து சிறுவர்களும் அவ்வாறானவர்களே.



பிள்ளைகள் சிறுவயதில் முன்பள்ளி பாடசாலையில் இருந்து ஆரம்பக் கல்வியை நிறைவு செய்யும்வரை சிறுவர் உலகத்தில் வலம் வருகின்றார்கள். பிள்ளையின் பார்வையில் இவ்வுலகம் மிகவும் அழகானது. மரஞ்செடிகள், உயிரினங்கள், வானம், காற்று போன்றன அவற்றின் அங்கங்களாகும். பிள்ளைகளிடத்தில் வைராக்கியம், பொறாமை காணப்படுவதில்லை. பிள்ளையின் இதயம் மிகவும் அழகானது. புன்னகை வெளிப்படையானது. வறுமை மற்றும் வசதிகளிக்கிடையிலான வேறுபாடுகள் பற்றி அவர்கள் அறிந்திருப்பதில்லை. எனினும் இன்று இலங்கையில் வாழும் பெரும்பாலான பிள்ளைகள் 'வறுமை எனும் நச்சு வட்டத்துக்குள்' வாழும் நிலையிலேயே உள்ளனர். வயிற்றுக்கு போசணைமிக்க உணவின்றியும் உடலுக்கு ஏற்ற உடையின்றியும், கல்விக்குத் தேவையான புத்தகங்கள் இன்றியும் இவ்வறுமையான பிள்ளைகள் இன்று இருதுருவங்களுக்கிடையில் கைவிடப்பட்ட வாழ்க்கை வாழ்கிறார்கள். விசேடமாக பாதையின் இருபுறங்களிலும், வறுமையான முடுக்குகளிலும் வாழும் சேரிப்புற மக்களின் பிள்ளைகளைப் போன்றே கிராமப்புறங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறும் பெற்றோரின் பிள்ளைகளிடத்திலும் இது வெளிப்படுகிறது. பிள்ளைகளுக்கு அழகானவற்றை கேட்டு, பார்த்து, தொட்டு அனுபவிக்கக்கூடிய பொருத்தமான பௌதிக உலகமும் கைநழுவிப் போயுள்ளது.

கொவிட் தொற்றினால் இந்நிலை மென்மேலும் தீவிரமடைந்தது. அத்தொற்று நிலையினால் பாடசாலைகளை மூடவேண்டிய நிலையை உருவாகியது. நிகழ்நிலை ஊடாக கல்வி வழங்கப்பட்டாலும் அதன் பயன்கள் நகர மற்றும் கிராமப் பகுதிகளில் வாழும் மத்தியத்தர வர்க்க பெற்றோரின் பிள்ளைகளுக்கே கிடைத்தன. அரை மற்றும் முழுமையான நகரம் போன்றே கிராமங்களில் வாழும் வறுமை மேலோங்கியுள்ள பிள்ளைகளுக்கு நிகழ்நிலை ஊடான கல்வியைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான கருவிகள், இணையப்பொதி போதுமானதாக இருக்கவில்லை. சிலருக்கு சமிக்ஞைகள் கூட கிடைக்கவில்லை. இந்நிலை கடந்த இரண்டு மூன்று வருடங்களாக நீடித்தமையால் இப்பிள்ளைகளுக்கு கல்வி ரீதியில் ஏற்பட்ட பாதிப்புகளால் அவர்களால் அதனை நிறைவு செய்ய முடியாமல் போயுள்ளது.

வறுமையான பிள்ளைகளின் பெற்றோரும் 'மிகமோசமான வறுமையால்' பாதிக்கப்படவும் சில பெற்றோருக்கு நாளாந்தம் மிகக்குறைந்த வருமானத்தை பெற்றுக்கொள்ளும் தொழில்களும் கூட இல்லாமல் போனமையால் நிலைமை மேலும் மோசமடைந்தது. அத்தோடு தற்போதைய நிலையில் நூல்களின் விலைகளும் வானுயர்ந்துள்ளது. இதனாலேயே 'வறுமை நச்சு வட்டத்திற்கு' ஆளாகியுள்ள பிள்ளைகள் அதிலிருந்து விடுபடுவதற்கு மூத்தோராகிய எம்மால் செய்ய முடிந்தது என்ன? கைவிட்ட கல்வியை எவ்வாறு பெற்றுக்கொடுப்பது? பரீட்சை மையத்தால் இப்பிள்ளைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்துக்கொள்வது எவ்வாறு? இப்பிள்ளைகளின் எதிர்கால கல்வியினை மிகவும் சிறந்த முறையில் மாற்றுவது எவ்வாறு? வறுமையினால் இப்பிள்ளைகளிடத்தில் ஏற்பட்டுள்ள மந்த போசணை நிலையினை சாத்தியமான முறையில் மாற்றியமைப்பது எவ்வாறு? இவ்வாறான பல்வேறு வினாக்கள் ஒட்டுமொத்த வறுமை சமூகத்திலும் உருவாகியுள்ளது. அவ்வாறாயின் சமூக முறைமையினுள்ளேயே வாழும் மூத்தோராகிய நாம் இப்பாரிய பொருளாதாரப் பிரச்சினையின் மத்தியில் இந்த வறுமையான சமூகத்தின் பிள்ளைகளின் கல்வி நிலையினை மிகவும் சிறப்பான நிலையை நோக்கி மாற்றுவதற்கு என்ன செய்ய முடியும்?

உலகின் வளர்ச்சியடைந்த நாட்டுப் பிள்ளைகளின் கல்வியுடன் ஒப்பிடும்போது இலங்கையில் வாழும் வறுமையான பிள்ளைகளுக்காக மூத்தோராகிய எம்மால் செய்ய வேண்டிய சில விடயங்கள் உள்ளன. இன்று சிறிய மலராக இருக்கும் பிள்ளைகள் நாளை மூத்தோராகும்போது அவர்களை கல்வியால் பாதுகாத்து முழுமைப்படுத்த வேண்டும். இது மூத்தோராகிய எமது கடமையாகும்.

பாடசாலை நேரத்திற்குப் பின்னர், மேலதிக வகுப்புகளை விசேட நேர சூசிக்கு ஏற்ப பல்வேறு பாடங்களைக் கற்பிக்கவும், பாடத்திட்டத்தில் நிறைவுசெய்யப்பட வேண்டிய பாடங்களை மீளவும் நிறைவு செய்யவும், முடியுமாயின் மூத்தோரின் உதவிகளைப் பெற்றுக்கொண்டு இவ்வறுமையான பிள்ளைகளின் 'மந்தபோசணை' நிலையை இல்லாதொழிப்பதற்கும் போசணைமிக்க பகலுணவை பாடசாலையில் பெற்றுக்கொடுக்கவும், பிள்ளைகளுக்குத் தேவையான நூல்கள், பைகள், ஆடையணிகள், பாதணிகள் போன்றவற்றை கொடையுபகாரிகளிடம் இருந்து ஓரளவேணும் பெற்றுக் கொடுக்கவும் முடியும். தேசிய கல்வி நிறுவகத்தால் உருவாக்கப்பட்டுள்ள 'நெணச','குருகுலம்' போன்ற தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் பல்வேறு பாடங்களின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ள பாடங்களை பார்வையிடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல், 1ஏபி பாடசாலைகளில் உள்ள பிரபல ஆசிரியர்களின் உதவிகளை வலயக் கல்விப் பணிமனையின் அனுமதியோடு பெற்றுக்கொண்டு பாடசாலை நேரம் தவிர்த்து மேலதிக வகுப்புகளை மேற்கொள்ளல் போன்றவற்றையும் மேற்கொள்ள முடியும்.

அத்தோடு பிள்ளைக்கு அழகியல் இரசனைக்காக சித்திரங்கள், நடனங்கள், இசை வகுப்புகள் மூலம் வழங்கப்படும் சேவைகளை மேம்படுத்த முடியும். அப்போது சிறுவர் உள்ளங்களும் சமநிலை உடையதாக மாறக்கூடும்.

**ரசிக பாலசூரிய,**
**சிரேஷ்ட விரிவுரையாளர், திறந்த பாடசாலை அலகு,**
**தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.**

# சயன சுகம் யாருக்கு உண்டு?

## ஓர் இலகுவான சாதக விளக்கம்



ஒரு சாதகத்தில் சயன மற்றும் சுகஸ்தானங்கள் தோஷமற்று இருந்தால் தான் ஆரோக்கியமான குழக்தைகள் பிறக்கும். ஆதிமனிதன் ஆதாமையும் அவனுக்குத் துணையாக ஏவாளையும் படைத்து சகல சௌபாக்கியங்களும் வனப்புகளும் நிறைந்த 'ஏதேன்" எனும் தோட்டத்தில் உலவவிட்டு, இருவரும் கூடிச் சுகித்து "பல்கிப்பெருகி உலகை நிரப்புங்கள்" என ஆசீர்வதித்ததாக புனித விவிலியம் வாயிலாக அறிகிறோம்.

இதுவிடயத்தில் இந்து மதமும் சளைத்ததல்ல.

வேதத்தின் கண்களெனப்படும் தர்ம சாஸ்திரமும் சோதிடக்கலையும் ஆண் பெண்ணிடையே அரும்பும் காதலையும் காலகதியில் அவர்கள் கணவன், மனைவியாகி கூடிக்கலந்து இன்புறும் புணர்ச்சியையும் கூட தெய்வீகமானதென்று கூறுகின்றனவேயல்லாது, அதனை ஆபாசமென்றோ அருவருக்கத் தகுந்ததென்றோ கூறவில்லை.

மண வாழ்க்கையென்பது ஓர் இனிய அனுபவம் என்கிறார் கிரேக்க அறிஞரான சோக்கிரட்டீஸ். மனமும் மணமும் நிறைந்த இல்வாழ்வில் கணவன் மனைவிக்கிடையில் நிகழும் தாம்பத்திய உறவின் அடிப்படையில் தான் சந்தான பாக்கியமே கிடைக்கிறது. எதிர்கால சந்ததியை உருவாக்கும் இத்தகைய தெய்வீக உறவைத்தான் "சயன சுகம்" என்று சோதிடக்கலை கூறுகிறது.

தாம்பத்திய உறவென்பது பெரும்பாலும் இரவில் இருட்டில், படுக்கையில், சயனமெனப்படும் நித்திரையில் நிகழ்வதால்தான் இதனை சயன சுகம் என சோதிடம் சொல்கிறது.

வாழ்க்கையில் இசை, நடனம், நாடகம், சிற்பம், ஓவியக் கலைகளில் ஈடுபாடு, எந்நிலையிலும் இவற்றை ரசிக்கும் மனோபாவம், ஆடம்பரமான சொகுசு வீடு அமைதல், வாகனவசதி, அழகிய மனைவி, தங்க, வைர ஆபரணங்கள், அறுசுவையுண்டி ஆகிய சுகங்களை அனுபவிக்கும் பாக்கி யத்தைத் தந்தருளுபவர் சுக்கிரனாகும். ஜெனன சாதகத்தில் இச்சுக்கிரன் ஆட்சி, உச்சம், கேந்திரம் அல்லது திரிகோணம் போன்ற ஏதாவதொரு நிலையில் அமர்ந்து, சுபர்பார்வை அல்லது சேர்க்கை பெற்றிருந்தால், அத்தகைய சாதகர்களுக்கு மேற்சொன்ன சுகானுபவங்கள் கிட்டும். அதைவிடுத்து பிறந்த சாதகத்தில் மறைவுத் தானங்களில் அமர்ந்து பாவக் கிரகங்களின் அல்லது பகைக்கிரகங்களின் பார்வை அல்லது சேர்க்கை பெற்றிருந்தால் அத்தகைய அமைப்பை 'சயன தோஷம்' எனக் குறிப்பிடுகின்றன சோதிட நூல்கள்.

சாதகப்படி சுக்கிரதசை நடைபெறும் காலம் 20 ஆண்டுகளாகும். இதனை சோதிட சாஸ்திரம் வானியல் அடிப்படையில் நிர்ணயித்துள்ளது.

ஜனன காலத்தில் சுக்கிரன் உச்சம் பெற்று பாவக்கிரங்களின் பார்வை அல்லது சேர்க்கை ஏற்படாமலிருப்பின் அத்தகையவர்களுக்கு இராஜயோகம் கிட்டுமென 'ஜாதக அலங்காரம்' என்ற புராதன சோதிட நூல் கூறுகிறது. முற்பிறவியில் அல்லது இப்பிறவியில் ஒருவன் எப்படிப்பட்ட பாவங்களைச் செய்திருப்பினும் மறுபிறவிகளில் சயனதோஷத்தை அனுபவிக்க நேரிடுமென அந்நூல் பட்டியலிட்டுக் கூறுகிறது.

அவையாவன, ஒற்றுமையுடன் இணைந்து வாழும் தம்பதியரை கோள் சொல்லியும் சூது செய்தும் கலைப்பது, மாற்றான் மனைவியுடன் அல்லது மற்றவளின் கணவனுடன் தொடர்புகளைப் பேணுவது, உத்தம பதிவிரதையான மனைவியை துன்புறுத்துவது, திருமணம் செய்துகொள்வதாகக் கூறி ஒருபெண்ணை ஏமாற்றுவது, கருவைக் கலைப்பது, காளை மாடுகள், குதிரைகள் போன்ற பிராணிகளின் ஆண்மையைச் சிதைப்பது, அமாவாசை மற்றும் ஏகாதசி திதிகளிலும், தாய் தந்தையர் மரணித்த தினங்களிலும் தாம்பத்திய உறவு கொள்ளுதல் போன்ற பாவங்களைச் செய்தவர்கள் தமது அடுத்தடுத்த பிறவிகளில் சயனதோஷம் மற்றும் புத்திர தோஷங்களால் பெரிதும் கஷ்டப்படுவார்களென மேலும் விபரிக்கிறது. அந்நூல், ஒரு சாதகத்தில் சயன, சுகஸ்தானங்கள் தோஷமற்று இருந்தால்தான் ஆரோக்கியமான குழந்தைகள் பிறக்குமென்பது அந்நூலில் கூறப்பட்டுள்ளது.

பிள்ளைகள் பக்திபூர்வமாகவும் ஆசாரத்துடனும் தான தர்மங்களை இயற்றியும் செய்யும் திதி பூஜைகளால் அவர்களது முன்னோர்கள் மறுபிறவியென்ற கடலிருந்து கரைசேர முடியுமென்பதை இந்நூல், சூட்சுமமாக விளக்கியிருக்கிறது. வாழ்வில் சௌபாக்கியங்களையும் தரக்கூடிய சுக்கிரன் ஒரு சாதகத்தில் 3,6,8,12 ஆகிய மறைவிடங்களில் அமர்ந்திருப்பது, நீசம் பெற்றிருப்பது, செவ்வாயுடன் கூடி 2,7,8,12 ஆகிய இடங்களில் இருந்து தோஷம் பெறுவது, சனியுடனோ ராகுவுடனோ கூடியிருப்பது, செவ்வாய், சனி, ராகு, கேதுக்களால் பார்க்கப்படுவது என்பன சயன தோஷத்தைத் தரவல்லன.

ஜனன காலத்தில் சுக்கிரனின் சஞ்சார நிலையினால் ஏற்படும் தோஷம் இருவகைப் படுமென்பது ஜோதிட அலங்காரத்தின் மற்றொரு குறிப்பாகும்.

ஒன்று சுக்கிரன் பலவீனமாக இருத்தல், மற்றொன்று அது அளவுக்கு மீறிய பலம் கொண்டிருத்தல் இரண்டும் தோஷங்களே. சுக்கிரன் உச்சபலம் பெற்று மீன ராசியில் ராகு, சனி போன்ற பாவிகளின் சேர்க்கை ஏற்பட்டிருப்பின் அவ்விதம் அமைந்த சாதகர்கள் தவறான வழிகளில் சென்று விடுவதற்கு வாய்ப்புகள் உருவாகும். அதிக அழகு, மோகத்தைத் தூண்டும் கவர்ச்சிகரமான உடல்வாகு, அதிக ரசிகத் தன்மை நவநாகரீகமான கண்கவர் ஆடையணிகள் அணிதல், பிற ஆடவருடன் அல்லது அணங்குகளுடன் சகஜமாய் கலந்து பழகும் வாய்ப்புகள் உருவாவது என்பது போன்ற சூழ்நிலைகள் உருவாகி,

அவற்றில் சிக்கிக் கொண்டு மீள முடியாமல் தவிப்பதற்கும், பின்னர் அவையே வாழ்வாகிப் போவதற்கும் இத்தகைய அளவுக்கு மீறிய சக்தி வாய்ந்த சுக்கிரனின் நிலையே காரணமாக இருக்கும்.

ஒருவரின் இல்லத்தில் காலடிவைத்த மறுகணமே, அவ்வீட்டில் சுக்கிரனின் கடாட்சம் அதாவது சுபப்பார்வை கிடைத்துள்ளதா இல்லையா என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

சுக்கிர கடாட்சம் கிடைத்துள்ள வீட்டில் ஒரு கச்சிதம் தெரியும். மனோ ரம்மியமும் நிறைவும் உணரப்படும். பூவேலைப்பாடுகளும் திரையலங்காரமும் தளபாட அணிவகுப்பும் சிற்பம், சித்திரம், பூச்சாடிகள் என்பன பொருத்தமான இடங்களில் அமைந்தும் ஒரு கலைக் கூடத்தை நினைவுபடுத்தும். வீட்டாரும் அகமும் முகமும் மலர வரவேற்பர், இனிமையாக உரையாடுவர். விருந்தோம்பி உபசரிப்பர்.

அவர்களது தோற்றங்களே, அவ்வீட்டின் செழுமையைச் சொல்லாமல் சொல்லும். பட்டும் பொன்னுமாய் ஒளிர்வர். வண்ண வண்ண பூச்செடிகளாலும் பயன்தரும் மரங்களாலும் அவ்வீடு சூழப்பட்டிருக்கும். வீட்டில் நாய், பூனை போன்ற செல்லப் பிராணிகளும் பின்புறத் தொழுவத்தில் பசுக்களும் இருக்கும். சுக்கிரனின் அருட்கடாட்சம் நிறைந்திருக்கும் வீட்டில் வைத்தியருக்கு வேலையில்லையென்கிறார்கள் சோதிட நூலாசிரியர்கள்.

**திருவோணம்...**

# நளீம் ஹாஜியார் நினைவுச் சொற்பொழிவு கொழும்பில்



(அஜ்வாத் பாஸி)

பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீட பொன் விழாவின் பிரதான நிகழ்வுகளில் மற்றுமொரு நிகழ்வாக 'நளீம் ஹாஜியார் நினைவுச் சொற்பொழிவு' நாளை மறுதினம் ஒக்டோபர் 03ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.30க்கு கொழும்பு 07, சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள இலங்கை மன்றக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நளீம் ஹாஜியார் நினைவுப் பேருரை மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி ரிப்கி காஸிம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி வாழ்வும் பணியும்' என்ற தலைப்பில் ஜாமிஆ நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முஹம்மத் (நளீமி) பிரதான உரை நிகழ்த்துவார். முதல்வரின் பிரதான உரையைத் தொடர்ந்து 'கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி அறிவுத்துறைப் பங்களிப்பும் ஆய்வுப் பணிகளும்' எனும் தலைப்பில் ஆய்வு நூல் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. நூல் வெளியீட்டினைத் தொடர்ந்து 'கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி – அறிவுப் பங்களிப்பு' எனும் தலைப்பில் ஜாமிஆ நளீமிய்யாவின் அரபு மொழி கற்கைத் துறைத் தலைவர் கலாநிதி அஷ்ஷெய்க் ஏ.பீ.எம் அப்பாஸ் (நளீமி) விசேட உரை நிகழ்த்துவார். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்நிகழ்வில் ஜாமிஆ நளீமிய்யா பரிபாலன சபைத் தலைவர் யாகூத் நளீம் விசேட அதிதியாக கலந்துகொள்வதோடு கௌரவ அதிதியாக ராபிதாவின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ரீ.எம். லாபிர் மதனியும் கலந்து சிறப்பிப்பர்.

இந்நிகழ்வில், உலமாக்கள், கல்விமான்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், நளீமிய்யாவின் விரிவுரையாளர்கள், நளீமிய்யாவின் பழைய மாணவர்கள் மற்றும் சமூகத்தின் பல்துறைசார் ஆளுமைகள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### தேசிய உப்பு நிறுவனம்

**ஆனையிறவு உப்பளத்தில் மேசை உப்பு கட்டிடத்தை நிர்மாணித்தல்**

**ஒப்பந்த இல.: NSL/CONS/EP/01**

1. கொழும்பு-05, எல்விட்டிகல மாவத்தை, 561/3 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய உப்பு நிறுவனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கீழே விபரிக்கப்பட்டவாறான மேலேயுள்ள கட்டிட நிர்மாணம் மற்றும் பூர்த்தி செய்தலுக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
2. இக்கட்டிடமானது அண்ணளவாக $800m^2$ தரைப்பரப்பில் வலுவூட்டப்பட்ட கற்கலவை நிர்மாணத்தில் தூண் அடித்தளத்தில் ஓடு உத்திர கட்டமைப்பு மற்றும் சிறு துண்டுக் கற்கலான அடித்தளத்தில் கட்டப்படல் வேண்டும். சுவர்கள் செங்கற்களால் கட்டப்பட்டு சீமெந்து பூசப்பட்டு பெயிண்டும் பூசப்படல் வேண்டும். கதவுகள் மற்றும் யன்னல்களுக்கு பவுடர் காவலிடப்பட்ட அலுமினிய சட்டகமைப்பு மற்றும் தெளிவான கண்ணாடி பயன்படுத்தப்படல் வேண்டும். கூரை கட்டமைப்பானது உயர்வான tensile purlins, கோண இரும்பு தீராந்திகள், UPVC கூரைத்தகடு மூடுதல் ஆகியவற்றை அடக்குகின்றது. வலுவூட்டப்பட்ட கற்கலவை நிர்மாணத்துடனான தடுப்புச் சுவவர், சிறு துண்டுக் கற்களை ஏற்றி இறக்கும் சறுக்குத்தடம், கழிவுநீர் சுத்திகரிப்பு தாங்கி, நீர் வழங்கல் மற்றும் வலுவூட்டப்பட்ட கற்கலவையில் நிர்மாணிக்கப்பட்ட தரைகீழ் நீர்தாங்கி, மின்னியல் வேலைகள் மற்றும் வெப்பமாக்கல் அறை ஆகியவற்றை உட்கட்டமைப்பானது அடக்குகின்றது. நிர்மாணக் காலப்பகுதியானது 180 நாட்கள் என்பதுடன் அண்ணளவான மதிப்பீடு செய்யப்பட்ட ஆகுசெலவானது தற்செயலாக இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் VAT நீங்கலாக 113.65 மில்லியன் இலங்கை ரூபாவாகும்.
3. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
4. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுவை சமர்ப்பிக்கும் வேளையில் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்தவராகவுமிருத்தல் வேண்டும்.
   - அ) CIDA பதிவு செய்தல் - விஷேடத்துவம் - கட்டிட நிர்மாணம், தரம் சி-4 அல்லது சி-3.
   - ஆ) கடந்த மூன்று வருடங்களில் கட்டிட நிர்மாண வருடாந்த சராசரி பெறுமதியானது 120 மில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - இ) பூர்த்தி செய்யப்பட்ட நிகரான கட்டிட பெறுமதியானது 110 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு மேற்பட்டதாகவிருத்தல் வேண்டும்.
   - ஈ) திரவச் சொத்துக்கள்/கடன் வசதிகள் ஆகக் குறைந்தது 30 மில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - உ) தொழில்நுட்ப முகாமையாளர் - கட்டிட நிர்மாணங்களில் 5 வருட அனுபவத்துடன் தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா (NDT ) (சிவில்) தகைமை.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-05, எல்விட்டிகல மாவத்தை, 561/3 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய உப்பு நிறுவன பொது முகாமையாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 0112368964. அலைபேசி: 0716853685. மின்னஞ்சல்: **mslogm@gmail.com)** 2023 ஒக்ரோபர் 03 ஆம் திகதியிலிருந்து 2023 ஒக்ரோபர் 24 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2023 ஒக்ரோபர் 03 ஆம் திகதியிலிருந்து 2023 ஒக்ரோபர் 24 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக முப்பதினாயிரம் ரூபாவை மாத்திரம் (30,000 ரூபா) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், கொழும்பு-05, எல்விட்டிகல மாவத்தை, 561/3 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய உப்பு நிறுவன பொது முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. 2023 ஒக்ரோபர் 25 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, தேசிய உப்பு நிறுவனம், இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-05 என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுதாரரின் பெயர் மற்றும் **“Construction of Table Salt Plant building at Elephant Pass Saltern”** என்ற எடுத்துரைப்புகள் தபாலுறையின் வெளிப் பக்கத்தில் குறிதுரைக்கப்படல் வேண்டும். விலைமனுக்கோரலானது இறுதி நேரத்தில் மூடப்படுவதுடன் தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலின் இறுதி திகதிக்கு பின்னர் 91 நாட்களுக்கு (தொண்ணூற்றியொரு நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்கள் வழங்கப்பட்ட உருமாதிரிக்கு அமைந்தொழுகும் தன்மையில் பன்னிரண்டு இலட்சம் ரூபாவிற்கான (1,200,000 ரூபா) நிபந்தனையற்ற கோரும்போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதமுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2024 பெப்ரவரி 21 ஆம் திகதியன்று வரையும் (விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 119 நாட்கள்) பொது முகாமையாளர், தேசிய உப்பு நிறுவனம், இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-05 என்ற பெயரில் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும்.
10. 023 ஒக்ரோபர் 13 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-05, எல்விட்டிகல மாவத்தை, 561/3 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய உப்பு நிறுவன மாநாட்டு அறையில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய உப்பு நிறுவனம்,**
**561/3, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-05.**

## விலைக்கேள்வி அறிவித்தல்

**Bid Reference: COL/DC/228/01/2023-2**

### இந்திய உயர் ஸ்தானிகராலயம் கொழும்பு, இலங்கை.

கொழும்பு, இந்திய உயர் ஸ்தானிகராலயத்திற்கு குறிப்பு அப்பியாச கொப்பிகள் மற்றும் பாடசாலை பைகளை வழங்குவதற்கான ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கையில் பதிவு செய்துள்ள புகழ்வாய்ந்த இலங்கை/ இந்திய உற்பத்தியாளர்கள்/ விற்பனையாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023 ஒக்ரோபர் 01 ஆம் திகதியிலிருந்து https://hcicolombo.gov.in என்ற இந்திய உயர் ஸ்தானிகராலய இணையதளத்திலிருந்து விலைக்கேள்வி ஆவணத்தை பதிவிறக்கம் செய்யலாம்.

விலைமனு முன்னோடிக் கூட்டமானது 2023 ஒக்ரோபர் 16 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு நடைபெறும். விதித்துரைக்கப்பட்ட அனைத்து ஆவணங்களுடன் விலைமனுக்களை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதியானது 2023 ஒக்ரோபர் 31 ஆம் திகதியன்று மதியம் 12.30 மணியாகும். தொழில்நுட்ப விலைமனுக்கள் 2023 ஒக்ரோபர் 31 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**மேலதிக தெளிவுறுத்தல்களுக்காக, dc3.colombo@mea.gov.in என்பதன் வழியாக தொடர்பு கொள்ளவும்.**

### அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

SMIB

## கேள்வி அறிவித்தல்

பின்வருவனவற்றிற்காக புகழ்வாய்ந்த மற்றும் தகுதியுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| பெறுகையின் பெயர் மற்றும் குறிப்பீடு | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | மீளளிக்கப் படாத வைப்பு (இ.ரூபாவில்) | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| Implementation of Anti-Money Laundering Software Solution SMIB/TD/2023/09/02 | 200,000.00 | 5,000.00 | 2023.10.18 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
| Supply and delivery of 125 Thin Clients/Mini PCs SMIB/TD/2023/09/03 | 200,000.00 | 10,000.00 | 2023.10.19 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
| Supply, Delivery, Installation and Commissioning of 51 Microsoft Software licenses SMIB/TD/2023/09/04 | 40,000.00 | 3,000.00 | 2023.10.20 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |

மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், கொழும்பு-03, காலி வீதி, 269 ஆம் இலக்கத்திலுள்ள அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, 4 ஆம் மாடி, மனித வளங்கள் மற்றும் லொஜிஸ்டிக்ஸ் இற்கான பிரதான முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் பெற்றுக் கொள்ளலாம். இருப்பினும், விலைமனு ஆவணங்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அமைவிடத்தில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

காரணமொன்றை முன்வைக்காமல் எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கும் விலைமனுவொன்றின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக் கொள்வதற்கான உரிமையை வங்கியானது கொண்டுள்ளது.

மேலதிக தகவலுக்காக 011-7722879/011-7722876 ஆகிய இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ளவும்.

**பெறுகைக் குழு,**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**இல.: 269, காலி வீதி,**
**கொழும்பு-03.**

## எட்மண்டின் பத்திரிகைப் புரட்சி...

(10 ஆம் பக்கத் தொடர்)

புதிய தலைமுறையினருக்கு வெளிச்சத்தை வழங்கும் நட்சத்திரமான அனுபவமிக்க ஊடகவியலாளர் எட்மண்ட் ரணசிங்க பத்திரிகைத் துறைக்காக பல தியாகங்களைச் செய்துள்ளார்.

எப்பொழுதும் சூடான செய்திகளைத் தேடுவதிலும், அறிவையும் தகவல்களையும் புதுப்பித்துக் கொள்வதிலும் ஆர்வம் கொண்ட அவரது நிழலில் புதுமுகங்களாகப் பத்திரிகைத் துறையில் நுழைந்த பலர் இந்நாட்டில் தற்போது பத்திரிகைத் துறையில் அழியாத தடங்களைப் பதித்துள்ளனர்.

குறிப்பாக 2000ம் ஆண்டின் முற்பாதியில் எட்மண்ட் ரணசிங்கவினால் ஈர்க்கப்பட்ட எட்மண்ட் ரணசிங்கவின் சீடர்கள் இலங்கையின் தேசியப் பத்திரிகைகளின் ஆசிரியர் பதவி உள்ளிட்ட உயர் பதவிகளைப் பெற்றிருக்கின்றனர் என்பதைக் குறிப்பிடவே வேண்டும்.

விஜய பத்திரிகை நிறுவனத்தின் பணிப்பாளர், லங்காதீப தினசரியின் ஆசிரியர் சிரி ரணசிங்க, ரிவிர பத்திரிகையின் ஆசிரியராகச் செயற்பட்ட உபாலி தென்னகோன், ஞாயிறு லக்பிம பத்திரிகையின் ஆசிரியர் சுந்தர நிஹதமானி டி.மெல், லக்பிம தினசரி பத்திரிகையின் ஆசிரியராகச் செயற்பட்ட கித்சிரி நிமல் சாந்த மற்றும் ஜட்டில வெல்லபட, சிலுமின ஆசிரியராகப் பணியாற்றிய கருணாதாச சூரியாராச்சி, தினமின ஆசிரியராக இருந்த மஹிந்த அபேசுந்தர, ரிவிர ஞாயிறு மற்றும் தினசரி பத்திரிகைகளிலும், மவ்பிம தினசரி மற்றும் ஞாயிறு பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணியாற்றிய லேக்ஹவுஸின் தற்போதைய ஆசிரிய பீட பணிப்பாளர் சிசிர பரணதந்திர, சிலுமின பத்திரிகையின் தற்போதைய ஆசிரியர் தர்மன் விக்ரமரத்ன, சுயாதீன தொலைக்காட்சியின் தலைவராகச் செயற்பட்ட ஹைரிக பேருசிங்க மற்றும் அநுர சிரிவர்தன, பத்திரிகை நிறுவனம் ஒன்றில் பணிப்பாளராக சில காலம் பணியாற்றிய தற்போதைய ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பிரதி ஊடகப் பணிப்பாளராகக் கடமையாற்றும் தீப்தி அதிகாரி, ஸ்வர்ணவாஹினி தொலைக்காட்சியின் அரசியல் பிரிவின் பிரதானியாகப் பணியாற்றி பின்னர் இலங்கைப் பாராளுமன்றத்தின் தொலைத் தொடர்பாடல் திணைக்களத்தின் முதலாவது பணிப்பாளர் ஷான் விஜேதுங்க, சிரச டீவி மற்றும் எம்.டி.வி பணிப்பாளர் அசோக டயஸ், செலசினே நிறுவனத்தின் தற்போதைய தலைவர் ஹரின் குணவர்தன மற்றும் மவ்பிம ஞாயிறு மற்றும் தினசரி பத்திரிகைகளின் தற்போதைய ஆசிரியர் சாமிந்த வாரியகொடவும் உருவாகியது திவயின பத்திரிகையின் ஊடாகவாகும்.

சிரேஷ்ட ஊடகவியலாளரான எட்மண்ட் ரணசிங்க, தனது மாணவர்கள் பத்திரிகைத் துறையில் இன்று சிறந்து விளங்குவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறார்.

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

## சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு
## இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA)

### இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபைக்கு சிற்றுண்டிச்சாலையை நடத்திச் செல்லல் மற்றும் உணவு வகைகளை வழங்கல் சேவைகளுக்கான முன்மொழிவுகளுக்கான விண்ணப்பம்

உயர்தர சேவை நியமங்களுடன் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபைக்கு சிற்றுண்டிச்சாலையை நடத்திச் செல்லல் மற்றும் உணவு வகைகளை வழங்கல் சேவைகளுக்கான கருத்துடனான முன்மொழிவுகளை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையானது இத்தால் அழைக்கின்றது.

இதற்கான இடப்பரப்பானது ஆரம்பத்தில் 5 வருடங்களுக்கு வழங்கப்படுவதுடன் திருப்திகரமான செயற்பாட்டிற்கு உட்பட்டதாக வருடாந்த சேவை நீடிப்புகளும் வழங்கப்படும்.

2023 ஒக்ரோபர் 02 ஆம் திகதியிலிருந்து 2023 ஒக்ரோபர் 23 ஆம் திகதியன்று வரையும் sltda **proc@srilanka.travel/amilam@srilanka.travel** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மீளளிக்கப்படாத வைப்புத் தொகைக்கான பணக்கொடுப்பனவு துண்டுடன் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில/சிங்கள மொழியிலுள்ள முன்மொழிவுகளுக்கான விண்ணப்ப ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று மின்னஞ்சல் வழியாக வழங்கப்படும்.

மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமான 5000 இலங்கை ரூபாவானது இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் இலங்கை வங்கி கூட்டுரு கிளையிலுள்ள 7119413 என்ற கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். (குறிப்பு: ‘‘மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமென’’ ரொக்கப் பண வரவு துண்டில் வரைவு வைப்பாளரின் விபரங்கள் மற்றும் வரவு வைப்பதன் நோக்கம் என குறிப்பிடப்படுவதுடன், முன்மொழிவுடன் மேற்கூறப்பட்டுள்ள ரொக்கப்பண வரவுத் துண்டானது சமர்ப்பிக்கப்படுதல் கட்டாயமானதாகும். பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளப்படவேண்டுமென்பதுடன் ஏனைய பணக்கொடுப்பனவுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது)

விண்ணப்பங்களுடனான அனைத்து விண்ணப்பங்களும் நகல் பிரதியுடன் தலைவர், பெறுகைப் பிரிவு, (4 ஆம் மாடி), இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, இல. 80 காலி வீதி, கொழும்பு-03 என்ற முகவரிக்கு 2023 ஒக்ரோபர் 23 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விண்ணப்பங்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

மூடும் நேரத்தின் பின்னர், விண்ணப்பங்கள் உடனடியாகவே விண்ணப்பதாரியின் அல்லது அவரது பிரதிநிதியின் முன்னிலையில் திறக்கப்படும்.

**“Operate the Canteen & providing Catering Services to the Sri Lanka Tourism Development Authority”** என்ற சொற்கள் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகுமென்பதுடன் எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு முன்மொழிவையும் அல்லது விண்ணப்பத்தையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை இக்குழுவானது கொண்டுள்ளது. விண்ணப்பங்கள் மற்றும் முன்மொழிவுகளை தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக விண்ணப்பதாரிகளுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் மற்றும் செலவினங்களுக்கும் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையானது (இசுஅஅ) எவ்வித கடப்பாட்டையும் கொண்டிருக்க மாட்டாது.

மேலதிக தெளிவுறுத்தல்களுக்கு 011-2426800 (நீடிப்பு: 305) என்ற தொலைபேசியூடாக மற்றும் **sltdaproc@srilanka.travel, amilam@srilanka.travel** மின்னஞ்சலூடாக தயவு செய்து இசுஅஅ இன் பெறுகைக்கான உதவிப் பணிப்பாளருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல. 80, காலி வீதி, கொழும்பு-03.**

## இலங்கை தேசிய ஆராய்ச்சி சபை
### கல்வி அமைச்சு
### 2024 ஆம் ஆண்டிற்காக வழங்குநர்களை பதிவு செய்தல்

01. 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக தேசிய ஆராய்ச்சி சபையுடன் தங்களை பதிவு செய்ய விரும்பும் உற்பத்தியாளர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற முகவர்கள், உள்ளூர் தயாரிப்பாளர்கள் மற்றும் சிவில் பொறியியல் ஒப்பந்தக்காரர்கள்/ ஆலோசகர்களிடமிருந்து தேசிய ஆராய்ச்சி சபை தலைவரினால் விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.
02. ஒரு வகுதிக்கு மேற்பட்டதிற்கு பதிவு தேவைப்படின், தனித்தனியான விண்ணப்பங்கள் ஒவ்வொரு வகுதிக்கும் அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் அனைத்து விண்ணப்பங்களும் ஒரே தபாலுறையில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பதாரியொருவர் (அநேகமாக உள்ளூர் முகவர்) ஒரு முதன்மையாளருக்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கு பதிவு செய்தலை கோரினால், அவ்வாறான ஒவ்வொரு முதன்மையாளருக்கும் தனித்தனியான விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
03. பதிவு செய்தலை விரும்பும் விண்ணப்பதாரிகள் **www.mrc.gov.lk** என்ற தேசிய ஆராய்ச்சி சபையின் இணையதளத்திலிருந்து விண்ணப்ப படிவங்களின் தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளல் வேண்டும். விண்ணப்ப கட்டணமான (மீளளிக்கப்படாதது) 1000 ரூபாவை பொறளை சுப்பர் தர இலங்கை வங்கியின் தேசிய ஆராய்ச்சி சபையின் 192935 என்ற வங்கி கணக்கிற்கு வரவிலிடும் வங்கித் துண்டுகள், 7 ஆம் பிரிவின் பிரகாரம் வரவிலிடும் உரித்தான வகுதிக் கட்டணம்/ கட்டணங்கள் ஆகியவற்றின் பணவரவுத் துண்டுகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டுமென்பதுடன் கம்பனியும் உரித்தான துண்டில் குறிப்பிடப்படல் வேண்டும். காசோலைகள் அல்லது வங்கி வரைவுகள் அல்லது காசுக் கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இதற்கு மாறான விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட மாட்டாது.
04. எந்தவொரு சூழ்நிலையிலும் 2023 ஒக்ரோபர் 16 ஆம் திகதிக்கு பின்னர், விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.
05. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் அத்துடன் அவசியமான ஆவணங்கள் மற்றும் இடது பக்க மேல் மூலையில் **“REGISTRATION OF SUPPLIERS-2024”** என குறிப்பிடப்பட்ட தபாலுறை ஆகியன பதிவுத் தபாலில்/தூதஞ்சல் சேவையில் ‘‘தலைவர், தேசிய ஆராய்ச்சி சபை, 120/7, வித்யா மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரிக்கு 2023 ஒக்ரோபர் 16 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக அனுப்பப்படல் வேண்டும்.
06. தபாலில்/அஞ்சலில் ஏற்படும் எவ்வித தாமதத்திற்கும் தேசிய ஆராய்ச்சி சபையானது எந்தவொரு பொறுப்பை/கடப்பாட்டை ஏற்க மாட்டாது. தேவைப்படுத்தப்பட்டவாறு வழங்குனரொருவர் தேவைப்படும் தகவலை/ஆவணங்களை விண்ணப்பத்துடன் சமர்ப்பிப்பதற்கு தவறின், அவ்வாறான விண்ணப்பமானது மதிப்பீடு செய்யப்பட மாட்டாதென்பதுடன் பதிவுக் கட்டணம் மற்றும் வகுதிக் கட்டணங்கள் ஆகியன பணத் தொகைகள் மீள்செலுத்தப்பட மாட்டாது.
07. பண்டங்கள் மற்றும் சேவைகளின் (மீளளிக்கப்படாதது) குறியீடுகள் - வகுதிகள் (Cat) மற்றும் பதிவுக் கட்டணம் (RF).

| வகுதி இல. | வகுதி விளக்கம் | மீளளிக்கப் படாத தொகை (ரூபாவில்) |
|---|---|---|
| ஏ.1 | மருத்துவ உபகரணம் மற்றும் ஆய்வுகூட உபகரணம் (10 மில்லியனுக்கு மேற்பட்ட அல்லது நிகரானதும் 50 மில்லியனுக்கு குறைவானதும்) | 12,500.00 |
| ஏ.2 | மருத்துவ உபகரணம் மற்றும் ஆய்வுகூட உபகரணம் (2 மில்லியனுக்கு மேற்பட்ட அல்லது நிகரானதும் 10 மில்லியனுக்கு குறைவானதும்) | 3,500.00 |
| ஏ.3 | ஆய்வுகூட இரசாயனங்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்கள் | 3,500.00 |
| ஏ.4 | அலுவலக மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணம் (தொலைநகல் இயந்திரங்கள், நிழற்படப்பிரதியாக்கல் இயந்திரங்கள், டுப்ளிக்கேசன் இயந்திரங்கள், லமினேட்டிங் இயந்திரங்கள், ஓவர்ஹெட் புரஜெக்டர்கள், கணனிகள், அச்சுப்பொறிகள், சேர்வர்கள், யுபிஎஸ் சாதனங்கள், மல்டிமீடியா புரஜெக்டர்கள், வலையமைப்புக்கள், வலையமைப்புக்கள் மற்றும் தொடர்பான துணைப்பொருட்கள் இன்னும் பலவும்) | 1,000.00 |
| ஏ.5 | காகிதாதிகள் மற்றும் ஏனைய அலுவலக தேவைப்பாடுகள் | 1,000.00 |
| ஏ.6 | தளபாடம் மற்றும் இணைப்புக்கள் | 1,000.00 |
| ஏ.7 | சுத்திகரிப்பு சேவைகள் | 1,000.00 |
| ஏ.8 | ஆய்வுகூட சேவைகள் (வரிசைப்படுத்தல் போன்றன) மற்றும் ஏனையவை | 1,000.00 |
| ஏ.9 | போக்குவரத்து சேவைகள் | 1,000.00 |
| ஏ.10 | சுத்திகரிப்பு பொருட்கள், சமையலறைப் பொருட்கள் மற்றும் ஏனைய துணைப்பொருட்கள் | 1,000.00 |
| ஏ.11 | தூதஞ்சல் சேவை (உள்ளூர் மற்றும் வெளிநாடு) | 1,000.00 |
| ஏ.12 | அச்சடித்தல் சேவைகள் (Spiral Binding, Perfect Binding, Photocopying & Scanning) | 1,000.00 |
| ஏ.13 | கழிவு முகாமைத்துவ சேவைகள் (இலத்திரனியல் கழிவு, தாள் போன்றவை) | 1,000.00 |
| ஏ.14 | ஏனைய சேவைகள் (உணவுகள் மற்றும் குடிமங்கள், உணவு வழங்கும் சேவை, சிற்றுண்டி (Refreshment) மற்றும் மதிய உணவு, இயற்கை நீர் போத்தல்கள், பால் மா, சீனி, தேயிலை இலைகள், கழிவறை தாள்கள், தண்ணீர் போத்தல்கள் | 1,000.00 |
| ஏ.15 | சிறிய வாகன பழுதுபார்த்தல்கள் (வளிச்சீராக்கி பழுதுபார்த்தல்கள், மின்னியல் பழுதுபார்த்தல்கள், இயந்திர சிறிய பழுதபார்த்தல்கள் போன்றவை) | 1,000.00 |

**தலைவர்,**
**தேசிய ஆராய்ச்சி சபை,**
**120/7, வித்யா மாவத்தை,**
**கொழும்பு-07**

**தொலைபேசி: 011-2675176**
**மின்னஞ்சல்: admin@nrc.gov.lk**

**தொலைநகல்: 011-2675136**
**இணையம்: www.nrc.gov.lk**

பெருந்தோட்ட அமைச்சு

## தேயிலை ஆராய்ச்சி சபை

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்
# தோட்ட முகாமையாளர் பதவி (ஒப்பந்த அடிப்படை)

### சென் கூம்ஸ் தோட்டம், தலவாக்கலை

மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தலவாக்கலையில் அமைந்துள்ள சென் கூம்ஸ் தோட்டம் மற்றும் தொழிற்சாலைக்கு பொறுப்பாகவிருந்து மிகச்சிறந்த புலமையுள்ள விஞ்ஞானிகளின் அணியுடன் சவால்கள் நிறைந்த சுற்றாடலில் பணியாற்றக்கூடிய சுறுசுறுப்புள்ள தோட்ட முகாமையாளரொருவரை இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம் தேடுகின்றது.

தேயிலை ஆராய்ச்சி விஞ்ஞானிகளுடன் தோளோடு தோளாக பணியாற்றுவதன் மூலம் தேயிலை தொழில்துறையில் ஒரு அடையாளத்தைப் பெறுவதுடன் அவரது தொழில் தகமையை மேலும் மேலும் அதிகரிப்பதற்காக பொருத்தமான தகைமையுள்ள நபரொருவருக்கு வழங்கப்படும் அரிய சந்தர்ப்பமாகும்.

**பணி விளக்கம்**

தேயிலை தொழிற்சாலை, தேயிலைத் தோட்டம் மற்றும் அலுவலகம் தொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் முகாமைப்படுத்துவதற்காக திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வையிடல் அத்துடன் முகாமைத்துவத்திற்கு திரட்டக்கூடிய தகவல்களை வழங்கல்.

**கல்விசார் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

க.பொ.த. (சா-த) பரீட்சையில் ஒரே அமர்வில் மொழி (சிங்களம்/ தமிழ்) ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகியன அடங்கலான நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி.

**அத்துடன்**

க.பொ.த. (உ-த) பரீட்சையில் பொது அறிவு வினாத்தாள் அல்லாத மூன்று (03) பாடங்களில் சித்தி.

**அல்லது**

பெருந்தோட்ட முகாமைத்துவ டிப்ளோமாவிற்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை (NVQ) 5ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரானவர் உயர்நாட்டு தேயிலை தோட்ட பயிற்சேய்கை மற்றும் தொழிற்சாலை முகாமையாளராக ஆகக் குறைந்தது மூன்று (03) வருட அனுபவத்துடன் மற்றும் தொழிற்சாலை வாங்கியக் கொழுந்து அரைக்கும் தொழிற்சாலை செயற்பாடு ஆகியவற்றிலும் அனுபவம் இருத்தல் கட்டாயமாகும்.

மிகச்சிறந்த சமூக ரீதியிலான தொடர்புகள், அணி உத்வேகம் மற்றும் தொடர்பாடல் திறன்கள் சேர்க்கப்பட்ட தகைமைகளாக கருதப்படும்.

சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் பணியாற்றும் திறமை அத்துடன் தமிழில் பேசக்கூடிய ஆற்றல் முக்கியமாகும்.

இந்த நியமனமானது ஆரம்பத்தில் 3 வருடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலும் வருடாந்தம் புதுப்பிக்கப்படும் நிலையிலும் அமைந்திருக்கும்.

**வயது:** 60 வயதிற்குட்பட்டோர் விரும்பத்தக்கது.

**சம்பளம்:** அனைத்துமடங்கிய மாதாந்த பொதி அண்ணளவாக 150,000.00 ரூபாவாகும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகருக்கு தேயிலை ஆராய்ச்சி நிலையத்தால் நிர்ணயிக்கப்பட்ட இந்த பதவிக்காக நியமிக்கப்பட்ட மேலதிக வசதிகளும் வழங்கப்படும்.

பதவிகள் நிரந்தரமானவை. பிறப்புச் சான்றிதழின் பிரதி, இயைபுடைய கல்வி மற்றும் ஏனைய தொழில்சார் தகுதிகள், சேவைச் சான்றிதழ்கள், அறிவியல் இதழ்களில் வெளியீடுகள் மற்றும் புதுமையான திறன்கள், நிர்வாக மற்றும் நிர்வாகத் திறன்கள் ஆகியவற்றுடன் முழுமையான சுய தரவை வழங்கும் விண்ணப்பம் மற்றும் விண்ணப்பதாரரின் திறன்களை மதிப்பிடக்கூடிய உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் சகிதம் சமர்ப்பிக்க வேண்டும்.

அரசாங்க சேவை/ அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவ்வாறான நிறுவனத் தலைவரூடாகவே அனுப்பப்படல் வேண்டும். இவ்வாறான தேவைப்பாட்டிற்கு அமைந்தொழுகாத விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கு இது வழிவகுக்கும்.

தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் **www.tri.lk** எனும் இணைய தளத்திற்குப் பிரவேசித்து **google** வடிவத்தில் கோரப்பட்டுள்ள தகவல்களை பதிவேற்றம் செய்யவும். 2023 ஒக்டோபர் 16ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் ஆதார ஆவணங்களை கீழே கையொப்பமிட்டவருக்கு தபால் மூலம் அனுப்பவும். மேலும் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

**பணிப்பாளர் - பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்,**
**சென் கூம்ஸ், தலவாக்கலை.**

# இலங்கை வங்கி

## ஏல விலைகூறலுக்கான அழைப்பு

### வாகனங்கள்/இயந்திர சாதனங்களை விற்பனை செய்வதற்கான – ஏல விலைகூறல் இல.01/2023

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை வங்கியின் வாகனங்கள்/இயந்திர சாதனங்களை விற்பனை செய்வதற்கான முத்திரையிடப்பட்ட விலைகூறல்கள் கோரப்படுகின்றன.

**இலங்கை வங்கி கடுவெலை வாகன முற்றம்**

| VEHICLE NO | MAKE & MODEL | YEAR |
|---|---|---|
| Motor Coach | | |
| WP NB 2808 | SUNLONG SLK 6802 | 2012 |

**இலங்கை வங்கி டாலி வீதி வாகன முற்றம்**

| VEHICLE NO | MAKE & MODEL | YEAR |
|---|---|---|
| Motor Car | | |
| NC KU 9387 | AUD Q5 2.0LT | 2012 |

**இலங்கை வங்கி குளியாப்பிட்டிய**

| VEHICLE NO | MAKE & MODEL | YEAR |
|---|---|---|
| Motor Lorry | | |
| NW LO 5588 | ISUZU TPG-NPR85AN ELF | 2015 |

**இலங்கை வங்கி கல்முனை கிளை**

| VEHICLE NO | MAKE & MODEL | YEAR |
|---|---|---|
| Four Wheel Tractor | | |
| WP RF 5096 | MAHINDRA YOVO 575 DISPS | 2018 |
| EP RF 4029 | MASSEY FERGUSON MF - 1540 | 2016 |

**இலங்கை வங்கி புதிய நகரக்கிளை பொலனறுவை**

| VEHICLE NO | MAKE & MODEL | YEAR |
|---|---|---|
| Four Wheel Tractor | | |
| NC RE 9737 | NEW HOLLAND 4710 | 2016 |

1. 2023 ஒக்டோபர் 11, 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் முற்பகல் 9.00 தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரையில் மேற்குறிப்பிட்ட வாகன முற்றங்களில் வாகனங்களைப் பார்வையிடலாம்.

   ஏல விலைகூறல் ஆவணங்களை 11.10.2023 - 17.10.2023 வரையில் (சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை தவிர்த்து) முற்பகல் 9.00 மணிக்கும் பிற்பகல் 3.00 மணிக்கும் இடையில் இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை வங்கித் தலைமையகத்தின் 3ஆம் தளத்திலுள்ள பிரதான முகாமையாளர் (மாகாண அறவீட்டுப் பிரிவு) காரியாலயத்தில் அல்லது ஜுலை 11, 12 மற்றும் 13 ஆகிய நாட்களில் முற்பகல் 9.00 மணிக்கும் பிற்பகல் 3.00 மணிக்கும் இடையில் மேற்குறிப்பிட்ட வாகன வளாகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

   ஏல விலைகூறல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு மீளளிக்கப்படாத பண வைப்பாக 2,000/-ரூபாயை வரிகளுடன் (VAT) செலுத்த வேண்டும்.
2. ஏல விலைகூறல் ஆவணங்கள் இறுதியாக 2023.10.17 ஆம் திகதி அன்று பிற்பகல் 3.00 மணிக்கு வெளியிடப்படும்.
3. ஏல விலைகூறல் 2023.10.18 ஆம் திகதி அன்று முற்பகல் 10.00 மணிக்கு மூடப்படும்.
4. ஏல விலைகூறுவோர் எத்தனை வாகனங்களுக்கு வேண்டுமானாலும் விலைகூறலைச் சமர்ப்பிக்கலாம் என்பதோடு அவையனைத்தையும் ஒரே ஆவணத்தில் குறிப்பிட்டு ஒற்றைத் தபால் உறையினுள் இடுதல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ஏல விலைகூறலின் இலக்கமும் திறக்கப்படும் திகதியும் குறிப்பிடப்பட வேண்டும்.
5. ஒவ்வொரு விலைகூறலினதும் மொத்தப் பெறுமதியில் 5% இற்கும் குறையாத வங்கி வரைவானது (மீளளிக்கப்படும்) விலைகூறல் ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும்.
6. முத்திரையிட்டு ஒட்டப்பட்ட விலைகூறல் ஆவணங்களை 2023.10.18ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்பு (விலை கூறல் முடிவுறும் திகதி) பிரதான முகாமையாளர் (சொத்துக்கள் மற்றும் சேகரிப்புப் பிரிவு), 14ஆம் தளம், இலங்கை வங்கித் தலைமையகம், இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். அல்லது இல.01, இலங்கை வங்கி மாவத்தையிலுள்ள இலங்கை வங்கித் தலைமையகத்தின் தரைத் தளத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியினுள் முற்பகல் 10.00 (விலை கூறல் முடிவுறும் நேரம்) மணிக்கு முன் இடுதல் வேண்டும்.
7. முழுமையற்ற மற்றும் தாமதித்து சமர்ப்பிக்கப்படும் ஏல விலைகூறல்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் ஏல விலைகூறல்கள் தொடர்பான அஞ்சல் சான்றுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
8. ஏல விலைகூறல் நேரம் முடிவடைந்ததுமே ஏல விலைகூறல்கள் திறக்கப்படும். ஏல விலைகூறுவோர் அல்லது அவர்களின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகள் (ஒவ்வொரு விலைகூறுவோருக்கும் ஒரு பிரதிநிதி) இவ் ஏல விலைகூறலில் பங்குபற்றலாம்.
9. ஏல விலைகூறுபவர்/களின் தெரிவானது நிர்வாக சேவைகளுக்கான உதவிப்பொது முகாமையாளரால் ஏல விலைகூறல் முடிவுற்ற திகதியிலிருந்து மூன்று வேலை நாட்களுக்குள் அறிவிக்கப்படும்.
10. தெரிவு செய்யப்படும் ஏல விலைகூறுபவர்/விலைகூறுபவர்கள் மிகுதித் தொகையினை (ஏல விலைகூறல் தொகை - வங்கி வரைவுத் தொகை) செலுத்தி ஏல விலைகூறுவோரின் தெரிவு அறிவிக்கப்பட்டதிலிருந்து 14 நாட்காட்டி நாட்களுக்குள் இலங்கை வங்கியின் வாகன முற்றங்களிலிருந்து வாகனத்தை அப்புறப்படுத்தல் வேண்டும்.

**ஏல விலைகூறலை அல்லது அதனது ஏதேனுமொரு பகுதியினை எவ்வித காரணமுமின்றி ஏற்றுக்கொள்வதற்கான அல்லது நிராகரிப்பதற்கான உரிமையினை இலங்கை வங்கி கொண்டுள்ளது.**

**பிரதான முகாமையாளர்**
3ஆம் தளம், இலங்கை வங்கித் தலைமையகம்,
இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி : 011-2203436

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

1975 BOC CALL CENTRE www.boc.lk

A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்

தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# தேசிய உப்பு நிறுவனம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

விலைக்கோரல் இல. **NSL/HO/Pumps/2023/001**

### உப்பளச் செயற்பாடுகளுக்கு கடல் நீர் பம்பிகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல்

நிதி அமைச்சின் கீழ் வரும் வரையறுக்கப்பட்ட தேசிய உப்பு நிறுவனமானது ஒரு அரசுரிமை நிறுவனமாகும். இலங்கையின் வட மாகாணத்திலுள்ள ஆனையிறவு மற்றும் மன்னாரில் எமது உப்பளங்கள் அமைந்துள்ளன.

பின்வருமாறு விபரப்படுத்தியுள்ளதன் பிரகாரம் கடல் நீர் பம்பிகளை வழங்குவதற்காக விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

| தொ. இல. | உருப்படி | விபரக்குறிப்பு | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | Submersible Pump with panel box | Discharge Diameter-10” Bronze (Copper impeller Body SS) | 02 |
| 2 | Submersible Pump with panel box | Discharge Diameter-08” Bronze (Copper impeller Body SS) | 01 |
| 3 | Centrifugal pump with Electric motor (Heavy duty) | Discharge Diameter-10” cast iron/Bronze | 01 |

வேறெதாவது மாதிரிகள் (submersible/centrifugal தவிர்ந்த) கடல் நீர் பம்பிக்குப் பொருத்தமானால் அவை மதிப்பீட்டிற்காக கவனத்திற் கொள்ளப்படும்.

வழங்குநர் ஒவ்வொரு உருப்படிக்கும் உத்தரவாத காலம் சகிதம் விபரமான விபரக்குறிப்புகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி பட்டியல்படுத்தப்பட்டுள்ள உருப்படிகளில் முழுமையான அல்லது பகுதியான உருப்படிகளுக்கு விலைகளைச் சமர்ப்பிக்கலாம்.

ஒவ்வொரு வகுதிக்கும் தனித்தனியாக விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட விலைக்கோரல்களிலிருந்து முழுமையான அல்லது பகுதி எண்ணிக்கையான பம்பிகளைக் கொள்வனவு செய்வதற்கு தேசிய உப்பு நிறுவனம் உரிமையைக் கொண்டுள்ளது.

மீளளிக்கப்படாத 1,000.00 ரூபாவை (வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை) செலுத்தி பின்வரும் முகவரியிலிருந்து விலைமனுக்களைக் கொள்வனவு செய்யலாம்.

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உங்கள் விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘கடல் நீர் பம்பிகளுக்கான விலைமனு’’ எனக் குறிப்பிட்டு 2023-10-16ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அல்லது கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தேசிய உப்பு நிறுவனம்,**
**561/3, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-05.**

# ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை

**நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**

## வேலைவாய்ப்பு

1980 ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டம் எண். 46 ஆல் உருவாக்கப்பட்டது மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் கீழ் செயல்படும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை உறுப்பினர்களுக்கு சமூகப் பாதுகாப்பை வழங்குகிறது. நாட்டின் இரண்டாவது பெரிய ஓய்வூதிய நிதியாகும். நிதி அடிப்படை ரூ.485 பில்லியன் மற்றும் நாடு முழுவதும் 19 பிராந்திய அலுவலகங்களைக் கொண்டுள்ளது. தற்போது இந்த நிதிப் பங்களிப்பு உறுப்பினர்களின் எண்ணிக்கை சுமார் 2.6 மில்லியன் மற்றும் 56,000 ஊழியர்களை கொண்டுள்ளது.

பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து பின்வரும் தகைமைகளை மற்றும் முன் அனுபவங்களைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | தகைமைகள் மற்றும் அனுபவம் |
|---|---|
| **பிரதி பொது முகாமையாளர் (நிதி) (HM 1-3) (வெற்றிடம் 01)** | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட வணிக நிர்வாகம், வணிகம் / கணக்கியல் அல்லது நிதி ஆகியவற்றில் இளமாணிப் பட்டமொன்று மற்றும் தொடர்புடைய துறையில் (முதுகலை) தகுதி அல்லது நிர்வாக மட்டத்தில் குறைந்தது 18 வருடகால சேவை அனுபவத்துடன் உரிய துறையில் அரசாங்கத் திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது பிரசித்தமான வர்த்தகத் தாபனம் ஒன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிநிலையில் குறைந்தது 03 வருட திருப்திகரமான சேவை. |

சம்பள அளவு : **HM 1-3 - ரூ. 86,865/- 15 x 2,270= ரூ.120,915/- (ஆரம்ப சம்பள நிலை - ரூ.86,865/=)**

| பதவி | தகைமைகள் மற்றும் அனுபவம் |
|---|---|
| **உதவி பொது முகாமையாளர் (நிதி) (HM-1-1) (வெற்றிடம் 01)** | பல்கலைக் கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் வணிகம் / கணக்கியல் அல்லது நிதி ஆகியவற்றில் இளங்கலைப் பட்டம் மற்றும் தொடர்புடைய துறையில் முதுகலை பட்டம் (முதுகலை) அல்லது குறைந்தபட்சம் 15 வருட அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனத்தில் இணை உறுப்பினர் உரிய துறையில் அரசாங்கத் திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது பிரசித்தமான வர்த்தகத் தாபனம் ஒன்றில் திருப்திகரமான சேவை. |

சம்பள அளவு : **HM- 1-1 - ரூ. 80,295/- 15 x 2,270= ரூ.114,245/- (ஆரம்ப சம்பள நிலை - ரூ. 80,295/=)**

வயது : **35 வயதிற்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்**

ஆட்சேர்ப்பு முறை : **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் நடாத்தப்படும்**

**மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான பிற நன்மைகள்**

- பொது நிறுவன சுற்றறிக்கையின்படி, ஓட்டுநர் மற்றும் எரிபொருள் கொடுப்பனவு அல்லது வாகன கொடுப்பனவு மற்றும் சொந்த வாகனத்தைப் பயன்படுத்த எரிபொருள் கொடுப்பனவு கொண்ட வாகனம் வழங்கப்படும்.
- கடன் வசதிகள்
- திறச்சேரியினால் அனுமதிக்கப்பட்ட வருடாந்திர மிகையூதியம்
- மருத்துவக் காப்புறுதி
- பணிக்கொடை

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மற்றும் அதே அந்தஸ்துள்ள அரசு நிறுவனங்களால் வழங்கப்படும் இதர சலுகைகளுக்கு உரிமையுடையவர்கள்.

சான்றிதழ்களின் நகல்கள் மற்றும் உறவினர்கள் அல்லாதவர்களின் தொடர்பு விவரங்களை குறிப்பிடும் சுருக்கமான விண்ணப்பத்தை பின்வரும் முகவரிக்கு **2023.10.16** ஆம் திகதிக்கு முன்னர் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உள்ள குறித்த பதவியின் பெயரைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ அனுப்ப வேண்டும். அரசாங்கத் திணைக்களங்களில், கூட்டுத்தபானங்களில், மற்றும் சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க சம்மதம் என்பதைக் குறிப்பிட வேண்டும்

தலைவர் / தலைமை நிர்வாக அதிகாரி
**ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை**
த.பெ.இல. 807, மெஹெவர பியச,
நாராஹேன்பிட்ட,
கொழும்பு 05.

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch Acc. No. 000000377

# இலங்கை பாராளுமன்றம் வெற்றிடங்கள்

பாராளுமன்ற செயலாளர் நாயாகத்தின் பணியாட்தொகுதியில் உள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு நல்ல உடல் ஆரோக்கியமும் மற்றும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பாராளுமன்ற உத்தியோகத்தர் (தமிழ்)**
2. **உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர்**

விண்ணப்பங்கள் அழைக்கப்படுவது தொடர்பான இந்த விளம்பரம் **2023 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27** ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானி விளம்பரத்தில் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு ஏற்ப தயாரித்த விண்ணப்ப படிவங்கள் **2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி** அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் **"பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே"** எனும் முகவரிக்கு பதிவுச் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணபப்பம் அடங்கிய கடித உறையின் மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும். இந்தப் பதவி வெற்றிடங்கள் தொடர்பான விளம்பரத்தை **www.parliament.lk** எனும் இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**பாராளுமன்ற செயலாளர் நாயகம்**

**இலங்கைப் பாராளுமன்றம்,**
**ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே**

**2023 செப்டெம்பர் மாதம் 27ம் திகதி**

UNIVERSITY HOSPITAL
General Sir John Kotelawala Defence University

## பல்கலைக்கழக வைத்தியசாலை
## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

**பதவி வெற்றிடங்கள்**

பல்கலைக்கழக வைத்தியசாலை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் பதவிக்காக தகுதிவாய்ந்த நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. (நிரந்தர அடிப்படை)

- **தாதிய சகோதரி**
- **மருந்தாளர்**
- **மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுனர**
- **சந்தைப்படுத்தல் அதிகாரி**

சரியாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டு "நிறைவேற்றுப் பணிப்பாளர், பல்கலைக்கழக வைத்தியசாலை, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், வேரஹெர" என்ற முகவரிக்கு 2023.10.16க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பித்த பதவியை கடித உறையின் இடதுபக்க மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்ப படிவம் மற்றும் ஏனைய தகவல்களை பின்வரும் வலையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். (www.kdu.ac.lk) / தொ.பேசி இல. 011-2044555.

**www.kdu.ac.lk**

## Raigam

விற்பனை பிரதிநிதிகள் தேவை

றைகம் (Raigam) நிறுவனத்தின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்கு வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களுக்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை.

தகைமைகள்
- G.C.E O/L
- 01 வருட முன் அனுபவம்
- அனுபவமற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- மோட்டார்சைக்கிள் மற்றும் ஸ்மார்ட்போன்

உள்ளவர்கள்.

சம்பளம் 15,000 க்கு மேல்.
நேர்முகத்தேர்வு நடைபெறும் இடங்கள்
யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் தம்பனை.

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடங்கள்
யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் தம்பனை.
அழைக்கவும்

070 - 7062362
Deputy General Manager - Human Resources
THE KINGDOM OF RAIGAM
277, Raigam Mawatha, Kaswatta, Kiriwattuduwa, Homagama.
Fax : 011 2753342 Email : hr@raigam.lk

SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
Gayani - 077 7 278 948 / 0112 429 343 / 342 | Piyumi- 0112 429 383 E-mail - classified@lakehouse.lk

# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

### நூலகம், கல்வி, கல்வி உதவியாளர் நிர்வாக ஊழியர்கள், எழுதுனர் மற்றும் இணைந்த தரங்கள்

விண்ணப்பிக்கும் பாடப் பிரிவு / பிரிவுகள் பின்வரும் பிரிவுகளுடன் தொடர்புடையதாக இருப்பதுடன் மேலும், பாடப் பிரிவுகள், விசேட குறிப்புகள் பற்றிய விபரங்களைப் ஆங்கிலப் பத்திரிகையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நூலகப் பதவியணியினர்**

01. நூலகர் பதவி

**கல்வி மற்றும் கல்வி துணைப் பதவியணியினர்**

01. சிரேஷ்டப் பேராசிரியர் / பேராசிரியர் பதவி (Cadre Chair)

**மருத்துவப் பீடம்**

முன் சிகிச்சையியல் பிரிவு (Department of Pre Clinical Sciences)
இணை மருத்துவ விஞ்ஞானப் பிரிவு (Department of Para Clinical Sciences)
சிகிச்சையியல் பிரிவு
மருத்துவக் கல்விப் பிரிவு

**பொறியியல் பீடம்**

நிலப் பொறியியல் பிரிவு
கடல்சார் பொறியியல் பிரிவு
சிவில் பொறியியல் பிரிவு
எந்திரப் பொறியியல் பிரிவு
மின்னியல், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புப் பொறியியல் பிரிவு
கணிதப் பிரிவு

**இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்**

அடிப்படை விஞ்ஞானப் பிரிவு
தாதியர் மற்றும் மருத்துவிச்சிப் பிரிவு
உடல் மற்றும் தொழில்சார் சிகிச்சை பிரிவு
மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானப் பிரிவு
கதிரியக்கவியல் மற்றும் கதிரியக்க சிகிச்சைப் பிரிவு
அவைடநப் பிரிவு

**முகாமைத்துவ, சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியல் பீடம்**

முகாமைத்துவ மற்றும் நிதியியல் பிரிவு
சமூக விஞ்ஞானப் பிரிவு

**சட்டப் பீடம்**

பொதுச் சட்டப் பிரிவு
வணிகச் சட்டப் பிரிவு

**பாதுகாப்பு மற்றும் மூலோபாயக் கற்கைப் பீடம்**

பாதுகாப்புக் கற்கைப் பிரிவு
மூலோபாயக் கற்கை பிரிவு

**கணனிப் பீடம்**

கணனி விஞ்ஞானப் பிரிவு - இரத்மலானை வளாகம்
கணனி கணிதவியல் கற்கைப் பிரிவு - இரத்மலானை வளாகம்
தகவல் தொழிநுட்பப் பிரிவு - சூரியவெவ வளாகம்

**சூரியவெவ தெற்கு வளாகம்**
**செயற்கை சூழலியல் மற்றும் நில அளவியல் பீடம் (FACULTY OF BUILT ENVIRONMENT & SPATIAL SCIENCES)**

கட்டடக்கலைப் பிரிவு
அளவியல் பிரிவு
நில விஞ்ஞான பிரிவு (Department of Spatial Sciences)

02. **சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/ தரம் II, விரிவுரையாளர் (நிரந்தரமாக்கப்படாத) பதவி**

**மருத்துவப் பீடம்**

மருத்துவப் விஞ்ஞான பிரிவு

03. **சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/ தரம் II, விரிவுரையாளர் (நிரந்தரமாக்கப்படாத), விரிவுரையாளர் (தகுதிகாண்) பதவி**

**பொறியியல் பீடம்**

எந்திரப் பொறியியல் பிரிவு
மின்னியல், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புப் பொறியியல் பிரிவு
நிலப் பொறியியல் பிரிவு
கடல்சார் பொறியியல் பிரிவு

**முகாமைத்துவ, சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம்**

முகாமைத்துவ மற்றும் தொழிநுட்பவியல் பிரிவு

**தொழிநுட்பப் பீடம்**

பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு

**பாதுகாப்பு மற்றும் மூலோபாயக் கற்கைப் பீடம்**

மூலோபாயக் கற்கை பிரிவு

**இணைந்த சுகாதார விஞ்ஞானப் பீடம்**

அடிப்படை விஞ்ஞானப் பிரிவு
உடல் மற்றும் தொழில்சார் சிகிச்சைப் பிரிவு

**சூரியவெவ தெற்கு வளாகம்**
**செயற்கை சூழலியல் மற்றும் நில அளவியல் பீடம் (FACULTY OF BUILT ENVIRONMENT & SPATIAL SCIENCES)**

நில விஞ்ஞானப் பிரிவு (Department of Spatial Sciences)

04. **போதகர் பதவி - தரம் II**

**பொறியியல் பீடம்**

சிவில் பொறியியல் பிரிவு
நிலப் பொறியியல் பிரிவு
எந்திரப் பொறியியல் பிரிவு

**கணனிப் பீடம்**

கணனி விஞ்ஞானப் பிரிவு - இரத்மலானை வளாகம்
கணக்கீட்டுக் கணிதவியல் பிரிவு - இரத்மலானை வளாகம்
தகவல் தொழிநுட்பப் பிரிவு - சூரியவெவ வளாகம்

05. **போதகர் பதவி - தரம் III**

**முகாமைத்துவ, சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம்**

மொழிப் பிரிவு

**நிர்வாக ஊழியர்கள்**

01. உதவிப் பதிவாளர் பதவி
02. உதவி பொருளாளர் பதவி
03. உதவிப் பதிவாளர் பதவி (ஒப்பந்த அடிப்படையில்) இரத்மலானை வளாகம் மற்றும் மெற்றோபொலிட்டன் கெம்பஸ்

**எழுதுனர் மற்றும் இணைந்த தரங்கள்**

01. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கட்புல செவிப்புல) தரம் III

**சம்பள அளவுத்திட்டம்**

**நூலகப் பதவியணியினர்**

| | |
|---|---|
| 01. நூலகர் பதவி | :- U-AC 5 (II) ரூ.117,350 - 13x2,700 -152,450 p.m. + (162% கல்விசார் கொடுப்பனவு + அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவு) |

**கல்வி மற்றும் கல்வி துணைப் பதவியணியினர்**

| | |
|---|---|
| 01. சிரேஷ்ட பேராசிரியர் பதவி | :- U-AC 5 (I) ரூ.139,175 - 11x2,925 -171,350 p.m. + (167% கல்விசார் கொடுப்பனவு + அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவு) |
| 02. பேராசிரியர் பதவி | :- U-AC 5 (II) ரூ. 117,350 - 13x2,700 -152,450 p.m. + (162% கல்விசார் கொடுப்பனவு + அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவு) |
| 03. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் I | :- U-AC 3 (I) ரூ. 91,310 - 7x2,170 – 106,500 p.m.+ (151% கல்விசார் கொடுப்பனவு + ஏனைய கொடுப்பனவு) |
| 04. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் II | :- U-AC 3 (II) ரூ.79,360 - 11x1,630 - 97,290 p.m. + (151% கல்விசார் கொடுப்பனவு + அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவு) |
| 05. விரிவுரையாளர் பதவி (நிரந்தரமாக்கப்படாத) | :- U-AC 3 (III) ரூ.69,580 - 5x1,630 – 77,730 p.m. + (131% கல்விசார் கொடுப்பனவு + அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவு) |
| 06. விரிவுரையாளர் பதவி (தகுதிகாண்) | :- U-AC 3 (IV) ரூ.54,600 - 10x1,335 – 67,950 p.m. + (115% கல்விசார் கொடுப்பனவு + அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவு) |
| 07. ஆலோசகர் பதவி தரம் II | :- U-AS 1 (I) ரூ.48,385 - 19x690 - 61,495 p.m. + (அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவு) |
| 08. ஆலோசகர் பதவி தரம் III | :- U-AS 1 (II) ரூ.41,095 - 18x660 – 52,975 p.m. + (அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவு) |

**நிர்வாக ஊழியர்கள்**

01. உதவிப் பதிவாளர் பதவி / உதவி நிதி அலுவலர் பதவி :-
U-EX I (II) ரூ. 50,625 – 3x1,125 – 54,000 (EB) 55,335; 12x1,335 - 71,355 p.m. + (ரூ.7,800 வாழ்க்கைச்செலவு படி + ரூ. 5,000 p.m. கொடுப்பனவு + 45% கல்விசார் கொடுப்பனவு + 20% ஏனைய கொடுப்பனவுகள்)
02. உதவிப் பதிவாளர் பதவி (ஒப்பந்த அடிப்படையில்) இரத்மலானை வளாகம் :- ரூ. 50,625 p.m. + (ரூ. 7,800 வாழ்க்கைச்செலவு படி + ரூ. 5,000 p.m. கொடுப்பனவு)
03. உதவிப் பதிவாளர் பதவி (ஒப்பந்த அடிப்படையில்) - மெற்றோபொலிட்டன் கெம்பஸ் :- ரூ. 55,925 p.m. + ரூ 7,800 வாழ்க்கைச்செலவு படி

**எழுதுனர் மற்றும் இணைந்த தரங்கள்**

01. தொழில்நுட்ப உத்தியோகத்தர் : கட்புல செவிப்புல - தரம் III :-
U-MT 1(III) ரூ.31,625 – 7x300; 10x355 – 37,275 p.m. + (ரூ. 7,800 வாழ்க்கைச்செலவு படி + ரூ. 5,000 p.m. கொடுப்பனவு + 46% கல்விசார் கொடுப்பனவு + 20% ஏனைய கொடுப்பனவுகள்)

**ஏனைய நன்மைகள் :**

**நிரந்தரப் பதவி :**

சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் II மற்றும் அதற்கு உயர்ந்த பதவிகள் நிமித்தம் 7 வருட சேவைக்குப் பின்னர் ஊதியத்துடன் ஒரு வருட காலத்திற்கு அல்லது சம்பளமில்லாத 2 வருட காலத்திற்கு ஏழ வருடகால விடுமுறை, ஏற்புடைய பதவிகளுக்குரிய கொடுப்பனவுகள் மற்றும் 35% ஆராய்ச்சி கொடுப்பனவு, ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, கைத்துவிப்பு கொடுப்பனவுகள், இலவச சுகாதார காப்புறுதிகள், வருடாந்த மிகை ஊதியம் ஊழியர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்கள், பல்கலைக்கழக வைத்திய சாலையில் சலுகை அடிப்படையிலான சிகிச்சை வசதி மற்றும் ஏனைய சிறப்புரிமைகள்.

**ஒப்பந்த அடிப்படை - இரத்மலானை வளாகம்**

ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, வருடாந்த மிகை ஊதியம், பல்கலைக்கழக வைத்திய சாலையில் சலுகை அடிப்படையிலான சிகிச்சை வசதி மற்றும் ஊழியர்களுக்கான போக்குவரத்து சேவை

**பொது நிபந்தனைகள் :**

01. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பதாரிகள் குறித்துப் பதவிகளுக்கு அல்லது தரங்களுக்கு ஏற்ப அனுமதிக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக மாத்திரம் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக முகாமைத்துவ சபையினால் தேர்தெடுக்கப்படுவார்கள்.
03. விண்ணப்பதாரிகள் இணையத்தளதிலுள்ள **(www.kdu.ac.lk)** மாதிரிப் விண்ணப்பப்படிவத்தை பெற்று உரிய முறையில் பூரணப்படுத்தி உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் **2023 அக்டோபர் மாதம் 31** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது நேரடியாக சமர்ப்பிக்க வேண்டும்.
04. கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும்.
05. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.
06. பல்கலைக்கழகங்களில் / நிறுவனங்களில் / அரசாங்கத் திணைக்களங்களில் / நிறுவனங்களில் அல்லது நியதிச் சட்டப்பூர்வ சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்ப வேண்டும்.
07. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையத்தளத்தில் **(www.kdu.ac.lk)** விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொண்டு குறித்த பதவிகளுக்கு அந்த விண்ணப்பப்படிவங்களின் மூலம் மாத்திரமே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதிக்குப் பின்னர் கிடைக்கும், உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத அல்லது மாதிரிப் படிவத்திற்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
08. விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதற்கு தேவையான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்கள் அழைக்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
09. தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.
10. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு இப்பல்கலைக்கழகத்தின் எந்தவொரு வளாகத்திலும் பணியாற்றுவதற்கு ஆற்றல் இருத்தல் வேண்டும்.
11. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கும், பதவி உயர்வு நடைமுறைகளுக்கும், மற்றும் நேர்முகப்பரீட்சையில் பெற்ற புள்ளிகளுக்கும் ஏற்ப விண்ணப்பதாரிகள் தேர்தெடுக்கப்படுவார்கள்.
12. விண்ணப்பதாரர்கள் பொது உளச்சார்பு பரீட்சைக்கு அல்லது மதிப்பீட்டு செயல்முறைக்கு பரிந்துரைக்கப்படுவதற்கும், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு முன்னர் தகைமையுடைய பெயர் பட்டியலை தயாரிக்கும் உரிமையும், அதிகாரமும் பல்கலைக்கழகத்திற்கு உண்டு.
13. நிரந்தர பதவியிலுள்ள பதவியினருக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சமீபத்திய சம்பள சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும். மேலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
14. துணைவேந்தரினதும் மற்றும் நிர்வாகக் குழுவினதும் அங்கீகாரத்துக்கும் அமைய, திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்த பின்னர் ஒப்பந்த காலம் ஆண்டுதோறும் நீடிக்கப்படும்.
15. பதவிகளுக்கு ஏற்புடைய பிரிவுகளுக்கும் மற்றும் தகைமைகளுக்கும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையதளத்திலும் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையிலும் அவர்களின் சிறப்பு குறிப்புகள் மற்றும் பதவிக்கு தொடர்புடைய பாடப் பகுதிகள் மற்றும் தகுதிகளுக்கான பொருத்தமான திருத்தங்களை பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

| | |
|---|---|
| ■ நூலகர் பதவி | - UGC ஆணைக்குழுவின் சுற்றிக்கை இல.921 |
| ■ சிரேஷ்டப் பேராசிரியர் பதவி | - UGC ஆணைக்குழுவின் சுற்றிக்கை இல.05/2015 |
| ■ பேராசிரியர் பதவி | - UGC ஆணைக்குழுவின் சுற்றிக்கை இல.916<br>- UGC இன் தாபனத்தின் சுற்றிக்கை இல 04/2010, 12/2019,08/2021 |
| ■ விரிவுரையாளர் பதவி தரம் I / II<br>விரிவுரையாளர் (தகுதிகாண்) பதவி | - UGC ஆணைக்குழுவின் சுற்றிக்கை இல.721, 935, 08/2016, 08/2016 (ii), 08/2016 (iii) |
| ■ விரிவுரையாளர் (நிரந்தரமாக்கப்படாத) பதவி | - UGC ஆணைக்குழுவின் சுற்றிக்கை இல 07/2018 |
| ■ போதகர் பதவி தரம் II | - UGC ஆணைக்குழுவின் சுற்றிக்கை இல 725 |
| ■ போதகர் பதவி தரம் III | - UGC ஆணைக்குழுவின் சுற்றிக்கை இல 14/2017 |
| ■ உதவிப் பொருளாளர் பதவி<br>■ உதவிப் பதிவாளர் பதவி<br>■ உதவிப் பதிவாளர் பதவி (ஒப்பந்த அடிப்படையில்) | - UGC ஆணைக்குழுவின் சுற்றிக்கை இல 15/2017 |
| ■ தொழிநுட்ப உத்தியோகத்தர் (கட்புல செவிப்புல) தரம் III | - UGC ஆணைக்குழுவின் சுற்றிக்கை இல.13/2020 |

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :**

**பதிவாளர்**
**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**
**இரத்மலானை 10390,**
**இலங்கை.**

இறுதித்திகதி 2023.10.31

மேலதிக விபரங்களுக்கு பிரவேசிக்கவும்
**www.kdu.ac.lk**




## மேஷம்

**(அஷ்விணி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)**

ஐந்துக்குரிய சூரியன் 6 ஆம் இடத்தில் இருக்க, புதன் வார இறுதியில் அவருடன் சேர்கிறார். கேந்திரத்தில் சுக்கிரன் இருப்பது சிறப்பு. இரண்டாமதிபதி அல்லவா. தனவிருத்தி உண்டு. 3,6 க்கு உரிய புதன் கன்னி இராசியில் வக்கிரம் பெற்ற நிலையில் யோக பலன்களைத் தருகிறார். ஆரோக்கியம் அதிகரிக்கும். பகை விலகும். கடன்கள் அடைபடும். 6 இல் செவ்வாய் இருப்பது பலம். அப்பொழுதுதான் காரிய வெற்றி கிடைக்கும். 6 இல் உள்ள சூரியன் அரசாங்க அனுகூலங்களை பெற்றுத் தரும். சுக்கிரன் சாதகமாக இருப்பது சிறப்பு. மெல்ல முன்னேறுவீர்கள். முக்கியமானவர்கள் உங்களுக்கு உதவுவார்கள் கலைத்துறையினர் மதிப்பு பெறுவார்கள்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம்)**

சுக்கிரன் 3 ஆம் இடத்தில் இருக்கிறார். வார இறுதியில் ஐந்தில் புதன் சூரியனோடும் செவ்வாயோடும் இணைவு பெறப் போகிறார். 9 ஆம் இடத்தில் சனி வக்கிரகதியில் இருக்கிறார் வார முற்பகுதியில் தந்தை வழி உறவுகள் கைகொடுக்கும். வீடு வாகன யோகங்கள் உண்டு. மூன்றில் சுக்கிரன் பலம் பெற்று இருக்கிறார். கணவன் மனைவி குடும்ப உறவுகள் சீராக இருக்கும். உறவுகளால் நற்செய்தி உண்டு. வருமானம் அதிகரிக்கும். கடன்கள் அடைபடும். தொழில் வருவாய் ஏற்ற இறக்கமின்றி சுமுகமாக இருக்கும். புதன் வார இறுதியில் வக்கிரம் பெறுவதால் பல நன்மைகள் உண்டு.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

ஏழுக்குரிய குரு 11 ஆம் இடத்தில் இருக்கிறார். மனைவி வழியில் சிறப்புண்டு. 11 ராகு இருப்பதால் பெரிய அளவில் உங்கள் திட்டம் நிறைவேறும். இரண்டில் சுக்கிரன் என்பதால் தன வருவாய் நன்றாகவே இருக்கும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். புதன் வார இறுதியில் கன்னி இராசிக்கு செல்வதால் ஆரோக்கியம் சீர்படும். குறிப்பாக, பத்திரிகை தொழில், தகவல் தொழில்நுட்பத் தொழில் உள்ளவர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. தாய்வழி உறவுகளால் சிக்கல். 9 இல் சனி இருப்பதால் பூர்வீக சொத்து பிரச்சினைகள் தலை தூக்கலாம்.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

இராசியில் சுக்கிரன் இருக்கிறார். 3 இல் செவ்வாய் சூரியன் இணைவு. ''எதையும் பார்த்துக் கொள்ளலாம்'' என்கிற தன்னம்பிக்கையும் தைரியமும் தலையெடுக்கும் வாரம் இது. துணிவோடு எதையும் எதிர்கொள்வீர்கள். கணவன், மனைவி, குடும்ப உறவுகளில் சுமுகம் உண்டு. பண வசதிகள் நன்றாக இருக்கும். வீடு கட்டும் யோகமும், மனை வாங்கும் யோகமும் உண்டு. வாகனங்கள் மாற்றும் வாய்ப்பும் புது வீட்டை அலங்கரிக்கும் வாய்ப்புண்டு. சூரியன் தைரியஸ்தானத்தில் இருப்பதால் அரசாங்க ஆதரவு உண்டு. உடன்பிறப்புகளாலும் ஆதாயம் உண்டு. வழக்குகள் சாதகமாகும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)**

இராசிநாதன் சூரியன் இரண்டாம் இடத்தில் இருக்கிறார். யோகக்காரரான செவ்வாய் அவரோடு இணைந்து இருக்கிறார். இலாபாதிபதி புதனும் வார இறுதியில் வந்து சேரப்போகிறார். எனவே வருவாய் பற்றாக்குறை இருக்காது. தொழில் வளர்ச்சி அடையும். சுபகாரியங்கள் நடைபெறும். எல்லா விஷயத்திலும் சாதகமான சந்தர்ப்பங்கள் உண்டு. குரு 9 இல் இருப்பதும் உங்கள் எண்ணங்களை எல்லாம் பூர்த்தி செய்யும். கேது 3 இல் இருப்பதால் ஆன்மிகம் கோயில் வழிபாடு இவைகளில் ஆர்வம் அதிகரிக்கும். மருத்துவ செலவுகள் குறையும். உறவுகள் அனுசரித்து இருப்பார்கள். புதன் வக்கிரமாகி 2 ஆம் இடத்தில் இருப்பதால் வார இறுதியில் அதிக கவனம் வேண்டும்.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)**

சுக்கிரன் 11 இல் இருக்கிறார். அவர் தனகாரகன். எனவே மகிழ்ச்சியும் குடும்ப அமைதியும் உண்டு. வாரத்தின் முற்பகுதியில் 12 இல் புதன் இருக்கிறார். மறைந்த புதன் நிறைந்த நன்மைகளைத் தருவார். ஆனால், எதையும் யோசித்துச் செய்ய வேண்டும். இராசியில் சூரியனும் செவ்வாயும் இருப்பதால் வெற்றி பெறுவது என்பது உங்கள் சுமுகமான அணுகுமுறையில் தான் உண்டு. சில முயற்சிகள் அதிகப் பிரயாசைப்பட்டால் பலன் கிடைக்கும். புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும். சிலருக்கு நல்ல இடமாற்றங்கள் ஏற்படும்.

இராசிக்குள் செவ்வாய் இருப்பதால் சுரீர் என கோபம் வந்துவிடும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

இலாபாதிபதி சூரியன் 12 இல் இருக்கிறார். கூடவே செவ்வாய். அவர் தனகாரகன். அது மட்டும் அல்ல. ஏழுக்குரியவன். இராசியை குரு பார்ப்பது நல்ல அமைப்பு. எத்தனைச் சிரமங்கள் வந்தாலும் அதிலிருந்து மிக விரைவாக விடுபட்டு விடுவீர்கள். வார முற்பகுதி நன்றாகவே இருக்கும். நட்பு பலப்படும். நண்பர்களால் உதவி உண்டு. தொழில் லாபம் தரும். சுபகாரியங்கள் பலிதமாகும். வார இறுதியில் புதன் வக்கிரமாவதால் சில எதிர்பாராத நல்ல செய்திகள் கிடைக்கும். சுப விரயங்கள் உண்டு. கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். 12 இல் சூரியன் என்பதால் தேவையற்ற வாக்கு வாதங்கள் வேண்டாம்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

இராசிநாதன் செவ்வாய் 11 இல் லாபஸ்தானத்தில் இருக்கிறார். கூடவே தொழில்காரகனான சூரியனும் இருக்கிறார். புதனும் அங்கே மிக விரைவில் ஆட்சி உச்சம் பெற இருக்கிறார். நல்ல அமைப்பு. காரணம், எட்டுக்குரிய கிரகம் வக்கிரம் பெற்று உச்சம் பெறுவது என்பது சில எதிர்பாராத நன்மைகளைத் தரும். அரசியல் துறை நன்றாக இருக்கும். வியாபாரம், தொழில் புதிய கோணத்தில் திரும்பும். புதிய வியாபார நுணுக்கங்களை பயன்படுத்துவீர்கள். ஏழுக்கு உரிய சுக்கிரன் 9 இல் இருக்கிறார். கணவன் மனைவி குடும்ப உறவுகள் நல்லபடியாகவே இருக்கும். புது வீடு வாகனம் வாங்கும் யோகம் உண்டு. ஆறில் உள்ள ராகு உங்கள் எண்ணங்களையும் திட்டங்களையும் சாதகமாக்கும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

8 இல் உள்ள சுக்கிரன் உங்கள் மன விருப்பங்களை கெட்டுவிடாது காப்பாற்றுவார். நினைத்தது நிறைவேறும். ஆடம்பரப் பொருள் சேர்க்கை உண்டு. செவ்வாய் பத்தில் இருப்பதால் தொழில் உத்தியோகம் முதலியவற்றில் முன்னேற்றம் உண்டு. எதையும் தன்னம்பிக்கையுடனும் துணிச்சலுடனும் எதிர்கொள்வீர்கள். ஒன்பதுக்குரிய சூரியன் பத்தில் இருப்பதால் அரசாங்க காரியங்களில் அனுகூலம் உண்டு. உங்கள் செல்வாக்கும் சொல்வாக்கும் குடும்பத்தில் உயரும். நட்பு விஷயங்களில் கவனம் தேவை. காரணம், அதில் ஏமாற்றம் ஏற்படலாம்.=

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

புதன், கன்னி இராசிக்கு வார இறுதியில் வருகிறார். ஏற்கனவே அங்கு சூரியனும் செவ்வாயும் இருக்கிறார்கள். சில எதிர்பாராத நற்செய்திகள் வரும். தகவல் தொழில்நுட்பம் கணக்கு துறைகளில் பணிபுரிபவர்களுக்கும் ஆசிரியர் துறையில் இருப்பவர்களுக்கும் சில நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். சிலர் வசதியான வீடு மாறுவார்கள். வாரத்தின் முற்பகுதியில் காரிய வெற்றி உண்டு. வரவுகள் அதிகரிக்கும். தொழில், வணிகம், உத்தியோகம் இவைகள் எல்லாம் ஏற்ற இறக்கமின்றி சுமுகமாக இருக்கும். குடும்பத்தில் வார்த்தைகளை அளவோடு பயன்படுத்தாவிட்டால் அமைதிகெடும்.

## கும்பம்

**(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)**

இராசிக்கு 3 இல் உள்ள ராகு, உங்களுடைய சிந்தனைகளை கூர்மை தீட்டி நினைத்ததை நிறைவேற்றும் வாய்ப்பினைத் தருவார். குறிப்பாக வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு வேலை உத்தியோகம் நன்மை பயக்கும். வெளிநாடு செல்லும் யோகமும் உண்டு. புதிய வேலை கிடைக்கும். தொழில் முன்னேற்றம் உண்டு. ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். கோயில் தரிசனம் கிடைக்கும். பெரியோர் ஆசிகளும் தொடர்பும் உண்டு. முக்கியமானவர்களைச் சந்திப்பீர்கள். ஆனால், எதிலும் நீங்கள் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் அப்படி இருந்தால் மட்டுமே வெற்றியை தக்க வைத்துக் கொள்ள முடியும். சிலருக்கு உத்தியோக மாற்றமும் இடமாற்றமும் உண்டு. வீட்டில் சுப காரியங்கள் நடைபெற வாய்ப்புண்டு.

## மீனம்

**மீனம் (புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

இராசி அதிபதி குரு வலுவாக உள்ளார். அவர் தொழில் ஸ்தானத்தைப் பார்ப்பதால், தொழிலில், குறிப்பாக கலை, வர்த்தகம், பண முதலீடுகள் மற்றும் ஆசிரியர் பணி, கல்விப் பணி இவற்றில் உள்ளவர்களுக்கு சிறப்பான வாய்ப்புகள் உண்டு. ஆறில் உள்ள புதன் வார முற்பகுதியில் நன்றாக இருப்பதால், காரிய வெற்றி உண்டு. சுக்கிரன் ஐந்தில் இருக்கிறார். கணவன் மனைவி உறவுகள் கலகலப்பாக இருக்கும். மாமன் மைத்துனர் உறவுகள் உதவி செய்யும். புது வீடு கட்டும் யோகமும், புது வாகன யோகமும் உண்டு. சுபகாரியத்தடை அகலும். சனி உங்களுக்கு சில நன்மைகளை இவ்வாரம் செய்வார். சூரியன் 7 இல் இருப்பதால் தேவையற்ற பேச்சு, வம்பு வழக்குகள் கூடாது.

# தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்



அருணாசலம் லெட்சுமணன் 06

# பேராளர்களால் பாராட்டப்பட்ட தோமஸின் உரை

தமிழில் பேசுவதை தவிர்க்கும் தமிழர்கள் பெருகிவிட்ட இக்காலத்தில் தமிழை நேசித்து, தமிழின் மேன்மையை உலகறிய செய்யும் வகையில் தமிழ்ப் பணியாற்றிக்கொண்டிருக்கும் அமெரிக்கர் ஒருவரின் பங்கேற்பை மிக ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். அந்த எழுத்தாளர் தோமஸ் ஹிட்டோரி புருக்ஸ்மா ஆவார். அவர் எழுத்தாளர் மட்டுமல்ல. ஆசிரியர், கவிஞர், கலைஞர், மொழிபெயர்ப்பாளர் என தன்னை ஆளுமைக்குட்படுத்திக் கொண்டவர். 47 வயதான தோமஸ் 25 வருடங்களுக்கும் மேலாக தமிழை கற்பதில் ஆர்வம் காட்டி வருபவர். ஐந்து வருடங்கள் தமிழகத்தில் தங்கியிருந்து தமிழ் பயின்றவர்.

நாம் பயணித்துக் கொண்டிருக்கும் பஸ்ஸில் எமது இருக்கைக்கு அருகில் அமர்ந்திருந்தார். அவரது அருகில் தமிழ் பெண் ஒருவரும் அமர்ந்திருந்தார். அவரிடம் மெதுவாக பேச்சுக்கொடுத்து அவரை அறிமுகம் செய்து கொண்டேன். அவர் 11வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் வட அமெரிக்காவுக்கான மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் மகாலட்சுமி ரமேஷ்பாபு. மகாலட்சுமியிடம் அருகில் உள்ளவர் பற்றி விசாரித்த போதுதான் அவர் திருக்குறளை மொழிபெயர்த்த தோமஸ் ஹிடோசி புருஸ்க்மா என்பதை அறிந்து கொண்டோம். அருகில் இருந்த மகேஸ்வரன் உட்பட இருவரும் தோமஸுடன் அறிமுகமாகிக் கொள்கிறோம். தோமஸுடன் உரையாடல் தொடர்கிறது. தமிழின் பெருமையை உணர்ந்த அவரது சொற்கள் கேட்பதற்கு மிகவும் ஆர்வத்தை தந்தன. அமெரிக்க பூர்வீகத்தைக்கொண்ட ஒருவரின் வாயால் தமிழ்த்தாய் புகழப்படுவதை எண்ணி வியந்து போனேன்.

தோமஸ் 1998ஆம் ஆண்டு கல்லூரியில் இருந்து வெளியேறிய நிலையில் தென்னிந்தியாவில் அவருக்கு தொடர்பு ஏற்படுகிறது. மதுரையை சூழவுள்ள இடங்களில் பொழுதை கழித்த போது தமிழர் பண்பாடு தொடர்பிலான புரிதல் ஏற்படுகிறது. அந்த புரிதல் இயல்பாகவே கலைகள், இலக்கியங்கள் மீதான ஆர்வத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொணடிருந்த தோமஸுக்கு தமிழ் இலக்கியம், தமிழர் வாழ்வியல் மீதான அறிதல் தொடர்பிலான தேடலுக்கு வழிவகுக்கிறது. ஔவையார் தொடர்பில் ஏற்பட்ட அறிமுகத்தோடு மூதுரையின் உள்ளடக்கம் தொடர்பிலான தேடலுக்கும் அவரின் ஆர்வம் தூண்டப்படுகிறது. இதுவே தமிழ் மொழி மீதான பற்றுக்கும், அக்கறைக்கும் ஏதுவான காரணமாகிறது. இதன் விளைவாக பின்னாளில் ஔவையாரின் மூதுரையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் கே.வி.ராமகோடியை தமிழாசிரியராக பெற்றதை பெரும் பேறாகவே தோமஸ் கருதுகிறார். ஔவையாரின் பாடல்கள் மீதான ஈர்ப்புடன் பேராசிரியரின் வழிப்படுத்தலில் திருக்குறள் மீதும் அவரின் நாட்டம் ஏற்படுகிறது. திருக்குறளை ஆய்ந்தறிந்து கற்பதில் ஆர்வமுடன் செயற்பட்டுள்ளார். அதன் விளைவாகவே 2021ம் ஆண்டு திருக்குறளை




ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அமரத்துவமடைந்த தனது தமிழாசானுக்கே அவ் வெளியீட்டை சமர்ப்பணம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலும் எல்லா இந்திய மொழிகளிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அவ்வாறே ஐரோப்பிய மொழிகளிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மொத்தமாக 120க்கும் மேற்பட்ட மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தோமஸுக்கு முன்பாக இருபதுக்கும் மேற்பட்ட அறிஞர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்மை கவனிக்கத்தக்கது. இம் மொழிப்பெயர்ப்பாளர்களுள் கஸ்தூரி சீனிவாசன், கே.ஆர்.சீனிவாச ஐயங்கார், கோ.வடிவேலு செட்டியார், கோபாலகிருஷ்ண காந்தி, சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரி, சுந்தானந்த பாரதியார், தெ.பொ.மீனாட்சிசுந்தரம், மு.சி. பூரணலிங்கம் பிள்ளை, வ.வே.சுப்ரமணியம், வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர் ஆகியோர் தமிழறிஞர்கள் ஆவார்கள்.

திருக்குறளை முதன் முதலாக ஆங்கிலத்தில் மதபோதகரான ஜி.யு. போப்பே மொழிபெயர்த்தார். இவரைத் தொடர்ந்து இம்மான்ஸ் இ. வயிட், எட்வாட் ஜெவிட் ரொபின்சன், சால்ஸ் எட்வட், நெதானியல் எட்வர்ட், வில்லியம்ஸ், ஜோன் லாசரஸ், ஹெர்பர்ட் ஆதர் ஆகிய பிற மொழி அறிஞர்கள் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்கள்.

இவ் ஆங்கில மொழிப்பெயர்ப்புகளிலிருந்து தன்னுடைய மொழிபெயர்ப்பு வித்தியாசமாக அமைந்திருப்பதை சுட்டிக்காட்ட முனைகிறார். முதலாவதாக மொழிபெயர்த்த போப். மூலத்திலுள்ள பக்திப் பாடுபொருளை விளக்கியே மொழிபெயர்த்துள்ளார் என்ற விமர்சனமும் நிலவுகிறது. ஏனைய எல்லா மொழிபெயர்ப்புகளிலும் செய்யுளில் உள்ள கவிநயம், ஓசைநயம், இசைநயம் முரண்படுவது தொடர்பில் சுட்டிக்காட்டப்படுவதுடன் இப் பலவீனங்களை கடந்து தன்னுடைய மொழிபெயர்ப்பு வெற்றிகண்டிருப்பதாக தன்னம்பிக்கையோடு தெளிவுறுத்தினார். தனது ஆசான் சங்க இலக்கியங்களையும், அற இலக்கியங்களையும் உணர்ச்சி ததும்ப கற்பித்தமையை அடிக்கடி நினைவு கூரும் தோமஸ், தமிழ் மொழியின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றமை சிறப்பம்சமாகும்.

திருக்குறளின் சிறப்பு பற்றியும், தமிழர்களின் மாண்பு பற்றியதாகவுமே மாநாட்டில் இவரது சிறப்புரை இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. பேராளர்கள் அனைவரையும் கவர்ந்ததும் அனைவராலும் பாராட்டப்பட்ட உரையாகவும் தோமஸின் உரை அமைந்திருந்தது. இவரது உரை அரங்கில் குழுமியிருந்த தமிழர்களையும், தமிழ் உணர்வாளர்களையும் ஆச்சரியப்படுத்தியது மட்டுமல்லாமல் மகிழ்ச்சியில் ஆழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து மலேசிய, தென்னிந்திய ஊடகங்கள் இவரை பெரிதும் ஆர்ப்பரித்துக்கொண்டன. பொதுவாக நிகழ்வோடு இணைந்திருந்த அத்தனை




ஊடகங்களும் இவர் பற்றிய செய்தியை அவ்வப்போது வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. 11ம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு ஏற்பாட்டின் ஓர் அங்கமாய் நிகழ்ந்த இந்திய தமிழர்களின் குரலாக விளங்கும் தமிழ் மலர் இதழும் மிக முக்கியத்துவத்தோடு இவர் பற்றிய செய்தியை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ் அறிமுகத்தோடு நிகழ்வின் இறுதிவரையும் மிகுந்த நட்புடன், மிக நீண்ட நாட்கள் பழகியதற்கு ஒப்பாக இருவருக்குமிடையே உரையாடல் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. வருகைதந்த அனைவரிடத்திலுமே மிக நட்போடு இவர் பழகிய விதம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. தனது திருக்குறள் மொழிபெயர்ப்பு நூலையும் அன்பளிப்பு செய்தார். நிகழ்வின் நிறைவின் பின்னர் கவலையுடன் விடைபெற்றார். தொடர்ந்து மின்னஞ்சல், புலனம் ஊடாக நட்பு தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது. திருக்குறளை ஆங்கில மொழிப்பெயர்ப்பில் வாசித்து அறிகிறேன்.

தோமஸ் உடனான இந்த நட்பும் அறிமுகமும் கனடா அறிஞரான பிரெண்டா பெக் அம்மையாருடன் (1940) பழகிய நாட்களை ஞாபகப்படுத்துகிறது. ஐந்து வருடங்களுக்கு முன்னர் கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி எஸ்.ஜெயசங்கர் ஊடாகவே பிரெண்டா பெக் அம்மையாரின் அறிமுகம் கிட்டியது. பொன்னர் சங்கர் கலையோடு தொடர்புபட்ட தமிழகத்தில் கொங்கு வட்டார பண்பாட்டை ஆய்வு செய்தவர். இலங்கையில் மலையகத்தில் மாத்திரம் பயில்நிலையிலுள்ள பொன்னர் சங்கர் கலை வடிவம் அண்ணன்மார் சாமி கதை எனும் மகுடத்தில் தமிழகத்தில் நோக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. அண்ணன்மார் சாமி கதை மூன்றாவது இதிகாசமாக அங்கீரிக்கப்படல் வேண்டும் என்பதற்கு தனது கருத்துநிலை சார்ந்த வாதத்தை முன்மொழியும் எழுத்துக்களை அவரது படைப்புகளில் அவதானிக்கலாம். கனடாவை பூர்வீகமாகக் கொண்ட அம்மையார் இந்தியாவில் கொங்கு மண்டலத்தில் நீண்ட காலம் தங்கியிருந்து பொன்னர்சங்கர் உண்மை சம்பவம் தொடர்பில் ஆராய்ந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனது வாழ் நாளில் அறுபது வருடங்களுக்கு மேலாக இத்துறை தொடர்பிலான ஆய்வுகளிலேயே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர். அண்ணன்மார் சாமி கதை, வலங்கையார் இடங்கையார் போன்ற எட்டு நூல்களுடன் அறுபதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் ஊடாக தமிழர் பண்பாட்டு பெருமைகளை உலகத் தரத்தில் எடுத்துரைத்த பணி போற்றுதற்குரியது. சிறு வயதில் தனது தந்தையாருடனான சுற்றுலாவில் இணைந்திருந்த நிலையிலேயே கோயம்புத்தூருக்கான அம்மையாரின் முதல் பயணம் அமைந்திருந்தது. ஒக்ஸ்போர்ட், சமர்வில் கல்லூரியில் (1964) மானுடவியல் உயர் பட்டத்துக்கு ஆய்வு செய்வதற்காகவே அம்மையாரின் தமிழகத்துக்கான மீள் வருகை அமைந்திருந்தது.

கோவை மாவட்டம், ஓலப்பாளையம் எனும் ஊரில் தங்கியிருந்து தமிழ் கற்றுள்ளார். 1965இல் இராமசாமி, பழனிச்சாமி ஆகிய கிராமத்துப் பாடகர்கள் பொன்னர் சங்கர் கதையை பாடுவதைக் கேட்டுள்ளார். பிரெண்டாபெக் அம்மையார் 38 மணித்தியாலங்களுக்கு மேலாக ஒலிப்பதிவு செய்து ஆவணப்படுத்தியுள்ளார். மேலும் இவ் வட்டாரத்தில் இருந்து ஆயிரங்கணக்கான நாட்டார் பாடல்கள், நாட்டார் கதைகளை சேகரித்து தனது ஆய்வினை வியாபித்துக்கொண்டார்.

கிழக்கு பல்கலைக்கழகம் 2018இல் நடாத்திய ஆய்வரங்கில் அதிதியாக கலந்துக்கொள்வதற்காக வருகைதந்த சந்தர்ப்பத்திலேயே இலங்கையில் மலையகத்தில் மாத்திரம் பொன்னர்சங்கர் கூத்தாக அரங்கேற்றப்படும் நிலையை அறியும் பொருட்டு அவரின் மலையக வருகை அமைந்திருந்தது. இவ் வருகையோடு கலாநிதி எஸ்.ஜெயசங்கரும் இணைந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மூன்று பொழுதுகள் அம்மையாருடன் இணைந்து மேற்கொண்ட கள விஜயங்கள் இத் துறையில் பல அனுபவங்களை உள்வாங்கிக்கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தது. ஆரோக்கியமான கலந்துரையாடல், தாய்க்கு ஒப்பான நட்பின் அறிமுகம் என்றவாறு அம்மையாருடனான தொடர்பு கிட்டியது. அதன் விளைவாகவே பொன்னர் சங்கர் கதை பற்றிய புரிதல் இலகுவாக ஏற்பட்டது. பொன்னர் சங்கர், மரபும் மாற்றமும் எனும் தலைப்பில் என்னால் ஆய்வுக்கட்டுரையை எழுதுவதற்கு ஆதாரங்கள் கிட்டியமையும் குறிப்பிடத்தக்கது.

பிரெண்டா பெக் அம்மையாரின் நட்பு உருவான சந்தர்ப்பத்தைப் போல் தோமஸ் அவர்களுடனான நட்புக்கான வாய்ப்பையும் உணர்ந்தேன். இந் நினைவுகளையும் மீட்டிப் பார்த்தவாறே பயணிக்கையில் திடீரென நாம் பயணித்த வண்டி நிறுத்தப்பட்டது. இவ்விடம்தான் மலேசியாவின் சுதந்திர சதுக்கம் என போலினால் (வழிகாட்டி) அறிவுறுத்தப்பட்டது.

*பயணம் தொடரும்...*

# படித்ததும் பகர்வதும் 160





சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### முச்சக்கர வண்டிச் சாரதிகளே!

இன்றைய நவீன காலத்தில் 'த்ரீவீலர்' (Three Wheeler) என்று சாதரணமாக அழைக்கப்படுகின்ற முச்சக்கர வண்டிகளின் பாவனை பெருமளவில் அதிகரித்துள்ளதை காணலாம். நகரப் பிரதேசங்களில் மட்டுமன்றி கிராமப் பகுதிகளிலும் முச்சக்கர வண்டிகள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. துரித பயணத்துக்காகவும், வசதிக்காகவும் முச்சக்கர வண்டிகள் பாவிப்பதனை நடுத்தர வர்க்கத்தினர் மட்டுமன்றி வசதி வாய்ப்புகள் கூடியவர்களும் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். முச்சக்கர வண்டிகளை பயன்படுத்துவதில் ஆர்வம் செலுத்துபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தே வருகின்றது.

இத்தகைய நிலைமையில் முச்சக்கர வண்டி ஓட்டுனர்களின் பொறுப்பும் கடமையும் பலமடங்கு அதிகரித்துக் காணப்படுகிறது. ஏனெனில் முச்சக்கர வண்டிகளில் பயணம் செல்வோர் தமது முழுப் பயணத்துக்கும் அவர்களிலேயே தங்கியிருக்கின்றனர். அவர்களையே நம்பியிருக்கின்றனர் என்றும் கூட குறிப்பிடலாம். இந்த நம்பிக்கையைக் காப்பது முச்சக்கர வண்டி ஓட்டுனர்களின் மீதுள்ள தார்மீகக் கடமையாகும்.



பல்வேறு விடயங்களில் அவர்களது கடமையும், பொறுப்பும் மிகவும் முக்கியத்துவம் பெறுவதை எவராலும் மறுக்க இயலாது. தமது வண்டியில் சவாரிக்காக வருவோரிடம் இன்முகத்துடனும் பணிவுடனும் நடந்து கொள்ளுதல், அவர்களோடு கண்ணியமான முறையில் பேசுதல், அவர்களுக்கும் அவர்களது உடமைகளுக்கும் பாதுகாப்பாக இருத்தல், அவர்களின் வயது, உடல்நிலை, தேவை போன்றவற்றைப் புரிந்துகொண்டு, அதற்குப் பொருத்தமான முறையில் வண்டியை செலுத்துதல், தமது சக்திக்கும் ஆற்றலுக்கும் ஏற்றவகையில் அவர்களது பயணம் முடியும் வரை முழுமையான பாதுகாப்பை வழங்குதல், அவர்களது முன்னிலையில் புகைபிடித்தல் போன்ற தவறான செயற்பாடுகளை செய்யாதிருத்தல் போன்ற இன்னோரன்ன விடயங்களில் முச்சக்கர வண்டிச் சாரதிகள் அதி கூடிய பொறுப்புடனும் நடந்துகொள்ளுதல் வேண்டும்.

தமது முச்சக்கர வண்டியில் பயணம் செய்ய வரும் வயோதிபர்கள், நோயாளிகள், மாணவ மாணவிகள், சிறுவர்கள் விடயத்தில் விஷேட கவனம் செலுத்துதல் அவசியம். அவரவரது நிலைமைக்கும், தேவைக்கும், உடல் நிலைக்கும் ஏற்ற வகையில் அவர்களோடு சுமுகமாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

இப்போதெல்லாம் பல்வேறு விடயங்களுக்காக இளம் பெண்கள் வெளி வேலைகளுக்கு செல்வது சாதாரணமாக உள்ளது. இதனால் இவர்கள் அதிக அளவில் முச்சக்கர வண்டிகளில் செல்ல வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கின்றது. இவ்வாறு இளம் பெண்கள் தமது வண்டிகளில் பயணிக்கும்போது அவர்களது கண்ணியத்துக்கும், மரியாதைக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையிலும், அவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாதவாறும் நடந்து கொள்வது கட்டாயமாகும். அத்துடன் ஒரு தந்தையைப் போன்று, ஒரு சகோதரனைப் போன்று அவர்களது பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதும் அவசியமாகும்.

'முச்சக்கர வண்டிச் சாரதி' என்பதை தமது தொழிலாக கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் அதனை ஒரு மக்கள் சேவையாகக் கருதி, இவ்விடயங்களில் கூடிய கவனம் செலுத்தி, பொறுப்புடன் செயற்பட்டு தமது வண்டிகளில் பயணம் செல்வோருக்கு எல்லா வகையிலும் நல்லவர்களாக, அவர்களது அபிமானத்தை வெல்பவர்களாக செயல்பட முன் வர வேண்டும்.

## நெஞ்சுக்கு நீதி

*முச்சக்கர வண்டிகளின் தேவைகளோ இன்றதிகம்*
*முக்கியமாய் வேண்டுமதன் சாரதிகளில் விவேகம்*
*எச்சரிக்கை மட்டுமன்றி பணிவு பரிவோடு பாசம்*
*எப்போதும் இருப்பதுதான் பயணிகளின் யோகம்*

## நீத்தார் நினைவு

### நளீம் ஹாஜியார்

ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம், இக்ரா தொழில்நுட்பக் கல்லூரி, கல்வி மறுமலர்ச்சி இயக்கம் என்பவற்றை நிறுவி இலங்கை முஸ்லிம்களின் உயர் கல்வி வளர்ச்சிக்கு இணையில்லா பங்களிப்புக்களை வழங்கிய வள்ளல் என்ற பெருமைக்குரியவர் நளீம் ஹாஜியார் என்பது எல்லோரும் நன்கு அறிந்த விடயம்.



ஆனால் அவரது தேசிய பங்களிப்புகள் பற்றி பெருமளவில் பலரும் அறியாதிருக்கின்றனர். அவற்றில் ஒரு சில இங்கே.

இலங்கைக்கு அதிக வருமானம் ஈட்டித் தரும் துறையாக இரத்தினக்கல் துறை மாறுவதற்கு அவசியமான ஆலோசனைகளையும் திட்டங்களையும் இலங்கை அரசுக்கு வழங்கியவர் நளீம் ஹாஜியார். இவரது ஆலோசனையின்படியே 1970ல் இலங்கை அரசு மாணிக்கக்கல் ஏற்றுமதியை ஒழுங்கமைக்கும் நோக்கில் இலங்கை இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தினை தோற்றுவித்தது. இதனாலேயே, அதன் உத்தியோகபூர்வ திறப்பு விழாவிற்கு அரசாங்கம் நளீம் ஹாஜியாரை விஷேட அதிதியாக அழைத்து கௌரவித்தது.

1974ஆம் ஆண்டில் இலங்கை மிகப் பாரதூரமான வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினையை எதிர்நோக்கியது. இப்பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கு அரசாங்கத்துக்கு சுமார் 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான தனது வெளிநாட்டு செலாவணியை அன்பளிப்புச் செய்தார். "நாட்டின் உற்பத்தித் திட்டத்துக்கான தன்னுடைய 'பணிவான அன்பளிப்பு' எனக் கூறி பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் அன்றைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் தனது அன்பளிப்பைக் கையளித்தார். இலங்கை வரலாற்றில் முதன்முறையாக சாதாரண பிரஜையொருவர் அரசாங்கத்துக்கு வெளிநாட்டு செலாவணி வழங்கியமை வரலாற்று முக்கியத்துவம் பெற்ற நிகழ்வாகப் பதியப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்திலான மற்றுமொரு பொது நலப் பணியாக நளீம் ஹாஜியாரின் "சுசரித்த" கட்டட அன்பளிப்பு அமைகிறது. முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச உள்ளூராட்சி அமைச்சராக இருந்த காலத்தில் அதன் பிரதான கட்டடமான, கொழும்பு 12ல் "சுசரித்த" கட்டடத்தைப் நிர்மாணித்துக் கொடுத்தார்.

நாட்டின் விளையாட்டுத் துறை வளர்ச்சிக்காக நளீம் ஹாஜியார், நாடளாவிய ரீதியில் பாடசாலைகளுக்கு விளையாட்டு மைதானங்களை நிர்மாணித்துக் கொடுத்ததோடு, அவசியமான விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்தார். பேருவளையில் "நளீம் ஹாஜியார் விளையாட்டு அரங்கு" என்ற பெயரில் பொது விளையாட்டரங்கமொன்றை அமைத்தார். இதனை அப்போதைய பிரதமர் டட்லி சேனாநாயக்க திறந்து வைத்தார்.

கொழும்பு "சுகததாச" உள்ளக விளையாட்டரங்கின் நிர்மாணப்பணிகளுக்கு ஐந்து லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை வழங்கினார். எஸ். எஸ். ஸி விளையாட்டரங்கின் அபிவிருத்திக்காக பண உதவிகள் செய்ததோடு, "பைரஹா பெவிலியன்" என்ற பெயரில் அங்கு பார்வையாளர் கூடமொன்றை அவர் கட்டிக் கொடுத்தார்.

இவ்வாறு நளீம் ஹாஜியார் தேசத்திற்காகச் செய்த பொதுப் பணிகளுக்காக, தேசிய மட்டத்தில் பல கௌரவப் பதவிகளும் பட்டங்களும் அவரைத் தேடி வந்தன. புகழையும் கௌரவத்தையும் விரும்பாத அவர், அவற்றை கண்ணியமான முறையில் புறக்கணித்தார். முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன "பாரிய கொழும்பு பொருளாதாரக் கமிஷன்" அங்கத்தவர்களில் ஒருவராக நளீம் ஹாஜியாரை நியமிக்க முடிவு செய்து அவரிடம் அதனைத் தெரிவித்தபோது, தனக்கு அதை ஏற்றுக் கொள்வதில் உடன்பாடில்லை எனக் கூறி தவிர்ந்து கொண்டார்.


இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, இலங்கையின் தேசிய வீரர்கள் தினமொன்றில் அதி உயர் விருதினை வழங்கி நளீம் ஹாஜியாரை கௌரவப்படுத்த முயன்றபோது பணிவாக அதனையும் மறுத்த மாமனிதர் அவர்.

இனம், மொழி, பிரதேசம், நாடு என்ற எல்லைகளைக் கடந்து, தான் சம்பாதித்த செல்வத்தால் மக்களுக்கு காத்திரமான சேவைகளை செய்த ஓர் உன்னத ஆளுமை நளீம் ஹாஜியார். "ஜெம் கிங்" என்று புகழ் பெற்ற மாணிக்க மனிதர் நளீம் ஹாஜியார் இவ்வுலகைப் பிரிந்தாலும் என்றென்றும் மக்கள் மனதில் வாழ்வார்.

## புது வரவு

### 'வேறாகா வேர்கள்'

வலம்புரி கவிதா வட்டத் தலைவர் 'கவிமணி' நஜ்முல் ஹுசைன் தந்துள்ள சிறுகதைத் தொகுதி "வேறாகா வேர்கள்". பனித் தீ, இனி வரும் நாட்களெல்லாம், நஜ்முல் ஹுசைனின் நட்சத்திரக் கவிதைகள் எனும் கவிதை நூல்களை ஏற்கனவே வெளியிட்டுள்ள இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும்.




அரைப் பக்க சின்னச் சிறுகதை முதல் ஆறு பக்கங்களைக் கொண்ட சிறுகதை வரை 23 சிறுகதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. தென் இந்தியாவின் பிரபல பன்னூலாசிரியர், மறைந்த கவிஞர், ஏம்பல் தஜம்மல் முகம்மது இச்சிறுகதைகள் பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

"இந்த நூலில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு சிறுகதையும் ஏதேனும் ஒன்றை அழுத்தமாக போதித்து நம்மையும் தன்னுடன் சேர்த்து அழைத்துக் கொண்டு அதனதன் குறிக்கோளை நோக்கி வெற்றிகரமாகப் பயணத்தைத் தொடர்வது நமக்கு மகிழ்ச்சியையும் பயனையும் தருகிறது என்பதில் எந்த ஐயமும் இல்லை."

பிரபல மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் மு. சிவலிங்கம், தனது வாழ்த்துரையில் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்.

"நஜ்முல் ஹுசைனின் கதைகள் யாவும் நேர் கொண்ட இலட்சியப் பார்வையாகவே தோன்றுகின்றன. எல்லாமே மனிதத்தைப் பாடும் கவிதைகளைப் போன்றே உள்ளன. மனிதாபிமானமே பேசு பொருளாக எல்லா கதைகளுக்குள்ளும் மின்னுகின்றன. மதத்தின் போதனைகளை மார்க்கச் சிந்தனைகளை வாசகனிடம் திணிக்க வராமல் அதன் தத்துவார்த்தங்களை கதை மாந்தர்கள் ஊடாகவே சொல்லிப் போகின்றார். இது கதை சொல்லும் யுக்தியாகும்.

இச்சிறப்பு இவருக்கு கை வந்த கலையாகவுள்ளது. கதைக்குள் நடமாடும் கதா பாத்திரங்களின் சுவாரஸ்யமான உரையாடல்கள் வாசகனை குதூகலப்படுத்திக்கொண்டு செல்கின்றன. சமூகத்தை விசாலித்துப் பார்க்கும் ஞானம் கொண்ட இப் படைப்பாளன் மனிதனை மனிதனுக்கே இனம் காட்டுவதற்கும், மனிதரை மனிதர் புரிந்துக் கொள்ளச் செய்வதற்கும், மனிதரை மனிதர் நெருங்கி வரச் செய்வதற்கும் பாதை வகுத்துச் செல்கின்றார்." நூலாசிரியர், தான் சிறுகதைகள் எழுதும் நோக்கத்தை இப்படி தெரியப்படுத்தியிருக்கிறார், "நான் சிறு வயதில் வாசித்த நூல்கள், சஞ்சிகைகள் நாம் எப்போதுமே பிறருக்கு நன்மை செய்ய வேண்டும், நாங்கள் நல்லவர்களாக வாழ வேண்டும் என்பதை நிறையவே போதித்துள்ளன. அவையே எனது கதைகளின் பெரும்பாலான கருப்பொருளாக அமைகின்றன. எனது எழுத்துக்கள் எப்போதுமே எவரையும் தவறான பாதைகளில் அழைத்துச் சென்று விடக்கூடாது என்பதில் நான் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றேன்."

இந்நூலின் சிறுகதைகளை வாசிக்கத் தொடங்கும்போதே, 'முழுமையாக நூலை வாசித்து முடிக்க வேண்டும்' என்ற எண்ணம் எழுவது ஆசிரியரின் எழுத்துக்கு கிடைத்துள்ள வெற்றியாகும்.

நூல்: 'வேறாகா வேர்கள்', ஆசிரியர்: என். நஜ்முல் ஹுசைன், முதற்பதிப்பு: மார்ச் 2023, பக்கங்கள்: xxi + 87, வெளியீடு: ஸ்ரீ லங்கா இஸ்லாமிய கலை இலக்கிய மன்றம், விலை: ரூபா 650/=, தொடர்புகளுக்கு: 0741438447

## அன்றும் இன்றும்

### பழிதீர்த்ததா இந்திய அணி?

கிரிக்கெட் இரசிகர்கள் ஆசியக் கிண்ண இறுதிப்போட்டி முடிவு பற்றியே இன்னும் பேசிக் கொண்டிருக்கின்றனர். இலங்கை அணியை வெறும் 50 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கச் செய்த இந்திய அணியின் அசாத்தியத்தையும், முகமது சிராஜின் அபார பந்துவீச்சையும் ஓஹோ எனப் புகழ்கின்றனர்.

ஆனால், இதேபோன்ற ஒரு நிலைமையை இந்திய அணிக்கு 23 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை ஏற்படுத்தியது என்பது இன்றைய இளைய தலைமுறையினரில் பலர் அறியாத விடயமாகும்.




2000ஆம் ஆண்டு சார்ஜாவில் நடைபெற்ற 'கொக்கா கோலா' (Coca Cola) சாம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியா – இலங்கை அணிகள் மோதின. இலங்கை அணி ஜெயசூர்யா தலைமையிலும், இந்திய அணி சவுரவ் கங்குலி தலைமையிலும் களமிறங்கின.

இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்ப ஆட்டக்காரராக வந்த அணித் தலைவர் ஜெயசூர்யா, இந்திய அணி பந்துவீச்சாளர்களை வெளுத்து கட்டினார். 161 பந்துகளில் 21 பவுண்டரிகள், 4 சிக்சர்கள் உட்பட 189 ஓட்டங்களைக் குவித்தார். கூடவே ரஸல் ஆர்ணல்ட் 52 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார். இதனால் இலங்கை அணி 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 299 ஓட்டங்களைப் பெற்றது. வெற்றிக்கு 300 ஓட்டங்கள் என்ற கடினமான இலக்கை நோக்கி, இந்திய அணியின் கங்குலி சச்சின் ஆரம்பஜோடி களமிறங்கியது. ஆனால் கங்குலி 3 ஓட்டங்களிலும், சச்சின் 5 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து வந்த யுவராஜ் சிங் 3, வினோத் காம்ப்ளி 3, பதானி 9, ஓட்டங்களிலும் தமது விக்கட்டுகளைப் பறிகொடுத்தனர். இந்திய அணியில் ரொபின் சிங் மட்டுமே 11 என்ற இரட்டை இலக்கத்தில் ஓட்டங்கள் பெற்றார். இறுதியில் இந்திய அணி 26.3 ஓவர்களில் 54 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கட்டுகளையும் இழந்தது. வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் 5 விக்கட்டுகளையும், சுழல்ப்பந்து வீச்சாளர் முத்தையா முரளீதரன் 3 விக்கட்டுகளையும் வீழ்த்தினர். இலங்கை அணி 245 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இந்திய அணி அன்று 2000ம் ஆண்டில், சாஜாவில் அடைந்த அவமானகரமான தோல்விக்கு, 23 ஆண்டுகளுக்கு பின் இப்போது இலங்கை அணியை அதன் சொந்த மண்ணில் வைத்து பழிதீர்த்துள்ளதாக பல இந்திய கிரிக்கட் இரசிகர்கள் கொண்டாடுகின்றனர்.

விளையாட்டில் வெற்றி தோல்வி என்பது சகஜம் தானே! புரிந்து கொள்வோம்!

---

# திருவள்ளுவத்தில் அதிகாரங்களை பகிர்ந்தளித்தல்



## திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் 56



கே. பத்மானந்தன்

*செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன்பு அல்லது ஒரு நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு முன்பு முகாமைத்துவமானது அவ் வேலைத்திட்டத்துக்குத் தேவையான அல்லது அந்நிறுவனத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான பொருள் (money), ஏற்ற கருவிகள் (means), ஏற்ற காலம் (time), பயன்படுத்தப் போகும் செயல்முறை அல்லது தொழில் நுட்பம் (execution), அவ் வேலையை செய்ய உகந்த இடம் அல்லது அந் நிறுவனத்தை ஆரம்பிக்க உள்ள இடம் (place) ஆகிய ஐந்தையும் குறையில்லாமல் பிழையாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். இக் கருத்துகளை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாக விளக்குகின்றார்.*

### "பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும் இருள்தீர எண்ணிச் செயல்" (குறள்–675)

*ஒரு செயற்றிட்டத்தில் ஈடுபடுவதற்கு முன்பு அதற்குத் தேவையான பொருள் அல்லது நிதி, ஏற்ற கருவிகள் அல்லது சாதனங்கள், ஏற்ற காலம், மேற்கொள்ளப் போகும் செயல்முறை, உகந்த இடம் ஆகிய ஐந்தையும் குறையில்லாமல் சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் சிந்தித்து பார்த்துக் கொள்ள வேண்டியது செயற்றிட்ட முகாமையாளரின் பொறுப்பு என்கிறார் திருவள்ளுவர். எனவே திருவள்ளுவரினால் இங்கு கூறப்பட்டுள்ள விடயங்களைக் கருத்தில் கொள்ளாது செயற்படும் முகாமையாளரினால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு திட்டமும் அல்லது ஆரம்பிக்கப்படும் எந்த ஒரு நிறுவனமும் வெற்றிகரமாக அமையாது என்பதில் சந்தேகமில்லை.*

*இங்கு திருவள்ளுவர் பொருள் என்று கருதும்போது கெடும்பொருள் பெறும்பொருள் என்று இருவகையினைக் குறிப்பிடுகின்றார். அதாவது கெடும் பொருள் என்பது நட்டமாகவும் பெறும்பொருள் என்பது இலாபமாகவும் கருதப்படலாம். அதேபோன்று கருவி எனும்போது தன்னிடம் இருக்கும் கருவிகளையும் போட்டியாளரிடம் இருக்கும் கருவிகளை கருதும்படியும் கூறுகின்றார். காலம் எனும்போது அது தனக்கு உதவும் காலமாகவும் போட்டியாளருக்கு உதவும் காலமாகவும் கருதப்படவேண்டும் என்கிறார். அதேபோன்று வினை எனப்படும் செயல்முறையைக் கூடத் தான் செய்யும் செயல்முறை மற்றும் போட்டியாளர் செய்யும் செயல்முறை என்று கொள்ள வேண்டும் என்கின்ற திருவள்ளுவர், இடம் என்று வருகின்றபோதும் கூட தனக்குரிய இடமாகவும் போட்டியாளருக்குரிய இடமாகவும் அதனைக் கொள்ள வேண்டும் என்கிறார்.*

*ஒரு நிறுவனத்தின் முகாமைத்துவமானது ஒரு செயற்றிட்டத்தைத் தொடங்க முன் அதனால் ஏற்படக்கூடிய சாதக, பாதகங்களை அல்லது எடுத்துக்கொண்ட திட்டத்துக்கு இழப்பை அல்லது தோல்வியை அல்லது வெற்றியை ஏற்படுத்தக் கூடிய காரணிகளை கவனத்துடன் பகுப்பாய்வு செய்ய வேண்டும் (situation analysis). அதேபோல் ஒரு திட்டத்தை அல்லது நிறுவனத்தை ஆரம்பிப்பதற்குத் தேவைப்படும் பொருள், ஏற்ற கருவி, ஏற்ற காலம், மேற்கொள்ளப் போகும் செயல்முறை, உகந்த இடம் என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய காரணிகளையும் முகாமைத்துவம் ஆழமாகப்பகுப்பாய்வு (indepth analysis) செய்ய வேண்டும்.*

*அதாவது எதிர்வுகூறல் (Forecasting,) தீர ஆய்தல் (Deliberation), மதிப்பீடு செய்தல் (Valuation), பாகுபாடு செய்தல் (Discrimination), நிர்ணயம் செய்தல் (Fixing), திட்டமிடல் (planning), எண்ணுதல் (Numbering), அளவிடல் (Measuring) மற்றும் கணக்கிடல் (Accounting) போன்ற விடயங்களை பொருள், ஏற்ற கருவி, காலம், மேற்கொள்ளப் போகும் செயல்முறை, உகந்த இடம் ஆகிய ஐந்தும் தொடர்பாக முகாமைத்துவம் கருத்தில் கொள்ளும்போது நிறுவனத்தில் அல்லது செயற்றிட்டத்தில் ஏற்படக்கூடிய பிழைகள், தவறுகள் மற்றும் இழப்புகளைத் தடுக்க உதவும்.*

*மேலும் ஒரு செயற்றிட்டத்தை அல்லது தொழிலை ஆரம்பிப்பதற்குத் தேவைப்படும் காரணிகளின் தொடர்ச்சித்தன்மை அல்லது ஒழுங்கமைப்பு (Sequence of factors) அவதானிக்கப்பட வேண்டிய இன்னுமொரு முக்கிய விடயமாகும். இங்கே திருவள்ளுவர் செயற்றிட்டம் ஒன்றுக்கு அல்லது வேலை ஒன்றுக்குத் தேவையான காரணிகளாகிய பொருள், ஏற்ற கருவி, ஏற்ற காலம், ஏற்ற செயல்முறை, ஏற்ற இடம் என்பவற்றை தெளிவாக ஒழுங்கு படுத்தியி ருக்கின்றார்.*

*ஒரு செயற்றிட்ட முயற்சியினூடாக உற்பத்தி செய்யப்படவேண்டிய பொருளே உற்பத்திக்குப் பொருத்தமான ஏற்ற கருவிகளை தீர்மானிக்கிறது. அதேபோல் உற்பத்திக்குப் பொருத்தமான ஏற்ற காலத்தை உற்பத்தி செய்யப்படவேண்டிய பொருளும் பொருத்தமான கருவிகளும் சேர்ந்து தீர்மானிக்கின்றன. இவ்வாறே பொருளும், பொருத்தமான கருவிகளும், பொருத்தமான காலமும் சேர்ந்து உற்பத்திக்குப் பொருத்தமான ஏற்ற பயன்படுத்தப்பட வேண்டிய செயல்முறையைத் (Mode of Operation) தீர்மானிக்கின்றன. பொருளும் பொருத்தமான கருவிகளும் பொருத்தமான காலமும் பயன்படுத்தப்படப் போகும் செயல்முறையும் சேர்ந்து தொழிற்சாலை அமைவதற்கு ஏற்ற இடத்தை தீர்மானிக்கின்றன.*

*இந்த உற்பத்தி தொடர்பான முறையான ஒழுங்கமைப்பை அதாவது உற்பத்தி முகாமைத்துவம் (Production Management) பற்றிய கருத்துக்களை திருவள்ளுவர் சிறப்பாக இக்குறளில் வெளிப்படுத்துகிறார்.*

*ஒரு செயற்றிட்டத்தினை தொடங்குவதற்கு முன் செயற்றிட்ட முகாமையாளர் அதனோடு தொடர்புடைய பிரச்சினைகளை இனம் கண்டு கொள்ள வேண்டும். அவ்வாறு இனம் கண்டு கொண்ட பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் காணாது அல்லது அவற்றைக் கண்டு கொள்ளாது செயற்றிட்டத்தினை ஆரம்பித்தால் அது தோல்வியில் முடிவடையும். இக்கருத்துக்களை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் வலியுறுத்துகின்றார்.*

### "தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும் ஏதப்பா டஞ்சு பவர்" (குறள் 464)

*இழிவு தருவதாகிய குற்றத்துக்கு அஞ்சுகின்ற ஒருவர் தெளிவு இல்லாத செயலைத் தொடங்கமாட்டார் என்கிறார் திருவள்ளுவர். சிக்கல்களையும் ஏற்கனவே உள்ள மற்றும் எதிர்பார்க்கப்படும் சிக்கல்கள் அனைத்தையும் நீக்கிய பின்னரே ஒரு திட்டத்தை தொடங்க வேண்டும். தெளிவில்லாத செயற்றிட்டத்தைத் தொடங்கிவிட்டால் தொடக்கம் முதலே மனப்பயம் உண்டாகி அது பின்னர் தோல்வியில் முடிந்தால் பொருள் இழப்பும் இழிவும் உண்டாகும்.. அத்தோடு காண்பவர் கேட்பவர் எல்லோரும் அந்தச் செயற்றிட்டத்தைத் தொடங்கியதற்காகக் குற்றம் சாட்டுவார்கள் என்கிறார். எனவே செயற்றிட்டம் பற்றிய தெளிவான அறிவு வேண்டும். அதேபோன்று பின்னாளில் பிறரால் தூற்றப்படும் நிலைமைக்கு உள்ளாகாத செயற்றிட்டமாக இருக்க வேண்டும் இவ்வகையான உகந்த சூழல் நிலவாவிட்டால் திட்டத்தைத் தொடங்கக் கூடாது.*

*அதேபோன்று ஒரு செயற்றிட்டத்தைத் தொடங்குவதற்கு முன்பு செலவு, வருமானம், லாபம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஆரம்பிக்க வேண்டும் என்று திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் வலியுறுத்துகின்றார்.*

### "அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும் ஊதியமுஞ் சூழ்ந்து செயல்" ( குறள் 461)

*அதாவது கணக்கு வழக்குப் பார்த்துச் செயற்றிட்டத்தைத் தொடங்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். உண்மையில் வரவு செலவு இலாபம் என்று பொருள் அளவு மட்டத்தில் மட்டும் நிறுத்திவிடாது அதற்கும் அப்பால் நன்மை, தீமை, மிஞ்சுவது எல்லாவற்றையும் ஆராய்ந்து செயல்பட வேண்டியது திட்ட முகாமையாளரின் கடமையாகும். சூழ்ந்து செயல் என்பதற்கு ஆராய்ந்து செய்க என்று பொருள்.*

*அதாவது சீர்தூக்கிப் பார்ப்பது. செயற்றிட்டம் ஒன்றின் பயன் என்பது நிகழ்காலம் எதிர்காலம் என்ற இரண்டையும் சார்ந்து இருப்பதனால், தீர ஆராய்ந்த பின்பே திட்டத்தை ஆரம்பிக்கத் துணிய வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். ஏற்படக்கூடிய இலாப நட்டங்களை அல்லது நன்மை தீமைகளைத் துல்லியமாகக் கணிக்க முடியாவிட்டாலும் அந்தத் திட்டத்தின் பலம் பலவீனம் என்பதனை முன்னரே அறிந்து கொள்ள முடியும்.*

*இதனையே சாத்திய அறிக்கை (Feasibility Study) என்பர். இதேபோன்று ஏற்படக்கூடிய இலாப நட்டங்களையும் செலவு பயன் பகுப்பாய்வு (Cost Benefit Analysis) செய்வதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். ஆகவே ஆரம்பிக்க இருக்கின்ற திட்டத்தின் மூலம் ஏற்படக்கூடிய அழிவு, ஆக்கம், கிடைக்கக் கூடிய பயன் ஆகிய மூன்றையும் இத்தகைய ஆய்வுகளைச் செய்து சீர்தூக்கிப் பார்த்து ஏற்புடையதாக இருந்தால் மட்டுமே அந்தத் திட்டத்தைத் தொடங்க வேண்டும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும்.*

*(தொடரும்)*

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 82

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | ✱ | 04 | 05 |
| 06 | ✱ | 07 | 08 | 09 | ✱ |
| 10 | 11 | 12 | ✱ | 13 | 14 |
| ✱ | ✱ | ✱ | 15 | ✱ | 16 |
| 17 | 18 | ✱ | 19 | 20 | 21 |
| 22 | ✱ | 23 | 24 | ✱ | ✱ |

பெயர் ..........................................................
வகுப்பு ..........................................................
தொலைபேசி இல ..........................................................
பாடசாலை பெயர் ..........................................................
வதிவிட முகவரி ..........................................................
..........................................................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) உலகில் நெல் போன்று அதிகளவில் விளைகின்ற தானியம் இது. உலக மக்களால் விரும்பி உண்ணப்படுகின்ற பல்வேறு உணவுப்பண்டங்களும் இத்தானியத்தின் மாவில் இருந்தே தயாரிக்கப்படுகின்றன.
(4) நாம் குடியிருக்கின்ற இல்லத்தை இப்பெயரிலும் குறிப்பிடலாம்.
(7) ஆடு, கரடி, நாய், பூனை, யானை போன்ற ஏராளமான மிருகங்களின் இளமைப்பருவ மரபுச் சொல் இது. (தலைகீழான சொல்)
(10) சேற்றுநிலங்கள் மற்றும் ஈரலிப்பான புல்நிலங்களில் வாழ்கின்ற சிறுபுழு போன்ற பிராணி இது. மனிதரில் மாத்திரமன்றி உயிரினங்கள் பலவற்றிலும் ஒட்டிக்கொண்டு இரத்தத்தை உறிஞ்சிக்குடித்து உயிர்வாழும் பிராணி இது. (தலைகீழான சொல்)
(13) இதயத்தில் இருந்து உடலின் பாகங்களுக்குச் செல்கின்ற இரத்தக்குழாய்கள் இப்பெயர் பெறும். (தலைகீழான சொல்)
(17) சுற்றிவர நீரால் சூழப்பட்டுள்ள நிலப்பிரதேசம் இப்பெயர் பெறும்.
(19) விவசாயத்துக்கும், மக்களின் குடிநீர்த் தேவைக்கும் உதவுகின்ற நீர்நிலை இது. (தலைகீழான சொல்)
(23) நாம் வாழ்கின்ற உலகம் (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(1) சுற்றிவர பாதுகாப்பு அரணிடப்பட்ட மாளிகை போன்ற வசிப்பிடத்தை இப்பெயரில் குறிப்பிடலாம். ஐரோப்பியர் அக்காலத்தில் இலங்கையில் காலடிபதித்த போது இவ்வாறான பாதுகாப்பு இருப்பிடங்களை கரையோரங்களில் நிர்மாணித்தனர். அக்கட்டடங்கள் இன்றும் உள்ளன.
(3) சுதந்திரம் இல்லாமல் ஒடுக்கப்பட்டவரை இப்பெயரில் குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(4) இது துளையிசைக் கருவி. ஆனால் இசைநிகழ்ச்சிகளில் இக்கருவி பயன்படுத்தப்படுவதில்லை. இக்கருவி பாம்பாட்டியின் கையில் இருக்கும்.
(14) எமது உடலுறுப்புகளில் முக்கியமானது இது. சுவையை உணர்வதற்கு, உணவை மெல்லுவதற்கு, பேசுவதற்கு என்றெல்லாம் இந்த உறுப்பு பயன்படுகின்றது.
(15) வில் மாத்திரம் இருந்தால் போதாது. எய்து கொள்வதற்கு இது முக்கியம்.
(17) அடுத்தவருக்கு அல்லது பிறஉயிர்களுக்கு இழைக்கின்ற தீங்கான காரியங்களைக் குறிக்கும் சொல்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 81

### விடைகள்

**இடமிருந்து வலம்**
01. விபத்து 06. கல் 08. காதணி 11. பல்லி
14. அடி 19. துளி 21. பன்றி

**மேலிருந்து கீழ்**
01. வில்பத்து 02. பகல் 04. காது 05. அணில்
09. தடிமன் 13. கிலி 20. களி 21. பசு 23. கறி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 80

### பாராட்டு பெறுவோர்

**1. எம். அப்லல் அஹமத்**
தரம் 05, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**2. ஜெருஷன்**
தரம் 07, புனித அந்தோனியார் த.ம. வித்தியாலயம்
இல. 64/1, மாவத்தை லேன், கொழும்பு - 14.

**3. ஹிமா மர்யம் முஜாஹித்**
தரம் 07E, தாருல் உலூம் ம.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரீமலுவ, ரம்புக்கண.

**4. ஹம்தா மர்யம் முஜாஹித்**
தரம் 03, தாருல் உலூம் ம.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரிமலுவ, ரம்புக்கண.


**5. வண. எம். ஆர்யசாந்த**
தரம் 05, தர்மபால பிரிவென,
பெல்லன, அகலவத்தை.

**6. தி. சயந்தவி**
தரம் 06, மட்/ வின்சன்ட் ம.உ. தேசிய பாடசாலை,
இல. 07, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

**7. பஹ்மா ருஷ்டி**
தரம் 09A, பென்ஹில் கல்லூரி,
இல. 12/22A, இளவத்துறை, கம்பளை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 82
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**வாய்மை: பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்**

***தெளிவுரை :***
*குற்றம் தீர்த்த நன்மையை விளைக்குமானால் பொய்யாச் சொற்களும் வாய்மை என்று கருதத் தக்க இடத்தைப் பெறும்.*

## இவ்வார மழலை



K. Krishnaja

## எண்ணங்களை பூட்ட வேண்டாம்



முல்லா ஒரு புதிய சுவர் கடிகாரம் வாங்கி வந்தார். அதை சுவரில் மாட்ட, ஆணி அடிக்க அவரிடம் சுத்தியல் இல்லை. பக்கத்து வீட்டுக்காரரிடம் கேட்க வேண்டும். நேரம் இரவாகிவிட்டது. இந்நேரம் போய் கேட்பது சரியல்ல மறுநாள் காலையில் கேட்க்கலாம் என நினைத்து தூங்க சென்றார்.

மறுநாள் காலை எழுந்ததும் கடிகாரம் நினைவுக்கு வந்தது. பக்கத்து வீட்டுக்காரரிடம் சுத்தியல் கேட்க எண்ணியபோது அன்று வெள்ளிக்கிழமை என்பது நினைவுக்கு வந்தது! இன்று கேட்டால் ஏதாவது நினைத்துக்கொள்வாரோ? என எண்ணி அன்றும் சுத்தியல் வாங்கவில்லை.


மறுநாள் கேட்க முடிவு செய்து பக்கத்து வீட்டை நெருங்கினார். பக்கத்து வீட்டில் நிறைய விருந்தினர்கள் வந்திருப்பதை பார்த்து கேட்காமலே திரும்பினார். இப்படி பல காரணங்களினால் ஒரு வாரமாகியும் முல்லாவால் கடிகாரத்தை மாட்ட முடியவில்லை! அன்று வாங்கி வந்த கடிகாரம் அவரை பார்த்து சிரிப்பது போல இருந்தது. உடனே பக்கத்து வீட்டுக்கு சென்றார்.

பக்கத்து வீட்டுக்காரரைப் பார்த்து "உன் சுத்தியலை நீயே வைத்துக்கொள்! எனக்கு தேவையில்லை" பொல்லாத சுத்தியல்! நீ மட்டும் தான் சுத்தியல் வைத்திருக்கின்றாயா?" என கோபமாக பேசினார். பக்கத்துவீட்டுக்காரருக்கு ஒன்றும் புரியவில்லை. பரிதாபமாக முல்லாவை பார்த்தார்.

நம்மில் பலரும் இப்படித்தான் மனதில் உள்ளதை தெளிவாக பேசாமல் மனதில் ஒன்றை வைத்து பேசி பிரச்சினைகளுக்கு காரணமாகின்றோம்.

## உலகின் மிகப்பெரிய தீவுகள்

**1. கிரீன்லாந்து – Greenland:**



கிரீன்லாந்து ஆர்டிக் பெருங்கடலுக்கும் வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலுக்கும் இடைப்பட்ட கனடாவின் வடகிழக்கு பகுதியில் அமைந்து உள்ளது. இதுவே உலகின் மிகப்பெரிய தீவு ஆகும். இந்த தீவில் மனிதர்கள் வாழ்கின்றனர். பனிப்படலம் மற்றும் கனிம வளம் மிகுந்த தீவு இது.

**2. நியூ கினியா – New Guinea:**

நியூ கினியா தீவு அவுஸ்திரேலிய கண்டத்தின் அருகில் உள்ளது. இது அவுஸ்திரேலிய கண்டத்தைச் சார்ந்தது. ஒரே தீவு என்றாலும் பப்புவா, மேற்கு பப்புவா என இரண்டு கூறுகளாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த தீவுக்கு என பழங்கால வரலாறு உள்ளதாம்.





**3. போர்னியோ – Borneo:**

போர்னியோ உலகின் மூன்றாவது பெரிய தீவு. இந்த தீவை மலேசியா, இந்தோனேசியா, புரூணை ஆகிய நாடுகள் ஆளுமையை பகிர்ந்து கொண்டு உள்ளது. இந்த தீவு பழமையான மலைப்பகுதிகளை கொண்டு உள்ளது. மேலும் உலகின் பழமையான தாவரங்களும், விலங்குகளும் இந்த தீவில் அதிகம் உள்ளதாக கண்டறியப்பட்டு உள்ளது.

**4. மடகஸ்கர் – Madagascar:**



மடகஸ்கர் இந்திய பெருங்கடல் பகுதியில் ஆபிரிக்க கண்டத்தை ஒட்டி அமைந்து உள்ளது. இந்த தீவு குமரிக்கண்டத்தில் இருந்து பிரிந்து சென்று இருக்கலாம் என இன்று வரை வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் பலர் ஆதாரத்துடன் கருத்து தெரிவித்து வருகின்றனர். பாரி மன்னன் காலத்தில் முக்கியத்துவம் பெற்ற தேவவாக்கு விலங்கு என்ற தேவாங்கு இனம் இங்கு கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. தேவாங்கு பொதுவாக தமிழகம் மற்றும் இலங்கையில் மட்டுமே காணப்படும். அப்படிப்பட்ட லெமூர் வகை இனம் கண்டங்களின் இடப்பெயர்ச்சியின் போது இடம்பெயர்ந்து இருக்கலாம் என எண்ணப்படுகிறது.



**5. பாஃபின் தீவு – Baffin Island:**

பாஃபின் தீவு கிரீன்லாந்துக்கும் கனடாவுக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்து உள்ளது. பனிக்கட்டி பாறைகள் கிரீன்லாந்து, பாப்பின் தீவுகளில் முதலில் உருவாகி இருக்காலம் என கண்டறியப்பட்டு உள்ளது. இது கனடாவின் பெரிய தீவு என அழைக்கப்படுகிறது. உலகின் ஐந்தாவது பெரிய தீவு இதுவாகும்.

## மரணத்தை வென்ற உயிரினம்

இது ஒரு நிறமற்ற ஜெலி வகை மீன் ஆகும். அளவில் சிறியதான இம் மீன் ஆழ்கடலில் திரிந்துகொண்டிருக்கும். உயிரியல் ரீதியில் மரணமே இல்லாத உயிரினம் இதுதான்! மனிதர்கள் குழந்தை பருவத்துக்கு திரும்பிச் செல்ல விருப்பப்படுவது போல இது தன்னுடைய வாழ்க்கையை முடித்துக்கொள்ளாமல் மீண்டும் முதல் பகுதிக்கு திரும்புகிறது.

சிறிய கருவாக இதன் வாழ்க்கை தொடங்குகிறது. அந்த லார்வா நிலைக்கு லனுலா (planula) என்று பெயர். இந்த லார்வா வண்ணத்துப்பூச்சி உருவாவதற்கு முன்னர் புழு குளத்தில் அடைபடுவது போல தரையில் மூடிக்கொள்கிறது. அங்கிருந்து benthic polyps உருவாகிறது. இது தரையில் நிலைத்திருக்கும், இதன் உச்சியில் வாய் இருக்கும். தாவரம் போன்ற இதிலிருந்து தான் ஜெலி மீன்கள் வாழ்வின் அடுத்த கட்டமான ephyra உருவாகிறது. ephyra வளர்ந்து medusa என்ற மூப்பான இனப்பெருக்கம் செய்யும் திறன் கொண்ட ஜெலி மீன்கள் உருவாகிறது.

medusa நிலையை மனிதர்களுக்குப் பொருத்தினால் இதன் பின்னர் தேய்மானம் அடைந்து மரணம் ஏற்பட்ட வேண்டும். ஆனால், இவற்றுக்கு அவ்வாறு ஏற்படுவதில்லை. மாறாக இவை அதற்கு மேல் வளராமல் நிலைத்திருக்கும். காயம் காரணமாகவோ அல்லது உணவு இல்லாமல் போகும் சூழலியல் அழுத்தம் காரணமாகவோ இவை பாதிக்கப்பட்டால் மீண்டும் சிறிய திசுவாக மாறி லார்வா நிலைக்குத் திரும்புகின்றன.

இவ்வாறு இந்த ஜெலி மீன்கள் மரணமற்றவையாக இருக்கின்றன. இவற்றை மற்ற உயிரினங்கள் தாக்கி கொல்லலாம், ஆனாலும் மீண்டும் லார்வாவாக மாறும் திறனால் இவை அழியாமலிருக்கின்றன.

மரணத்தை கடந்த உயிர்கள் பிரபஞ்சத்தின் பிரமிப்புகள், அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் தங்களை தக்கவைத்துக்கொள்கின்றன.




## அறிந்து கொள்வோம்

- ★ பூச்சி இனங்களில் அறிவு மிக்கது எறும்பு.
- ★ உலகில் அதிக அளவில் கப்பல் போக்குவரத்து நடைபெறும் இடம், பனாமா கால்வாய்.
- ★ விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் பிறந்த நாடு, ஜெர்மனி.
- ★ திரவத்தங்கம் என்றழைக்கப்படுவது 'பெட்ரோலியம்'.
- ★ தபால்தலையை (stamp) வட்ட வடிவமாக வெளியிட்ட நாடு மலேசியா.
- ★ உடலில் ரத்தம் பாயாத பகுதி கருவிழி.
- ★ உலகின் மிகப்பெரிய பூங்கா கனடாவில் உள்ள 'உட் பபெல்லோ நேஷனல் பார்க்'.
- ★ உலகின் மிகப்பெரிய உயிரியல் பூங்கா அமெரிக்காவில் உள்ள 'டொராண்டோ உயிரியல் பூங்கா'.
- ★ 1972ம் ஆண்டு வங்காள தேசத்தின் தேசிய விளையாட்டாக கபடி அறிவிக்கப்பட்டது.
- ★ சஞ்சீவனி, காமினி மற்றும் அமர் ஆகிய பெயர்களில் 3 விதங்களில் கபடி ஆட்டம் நடைபெறுகிறது.

எம். சாரா

## கண்டுபிடிப்பாளர்கள்

## என்ரிக்கோ பெர்மி



*உலகின் முதலாவது அணுக்கரு உலையை உருவாக்கியவர் என்ரிக்கோ பெர்மி (Enrico Fermi) ஆவார். இவர் 1901 ஆம் அண்டு பிறந்தது 1954 ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவர். ஒரு புகழ்பெற்ற இத்தாலிய இயற்பியல் அறிஞராவார். குவாண்டம் கொள்கை, அணுக்கரு இயற்பியல், துகள் இயற்பியல், புள்ளியியல் பொறிமுறை போன்றவற்றில் இவரது பங்களிப்புகளுக்காகவும் பெரிதும் போற்றப்படுகிறார். பெர்மி தூண்டல் கதிரியக்கத்தில் இவரது பங்களிப்புகளுக்காக 1938ஆம் ஆண்டில் இவருக்கு இயற்பியல் நோபல் பரிசு வழங்கப்பட்டது. 1952 இல் கண்டுபிடிக்கப்பட்ட செயற்கை தனிமம் ஒன்றுக்கு இவரது நினைவாக பெர்மியம் எனப் பெயரிடப்பட்டது.*

*இத்தாலியில் ரோம் நகரில், தன் தந்தைக்கு மூன்றாம் மகனாக பிறந்தார். இவரின் தந்தை அல்பெட்ரோ பெர்மி, இரயில்வே துறையில் பணியாற்றியவர். இவர்கள் கிறிஸ்தவக் கத்தோலிக்கப் பிரிவை சார்ந்தவர்கள். இவருக்கு ஒரு சகோதரனும் (கியோலியோ) ஒரு சகோதரியும் (மரியா) இருந்தனர். சிறு வயதிலேயே இயற்பியலில் மிகுந்த ஆர்வம் காட்டினார். பைசா நகரப் பல்கலைக்கழகத்திலும், ஐரோப்பாவின் வேறு இடங்களிலும் படித்து இயற்பியலில் பட்டம் பெற்று, ரோம் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர். அவரது கதிரியக்க ஆய்வுக்காக 21 ஆம் அகவையில் முனைவர் பட்டம் பெற்றார். 1934 முதல் கதிரியக்க ஆய்வில் பீட்டா சிதைவுக் கொள்கையைத் தோற்றுவித்தார்.*

*இளமைப் பருவத்தில் தனது அண்ணனுடன் சேரந்து கையில் கிடைக்கும் இயந்திரங்களை எல்லாம் உடைத்து பிரித்து பார்ப்பார் என்ரிக்கோ. அவரின் அண்ணன் 1915 இல் நோய்வாய்ப்பட்டு இறந்தபோது அதிர்ச்சி தாங்க முடியாமல் பித்துப் பிடித்தவர் போல் ஆனார். தன் அண்ணன் இறந்த மருத்துவமனையின் முன்பே சுற்றி திரிந்தார். அப்போது தான் இயற்பியல் புத்தகங்களை அவர் படித்தார். பின் தன் பதினேழாம் வயதில் என்ரிக்கோ எழுதிய பல்கலைகழக நுழைவுத் தேர்வின் கட்டுரையை*




*படித்த ஆசிரியர் 'அந்தக் கட்டுரைக்கு முனைவர் பட்டமே தரலாம்' என்று வியந்து பாராட்டினாராம்.*

*இலத்திரன் அணுக்களின் ஓட்டம் குறித்த ஆய்வுகள் மற்றும் அவை நிறமாலையாய்ப் பிரிவது பற்றியும் பெர்மி ஆரம்ப ஆய்வினை மேற்கொண்டார். ஓர் அணுவின் வெளி வட்டப் பாதையில் சுழலும் இலத்திரனில் ஆரம்பித்த பெர்மி தனது ஆய்வினை முன்னேற்றி மையக் கருவான அணுக்கருவுக்கே சென்றார்.*

*அதுவே அவரின் வாழ்க்கையில் திருப்பு முனையாக அமைந்தது. மேலும் அணுக்கருவைப் பிளக்க முடியும் என்பதை அந்தச் சமயத்தில் வாழ்ந்த இயற்பியலார் ச்ட்ரஷ்மேன் கூறினார்.*

*இதைப் படித்த பெர்மி தூண்டல் கதிரியக்கம் (Chain Reaction) நடைபெறுவதைப் பற்றிச் சிந்திக்க தொடங்கினார். இதுவே அவர் நோபல் பரிசு பெறக் காரணமான துறை ஆகும். தனது 22 ஆவது வயதில் ஐன்ஸ்டைனின் சமன்பாட்டில் அணுசக்தியின் ரகசியம் இருப்பதைச் சொன்னார். அணு உலைகளில் பயன்படுத்தப்படும் வேகமற்ற நியூத்திரன் பற்றியும் ஆய்வு மேற்கொண்டார்.*

*தனது தூண்டல் கதிரியக்கத்திற்காக எக்சலென்சா என்ரிக்கோ பெர்மி சுவீடனில் மிக உயரிய விருதான நோபல் பரிசை பெற்றார்.*

*ஹிட்லர் போல முசோலினியும் இனவெறிக் கொள்கையைப் பின்பற்ற, தனது மனைவியான யூத பெண்மணிக்கு ஆபத்து நேருமோ என்று எண்ணி சுவீடனில் நோபல் பரிசு பெற்ற கையோடு அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தார் .*

*பின் தனது தாய் நாடான இத்தாலிக்கு அவர் செல்லவே இல்லை. மேலும் தனது இறுதிக் காலத்தை தனிமையிலேயே கழித்தார்.*



# உபாதைகளும் உலகக் கிண்ணமும்

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் அணிகளின் பலம், பலவீனத்தை தீர்மானிப்பதில் காயங்களும் முக்கிய அம்சமாக இருக்கிறது. எதிர்வரும் ஒக்டோபர் 5 ஆம் திகதி இந்தியாவில் ஆரம்பமாகவிருக்கும் உலகக் கிண்ணத்தில் பங்கேற்கும் 10 அணிகளும் தமது 15 பேர் கொண்ட வீரர் விபரத்தை வெளியிட்டிருக்கிறது. பெரும்பாலான அணிகளுக்கு அணித் தேர்வில் வீரர்களின் காயம் முக்கிய பிரச்சினையாக மாறி இருப்பது நன்றாகத் தெரிகிறது.

## இலங்கை



இலங்கை அணி தனது முன்னணி வேகப்பந்து மற்றும் சுழற்பந்து வீச்சாளர்களான துஷ்மன்த சமீர மற்றும் வனிந்து ஹசரங்க இன்றியே களமிறங்குகிறது. இருவரும் அண்மையில் நடந்த லங்கா பிரீமியர் லீக் போட்டியின்போது காயத்திற்கு உள்ளான நிலையில் அதில் இருந்து மீள முடியாமல்போயிருக்கிறது.

காயத்திற்கு உள்ளான லஹிரு குமார மற்றும் டில்ஷான் மதுஷங்க அணிக்குத் திருப்பியபோதும் ஆசிய கிண்ண போட்டியின்போது உபாதைக்கு ஆளான மஹீஷ் தீக்ஷனவின் நிலைமை பற்றி இன்னும் சற்று கவலை இருக்கிறது. என்றாலும் நடந்து முடிந்த ஆசிய கிண்ணத்தில் இந்த இழப்புகளோடேயே இலங்கை ஆடிய நிலையில் இறுதிப் போட்டி தவிர்த்து ஏனைய போட்டிகளில் சற்று நன்றாகவே ஆடியது.

எனவே, உலகக் கிண்ணத்திலும் இலங்கை அணியால் தக்குப்பிடிக்க முடியும் என்று நம்பலாம்.

## தென்னாபிரிக்கா



எப்போதும் போல் தென்னாபிரிக்கவுக்கு உலகக் கிண்ண துரதிருஷ்டம் போட்டி ஆரம்பிக்கும் முன்னரே துரத்த ஆரம்பித்துவிட்டது. தென்னாபிரிக்காவின் இரு முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களான அன்ரிட்ஜ் நொர்ட்ஜே மற்றும் சுசன்டா மகலா இருவரும் உபாதையால் உலகக் கிண்ணத்தில் இடம்பெறவில்லை.

குறிப்பாக மணிக்கு 150 கி.மீ வேகத்தில் பந்துவீசும் உலகின் அதிவேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான நோர்ட்ஜேவின் காயம் அணிக்கு பேரிழப்பு. என்றாலும் அவர் 2019 இல் இங்கிலாந்தில் நடந்த கடந்த உலகக் கிண்ணத்திலும் உபாதைக்கு உள்ளாகி ஆடவில்லை.

அதேபோன்று பந்தை அதிகம் சுவிங் செய்பவரும் தேவைப்பட்டால் துடுப்பாட்டத்தில் பங்களிப்புச் செய்பவருமாக மகலா இருக்கிறார். இந்த இருவருக்கும் பதில் சகலதுறை வீரர் அன்டிலே பெஹலுக்வாயோ மற்றும் வேகப்பந்து வீச்சாளர் லிசாட் வில்லியம்ஸ் அழைக்கப்பட்டிருப்பது மூலோபாய ரீதியில் கச்சிதமான முடிவு என்று தென்னாபிரிக்கா நம்புகிறது.

## நியூசிலாந்து



கடந்த முறை உலகக் கிண்ணத்தில் இறுதிப் போட்டிவரை முன்னேறி இறுதி ஓவர் வரை பரபரப்புக் காட்டி தோற்ற நியூசிலாந்தின் அணித் தலைவர் கேன் வில்லியம்சன் மற்றும் வேகப்பந்து வீச்சாளர் டிம் சௌதீ உபாதையால் அவதிப்படுகிறார்கள்.

கடந்த ஐ.பி.எல் போட்டியின் போதும் உபாதைக்கு உள்ளான கேன் வில்லியம்சன் அதில் இருந்து மீண்டு வருகின்ற நிலையில், அணியில் இடம்பெறுவது இன்னும் நிச்சயமில்லை. டிம் சௌதியின் காயம் இதனை விடவும் சற்று நம்பிக்கை தரக்கூடியது.

இருவரும் உலகக் கிண்ணத்திற்காக நியூசிலாந்து குழாத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் நிலையில் போட்டியில் பங்கேற்பதில் இன்னும் முழுமையாக உறுதியில்லை. எப்படி இருந்தபோதும் நியூசிலாந்து இம்முறை உலகக் கிண்ணத்திலும் சவாலான அணியாகவே இருக்கப்போகிறது.

## இந்தியா



சொந்த நாட்டில் வலுவான அணியாக களமிறங்கும் இந்திய அணியில் காயங்கள் பெரிதாக இல்லை. காயம் ஏற்பட்டாலும் மாற்றாக அதற்கு சமமான திறமை படைத்த மற்றொரு வீரர் இருப்பார். விக்கெட் காப்பாளரான ரிசப் பாண்ட் வீதி விபத்தில் காயமடைந்து இன்னும் மீளாதபோதும் அது இந்திய அணியில் பெரிய தாக்கம் செலுத்துவதாக இல்லை.

ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்ட பதினைந்து பேர் கொண்ட குழாத்தில் சுழற்பந்து சகலதுறை வீரர் அக்சார் படேல் இருந்தார். ஆசிய கிண்ண போட்டியின் போது காயமடைந்த அவருக்கு ஆட முடியாது என்ற நிலையில் கடைசி நேரத்தில் அவருக்கு பதில் ரவிச்சந்தர் அஷ்வின் அழைக்கப்பட்டிருக்கிறார்.

எனவே, இந்தியாவுக்கு காயம் என்பது முட்டுக்கட்டையாக இருக்கப்போவதில்லை என்று கூற வேண்டும்.

## பங்களாதேஷ்



உலகக் கிண்ணத்திற்கு சற்று தளம்பலுடன் தயாராகி வரும் பங்களாதேஷுக்கு பெரும் இழப்பு அதன் முன்னாள் அணித் தலைவர் தமீம் இக்பால் இல்லாதது. ஒருநாள் அணித் தலைமை பொறுப்பில் இருந்து விலகி, ஓய்வையும் அறிவித்து பின்னர் மீண்டும் அணிக்கு திரும்பியபோதும் தமீம் இக்பாலை அவரது காயம் உலகக் கிண்ணம் ஆடா விடாமல் தடுத்துவிட்டது.

அதேபோன்று முழங்கால் காயத்தால் அவதிப்பட்டு வரும் இபாதொத் ஹுஸைனினால் அதில் இருந்து மீள முடியாமல் போயிருக்கிறது. என்றாலும் ஷகீப் அல் ஹசன் தலைமையிலான பங்களாதேஷ் அணி திறமையை வெளிப்படுத்த தன்னளவில் வலுவான அணி ஒன்றுடனேயே களமிறங்குகிறது.

## பாகிஸ்தான்

இந்தியாவில் உலகக் கிண்ணம் நடப்பதால் அதன் பிரதான போட்டியாளரான பாகிஸ்தான் மீது அதிக அவதானம் சென்றிருக்கிறது. பாகிஸ்தான் அணியின் முக்கிய பலம் அதன் வேகப்பந்து முகாம். என்றாலும் ஆசிய கிண்ணத்தின்போது தோள்பட்டை காயத்திற்கு உள்ளான நசீம் ஷா உலகக் கிண்ணத்தில் இடம்பெறவில்லை. அவருக்கு பதில் மற்றொரு வேகப்பந்து வீச்சாளரான ஹசன் அலி சேர்க்கப்பட்டிருக்கிறார்.

ஷஹீன்ஷா அப்ரிடி மற்றும் நசீம் ஷா இருவரும் புதுப்பந்தில் ஆரம்ப ஓவர்களை வீசுவது பாகிஸ்தானுக்கு எப்போது அதிரடி முடிவுகளை தரக்கூடியது. எனவே நசீம் ஷா இல்லாதது அணித் தலைவர் பாபர் அஸாமுக்கு பெரும் தலையிடிதான். என்றாலும் பாக். அணியின் திறமையை காயங்களை வைத்து கணிக்க முடியாது என்பதுவே உண்மை.

## அவுஸ்திரேலியா



உலகக் கிண்ணம் நெருங்கும் வரை அவுஸ்திரேலிய அணியில் ஏகப்பட்ட காயங்கள் பற்றிய கவலை இருந்தது. ட்விஸ் ஹெட்டுக்கு கையில் காயம், ஸ்டீவ் ஸ்மித்துக்கு மணிக்கட்டில் காயம், பட் கம்மின்ஸுக்கு அதே மணிக்கட்டில் காயம், மிச்சல் ஸ்டார்கிற்கு இடுப்பு பகுதியில் காயம், கிளென் மெக்ஸ்வெல்லுக்கு வலது காலில் அசௌகரியம் என்று காயப் பட்டியல் நீண்டிருந்தது. என்றாலும் உலகக் கிண்ணத்திற்காக இவர்கள் முழுமையாக அல்லது நம்பிக்கை தரும் அளவுக்கு உடல் தகுதி பெற்றுவிட்டார்.

ஆனால் சுழற்பந்து வீச்சாளர் ஆஷ்டன் அகர் காயத்தால் கடைசி நேரத்தில் அணியில் இருந்து நீக்கப்பட அவருக்கு பதில் துடுப்பாட்ட வீரர் மார்னஸ் லாபுசாக்னே அழைக்கப்பட்டிருக்கிறார்.

எது எப்படி இருந்தபோதும், அவுஸ்திரேலியாவின் சவாலை எப்போதும் போல் எதிரணிகள் சந்திக்க வேண்டி இருக்கும்.

## இங்கிலாந்து



நடப்பு உலகச் சம்பியனாக களமிறக்கும் இங்கிலாந்து அணிக்கு முக்கிய இழப்பு ஜேசன் ரோய் இல்லாதது. அதிரடி ஆரம்ப வீரரான ரோயின் ஆட்டம் கடந்த முறை இங்கிலாந்து கிண்ணத்தை வெல்ல உதவியது. என்றாலும் முதுகுப் பிடிப்பு உபாதையால் அவதியுறும் அவர் இம்முறை இங்கிலாந்து உலகக் கிண்ண குழாத்தில் சேர்க்கப்படவில்லை. அவருக்கு பதில் ஹரி ப்ரூக் அழைக்கப்பட்டிருக்கிறார்.

என்றாலும் கடந்த உலகக் கிண்ணத்தில் இங்கிலாந்துக்கு வெற்றியைத் தேடித்தந்த டெஸ்ட் அணித் தலைவர் பென் ஸ்டொக்ஸ் ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்று பின்னர் அந்த முடிவை மாற்றிக் கொண்டு மீண்டும் அணிக்குத் திரும்பி இருப்பது அந்த அணிக்கு கூடுதல் பலத்தை சேர்த்திருக்கிறது. எனவே தனது நடப்புச் சம்பியன் பட்டத்தை தக்கவைத்துக் கொள்ள போதுமான பலத்துடனேயே இங்கிலாந்து களமிறங்குகிறது.

## ஆப்கானிஸ்தான்



தொடர்ச்சியாக மூன்றாவது முறை உலகக் கிண்ணத்தில் களமிறங்கும் ஆப்கானிஸ்தான் அணிக்கு பெரிதாக காயங்கள் பற்றிய கவலை இல்லை. அனுபவம் பெற்ற வீரர்கள் மற்றும் திறமையான வீரர்களுடன் அது இம்முறை களமிறங்குகிறது. குறிப்பாக 2015இல் முதல் முறை உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற்றது தொடக்கம் ஆடும் சில வீரர்கள் இம்முறை உலகக் கிண்ணத்திலும் களமிறங்குகிறார்கள். எனவே, உலகுக்கு அதிர்ச்சி கொடுக்க வேண்டும் என்றால் ஆப்கானிஸ்தானுக்கு இதுவே பொன்னான தருணம்.

## நெதர்லாந்து



மேற்கிந்திய தீவுகள், சிம்பாப்வே போன்ற வலுவான அணிகளை பின் தள்ளி உலகக் கிண்ணத்தில் ஆட வந்திருக்கும் நெதர்லாந்து அணியில் தனிப்பட்ட வீரர்களின் சுக துக்கங்கள் பெரிதாக கவனத்தில் கொள்ளப்படுவதாக இல்லை. இந்த ஆண்டு நடந்த உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் நீக்கப்பட்டிருந்த அனுபவம் பெற்ற ரொலொப் வான்டர் மேர்வ் மற்றும் கொலின் அக்ரமன் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

என்றாலும் நெதர்லாந்தின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் பிரெட் க்ளாசன் மற்றும் சுழற்பந்து வீச்சாளர் டிம் பிரிங்கில் காயத்திற்கு உள்ளாகி இருப்பது அந்த அணியை பொறுத்தவரை பெரிய இழப்பு.



# அப்பாவியான குணதிலக்க



கிட்டத்தட்ட ஓர் ஆண்டு காலம் நீடித்த தனுஷ்க குணதிலக்க மீதான பாலியல் குற்றச்சாட்டு வழக்கு, ஒரு கிரிக்கெட் வீரருக்கு அப்பால் அவர் சர்வதேச ஊடகங்களில் பெரும் அவதானத்தை பெற்ற கதாபாத்திரமாக மாறுவதற்கு உதவியது.

அவர் மீது குற்றம் சுமத்திய பெண், தனுஷ்க மிருகத்தனமானவர், படுக்கையில் பயங்கரமாக நடந்து கொண்டார், என்னை மூச்சுத்திணற வைத்தார், நான் உயிர் ஆபத்தை உணர்ந்தேன் என்று அடுக்கடுக்காக கதை சொன்னது இந்த வழக்கு மீதான ஆர்வத்தை தூண்ட காரணமானது.

என்றாலும் சிட்னியில் உள்ள டவுனிங் சென்டர் மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த செப்டெம்பர் 28 ஆம் திகதி வழக்கு மீதான தீர்ப்பு வந்தபோது அனைத்துமே தலைகீழாக மாறிவிட்டது. குணதிலக்க குற்றமற்றவர் என்று அறிவித்த நீதிபதி சாரா ஹக்கட், குற்றம்சாட்டிய பெண்ணை மறைமுகமாக சாடி இருந்தார்.



இந்தத் தீர்ப்பை அடுத்து அதுவரை பரவலாக குற்றவாளியாக பார்க்கபட்ட தனுஷ்க குணதிலக்க ஒரே இரவில் அப்பாவியாகி விட்டார்.

குற்றம்சாட்டும் பெண் புத்திசாலித்தனமாக செயற்படுவதாகவும் ஒரு சாட்சியாகவன்றி "வேண்டுமென்றே தவறான சாட்சியங்களை வழங்குவதற்கான விருப்பத்தால் தூண்டப்பட்டிருப்பதாகவும்" குறிப்பிட்ட நீதிபதி, "அந்தப் பெண் குற்றம்சாட்டியவரை சாதகமற்றவராக சித்தரிக்கும் நோக்கமுடையவராக இருந்துள்ளார்" என்றார்.



அதாவது உடலுறவுக்கு முன் குணதிலக்க தனது விருப்பத்திற்கு மாறாக ஆணுறையை அகற்றினார் என்பதே சிட்னி நகரைச் சேர்ந்த அந்தப் பெண்ணின் குற்றச்சாட்டு. பார்க்க சாதாரணமாக இருந்தாலும் இது பாரதூரமான ஒன்று. கச்சிதமாக நிரூபிக்கப்பட்டால் 14 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

ஆனால், உடலுறவின் போது ஆணுறையை அகற்றுவதற்கு குணதிலக்கவுக்கு சந்தர்ப்பம் இருக்கவில்லை என்பது ஆதாரபூர்வமாக உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் பொலிஸுக்கு வழங்கிய வாக்குமூலத்தில் உண்மையாக இருந்தார் என்றும் தீர்ப்பளித்த நீதிபதி தெரிவித்தார்.

இந்த வழக்கை தலைகீழாக புரட்டுவதில் குணதிலக்கவின் வழக்கறிஞரான முருகன் தங்கராஜுக்கு முக்கிய பங்குண்டு. நான்கு நாட்கள் நீடித்த வழக்கு விசாரணையில் பெண்ணின் கூற்றுகளை தனது குறுக்கு விசாரணையாலேயே பொய்யாக்கினார்.

அதாவது உடலுறவு 10 தொடக்கம் 15 நிமிடங்கள் வரை நீடித்ததாக அந்த பெண் வாக்குமூலம் அளித்ததைக் கொண்டு அவருக்கு ஆணுறையை அகற்றுவதற்கு அவகாசம் இருக்கவில்லை என்பதை தங்கராஜ் நிரூபித்தார்.



அந்தப் பெண் குணதிலக்கவை படுக்கை அறைக்கு அழைத்தது மற்றும் பெழுகுவர்த்தியை ஏற்றி அங்கே உணர்வை ஏற்படுத்தியது என்பதை அந்தப் பெண்ணின் வாயாலேயே சொல்லவைத்தார். வழக்கு விசாரணையின்போது தங்கராஜின் குறுக்கு விசாரணை பொறுக்காமல் ஒரு கட்டத்தில் அந்தப் பெண் அழுதுவிட்டார்.

மற்றது பொலிஸார் குணதிலக்கவை கைது செய்த பின் அவர் அளித்த வாக்குமூலம், குணதிலக்க கைது செய்யப்பட்டபோது அவரது கையில் இருந்து கைப்பற்றப்பட்ட ஆணுறைகள், மற்றும்

இந்த ஜோடி சிட்னியில் கடந்த நவம்பர் 2 ஆம் திகதி சந்தித்தபோது பெறப்பட்ட சிசிடிவி கெமராவில் இருந்த வீடியோ பதிவுகள் எல்லாம் குணதிலக்கவுக்கே சாதகமாக இருந்தது.

அதேபோன்று அந்தப் பெண்ணின் நண்பர்களிடம் பெறப்பட்ட வாக்குமூலமும் குணதிலக்கவுக்கே சாதகமானது.

குணதிலக்க "மிருகமாக மாறியதாகவும் உண்மையில் மிகப் பயங்கரமான ஒன்று நடந்ததாகவும்" அந்தப் பெண் தனது நண்பர்களிடம் தெரிவித்ததாக நீதிமன்றத்தில் கூறப்பட்டது. ஆணுறை தொடர்பில் அந்த பெண் நண்பர்களிடம் கூறும்போது, "அவர் அதனை அகற்றினாரா என்பது எனக்குத் தெரியாது" என்று குறிப்பிட்டதோடு "எனக்கு உறுதியாகத் தெரியாது அப்படி உணர்கிறேன்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

நீதிபதி கூறியதாவது, "குற்றம்சாட்டுபவரின் ஆதாரங்கள் குற்றம்சாட்டுபவருக்கு ஆதாரவாகவன்றி அதனை குறைத்து மதிப்பிடுவதாக உள்ளது" என்றார்.

வழக்கு விசாரணையின் போது அந்தப் பெண் உண்மையானவரல்ல என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட தங்கராஜ், படகில் இருந்த சிசிடீவி மற்றும் கண்காணிப்பு கெமராவில் இந்த ஜோடி முத்தமிடுவது மற்றும் கட்டிப்பிடிப்பது தெரிகிறது என்றும் அது எனது கட்சிக்காரர் வலுக்கட்டாயமாகவும் கடுமையாகவும் செயற்பட்டதாக அந்தப் பெண் விபரிப்பதற்கு முரணாக இருப்பதகவும் தெரிவித்தார். எனவே இந்த வழக்கில் இருந்து முற்றாக விடுதலை பெற குணதிலக்கவினால் முடிந்திருக்கிறது.

**எஸ்.பிர்தௌஸ்...**

உண்மையில் இந்தத் தீர்ப்பை பார்க்கும்போது குணதிலக்க அந்தப் பெண்ணிடம் வசமாக சிக்கி இருந்தது தெரிகிறது. தனது வாழ்வை சிதைத்த அந்தப் பெண் மீது அவர் இழப்பிடு கோருவதற்கான அனைத்து சாத்தியங்களும் திறந்தே இருக்கின்றன. என்றாலும் தனது விளையாட்டை தொடர விருப்பமாக இருப்பதாக தீர்ப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் குணதிலக்க கூறியிருந்தார்.

ஆனால், அவர் மீது இலங்கை கிரிக்கெட் சபை விதித்த தற்காலிக தடை இன்னும் அப்படியே இருக்கிறது. அவர் நீதிமன்றத்தால் நிரபராதியாக்கப்பட்டாலும் இலங்கை அணியுடன் கிரிக்கெட் ஆடச் சென்றே பெண் ஒருவருடன் உறவில் ஈடுபட்டிருக்கிறார். அது தெளிவாக ஒழுக்காற்று மீறலாக இருக்கிறது. அதற்கு எதிராக அவர் இலங்கையில் விசாரணையை எதிர்கொள்ள வேண்டி வரலாம்.

என்றாலும் அவர் கிரிக்கெட்டுக்கு திரும்புவது என்பது நினைக்கும் அளவு இலகுவானதாக இருக்காது. அதிலும் தேசிய அணிக்கு திரும்புவதற்கு இன்னும் பல தடைகளை தாண்ட வேண்டி இருக்கும்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2023 ஒக்டோபர் 1 ஞாயிற்றுக்கிழமை

# 12,000 பேரை பலிகொண்ட புகை

லண்டனில் 1952 ஆம் ஆண்டு ஏற்பட்ட புகை வரலாறு காணாத பயங்கரமானது. அதாவது எதிர்ப்படுபவர்கள் மோதிக்கொள்ளும் வரை தெரியாத அளவுக்கு புகை நகரை சூழ்ந்தது. அதாவது எதிர்ச் சூறாவளி மற்றும் காற்றின்மை என்ற இரு காலநிலை போக்குகள் ஒன்றாக வந்ததால் இந்த நிலை ஏற்பட்டது. பெரும்பாலும் நிலக்கரியால் ஏற்படுகின்ற புகையே நகரை சூழ்ந்தது.

டிசம்பர் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை ஐந்து நாட்கள் வரை நீடித்த இந்த நிலையால் எப்போதும் இல்லாத அளவு கடும் குளிரும் நிலவியது. வெளியில் மாத்திரம் அல்ல வீட்டுக்குள்ளும் இந்த புகை ஊடுருவி இருந்தது.

இதன் நேரடிப் பாதிப்பால் 4,000 பேர் வரை உயிரிழந்தார்கள். என்றாலும் மொத்த உயிரிழக்கு எண்ணிக்கை 12,000ஐ விடவும் அதிகம்.



பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்



# உலகின் முதல் எழுத்தாளர்!

உலக வரலாற்றில் பதிவான முதலாவது எழுத்தாளர் ஒரு பெண் என்பது எத்தனை பேருக்குத் தெரியும். அவர் இற்றைக்கு சுமார் 4300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர்.

அதாவது கி.மு 23ஆம் நூற்றாண்டில் இன்றைய ஈராக் பகுதியில் வாழ்ந்த என்ஹதுனா என்ற பெண்ணே இலக்கியம் படைத்திருக்கிறார்.

அப்போதுதான் எழுத்து முறை உருவான ஆரம்பக் காலப்பகுதி.

ஆனால், என்ஹதுனா எழுதிய கவிதை மற்றும் ஆன்மிகக் கதைகள் களிமண் தகட்டில் இன்றும் காணமுடிகிறது.

தனது தந்தையான அகாதின் சர்கோன் ஆட்சி புரிந்த பிராந்தியத்தில் சுமேரிய நகரான ஊர்ரில் வாழ்ந்த என்ஹதுனா நிலவுக் கடவுளான நன்னாவின் தலைமை மத பூசகராக இருந்திருக்கிறார். அப்போது அவரது எழுத்துகள் பல நூற்றாண்டுகள் செல்வாக்கு செலுத்தியிருக்கிறது.

# பிரஞ்சு புரட்சியும் ஐஸ்லாந்து எரிமலை வெடிப்பும்

1783 ஆம் ஆண்டு ஐஸ்லாந்தில் இருக்கும் லகி எரிமலை வெடித்ததுதான் அண்மைய வரலாற்றில் பதிவான மிகப் பயங்கர எரிமலை வெடிப்பாக இருந்தது. சுமார் எட்டு மாதங்கள் இந்த எரிமலை வெடிப்பு நீடித்திருக்கிறது. இது உலகின் காலநிலையை தலைகீழான புரட்டிப்போட்டுவிட்டது.

இந்த எரிமலை வெடிப்பால் ஐஸ்லாந்து மக்கள் தொகையில் 25 வீதமானவர்கள் கொல்லப்பட்டார்கள். அந்நாட்டின் கால்நடைகளில் 50 வீதமானவை பலியாகின. உடனடிப் பாதிப்பாக ஐரோப்பா எங்கும் புகைமூட்டம் ஏற்பட்டது. ஆயிரக்கணக்கானோர் பலியானார்கள். பிரிட்டனில் மாத்திரம் 23,000 பேர் இந்த எரிமலை வெடிப்பின் விளைவால் உயிரிழந்திருப்பதாக கணிக்கப்படுகிறது.

ஆசிய மற்றும் வட ஆபிரிக்காவில் கடும் வறட்சி ஏற்பட்டது. இதனால் எகிப்தில் மாத்திரம் அந்நாட்டு மக்கள் தொகையில் 6 இல் ஒருவர் பலியானார்கள். வட அமெரிக்காவில் கூட இதனை ஒட்டி பயங்கர வறட்சி ஏற்பட்டது.

கடைசில், பிரான்ஸில் மோசமான குளிர் பருவத்திற்கு பின்னர் 1783இல் கடுமையான வெப்பம் ஏற்பட்டது. இதனால் பயிர்கள் வீணாகின. ஐரோப்பாவில் பஞ்சம் ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாக உலக வரலாற்றையே மாற்றிய 1789 பிரஞ்சுப் புரட்சி வெடித்தது.



# குழந்தையில் கண்டம்

ஜோசப் பிக்லொக் தெருக்களை கூட்டும் தொழிலாளி. ஆனால் அவருக்கு குழந்தைகளில்தான் கண்டம். அவர் 1937ஆம் ஆண்டு அமெரிக்காவின் டிட்ரொயிட் வீதியில் நடந்து கொண்டிருந்தபோது நான்காவது மாடியில் இருந்து திறந்து வைத்திருந்த ஜன்னல் வழியாக குழந்தை ஒன்று கீழே விழுந்தது. அது சரியாக பிக்லொக்கின் மீது விழுந்தது. அதிர்ஷ்டவசமாக இருவரும் சிறு காயத்துடன் தப்பித்தார்கள்.

அடுத்த ஆண்டு பிக் லொக் வீதியை கூட்டிக்கொண்டிருந்தார். அப்போது நான்காவது மாடியில் இருந்து 2 வயது குழந்தை ஒன்று கீழே விழ சரியாக பிக்லொக்கை பார்த்து விழுந்தது. அப்போதும் கூட இருவரும் காயங்களுடன் உயிர் தப்பினார்கள்.



# நண்பர்களுக்கு பியர் கொடுத்த கதை

ஜோன்னி செக்கி டொனோஹு என்பவர் ஒரு சுவாரஸ்யமான கதாபாத்திரம். அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் பிறந்து வளர்ந்தவர். அமெரிக்க மரைன், வர்த்தக கடற்படையில் வேலை பார்த்தவர். 1968இல் வியட்நாம் போர் உச்சத்தில் இருந்த காலம். அமெரிக்கர்களின் அன்றாட வாழ்க்கை மற்றும் அரசியலை அது புரட்டிப் போட்டது.

ஆனால், டொனோஹுவுக்கு இருந்த கவலையே தனி… வியட்நாமில் போர் புரியும் நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டார்களுக்கு நல்லதாக ஒரு பியர் குடிக்கக் கிடைக்காதது பற்றி சோகத்தை அள்ளிவிட்டார். உள்ளூர் மதுபானக் கடையில் அது பற்றி அன்றாடம் பேசுவார்.

கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார். நண்பர்களுக்காக பியர் போத்தல்களை வியட்நாமுக்கு எடுத்துச் செல்ல முடிவு செய்தார். பியர் போத்தல்களை கொடுக்க வேண்டியவர்களை பட்டியலிட்டார். அதற்கென்று நியுயோர்க்கில் இருந்து வியட்நாமின் குயி நோக்கு வெடிபொருட்களை எடுத்துச் செல்லும் வர்த்தகக் கப்பலில் சேர்ந்தார்.




நான்கு மாதங்கள் பயணித்து வியட்நாமை சென்றடைந்த அவர் வியட்நாமில் போருக்கு மத்தியில் ஊர் ஊராச் சென்று நண்பர்களைத் தேடி பியர் போத்தல்களை கொடுத்தார். அப்போது கே சன்னில் இடம் பெற்ற பயங்கரப் போரிலும் அமெரிக்க படைகளுடன் இணைந்து போரிட்டிருக்கிறார்.

எப்படியோ பியர் போத்தல்களை விநியோகித்த டொனோஹு ஊர் வந்து சேர்ந்தார். இவரின் சுவாரஸ்யமான கதையை வைத்து ‘தி கிரேட் பியர் ரன் எவர்’ என்ற பெயரில் ஹொலிவுட்டில் பிரபலமான திரைப்படம் ஒன்றும் வெளியானது.

# மருதானையில் 'சப்த ஸ்வர லய இசை விழா –2023'





இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஒலிபரப்பாளர், சங்கீத கலை வித்தகர் மற்றும் கலைச்சுடர் ஸ்ரீமதி அனுஷா மொரயஸின் ஏற்பாட்டில் 'சப்த ஸ்வர லய இசை விழா 2023' எதிர்வரும் 6ஆம் திகதி 4.00 மணிக்கு கொழும்பு10, மருதானை டவர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது கர்நாடக இசை, வீணை வாத்தியம், வயலின் இசை, பரத கலாசார நிகழ்வு ஆகியவை நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் நவாலியூர் சோமசுந்தரம் புலவரின் பேரனும் பொறியியலாளருமான லயன் ஷண் குகவரதன் கலந்து கொள்ளவுள்ளார்.

விசேட விருந்தினர்களாக முன்னாள் ஜனாதிபதியின் இந்துசமய ஒருங்கிணைப்பாளர், சிவநெறிக் காவலர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா, கொழும்பு புனித அன்னம்மாள் மகளிர் மகாவித்தியாலயத்தின் அதிபர் அருட்சகோதரி மேரி ரெஜினா கவிதா, ஸ்ரீ சத்தியசாய் மற்றும் இலங்கைக்கான சீரடிசாய் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் எஸ்.என். உதயநாயகம், தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்சேவை மற்றும் தென்றல் அலைவரிசையின் முன்னாள் கட்டுப்பாட்டாளர் ராஜபுத்திரன் யோகராஜன், பிரிஜ் அக்கடமியின் பணிப்பாளர் துரைரட்ணம் ஸ்ரீசுந்தரன், கொழும்பு புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயத்தின்

உப அதிபர் திருமதி மைதிலி உதயசெல்வம், கொழும்பு ஸ்ரீசத்யசாய் நிலையத்தின் மகளிர் அணித்தலைவி திருமதி சர்வகுண தேவி சண்முகானந்தன்,

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அமைப்பாளர் திருமதி கலைமகள் மகேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# பிரான்ஸில் பாலேந்திராவின் இரு நூல்கள் அறிமுகம்

பிரான்ஸில் இருந்து கலா

அரை நூற்றாண்டுக்கு மேலாக ஈழத்தமிழ் நாடக உலகில் ஆழமான தடம் பதித்த, தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழக இயக்குநர் க.பாலேந்திராவின் 'பாலேந்திரா நேர்காணல்கள்' 'பாலேந்திராவின் அரங்கக் கட்டுரைகள்' ஆகிய இரண்டு நூல்கள் செப்டம்பர் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாரிஸ் புறநகர் பொண்டி (Bondy) Espace Municipal Angela Davis மண்டபத்தில், பிரான்ஸ் நாட்டில் கால் நூற்றாண்டுக்கு மேலாக இயங்கிவரும் யாழ். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் பிரான்ஸ் கிளையின் ஏற்பாட்டில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாலேந்திரா , பிரான்ஸ் நாட்டில் வாழும் மூத்த நாடகக் கலைஞர் பெஞ்சமின் இம்மானுவேலால் பொன்னாடை





போர்த்தி கௌரவிக்கப்பட்டார். எழுத்தாளரும் நாடக செயற்பாடாளருமான சின்னத்துரை மனோகரன் நினைவு சின்னம் வழங்கினார். பாலேந்திராவின் கௌரவிப்பினை தொடர்ந்து இலங்கை பழையமாணவர் ஒன்றியத் தலைவர் ஸ்ரீபாஸ்கரன் நூலை வெளியீடு செய்து உரையாற்றினார்.

மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் பிரான்ஸ், திருமதி யோகினி கருணைவேல் தலைமையில் இந்த நூல் அறிமுக விழா நடைபெற்றது. அவரது உரையில் “இலங்கைத் தமிழ் நாடக வரலாற்றில் மிகப் பெரும் சாதனையாளர்களில் ஒருவரான பாலேந்திரா 70 நாடகங்களை இயக்கி 400 மேடைகளில் இலங்கை, இந்தியா, ஐரோப்பா, கனடா , அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளில் மேடையேற்றி நாடக அரங்கியலில் அவர் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் அரங்கியல் கட்டுரைகள், நேர்காணல்கள் என்ற இரு நூல்களில் வெளிப்படுகின்றன" என்று கூறினார் .

நூல் பற்றிய பேச்சுக்களை மூன்று வெவ்வேறு வயதினர் (தலைமுறையினர்) நிகழ்த்த, பேச்சுக்களுக்கு இடையிடையே லண்டனில் இருந்து பாரிஸ் வந்திருந்த பாலேந்திரா ஆனந்தராணியின் நிகழ்த்திய "அரங்க நினைவலைகள்" நாடக காட்சிகள் பாடல்கள் வந்திருந்த பார்வையாளர்களுக்கு பெரு விருந்தாக அமைந்தன. பாலேந்திரா கடந்த ஐம்பது ஆண்டுகளில் நெறிப்படுத்திய பிரபலமான நாடகங்களான மழை கண்ணாடி வார்ப்புகள் யுகதர்மம் முகமில்லாத மனிதர்கள் சம்பந்தம் மரணத்துள் வாழ்வு போன்ற நாடகங்களில் தேர்வு செய்து சில பகுதிகள் அங்கு நிகழ்த்தப்பட்டன. முழு நாடகங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தை பலருக்கு இந்த நிகழ்வு தூண்டியது.

மிகவும் வித்தியாசமான முறையில் நிகழ்ந்த நூல்களின் அறிமுக விழா இது என்று நிகழ்வுக்கு வந்திருந்த பலரும் மற்றும் எஸ் கே ராஜெவின் “எம் தமிழ்" இணைய நேரலையில் பார்த்தவர்களும் கருதுகின்றனர்.

நாடகத்துறை சார்ந்து சாதனை படைக்க வேண்டும் என்ற துடிப்போடு பிரான்ஸில் மிக ஆர்வத்தோடு இயங்கிக்கொண்டிருக்கும் நாடகர் கெங்கேஸ் “அரங்கக் கட்டுரைகள்” நூல் பற்றி கூறும் போது “அரங்கு பற்றிய பல்வேறு அம்சங்களை கூறும் இந்த நூல் பிரான்ஸ் நாட்டில் வெளிவருவது , பல நாடகம் சார்ந்தவர்கள் வாழும் பிரான்ஸ் நாட்டில் இனி நல்ல நாடகங்கள் இங்கு மேடையேற வழி சமைக்கும்" என்றார்.

வளர் இளம் பேச்சாளர் செல்வி நதி இராதாகிருஷ்ணன், 30 வருடங்களுக்கு மேலாக லண்டனில் இளம் வயதினருடன் பணியாற்றும் பாலேந்திராவுடைய நாடகங்களில் பிரான்ஸில் நடித்த அனுபவங்களையும் தனது பாடசாலை பிரஞ்சு நாடக அனுபவங்களையும் அழகாக பகிர்ந்து கொண்டார்.

எழுத்தாளரும் சமூக அக்கறையாளருமாகிய சலனம் முகுந்தன் “பாலேந்திராவின் நேர்காணல்கள்” நூல் மூலமாக பாலேந்திராவின் ஐம்பது வருட நாடகப் பயணத்தையும், தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தின் 45 வருட பயணத்தையும், பாலேந்திரா ஆனந்தராணி தம்பதியினரின் 40 வருடங்களுக்கு மேலான இணைந்த நாடகப் பயணத்தையும் தான் தரிசிக்க முடிந்ததாகவும் அதன் முக்கியத்துவத்தையும் கூறி மிகச் சிறப்பாக நூல்களை அறிமுகம் செய்து வைத்தார்.

திரு. திருமதி பாலேந்திரா, அரங்க நினைவலைகளை மூன்று கட்டங்களாக இடை இடையே தங்களுடைய நடிப்பினூடாக வெளிப்படுத்தியதோடு நாடகங்களில் வரும் சில பாடல்களையும் பிரான்ஸ் நாட்டில் வாழும் இளையவர்களையும் இணைத்து பிரபல வயலின் கலைஞர் தேவராஜா தலைமையில் பாடியது பார்வையாளர்களை மிகவும் உற்சாகப்படுத்தியது.சர்மிளா சத்தியநாதன் , அமலியா சத்தியநாதன் பாடல்களைப் சிறப்பாக பாட Frocoise தப்லா வாசித்தார்.

பாலேந்திராவின் நாடகப் பயணத்தில் அவ்வப்போது இணைந்து பயணித்தவர்களும் பிரான்ஸ் நாட்டில் தற்போது வாழ்பவர்களுமான கானகலாதரன் , எழுத்தாளர் லட்சுமி, வயலின் தேவராஜா ஆகியோரின் அனுபவ உரைகளும் இடம்பெற்றன .

பாலேந்திரா தனது ஏற்புரையில் வெவ்வேறு நாடுகளில் இப்படியான நிகழ்வுகளை நிகழ்த்தும் போது அங்கு வாழ்பவர்களின் உதவியும் ஆதரவும் பங்களிப்பும் எவ்வளவு முக்கியம் என்றும் அந்தவகையில் பிரான்ஸ் மகாஜன கல்லூரி சங்கத்துக்கும், உரையாறியவர்களுக்கும் மற்றும் ஸ்ரீ பாஸ்கரன் ஓவியர் வாசகன் போன்றவர்களது ஆதரவுக்கு நன்றி கூறினார். மகாஜனா கல்லூரியுடன் தனது நீண்ட கால தொடர்பையும் விளக்கினார்.

# "கலாசூரி" திவ்யா சுஜேனின் மாணவியான ரிஷிகேஷாவின் அரங்கேற்றம்





*ஒவ்வொரு நடன அரங்கேற்றங்களிலும் புதுமை சேர்த்து கருப்பொருளுடன் கூடிய மார்க்கத்தினை அமைத்து உயர் தரத்திலான அரங்கேற்றங்களை வழங்கி வரும் அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி இயக்குனர் " கலாசூரி " திவ்யா சுஜேனின் பதினாறாவது அரங்கேற்ற மாணவியான ரிஷிகேஷாவின் அரங்கேற்றம் பிஷொப்ஸ் கல்லூரி கலையரங்கில் அண்மையில் (09.09.23) நடைபெற்றது*

*நாயகியாரின் ஆளுமையை மையப்படுத்தி நடன உருப்படிகள் அமைந்திருந்தன. நாயகி, நான்முகி, நாராயணி என முப்பெரும் தேவிகள் , சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்ட கொற்றவை வர்ணனை, பாஞ்சாலி, சீதா , ஆண்டாள், சங்க காலத்தில் குறிப்பிடப்பட்ட பெண்களின் பருவ நிலைகள் , ஆடல் நாயகியர் என பல்வேறு நாயகியர் உள்வாங்க ப் பட்டு இருந்தமையால் இந்த அரங்கேற்றத்திற்கு " நாயகி " என்று தலைப்பிடப்பட்டு இருந்தது. மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப் பேரன் இந்த நிகழ்வுக்கான இசை அமைப்பினை வழங்கியதோடு முதன்மை விருந்தினராகவும் வருகை தந்து சிறப்பித்தார்.*

*" திவ்யா சுஜெனின் அதி புத்திசாலித்தனத்தினால் நாட்டிய உலகிற்கு மிக அருமையான உருப்படிகள் வந்து சேர்கின்றன. பாரதியார் பாடல்கள், தமிழ் இலக்கியப் பாடல்கள், சங்கப் பாடல்கள் , இலங்கையின் பெருமைகளை கூறும் உருப்படிகள் என பல இதில் அடங்கும். எப்போதுமே நம்மிடையே விலை மதிக்க முடியாத பொருள் இருந்தால் அது நமக்கு தெரிவதில்லை. இவ்வாறான புதிய உத்திகளை கையாண்டு , புதிய கற்பனைகளை செலுத்தி ஆனால் இலக்கண பிறழ்வு இல்லாமல், மேம்படுத்தும் உயர் எண்ணத்தில் செயல்படுவதற்கு ஒரு தீர்க்கமான பார்வை வேண்டும். அதற்காக திவ்ய சுஜேனை பாராட்டியே ஆகா வேண்டும் என்று கலாநிதி ராஜ்குமார் பாரதி தெரிவித்தார்.*

*மனித நேய அமைப்பாளர் , சமூக சேவையாளர் திருமதி அபிராமி கைலாசபிள்ளை பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். அணிசேர்க்கலைஞர்களாக வாய்ப்பாட்டு திருமதி கீர்த்தனா வைத்தியநாதன் , மிருதங்கம் 'முனைவர் ' குரு பரத்வாஜ் , வயலின் ஈஸ்வர் ராமகிருஷ்ணன் ஆகியோர் சிறப்புச் சேர்த்தனர்.*

*ரிஷிகேஷா செம்பையா எட்டு வருடங்களாக அபிநயக் ஷேத்திராவில் நடனம் பயின்றதோடு ஜனாதிபதி, பிரதம மந்திரி, இந்திய உயர்ஸ்தானிகர் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் முன்னிலையில் பல மேடைகளில் நடனம் வழங்கியுள்ளார்.*

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற

# அன்னலட்சுமி இராஜதுரையின் நூல் வெளியீட்டு விழா



# ஹிஸ்புழ்ழா வித்தியாலயத்தின் முப்பெரும் விழா





மட்டக்களப்பு ஏறாவூர் ஐயங்கேணி பிரதேசத்தில் அமைந்துள்ள விசேட தேவையுடைய மாணவர்களை உள்ளடக்கிய ஹிஸ்புழ்ழா வித்தியாலயத்தின் முப்பது வருடகால பூர்த்தியை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட முப்பெரும் விழா வெகுசிறப்பாக நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எச்எம்எம். பஷீர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தொழிலதிபர் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாகக்கலந்துகொண்டார்.

மறைந்த முன்னாள் பிரதியமைச்சர் மயோன் முஸ்தபா மற்றும் அவரது பாரியார் சப்றியா முஸ்தபா ஆகியோரின் நினைவாக இப்பாடசாலையில் புனரமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா, வகுப்பறைக்கட்டடம் ஆகியன கையளிப்பு , நன்கொடையாளர்கள் கௌரவிப்பு மற்றும் நூறு வறிய குடும்பங்களுக்கு பகல் உணவுப்பொதிகள் வழங்கல் ஆகிய மூன்று நிகழ்வுகள் இதன்போது நடைபெற்றன. இவர்களுக்காக இங்கு விசேட பிரார்த்தனையும் நடைபெற்றது.

றிஸ்லி முஸ்தபா தனது சொந்த நிதியின் மூலமாக புனரமைப்புப்பணிகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

சுமார் முப்பது வருடகாலப்பழைமை வாய்ந்த இப்பாடசாலை எவ்வித அபிவிருத்தியுமின்றி புறக்கணிக்கப்பட்டிருந்தது.

இவ்வேளையில் இங்கு பணியாற்றுவதற்கென விரும்பி இடமாற்றம்பெற்று வருகைதந்துள்ள சிரேஸ்ட ஆசிரியர் எம்ஜிஏ. நாஸர் அவர்கள் நன்கொடையாளர்களின் அனுசரணையுடன் இப்பாடசாலையில் ஒருவருடகாலத்தில் பௌதீக தேவைகளை நிவர்த்திசெய்து மாணவர்களது தேவைகளையும் பூர்த்திசெய்து தன்னிறைவடையச் செய்துள்ளார்.

இதனைப்பாராட்டி இந்நிகழ்வில் அந்த ஆசிரியர் பொன்னாடைபோர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

அத்துடன் கடந்த ஒருவருடகாலத்தில் இப்பாடசாலையின் மேம்பாட்டிற்காக ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நன்கொடையாளர்களும் இங்கு கௌரவிக்கப்பட்டனர். பாடசாலை மாணவர்களது கலைநிகழ்ச்சிகளும் இங்கு அரங்கேற்றப்பட்டன.

பிரதம அதிதி றிஸ்லி முஸ்தபா இங்கு பாடசாலை சமூகத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஆசிரியர் எம்ஏ. அப்துல் சுபுஹான் விழாவினை ஒழுங்கமைத்தார். வலயக்கல்விப்பணிமனையின் சார்பில் பாடசாலை மேம்பாட்டு உத்தியோகத்தரும் உதவிக்கல்விப் பணிப்பாளருமான எச்எம்எம். மாஜித் பங்கேற்றார்.

(ஏறாவூர் நிருபர் நாஸர்)

# கனடா தமிழாழியின் சாதனை








தந்தைக்கு ஓர் ஏடு" "★World Records★"என்ற உலக சாதனை நூலை கனடா தமிழாழி பேரவைத் தலைவர் பாட்டருவி தமிழ்மணி க. உயிரவனின் மேற்பார்வையில் எட்டு மணித்தியாலம் 30 நிமிடத்தில் 8 நாடுகளைச் சேர்ந்த 222 எழுத்தாளர்களால் 4444 ஒரு நூலுக்கு 20 உரைநடை வரிகள் எழுதி உலக சாதனை படைத்தனர். இதில் பங்குபற்றிய எட்டு நாடுகளைச் சேர்ந்த சான்றோருக்கு அந்தந்த நாடுகளில் உலக சாதனை பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. இலங்கையிலிருந்து கலந்து கொண்ட பத்து பேருக்கு அதற்கான சான்றிதழ்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு 11, புறக்கோட்டை பழைய நகர மண்டபத்தில் "வாழும் போதே வாழ்த்துவோம்" நிகழ்வில் தினகரன் பத்திரிகையின் ஆசிரியர் செந்தில்வேலவர், பொன் மனச்செம்மல் தாஜ்மஹான், மா நகர சபையின் முன்னாள் பிரதி மேயர் இக்பால், சங்கவி பிலிம்ஸ் பணிப்பாளர் துரைராசா ஆகியோரினால் இந்த சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (தட்சாயினி சர்மா, வாசுகி பி வாசு (இலங்கை தமிழாழி பேரவை செயலாளர்) கலைமாமணி பொன் பத்மநாதன் ஜே.பீ (இலங்கை தமிழாழி பேரவை இணைபாளர்) வினோதினி வாசுதேவன், கிரிஜா சண்முகரட்ணம், பவானி சச்சிதானந்தம், கருணானந்தம் காருநிஷா, கிளைம்சென் பாரதி மைந்தன், ஆர் ஜெயகலா, ஆர். மதுஷா)

# இலண்டனில் கலாசேத்திரா நாட்டியசேத்திரா பள்ளி மாணவி தரண்யாவின் அரங்கேற்றம்








கலாசேத்திரா நாட்டியப் பள்ளியின் முன்னாள் மாணவியும் சிறந்த பரதநாட்டிய ஆசிரியையுமான ஸ்ரீமதி திரிவேணி சங்கரின் அரங்கேற்றம் இலண்டனில் 2023 செப்டெம்பர் 23 இல் இடம் பெற்றது. உடலும் உள்ளமும் மலர இறைவனுக்கும் குருவுக்கும் சபையோருக்கும் வணக்கம் செலுத்தியபடியே நிகழ்வானது ஆரம்பமாயிற்று.

விநாயகர் துதியுடன், அலாரிப்பும் அவையோரை நெகிழ வைத்தது. அடுத்து தரண்யாவே நடன அமைப்பு செய்திருந்த ஜதீஸ்வரத்தை மிகவும் நேர்த்தியாகவும் அழகாகவும் ஆடி அற்புதம் நிகழ்த்தினார்.

சப்தத்தில் இராமாயணத்தை தன் முகபாவம், அங்க அசைவுகள் மூலம் எம் கண்முன்னே கொண்டு வந்திருந்தார். இராமர் சிவதனுசை வளைத்தல், வாலியை வதம் செய்தலை மிகவும் தத்ரூபமாக ஆடியிருந்தார். வர்ணமோ முருகன் பிறந்தது, வள்ளியை மணந்தது , அசுரனை அழித்தது என்று நவரசங்களையும் வெளிப்படுத்தி அவையோரை மெய் சிலிர்க்க வைத்தது.

திருமதி திரிவேணி சங்கரால் எழுதி நடன அமைப்பு செய்யப்பட்ட கீர்த்தனம் சிதம்பரத்தை கண்ணால் கண்டு களிக்க வைத்தது. இதனைத் தொடர்ந்து சிவன் மேல் மகள் கொண்ட காதலை தாய் கேலி செய்வதை பதத்தில் அழகாக அபிநயித்தார். நேரத்துக்கு வராத சிவன் மேல் நாயகி காட்டும் கோபத்தை ஜாவலியிலும், ராதையை பொருட் படுத்தாது கோபியருடன் விளையாடும் கிருஷ்ணரின் அழகையும் அழகாக அஷ்டபதியில் அபிநயித்து ஆடி அரங்கத்தினரை அகமகிழ வைத்து விட்டார்.

விறுவிறுப்பான வேகம் நிறைந்த தில்லானா அவையோருக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. நிறைவாக மங்களத்தை மன மகிழ்வுடன் ஆடி அரங்கத்தினரின் எட்டு திக்கையும் முழுங்க வைத்த கரகோசங்களை தனதாக்கினார். நாட்டிய அரங்கேற்றத்திற்கு இசைவாக இனிமையான பாடல்களை ஸ்ரீ வம்சிக்கிருஷ்ணா விஷ்ணுதாசும், ஆடலுக்கு உயிர் கொடுத்த ஸ்ரீ காரைக்குடி R. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மிருதங்கமும், ஸ்ரீ சிதம்பரநாதன் ஜலதரன் அவர்களின் வயலின் இசையும், ஸ்ரீ பிச்சையப்பா ஞானவரதன் அவர்களின் புல்லாங்குழல் இசையும் மிகவும் அற்புதமாக அமைந்திருந்தன.

ஆசிரியையின் அதி உன்னத உழைப்பும், ஆற்றலும் அரங்கேற்றத்தில் அழகாக வெளிப்பட்டது. தரண்யாவும் முத்திரைகள், அடவுகள் சுத்தத்துடன் உடல் உறுப்புகளால், கண்களால் உள்ளக் கருத்துக்களை அழகாக அற்புதமாக ஆடி அசத்தி விட்டார். கலாசேத்திரா ஆசிரியர்களை மட்டுமே உள்ளடக்கிய இலண்டன் தமிழ் நிலைய மாணவியின் அரங்கேற்றமும் கலாசேத்திராவிற்கே உரிய சிறப்புகளுடன் மிடுக்காக மிளிர்ந்தது. தரண்யாவின் நாட்டியப் பயணம் தொடர்ந்து சிறப்புற்று வளர தென்னாடுடைய சிவனை வேண்டுகிறேன்.

**திருமதி அகல்யா நித்தியலிங்கம்**







சிலோன் அமீர்கான் (பாடகர், இசையமைப்பாளர்) மற்றும் சர்வதேச பாடகி சுல்பித் சுபியின் இசை நிகழ்ச்சி அண்மையில் சென்னையில் நடைபெற்றது. குலோபல் ஏசியன் சாதனையாளர் கவுன்சிலும் ஐக்கிய அமெரிக்கா சொகுசு கப்பல் நிறுவனமும் இணைந்து இந் நிகழ்வுடன் விருது வழங்கல் நிகழ்வினையும் ஏற்பாடு செய்திருந்தது. இந் நிகழ்வில் இலங்கையில் இருந்து பிரதம அதிதியாக கலந்து கொண்ட வர்த்தகர் கலாநிதி எம்.ஏ.சி. மஹ்ரூன் விருது வழங்கி கௌரவித்தார். சினிமா இயக்குனர கே.பாக்கியராஜ், நகைச்சுவை நடிகர் செந்தில் ஆகியோர்கள் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் சர்வதேச நாடுகளில் இருந்து வருகை தந்த சாதானையாளர்களுக்கு விருதுகள் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (அஷ்ரப் ஏ சமத்)



கலைஞர் இளங்கோ

# மாபெரும் 'மீலாத் கீத்ராத் 59' விசேட இஸ்லாமிய கீத இசை நிகழ்ச்சி

அனுமதி இலவசம்

## ஒரே மேடையில் ஜனரஞ்சக பாடகர் கலைக்கமல் சிங்கப்பூர் பாடகர் ஹாஜி பரீஹுல்லாஹ்

தினகரன் | தினகரன் வாரமஞ்சரி

**மாணவ – மாணவிகளுக்கு பாடப்புத்தகங்கள் பரிசு**




தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 07ஆம் திகதி சனிக்கிழமை மாலை 07மணிக்கு கொழும்பு07 ஜே.ஆர். ஜெயவர்த்தன மண்டபத்தில் ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் 'மீலாத் கீத்ராத் 59' சிறப்பு இஸ்லாமிய கீத நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. முதன் முதலாக சிங்கப்பூர் பிரபல பாடகர் ஹாஜி பரீஹுல்லாஹ் கலந்துகொண்டு இசைமுரசு பாடல்களை பாடவிருப்பது விசேட அம்சமாகும்.

வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஓமானுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஓ.எல்.அமீர் அஜ்வாட் பிரதம அதிதியாக கலந்துகொள்ளும் இந்நிகழ்வுக்கு கலைப் புரவலர் ஸைட் சிவாஜி மௌலானா தலைமை தாங்கவுள்ளார். பிரபல தொழிலதிபர் ஹாஜி இப்திகார் அஹ்மட் முன்னிலை வகிக்கவுள்ளார்.

முன்னணி தமிழிசைக் குழுவான சுப்பர் டியூனர்ஸ் கல்முனை எஸ். சிவா குழுவினரோடு பிரபல தாள வாத்தியக் கலைஞர் ஹரிதாஸ் கண்ணாவும் இணைந்துகொள்கின்றனர். மாணவமாணவிகளுக்கு மீலாதுந்நபி விழாவை முன்னிட்டு மீலாத் பரிசாக பாடப் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன. நிகழ்ச்சியை முன்னாள் இலங்கை வானொலிமுஸ்லிம் சேவைப் பணிப்பாளர் ஹாஜி அஹ்மத் முனவ்வர், பாடகர், அறிவிப்பாளர் கவிகமல் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கவுள்ளனர்.



# இசைத் துறையில் பிரகாசிக்கும் மலையக இளங்குயில் திவ்யா

இசைத் துறையிலும் சங்கீதத்திலும் குரல் ஒலிப்பதிவு துறையிலும் தன்னுடை ஆற்றல்களை வெளிப்படுத்தி தன் திறமைகளை வளர்த்துக் கொண்ட ஒரு இளம் பெண் திவ்யா. தற்போது சங்கீத ஆசிரியராக கடமையாற்றிவரும் இவர் இத்துறையில் பிரவேசிக்க தான் பட்ட கஷ்டங்கள், இத்துறையில் பிரகாசிப்பதற்கு இவர் எதிர் கொண்ட சவால்கள்,

இவர் சந்தித்த போராட்டங்கள் பற்றி செந்தூரம் இதழுக்காக வழங்கிய செவ்வியில் மிகவும் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். அதுதொடர்பாக அவரிடம் தொடுத்த வினாக்களும் அவற்றுக்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு,

**உங்கள பத்தி கொஞ்சம் சொல்லுங்களே....!**

எனது பெயர் ஜி. திவ்யா. நான் லிந்துல கேம்பரில இருக்கிறேன். என்ன பத்தி சொல்லனும்னா, நான் படிச்சாதெல்லாம் நு/மறையா தமிழ் மகா வித்தியாலயத்தில். சாதாரண தரம் மற்றும் உயர் தரம்.

**அதன் பிறகு மேலே படிக்கவில்லையா...? என்ன படிச்சீங்கள்....எங்க படிச்சீங்கள்....?**

மேலதிக படிப்பிற்காக கண்டி நுண்கலை கல்லூரிக்குச் சென்றேன். அங்கு லலித்த கலாவேதி டிப்ளோமா கற்கைநெறியை படித்தேன். படிக்கும் காலப்பகுதியில் நிறைய இசைக் கச்சேரிகளுக்குச் சென்றுள்ளேன். அதில் கிடைக்கும் வருமானத்தை வைத்துக் கொண்டு மேலதிக படிப்பிக்காக செலவிட்டேன். அதன் பிறகு மேலதிக படிப்புக்காக இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு மஹரகம சென்றேன்.

**தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் என்ன படித்தீங்கள்?**

அங்கே மேலைத் தேய சங்கீதத்தையும், (Western Music ) இசைக் கருவிகளை இசைக்கவும் பயிற்சி (Instruments Playing) பெற்றேன்.

**அங்கு படிக்கும்போது பெற்ற அனுபவங்கள் என்ன?**

அங்க படிக்கும் காலத்தில் நிறைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் ரெகார்டிங்கிலும், அல்பம் சோங்கிலும், மேடை நிகழ்ச்சிகளிலும், வெளிநாடு இசை கச்சேரிகளிலும் பங்குபெற வாய்ப்புகள் கிடைத்தன.

தமிழ், சிங்கள புத்தாண்டு கலாச்சார நிகழ்வு 2018, லெபனான், இசை கச்சேரிகளுக்கான வாய்ப்பு, இந்தியா அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் போன்ற வெற்றிக்கான வாய்ப்புகளும் கிடைத்தன.

**அதுமட்டும் தானா... தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்ற வாய்ப்பு கிடைக்கவில்லையா?**

தொலைக்காட்சிகளான சக்தி, *Siyatha, Derana, ITN, Sirasa, Lak Fm, Yuwan Pura Fm, kothmala Fm, Niysco Fm* போன்ற தொலைக் காட்சிகளிலும, குரல் பதிவுகள் மேற் கொண்டு உள்ளேன்.

**இது தவிர உங்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்த திருமணம் எப்போது நடந்தது?**

2020 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது.

நீங்கள் தற்பொழுது என்ன செய்றீங்கள்?

தற்பொழுது சரவதேச பாடசாலையில் சங்கீத ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருக்கிறேன்.

**திருமணம் முடித்தபின் வேறு எதுவும் படிக்கவில்லையா...? தற்போது வேறு எதுவும் படிக்கிறீங்களா?**

*The Voice Music Academy*யில் மேலதிக கற்கைநெறி ஒன்றை கற்க ஆரம்பித்து உள்ளேன். கடந்த ஆறு மாத காலமாக இதனை கற்று வருகிறேன்.

**தற்போது இந்த கல்வி கற்று வருவதில் வேறு ஏதேனும் நோக்கம் இருக்கிறதா...?**

இதன் மூலமாக நல்ல இசைக்கலைஞர்களை உருவாக்குவதே நோக்கம் ஆகும்.


**இசைக்கலைஞர்களை உருவாக்குவதை ஏன் இலட்சியமாகக் கொண்டு செயற்படுகின்றீங்கள்?**


நான் ஒரு இசைக் கலைஞனாவதற்கு மிகவும் கஷ்டப்பட்டேன். அதனால் அதில் தீவிரமாக உள்ளேன்.

இசைக் கலைஞனாவதற்கு நீங்கள் போராடிய தருணங்கள் ஏதாவது உண்டா?

இசைக் கலைஞனாவது எமது ஊரில் மிகவும் கடினம். காரணம் சொல்லித் தருவதற்கு யாரும் இல்லை. நான் ஏதாவது தேடித் தேடி கற்றுக் கொண்டால் மாத்திரமே உண்டு. எனவே இனி வரும் காலங்களில் எமது கிராமப் பிள்ளைகளுக்கு கலைத்துறையில் மிளிர வாய்ப்பு கிடைக்கட்டும். அந்த முதல் மாற்றம் என்னில் இருந்து பிறக்கட்டும்.

கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543































# பரத நாட்டியக் கலையில் வளர்ந்து வரும் நடன ஆசிரியர் திருமதி கவிதா ஞானதயாளன்

தாய் பரத நாட்டியம், மகன் சங்கீதம், மகளும் பரத நாட்டியம். இவ்வாறு கலைத்துறையில் பிரகாசித்து வரும் ஒரு கலைக்குடும்பம் திருமதி கவிதா ஞானதயாளன் குடும்பம். ஜெயலிங்கம் தயாநிதி தம்பதிகளுக்கு 1978 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24ஆம் திகதி மகளாகப் பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ் மாணிக்கவாசகம் வித்தியாலயத்திலும் தரம் 6 முதல் உயர்தரம் வரை யாழ் மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியிலும் பயின்றார்.

2006ஆம் ஆண்டு பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட இவர் அதே ஆண்டு ஞானசேகரம் ஞானதயான் என்பவரை மணமுடித்தார். இவரது கணவர் ஓர் உடற்கல்வி ஆசிரியராக கடமை புரிவதுடன் இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் நடுவராகவும் பணிபுரிகின்றார். கிழவி தோட்டம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வரும் இவர் 2011இல் யாழ் இந்துக் கல்லூரியில் தனது வேலைக்கான முதல் நியமனத்தை பெற்றுக் கொண்டார்.



12 ஆண்டுகள் அங்கே கடமை புரிந்து 2023 யூன் மாதம் முதல் யாழ் நெல்லியடி மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று தற்போது அங்கே பணிபுரிகிறார். இவரது மகள் ஞா.ரக்ஷனா இவர் நடனம் பயில்கிறார். மகன் ஞா. தக்ஷயன் இவர் சங்கீதம் பயில்கிறார்.

**கே :நீங்கள் எங்கே கல்வி கற்றீர்கள்?**

ப: நான் ஆரம்பக் கல்வியை யாழ் மாணிக்க வாசகர் வித்தியாலத்திலும் தரம் 6 முதல் உயர்தரம் வரை யாழ் மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியிலும் கற்றேன். பின்னர் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் 'நுண்கலைமானி' பட்டக் கல்வியை முடித்துள்ளேன்.





**கே : பரத நாட்டியம் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?**



ப : எனக்கு நடனத்தில் இருந்த ஆர்வத்தை இனங்கண்ட என் அம்மா எமது உறவினரும் குருநாதருமான திருமதி புவனேஸ்வரி வன்னியசிங்கம் என்பவரிடம் தரம் 2 முதல் நடனம் பயில்வதற்காக சேர்த்துவிட்டார். நானும் ஆர்வத்துடன் நடனம் பயின்றேன்.



**கே : பரதக் கலையில் பிரகாசித்தவரும் உங்கள் குரு யார்?**

ப : எனது ஆரம்ப குரு திருமதி. புவனேஸ்வரி வன்னியசிங்கம். இவர் நான் உயர்தரம் கற்கும் தருணம் இறையடி சேர்ந்து விட்டார். தொடர்ந்து உயர் தரத்தை செல்வி கலாமதி தெய்வ நாயகத்திடம் கற்று பல்கலைக்குத் தெரிவானேன். தற்போது திருமதி ஞானதர்சினி கிருபாகரனிடம் பயில்கிறேன்.

கே : உங்கள் அரச ஆசிரிய நியமனம் பற்றிக் கூறுங்கள்?

ப : 2011 இல் யாழ் இந்துக் கல்லூரியில் நியமனம் பெற்று 2023 யூன் மாதம் வரை சேவையாற்றினேன். தற்போது யாழ் நெல்லியடி மத்திய கல்லூரியில் பணிபுரிகிறேன். யாழ் இந்துக் கல்லூரியில் சேவை ஆற்றிய தருணம் 2015.09.24இல் 125 ஆவது ஆண்டு விழா கோலாகலமாக நடைபெற்றது. அதில் எனது மாணவர்களை மேடை ஏற்றி மகிழ்ந்தேன்.

2023 இல் நான் கல்வி கற்ற பாடசாலையான யாழ் மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரியில் 200 ஆவது ஆண்டு விழா நடைபெற்றது. அதில் நான் பழைய மாணவியாக நடனமாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அத்துடன் யாழ் நெல்லியடி மத்திய கல்லூரியின் 100 ஆவது ஆண்டு விழாவிலும் நடைபவனியில் மாணவர்களிற்கு கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம் பழக்கி மேடையேற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. இம்மூன்று பாடசாலைகளிலும் எனக்கு பங்களிப்ப செய்ய சந்தர்ப்பம் கிடைத்தமை ஒரு பேறாகவே நான் கருதுகிறேன்.



**கே : அரச பாடசாலை ஆசிரியராக கடமையாற்றி வரும் நீங்கள் எதற்காக மேலும் படிக்கிறீர்கள்?**



ப : யாழ் இந்துக் கல்லூரி ஆண்கள் பாடசாலையாக இருந்ததால் நான் தமிழ், சமயம் கற்பிக்க வேண்டிய சந்தர்ப்பம் கிடைத்தது. அதனால் மேலும் என் நடன அறிவை வளர்த்துக் கொள்வதற்காக தொடர்ந்தும் நடனம் பயில்கிறேன்.



**கே : பாடசாலை தவிர வேறு நடன வகுப்புகள் நடத்துகிறீர்களா?**

ப : எனது வீட்டில் அண்ணளவாக 60 – 70 மாணவிகள் நடனம் பயில்கிறார்கள். தற்போது யாழ் நெல்லியடி மத்திய கல்லூரியிலும் இலவச நடன வகுப்பொன்றை ஆரம்பித்துள்ளேன். அவ்வகுப்பு தினசரி வெள்ளிக்கிழமைகளில் நடைபெறுகிறது.

**கே : நடனம் கற்றுக் கொள்ள விரும்பும் இளம் மாணவர்களக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

ப : நடனம் பயில்வதால் உடலும் உள்ளமும் உறுதி பெறுகிறது. உடல் அழகு பெறுகிறது. உடலுக்கு ஆரோக்கியம் கிடைக்கிறது. அத்தோடு எந்தக் கலையையும் கற்கும் போது பக்தி உணர்வு ஏற்படுகிறது. சமூக அங்கீகாரமும் புகழும் கிடைக்கிறது. எனவே மாணவர்கள் இக்கலையை பயிலும் போது பக்தியோடும் ஆர்வத்தோடும் பயின்றால் வாழ்வில் சிறந்த ஒரு கலைஞனாக மிளிரலாம்.





**கே : நீங்கள் மேடையேற்றி வரும் நடன நிகழ்வுகள் பற்றிக் கூறமுடியுமா?**

ப : பாடசாலை நிகழ்வுகள் தவிர எனது தனியார் நடன வகுப்ப மாணவிகள் மூலம் வடமராட்சி பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் 11 வருடங்களாக வருடாந்த உற்சவத்தில் 10ஆவது திருவிழா உற்சவத்தில் எனது நிகழ்வு நடைபெற்று வருகிறது. மேலும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு விழாவில் வரவேற்பு நடனம், பண்டிதர் வீரகத்தியின் நூற்றாண்டு விழாவில் 'முத்தமிழ் மாலை' எனும் நிகழ்வு, இன்னும் சில ஆலயங்களின் தொடர்ச்சியான உற்சவகால நிகழ்வுகள் என நூற்றுக்கணக்கான நிகழ்வுகள் மேடை ஏற்றியுள்ளேன்.

**— ஈஸ்வரலிங்கம்**

# "கிசுகிசுவெல்லாம் ஒரு மேட்டரே கிடையாது"

தமிழில் 'வானவில்' படத்தின் மூலம் அர்ஜுன் ஜோடியாக நடித்து அறிமுகமானவர், அபிராமி. 'மிடில் கிளாஸ் மாதவன்', 'தோஸ்த்', 'சமுத்திரம்', 'சார்லி சாப்ளின்' போன்ற படங்களிலும் நடித்துள்ளார்.

2015ம் ஆண்டில் வெளியான '36 வயதினிலே' மூலம் மீண்டும் தமிழுக்கு வந்த அபிராமி, சினிமாவில் தனது 2வது இன்னிங்சை தொடங்கி இருக்கிறார். அதேபோல மலையாளம், தெலுங்கு மற்றும் கன்னட படங்களிலும் மும்முரமாக நடித்துக் கொண்டிருக்கிறார். அவரது நடிப்பில் 'ஆர் யூ ஓகே பேபி' படம் வெளியாக இருக்கிறது.

மீண்டும் பிசியான நடிகையாக மாறியிருக்கும் அபிராமி நட்சத்திர பேட்டிக்கு மனம் திறந்தார். சிரிப்பு மாறாமல் அவர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு:

**சினிமாவில் உங்கள் அறிமுகம்?**

நான் ஆரம்பத்துல டி.வி. தொகுப்பாளராகத்தான் இருந்தேன். அப்படித்தான் படிப்படியாக சினிமா வாய்ப்பு கிடைச்சது.

**இப்போதும் தொகுப்பாளரை போல படபடவென பேசமுடியுமா?**

நாம சேஞ்ச் ஆகும்போது, நம்ம பாணியும் சேஞ்ச் ஆகத்தான் செய்யும். ஆனால் அப்போ இருந்த ஸ்பீடு, இப்போ இருக்குமான்னு கேட்டா, கொஞ்சம் தடுமாறும் அவ்வளவு தான் (சிரிக்கிறார்). **என்னென்ன படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறீர்கள்?**

தெலுங்கில் 'வாஷிங்மெஷின்' படத்துல நடிச்சு முடிச்சுருக்கேன். இன்னொரு புதிய படத்திலும் நடிச்சுட்டு இருக்கேன். தமிழில் விஜய் சேதுபதி நடிக்கும் 'மகாராஜா' படத்துல நடிச்சுருக்கேன். லட்சுமி ராமகிருஷ்ணன் இயக்கத்தில் 'ஆர் யூ ஓகே பேபி' படத்தில் சமுத்திரகனியுடன் நடித்துள்ளேன். சக்தி சிதம்பரம் இயக்கும் 'ஜாலியோ ஜிம்கானா', விஷால் வெங்கட், லோகேஷ் உள்ளிட்டோரின் படங்களிலும் நடிச்சுட்டு இருக்கேன். 2 புதிய படத்துல நடிக்க ஓகே சொல்லிருக்கேன். இதுதவிர விஜய் மில்டன் டைரக்டு செய்யும் வெப் சீரிஸ்லும் நடிக்கிறேன். மலையாளத்தில் 'கருடன்' படத்துல நடிக்கிறேன்.

**அப்படி என்றால் 2வது இன்னிங்சில் மீண்டும் பிசியாக நடிக்கத் தொடங்கியாச்சு?**

ஆமா... ஆமா... (சிரிக் கிறார்)

**'விருமாண்டி' படத்தில் கமல்ஹாசனுடன் நடித்த அனுபவம்?**

மறக்க முடியாத விஷயம் அது. கமல்ஹாசன் அப்படிங்கிற மிகப்பெரிய ஸ்டார் கூட நடிக்கும்போது நாமும் நம்மோட 'பெஸ்ட்'டை கொடுக்கணும் அப்டின்னுதான் என் மூளைக்குள்ள ஓடிக்கிட்டு இருந்துச்சு. அதுக்காக என் திறமை எல்லாத்தையுமே வெளிப்படுத்தினேன். சினிமா வாழ்க்கையில் மறக்க முடியாத படம் அது.

**அந்தப் படத்தில் தெக்கத்தி பாஷையில் கலக்கி இருப்பீர்களே... எப்படி தயாரானீங்க?**

படப்பிடிப்பின்போது, என்னை சுற்றி ஏராளமான மதுரைக்காரங்க இருந்தாங்க. அவங்க கிட்ட பேசும் போது, அவங்க பேச்சில் உள்ள நுணுக்கங்களை அறிந்து, புரிந்து நடித்தேன்.

நான் ஏதாவது தப்பா டயலாக் பேசிட்டா கூட, கமல் சார் அதை திருத்தி அன்பா சொல்லித்தருவாரு.

**முன்னணி நடிகையாக இருக்கும்போதே, சினிமாவில் இருந்து 10 ஆண்டு காலம் ஓய்வு எடுத்துவிட்டீர்களே... ஏன்?**

நான் படிக்க ஆசைப்பட்டேன். அதுக்காகத்தான் அந்த 'கேப்' தேவைப்பட்டுச்சு. நான் மிடில் கிளாஸ் பேமிலியில் இருந்து வந்தவ. சினிமாவுல எனக்கு யாரும் காட்பாதர் கிடையாது. தானா முளைச்சு வந்த மரத்துல நானும் ஒன்னு.

அந்த மரம் நல்லா தழைச்சு வரும்போது, 'ஓ.கே. நம்ம செய்ய வந்த வேலையை செஞ்சாச்சு' அப்படிங்கிற ஒரு திருப்தியோடதான் நான் போனேன்.

**மன அழுத்தத்தால்தான் இந்த முடிவு எடுத்துவிட்டீர்கள் என்று பேசப்பட்டதே?**

அப்படியெல்லாம் கிடையாதே...

**20 படங்களிலேயே உங்கள் சினிமா பயணம் முழுமையடைந்து விட்டதாக உணர்ந்துவிட்டீர்களா?**

சினிமா, எல்லா காலத்துக்கும் கைகொடுக்குமான்னு தெரியாது. நான் அப்போ பிளஸ்2தான் முடிச்சிருந்தேன்.

2 வருஷத்துல சினிமா இல்லைன்னு ஒரு ஸ்டேஜ் வந்தா நான் என்ன செய்வேன்?

அப்படி ஈசியா இருந்துடக் கூடாது இல்லையா... வாழ்க்கையில் எல்லாத்துக்கும் 'பிளான் பி' ஆப்ஷன் இருக்கணும்.

**எல்லா விஷயத்திலும் பிளான் பி தேவையா?**

நிச்சயமா இருக்கணும். ஒன்னையே நம்பியிருந்தா நாம தான் முட்டாள். நாம் ஆசைப்பட்ட விஷயம் திடீருன்னு நம்ம கைய விட்டு போயிருச்சுன்னா என்ன செய்ய முடியும்?

**இந்த வயதிலும் இளமையாக இருக்கீங்களே... எப்படி?**

அதென்னங்க இந்த வயசுலும்... ஏன் அப்படி என்ன வயசாயிருச்சு எனக்கு (கொஞ்சலாக அதட்டுகிறார்). எனக்கு ஒன்னும் பெரிசா வயசு ஆகல. ஆனாலும் என் அழகுக்கும், இளமைக்கும் காரணம் இருக்கு... அது என் அம்மாவும், அப்பாவும்தான்.

**உலகத்தில் அதிர்ஷ்டசாலியாக யாரைப் பார்க்கிறீர்கள்?**

நான்தான். இந்த இளமையை சந்தோஷமா அனுபவிச்சுட்டு வரேன்ல. எனக்கும் வயசாகும். முடி நரைக்கும். முகத்தில் சுருக்கம் வரும். அப்போதும் நான் அதிர்ஷ்டக்காரின்னுதான் சொல்வேன்.

**உங்களுடன் இணைந்து நடித்ததில் பிடித்த நடிகர் யார்?**

அப்படியெல்லாம் நான் நினைச்சது இல்ல. எல்லா ஹீரோக்களும் எனக்கு 'பெஸ்ட்'டாத்தான் அமைஞ்சுருக்காங்க...

**நடிக்கச் செல்லும் முன்பு 'ஹோம் வர்க்' செய்யும் பழக்கம் உண்டா?**

இல்ல. எந்த குழப்பமும் இல்லாம மனசை ஓபனா வச்சு நடிக்கணும். அப்படி நடிக்க ஆரம்பிச்சா, எந்த கஷ்டமான விஷயமும் ஈசிதான்.

**நடிகர்நடிகைகள் அரசியலுக்கு வருவதை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

அது அவங்களோட தனிப்பட்ட விஷயம். இஷ்டம்னா வரலாம்.

**நீங்கள் நடித்த படங்களில் எந்த படத்தின் 2ம் பாகம் வரவேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள்?**

'விருமாண்டி'னு சொன்னா அதில் அன்னலெட்சுமி செத்து போயிட்டா... சோ எனக்கு வாய்ப்பில்ல.

ஆனாலும் அன்னலெட்சுமி மகள், தங்கச்சி அப்படி, இப்படின்னு ஏதாவது ஒரு கேரக்டர் இருக்கும் பட்சத்துல, 'விருமாண்டி2' வரணும்னு ஆசைப்படுவேன்.

**திருமண வாழ்க்கை எப்படிப் போகிறது?**

அட்டகாசமாப் போகுது. என்ன புரிஞ்சுகிட்ட கணவர் கிடைச்சதுல ஐயம் வெரி ஹேப்பி.

**கணவர் உங்களுக்கு கொடுத்த முதல் கிப்ட் என்ன?**

ஏதோ ஒரு பொம்மைக்குட்டின்னு நினைக்கிறேன்.

**குடும்பத்துடன் சமீபத்தில் சுற்றுலா சென்ற வெளிநாடு?**

ரீசண்டாதான் லண்டன் போனோம்.

**தவறவிட்டு வருத்தப்பட்ட படம் இருக்கிறதா?**

அந்த மாதிரி எதுவும் இல்லை.

**'கிசுகிசு' பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

என்னை பத்தி 'கிசுகிசு' வந்ததில்ல. சோ கவலைப்பட தேவையில்லைன்னு நினைக்கிறேன். தேவையில்லாத 'கிசுகிசு' எப்போதுமே தப்புதான்.

**கனவு கதாபாத்திரம் என்று ஏதாவது இருக்கிறதா?**

அந்த மாதிரி எதுவுமில்ல. கிடைக்கும் ரோல் எல்லாமே என்னோட ட்ரீம் ரோல்தான். அப்படி நினைச்சுதான் நடிப்பேன்.

**காதல் பற்றி...**

காதல் எப்பவுமே பெஸ்ட்தான்.

**நிகழ்ச்சி தொகுப்பாளராக ரஜினிகாந்த் கமல்ஹாசனிடம் கேட்க விரும்பும் கேள்வி?**

'டக்'குன்னு தோணல... இருந்தாலும் எப்படி இருக்கீங்கன்னு? ஆரம்பிப்பேன்.

**மற்ற மொழி சினிமாவுக்கும், தமிழ் சினிமாவுக்கும் வித்தியாசம் இருக்கிறதா?**

மொழியும், கலாசாரமும் மட்டும்தான் வித்தியாசம். வேற எதுவும் இல்ல.

**2வது இன்னிங்ஸ் ஆட எந்த நோக்கத்துடன் வந்திருக்கிறீர்கள்?**

நல்ல படங்கள் நடிக்கணும்னு மோட்டிவோட... இப்படி நம்பிக்கையுடன் முடித்தார்.



அபிராமி





# கமலுடன் சுருதிஹாசன் பாடிய இசை ஆல்பம்

உலக நாயகன் கமல்ஹாசன் மகளும், முன்னணி நடிகையுமான சுருதிஹாசன், பிரபாசுக்கு ஜோடியாக நடித்துள்ள 'சலார்' படம் விரைவில் வெளியாக இருக்கிறது. சமீபத்தில் ரசிகர்களுடனான கலந்துரையாடலில், 'உங்களது தந்தை கமல்ஹாசனுடன் இணைந்து பாடல் பாடுவீர்களா?' என்ற ஒரு ரசிகரின் கேள்விக்கு, "நிச்சயம் ஒரு இசை ஆல்பத்தில் இணையவுள்ளோம். விரைவில் அறிவிப்பு வெளியாகும்'' என்று சுருதிஹாசன் தெரிவித்திருந்தார். துபாயில் நடந்த சினிமா விருது வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்ற கமல்ஹாசனும் இந்த தகவலை உறுதி செய்தார். 'ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனம் மற்றும் சுருதிஹாசனுடன் இசை படைப்பில் நான் இணைகிறேன்' என்று குறிப்பிட்டிருந்தார். தற்போது இசை ஆல்பத்துக்கான பணி விறுவிறுப்பாக நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. விரைவில் இந்த இசை ஆல்பம் வெளியிடப்பட இருப்பதாகவும் கூறப்படுகிறது. கமல்ஹாசன்சுருதிஹாசன் இணையும் இசை ஆல்பம் குறித்து ரசிகர்கள் அதிக எதிர்பார்ப்பும் கொண்டுள்ளனர். சுருதிஹாசன் ஏற்கனவே 'எட்ஜ்', 'ஷீ இஸ் எ ஹீரோ' என்ற 2 இசை ஆல்பங்களை வெளியிட்டுள்ளார். தற்போது அவரது 3வது இசை ஆல்பம் வெளிவர இருக்கிறது. 'தி ஐ' என்ற ஹாலிவுட் படத்திலும் சுருதிஹாசன் நடித்து வருவது குறிப்பிடத்தக்கது.







# ஆட்டோவில் பயணித்த கீர்த்தி சுரேஷ்

தென்னிந்திய சினிமாவின் முன்னணி நடிகையாக திகழும் கீர்த்தி சுரேஷ், வருண் தவான் ஜோடியாக ஒரு புதிய படத்தில் நடித்து வருகிறார். இது வருண் தவானின் 18வது படமாகும். காளிஸ் இயக்குகிறார். இந்த படத்தின் மூலம் பாலிவுட் சினிமாவில் அறிமுகமாக இருக்கும் குஷியில் கீர்த்தி சுரேஷ் இருக்கிறார். இதனால் படப்பிடிப்பில் சுறுசுறுப்பாக இருக்கிறாராம். இந்த நிலையில் மும்பையில் நடந்த படப்பிடிப்பில் பங்கேற்று நடிகர் வருண் தவானுடன், கீர்த்தி சுரேஷ் ஜோடியாக ஆட்டோவில் வலம் வந்துள்ளார். மும்பையின் முக்கிய சாலைகளில் ஆட்டோவில் இந்த ஜோடி சுற்றி வந்துள்ளனர். ஆட்டோவில் வருண் தவான் கீர்த்தி சுரேஷ் பயணிப்பதை பார்த்த ரசிகர்களும், சக பயணிகளும் ஆச்சரியம் கொண்டனர். சில குறும்புக்கார ரசிகர்கள் அந்த ஆட்டோவை பின்தொடர்ந்து சென்றனர்.

# 'மார்கழி திங்கள்' திரைப்படத்தின் முதல் பாடல் வெளியானது



நடிகர் மனோஜ் பாரதிராஜா இயக்குனராக அறிமுகமாகியுள்ள திரைப்படம் 'மார்கழி திங்கள்'. புதுமுகங்களை கொண்டு உருவாகியுள்ள இப்படத்தில் இயக்குனர் பாரதிராஜா மற்றும் இயக்குனர் சுசீந்திரன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். சுசீந்திரனின் வெண்ணிலா புரொடக்சன்ஸ் தயாரிப்பில் உருவாகியுள்ள இந்த படத்திற்கு இளையராஜா இசையமைத்துள்ளார். பள்ளி பருவத்து காதலை மையமாக கொண்டு இந்த திரைப்படம் உருவாகியுள்ளது. சமீபத்தில் இந்த படத்தின் டீசர் மற்றும் டிரைலர் வெளியாகி கவனம் பெற்றது. இந்த நிலையில் இந்த படத்தின் முதல் பாடல் தற்போது வெளியாகி உள்ளது. 'உன் நினைவால்' என்ற பாடலின் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.

# சாதனை படைத்த 'ரவுடி பேபி'



யூடியூபில் 'ரவுடி பேபி' பாடல் 150 கோடி பார்வைகளைக் கடந்து சாதனை படைத்துள்ளது. இயக்குனர் பாலாஜி மோகன் இயக்கத்தில் நடிகர் தனுஷ், நடிகை சாய் பல்லவி, வரலட்சுமி சரத்குமார் உள்ளிட்ட பலர் நடித்த 'மாரி2' திரைப்படம் கடந்த 2018ம் ஆண்டு வெளியானது. இந்த படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்திருந்தார். இந்த படத்தில் இடம்பெற்ற 'ரவுடி பேபி' என்ற பாடல் ரசிகர்களிடம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது. இந்த பாடலை தனுஷ் எழுதியிருந்தார். தனுஷ் மற்றும் பாடகி தீ ஆகியோர் பாடியிருந்தனர்.

அதோடு இந்த பாடலின் நடன இயக்குனர் பிரபுதேவா, தனுஷ் மற்றும் சாய் பல்லவி ஆகியோரின் கூட்டணியில் பாடல் வீடியோவும், நடனமும் யூடியூபில் வைரலானது.

தமிழில் வெளியான இந்த பாடல் வீடியோ, உலகின் பல்வேறு நாடுகளிலும் ரசிகர்களை வெகுவாக கவர்ந்துள்ளது. இந்த நிலையில் தற்போது யூடியூபில் 'ரவுடி பேபி' பாடல் 150 கோடி பார்வைகளைக் கடந்து சாதனை படைத்துள்ளது. யூடியூபில் இத்தனை கோடி பார்வைகளைக் கடந்த முதல் தென்னிந்திய பாடல் என்ற பெருமையை 'ரவுடி பேபி' பாடல் வீடியோ பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சினிமா காப்பாற்றப்பட வேண்டும்

போஸ் வெங்கட்



நடிகர் இயக்குனருமான போஸ் வெங்கட் தனது டுவிட்டரில் வெளியிட்டுள்ள அறிக்கையில், எங்கும் நசுக்கப்படுவது தான் ஏழ்மை..இங்கு 100 கோடிக்கு மேல் பணம் இரைத்து தவறான படங்களை ஏன் எடுக்கிறீர்கள் என்று கேட்க ஆள் இல்லை. மக்களுக்கு பிரயோஜனமான தேவையான அவசியமான திரைப்படங்களை எடுக்கும் கார்ப்பரேட்டுகளை கேள்வி கேட்காமல், பணத்தை கருத்தில் கொள்ளாமல் மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு வரும் தயாரிப்பாளர்களை தடுத்து நிறுத்துவது, இங்கு இருக்ககூடிய ஏற்றத்தாழ்வு, சாதியக் கொடுமை, மன ரீதியான பிரச்சினைகள் ஆகியவற்றை சினிமாக்களாக அறிவுரைகளாக அக்கறையுடன் சொல்லும் அருமையான சிறு திரைப்படங்களை தடுப்பது என்பது ஒரு விதமான பாசிச மனப்பான்மை.

தமிழகத்தில் தடுக்கப்பட வேண்டிய சினிமா என்பது எடுக்க கூடாத சினிமா என்பது யாருக்கும் உபயோகமில்லாமல், எந்தவித பயனையும் எந்த மக்களுக்கும் அளிக்காமல் வெறும் பாக்கெட்டை நிரப்பும் சினிமாக்கள் மொத்தம் 4 பேர் பணத்தை எடுத்துக்கொண்டு பிரித்துச் செல்லும் அந்த புத்திசாலிகள் அவர்களைத்தான் தடுத்து நிறுத்த வேண்டும்.

மாறாக சிறிய பட்ஜெட் என்று வெறுமனே வார்த்தைகளை பயன்படுத்தி நல்ல திரைப்படங்களை தடுப்பது என்பது நம் தமிழ் சினிமாவிற்கு நாமே தன் தலையில் மண்ணள்ளி கொட்டுவதற்கு சமம். இந்த பாசிச எண்ணம் யாரிடம் இருந்தாலும் அது தவறு. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெண்கள் பற்றிய சிந்தனை மாறியுள்ளதா?

பெண்கள் என்றாலே வலிமை குறைந்தவள் என்கிற ஓர் எண்ணம் இன்றும் உள்ளது.

ஆணுக்கு நிகராக பெண் கல்வியிலும், தொழிலிலும், சம்பாத்தியத்திலும் சுய மரியாதையுடன் வளர்ந்து கொண்டிருக்கிறாள். ஆனாலும் இந்தச் சமூகம் ஏதோ ஒன்றைச் சொல்லி பெண்களின் வளர்ச்சிக்கு தடையேற்படுத்திக் கொண்டேயிருக்கிறது .

கீழைத்தேய நாடுகளில் மட்டுமல்ல மேலைத்தேய நாடுகளிலும் இவ்வாறான செயற்பாடுகள் இருந்தது, இருக்கின்றது என்பதை சில பழமொழிகள் மூலமாக அறியலாம். அப்படியென்ன பெரிதாக கூறிவிட்டார்கள் என்று நீங்கள் நினைக்கலாம் . சிலவற்றை வாசிக்க உங்களுக்கே புரியும்.

மாவீரன் நெப்போலியன் பொனபார்ட், “பெண்கள் நம் சொத்து. ஆனால், நாம் அவர்கள் சொத்து அல்ல. அவர்கள் நமக்காகப் பிறந்தவர்கள் என்கிறார்.

“எப்போதெல்லாம் ஒரு பெண் இறக்கிறாளோ, அப்போதெல்லாம் உலகத்தில் ஒரு சண்டை குறையும்” என்கிறது ஜெர்மன் பழமொழி.

“ஆண் ஆணையிடுகிறான், பெண் அதற்கு அடிபணிந்து போக வேண்டும்” என்கிறார் லார்ட் டென்னிசன்.

இவற்றுக்குச் சற்றும் குறைந்ததல்ல தமிழ்ப் பழமொழிகள்.

பெண் புத்தி பின் புத்தி’

‘அடுக்களைக்கு ஒரு பெண்ணும் அம்பலத்திற்கு ஒரு ஆணும்’

‘அடுப்பே திருப்பதி அகமுடையானே குலதெய்வம்’

‘பெண்ணை அடித்து வளர்க்கணும் முருங்கை மரத்தை ஒடித்து வளர்க்கணும்’ (பழமொழி தகவல் திரட்டல் கூகுள் )

பெண் இனத்தை அடக்கி ஆள, அதிகாரம் செய்ய ஆண் இனம் எடுத்த அறிவாயுதம்தான் பிரித்தாளும் சூழ்ச்சி. உலகெங்



கும் பெண் சமூகத்தை, ஆண் சமூகம் ஒருவிதக் காழ்ப்புணர்வோடுதான் பார்த்து வந்திருக்கிறது. மதத் தலைவர்கள், ஆட்சியாளர்கள், மாவீரர்கள், புகழ் பெற்ற படைப்பாளிகள் என்று இதுக்கு யாரும் விதிவிலக்கு அல்ல..

பெண்கள் பற்றிய சமூக கண்ணோட்டம் பெண்கள் முகம் கொடுக்கும் விடயங்களில் முக்கியமானவை. அவற்றை நாம் மூன்று விதமாக வகுக்கலாம்.

1.பெண்மையின் மகத்துவம் உணராமை
2.பெண்மையின் சீரழிவு பற்றிய சிந்தனை இன்மை
3.பெண்மை பற்றிய தவறான கண்ணோட்டம்

பெண்மையின் மகத்துவம் உணராமை

பெண்கள் வேலைக்கு சென்றாலும் வீட்டில் இருந்தாலும் , ஏழையாக இருந்தாலும் பணக்காரியாக இருந்தாலும் அவளின் பிரதான அடித்தளம் அன்பே, குழந்தைக்காகவும் குடும்பத்திற்காகவும் தன்னை தன் ஆசைகள், சுய தேவைகள் என்பவற்றை இழந்து அர்ப்பணிப்புடன் நடக்கிறாள். நம்பிக்கையுடன் கொடுக்கப்படும் ஒரு செயலை அவள் வெற்றிகரமாக செய்து முடிக்க உறக்கம், உணவு, என்பவற்றை தொலைத்து தனது இலக்கு நோக்கி ஓடுவது பெண்களின் மகத்துவமாக இருக்கிறது. (இப்போது ஒரு சிலர் கடமை தவறி நடக்கிறார்கள். அவர்களுக்கு இது பொருத்தமல்ல). இவற்றை சுற்றியுள்ள உறவுகளும் தோழமைகளும் உணர மறுக்கின்றனர்." அவள் கடமையை அவள் செய்கிறாள். நம் பங்கு எதுவும் இல்லை' என்று அவளின் வலி ,வேதனையை உணராமல் நமக்கத்தானே கடமைகளை செய்கிறாள், நமக்காகத்தானே பல விடயங்களை தொலைத்து நிற்கிறாள் என்று சிந்திப்பதேயில்லை.

பெண்களின் சீரழிவு பற்றிய சிந்தனை இன்மை,

பெண்களின் சீரழிவு எனும் போது எல்லோர் மனதிலும் தோன்றுவது பாலியல் ரீதியாக பாதிப்படைதலே. ஆனால் அவர்களின் கலாச்சாரம் பண்பாடு, கல்வி என்பன சில நேரங்களில் அவர்களின் உறவுகளாலே பாதிப்படைவது பற்றி யாரும் சிந்திப்பதில்லை வேதனையே. நன்றாக படிக்கக் கூடிய பெண் குழந்தைகளின் கல்விக்கு தடை விதித்தல் தொழிலுக்கு செல்லும் பெண்ணை திருமணத்தின் பின் தொழிலை விட்டு நிறுத்துதல்.

பல்வேறு திறமைகள் இருப்பது தெரிந்தும் அவற்றை வெளிப்படுத்த விடாமல் தடை விதிப்பது . வீடு வன்முறைகளில் அடித்தல், காயப்படுத்துதல் , அவர்களின் கருத்துக்களை கேட்காமல் புறக்கணித்தல் ,திருமணங்களில் அவர்களின் விருப்பத்திற்கு மாறாக செயற்படுத்தல், உறவென்று வாழ்பவர்களின் மனம் போலவே நடந்து கொள்ளக் கட்டாயப்படுத்தல், பெண் என்கிற காரணத்தால் சில விடயங்களுக்கு தடை சொல்லல், சரியாக நடத்துவார் என்கிற நம்பிகை இல்லாமை, அவளுக்கு ஒரு மனமிருக்கிறது என்கிற எண்ணமின்றிதான் தோன்றித் தனமாக முடிவுகளை திணித்தல் போன்ற விடயங்கள் பல பெண்களின் வாழ்வை சீரழிவுக்குத் தள்ளுகிறது.



கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...

# வாசனை திரவியங்கள்

நல்ல வாசனை திரவிய உற்பத்தியாளருக்கு ‘ஒல்பாக்ஷன்’ எனும் திறன் இருக்க வேண்டியது முக்கியம். அதாவது நறுமணங்களை முகர்ந்து பார்க்கும் திறன்.

இதன் அடிப்படையில் முதலில் 250 திரவங்களை முகர்ந்து பார்த்து அடையாளம் கண்டுபிடிக்க வேண்டும் என்பதை விதியாகவே நிர்ணயித்திருக்கிறார்கள். வாசனை திரவியங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மக்களிடையே பிரபலமாக இருக்கின்றன.

எகிப்து, சர்வதேச வாசனை திரவிய வர்த்தகத்தில் முதலாவதாக விளங்கியது. அந்த நாட்டு மக்கள் வாசனை திரவியங்களை 'கடவுளின் வியர்வை' என்று நம்பினார்கள்.

அந்தக் காலத்தில் தயாரிக்கப்பட்ட வாசனை திரவியங்களில் 'லவங்கப்பட்டை' முக்கியப் பொருளாக சேர்க்கப்பட்டது.

கிரேக்கர்களும் வாசனை திரவியங்களை விரும்பி பயன்படுத்தினர். சில வாசனைகள் ஆரோக்கியத்தையும், உயிர்ச்சக்தியையும் மேம்படுத்துவதாக அவர்கள் நம்பினர்.

உலகம் முழுவதும் அந்தக் காலத்தில், அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், வணிகர்கள் போன்ற உயர்தட்டு மக்களிடையே வாசனை திரவியங்



கள் அதிகம் புழக்கத்தில் இருந்திருக்கிறது. தற்போது வாசனை திரவியங்கள் உற்பத்தி செய்யும் பிரபல நாடுகளின் பட்டியலில் முன்னணியில் இருப்பது பிரான்சு.

வெயில் காலத்தில் லேசான நறுமணம் கொண்ட திரவியங்களையும், குளிர்காலத்தில் அடர்ந்த வாசம் கொண்ட திரவியங்களையும் பயன்படுத்தலாம்.

வாசனைத் திரவியம் வாங்கும் போது, மணிக்கட்டின் மீது பூசி அந்தப் பகுதியில் ஒவ்வாமை எதுவும் ஏற்படவில்லை என்றால் மட்டுமே வாங்குவது நல்லது.

வாசனை திரவியங்களை வாங்கும்போது, மணிகட்டின் பின்பகுதி அல்லது கழுத்துப் பகுதியின் கீழ் பூசி பரிசோதிப்பது ஏன் தெரியுமா? அந்தப் பகுதிதான் நம் உடலின் 'பல்ஸ் பாயிண்ட்'. அங்கு இருக்கும் ரத்த நாளங்கள் உடல் வெப்பத்தை சீக்கிரம் வெளிப்படுத்தும். இதனால், வாசனை திரவியத்தின் நறுமணம் மற்றும் அதன் விளைவு எளிதாகத் தெரியும்.

நீங்கள் வாசனை திரவியம் பயன்படுத்த ஆரம்பிக்கும் சில நிமிடங்களிலேயே, அந்த நறுமணத்துக்கு உங்கள் மூளை பழக்கமாகி விடும். அதன் பிறகு உங்கள் வாசனையையும், வாசனைத் திரவியத்தையும் உங்களால் தனித்தனியே பிரித்து நுகர முடியாது.

ஒரே வகையான வாசனை திரவியம், இரண்டு நபர்களின் உடலில் வெவ்வேறு விதமான வாசனைகளைக் கொடுக்கும்.

இதற்கு உடலின் இயற்கையான வாசம், வியர்வை, வெளிப்புற தூசு, மாசுபாடு போன்றவையும் காரணமாகும்.

# இலங்கை பொன்மனச் செம்மல் கலைத் தங்கம் தாஜ்மஹானுக்கு தலைநகரில் மாபெரும் வெற்றி விழா








தினகரன், தினகரன் வாரமஞ்சரி அனுசரணையில், சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தார் நடாத்தும் மாதம் ஒரு ஆளுமையை கௌரவிக்கும் விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை (24. 09. 2023) கொழும்பு 11 பழைய நகர சபை மண்டபத்தில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கைப் பொன்மனச் செம்மல் கலைத் தங்கம் தாஜ்மஹான், சிந்தை தந்த சிந்தனையாளர் *Sunshine Super Star* விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார்.

இந்நிகழ்வு சங்கவி பிலிம்ஸ் அதிபர் துரைராசா சுரேஷ் முன்னிலையில் தினகரன், தினகரன் வார மஞ்சரி

பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் தலைமையில் மிகக் கோலாகலமாக நடை பெற்றது.



இலக்கிய உலகின் தந்தை என வர்ணிக்கப்படும் வகவத் தலைவர் கவி மாமணி நஜ்முல் ஹுசைன் தலைமையிலான பிரபல கவிஞர்கள் பலரும் தாஜ்மஹானின் புகழ் பாடி கவி மழையில் நனைய வைத்தனர்.

பிரதான பேச்சாளரான அறிவகம் அதிபர் வானலை வாருதி கலாநிதி அழகையர் சசான்கன் சர்மா மற்றும் பலர் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் தாஜ்மஹானின் ஆளுமை பற்றி அள்ளி வழங்கினர்.

பிரதான பேச்சாளரின் உரையிலே தாஜ்மஹானின் திறமை உண்மையானது தானும் வளர்ந்து தமிழையும் வளர்க்கும் ஆற்றல் உள்ளவர். நாவன்மை, கவி வன்மை, கலை வன்மை,

நடிப்பு வன்மை, கொண்டவர் என அடுக்கிக் கொண்டே போகலாம்.

கலை நிகழ்வுகள் நடைபெறும் இடங்களில் தனது பங்களிப்பும் இருந்திட வேண்டும் எனும் உளப்பங்கு உள்ளவர். நலிந்த கலைஞர்களுக்கு சிறப்பான உதவி செய்வதில் முன்னின்று உழைப்பவர்.

தன்னை நாடி வருபவர் உதவி கேட்டு வந்தால் முடிந்தவரை உதவி செய்திடும் பண்புமிக்கவர். தன்னலம் கருதாத சேவை புரியும் மனப்பாங்கு கொண்டவர். இலங்கை பொன்மனச் செம்மல் எனும் புனைப் பெயருக்கு பொருத்தமானவர்.

மற்றவர் மனம் நோகாது பேசும் பண்பும் இவரது சிறப்பம்சமாகும் என தனதுரையில் முழங்கினார்.

தலைமை வகித்த தினகரன் தினகரன் வார மஞ்சரி பிரதம ஆசிரியர் தெ. செந்தில்வேலவர் தன் தலைமையுரையிலே

தாஜ்மஹானின் திறமைகளையும் அவரது கலை ஆற்றல் களையும் கண்டு நான் வியந்ததுண்டு. எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு நல்ல மனித நேயமிக்கவர். அதனால்தான் அவரது ஆதரவாளர்கள் மண்டபம் நிறைந்து காணப் படுகின்றனர்.

இதே மண்டபத்தில் பல நிகழ்வுகளில் நான் கலந்து கொண்டிருக்கின்றேன். ஆனால் இது போன்ற ஒரு மண்டபம் நிறைந்த கூட்டத்தைக் காணவில்லை. தாஜ்மஹானுக்குரிய இந்த விழாவை இந்த மண்டபத்தில் இல்லாமல் வேறு பெரிய மண்டபத்தில் நடாத்தி இருக்க வேண்டும். இன்றைய இந்த நிகழ்வினைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் என்று கூறியதோடு இனி வரும் காலங்களில் தினகரன் எடுக்கும் விழாவில் தாஜ்மஹானுக்கு விருது வழங்கியும் கௌரவிப் போம் என தாஜ்மஹானுக்கு தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார். தினகரன் சிரேஷ்ட ஊடகவியலாளரும் பிரபல கவிஞரும் கலைஞருமான ஈஸ்வரலிங்கம் நிகழ்வினை நெறிப் படுத்தினார்.

இந்நிகழ்வில் கண்ணியத்துக்குரிய இஸ்லாமிய உலமா Dr.

நியாஸ் மௌலவி பவுண்டேஷன் பணிப்பாளர் M.L.M. லமீர் உட்பட ஜனாதிபதியின் இணைப்பாளர் சுப்பையா ஆனந்த குமார், நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவின் முஸ்லிம் விவகார இணைப்பாளர் சிராஜுதீன் நிப்ராஸ் மொஹம்மத், சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ், கொழும்பு மாவட்ட முன்னாள் பிரதி மேயர் ரி.எம்.இக்பால், முன்னாள் நவமணி பிரதம ஆசிரியர் என்.எம். அமீன், கொழும்பு கலாச்சார மன்றத்தின் தலைவர் சந்தன விஜேமான்ன, கலாநிதி யூசுப் மரிக்கார், பிரபல பாடகர்களான ஈழத்து இசை முரசு கலைக் கமல், ஹிந்தி பாடகர் மொஹம்மத் அலி, என்.எம். புரொடக்சன் தலைவர் எம்.எம். நசார் உட்பட பிரபல

நடன ஆசிரியர் நந்தகுமார், இம்ரான் நெய்னார், அஷ்ரப் சியாப்தீன போன்ற பிரபலங்களும் மற்றும் ஏராளமான கலைஞர்கள், கவிஞர்கள், கலை ரசிகர்கள் என பல்வேறு

தரப்பினரும் கலந்து நிகழ்வினை அலங்கரித்த மாபெரும் வெற்றி விழாவாக இடம் பெற்றது என்றால் மிகையாகாது.

விழா நாயகன் இலங்கை பொன்மனச் செம்மல் கலைத் தங்கம் தாஜ்மஹானின் ஏற்புரையிலே

ஒரு நாட்டின் நலம், அதன் வளம், ஒரு மனிதனின் வளம் அவனது நன்றியுள்ள மனம். ஒருவர் எமக்கு எள்ளளவு நன்றி செய்தாலும் அதன் கொள்ளளவு இமயத்திலும் உயரமாய் கருத வேண்டும். நன்றியை மறந்த மனிதனை இந்த நானிலம் நாயிலும் இழிவாக எடை போடும். மனிதப் பண்பிலே முதன்மை பெறுவது புனிதமான நன்றி இயல்பு.

எனவே நா வன்மை, கலை வன்மை, கவி வன்மை,நடிப்பு வன்மை, பக்குவ வன்மை என்னும் எனது தன்மைகள் நான் பிறக்கும் போதே அந்த ஆண்டவனால் என்னோடு விதைக்கப் பட்டவை.

அந்த வி'த்துக்கள் எல்லாம் இன்று முழு விருட்சமாக வளர்ந்துள்ளன.

சமூகத்துக்கு என்னை ஒரு கலை மாமணியாய் ஒளிர வைத்து எல்லோர் பார்வையிலும் மிளிர வைத்த அந்த இணையில்லா இறைவனுக்கே முதற்கண் நன்றி எனத்தொடர்ந்தார்.

அதே போல் என் திறமைகளையும், பெருமைகளையும் பத்திரிகைகளில் பிரசுரித்து வந்த தினகரன், தினகரன் வார மஞ்சரி பிரதம ஆசிரியர் நண்பர் செந்தில் வேலவருக்கும் அளப்பரிய நன்றிகளை அகங் கனிந்து நவில்கின்றேன்.

அதே போல் இன்று எனக்கு சிந்தை தந்த சிந்தனையாளன் *Sunshine Super Star* விருது தந்து கௌரவித்த சங்கவி பிலிம்ஸ் அதிபர் துரைராசா சுரேஷுக்கும் என் இதயம் கனிந்த நன்றிகளை தெரிவி'த்துக் கொள்கின்றேன் மற்றும் இந்த நிகழ்வினை நெறிப் படுத்தி மிகவும் நேர்த்தியாக நடாத்திக் கொண்டிருக்கும் தினகரன் சிரேஷ்ட ஊடகவியலாளர் செந்தூரம் புகழ் ஈஸ்வரலிங்கத்துக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்னை வாழ்த்தி கவி பாடிய கவிர்கள், போற்றி'ப் பேசிய பேச்சாளர்கள் அனைவருக்கும் வானளவு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதே போல் என் அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் அன்புள்ளங்கள் அனைவருக்கும் நன்றிகளைப் பகிர்ந்து கொள்கின்றேன்.

எனது சகல வெற்றிகளுக்கும் நான் பெறுகின்ற எல்லா விருதுகளுக்கும் உற்ற துணையாய் உதவி செய்து பக்க பலமாய்த் தோள்கொடுத்து ஏணி போல் என் உயர்வுக்குக் காரணமாக இருக்கின்ற என் உயிரிலும் மேலான என் வாழ்க்கைத் துணைவியாம் என் மனையாளுக்கும் என் மனமார்ந்த நன்றிகள் என நிறைவு செய்தார். இதன் போது தாஜ்மஹானின் வேண்டுகோளுக்கிணங்க சிலருக்கு சமாதான நீதவான் பதவிக்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டது ஒரு சிறப்பம்சமாக விழாவில் களைகட்டியதோடு விழா இனிதே நிறைவு பெற்றது.

**– விஜெகலா**


## வழிகாட்டுங்கள்



## தொடர்புபடுத்துங்கள்




## நிறம் தீட்டுங்கள்



## கல்விச் செல்வம்

கல்விச் செல்வம் ஈட்டிடுக
கற்ற சொல்லில் காட்டிடுக
நல்லொழுக்கம் ஊட்டிடுக
நல்லோர் நடையைப் போட்டிடுக
கல்லாதோர்க்கும் தீட்டிடுக
கல்வி ஞானம் மூட்டிடுக
பல்லோர் சபையில் ஏற்றிடுக
பகுத்தறிவாலே போற்றிடுக

## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





# இலக்கியத்தை நேசித்து இரு அரச விருதுகளை தனதாக்கிக்கொண்ட எழுத்தாளர் எம்.எம்.நௌஷாத்

வைத்தியர் எம்.எம். நௌஷாத் கிழக்கு மாகாணத்தின் எழுத்தாளுமைகளில் ஒருவர்.

சுமார் நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக இலக்கியத் துறையில் கால்பதித்து ஆக்க இலக்கியங்களைப் படைத்து வரும் மஹ்மூது முஸ்தபா நௌஷாத் அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறையைத் தாயகமாகக் கொண்டவர். ஓய்வு பெற்ற அதிபர் மர்ஹூம்களான யூ.எம். முஸ்தபா, ஓய்வு பெற்ற ஆசிரியை ஜெமீலா உம்மா தம்பதியர்களுக்கு முதற்பிள்ளையாக 1963 பெப்ரவரி மாதம் 12ந்திகதி அவர் பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை ஊவா மாகாணத்தின் ஆளுபொத்த மதீனா மகா வித்தியாலயத்திலும், பசறை மகாவித்தியலாயத்திலும் இடைநிலை உயர் கல்வியினை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயத்திலும் மருத்துவக் கல்வியினை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் கல்வி கற்றார். தற்போது கல்முனைப் பிராந்திய மலேரியாத் தடுப்பு இயக்கத்தின் வைத்திய பொறுப்பாளராக கடமை புரிந்து வருகின்றார்.

மூன்றாம் வகுப்பிலிருந்தே டொமினிக் ஜீவாவின் மல்லிகை சஞ்சிகையைத் தொடர்ந்து வாசித்ததோடு, தண்ணீரும் கண்ணீரும் என்ற அவரின் தொகுதியில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, அவரை ஆதர்ஸமாகக் கொண்டு தானும் அவரைப் போல் சிறுகதை எழுத வேண்டுமென்று மனதிற்குள் வரித்துக் கொண்டதே பிற்காலத்தில் சிறுகதை ஆசிரியராக மிளிர வைத்தது. ஆறாம் வகுப்பில் கல்வி கற்கையில் அல்லாமா இக்பாலின் கவிதைகளில் ஈடுபாடு கொண்டு பிறை நேசன் என்ற புனைபெயரில் கவிதைகளை எழுத முனைந்தார்.

நௌஷாத், கபொத சாதாரண பரீட்சையை முடித்த கையோடு வெளிச்சத்திற்கு வருவோம் என்ற தனது முதலாவது சிறுகதையை எழுதினார். இந்தச் சிறுகதை நீர்ப்பாசனத் திணைக்கள தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் 1979 அல்லது எண்பதுகளில் நடத்திய சிறுகதைப்போட்டியில் அவ்வேளை பிரபலமாக இருந்த எழுத்தாளர்களைப் பின்னுக்குத் தன்னி அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தைத் தட்டிக் கொண்டது பலதரது பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டார்.

இவ்வாறு இலக்கியத் துறையில் கால் பதிப்பதற்கு பிரதான உந்து சக்தியாக அவரது தந்தை மர்ஹூம் முஸ்தபாவின் கலைத்துறை ஈடுபாடும் ஒரு காரணமாக அமைந்தது எனலாம். இவரது தந்தை குணதுறை மஹ்மூத் என்ற பெயரில் தினபதிக்கு கட்டுரைகள் எழுதியதோடு பாடசாலை நாடகங்களைத் தயாரித்தார்.

பரிசு பெற்ற கையோடு தினகரன், வீரகேசரி, சிந்தாமணி, சிரித்திரன், மல்லிகை, வியூகம், தமிழ்நாட்டில் இருந்து வெளிவந்த தீபம் ஆகிய வாராந்தரிகளிலும், மாசிகைகளிலும் சுமார் இருபது சிறுகதைகள் வரை தொடர்ச்சியாக வெளிவந்தன. கவிஞர் மன்சூர் ஏ காதரும் மறைந்த வி. ஆனந்தனும் இக்காலகட்டத்தில் இவரின் ஊக்குவிப்பாளர்களாக இருந்தார்கள்.

1981இல் மருத்துவபீடத்திற்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்து கற்றல் செயற்பாடுகளில் முற்றாகக் கவனம் செலுத்தியதனாலும் பிற்காலத்தில் வேலைப்பளுவாலும், இவருடைய எழுத்துப் பணிகள் முற்றாக முடங்கின.



2005இல் "நோயாளியும் பஞ்சுமிட்டாயும் " என்ற கதை மூலம் இவர் மீண்டும் தன்னுடைய எழுத்துப் பணியை ஆரம்பித்தார். அவ்வாண்டு வெளிவந்த மீலாத் மலரில் இக்கதை வெளிவந்தது. மறைந்த அருட்திரு மத்தியூவின் தூண்டுதலால் மீண்டும் சிறுகதைகளை எழுத ஆரம்பித்தார்.

2016 இல் சொர்க்கபுரிச் சங்கதி என்ற தன்னுடைய முதலாவது சிறுகதைத் தொகுதியை வெளியிட்டார். மாறன் யூ செயினின் கலை இலக்கியத் தேனகத்தின் வெளியீடாக அது வந்தது. 33 சிறுகதைகளைக் கொண்ட பெருந் தொகுதியான அதற்கு ஓவியர் ருத்ரா 33 அற்புதமான ஓவியங்களை வரைந்தார்.

இந்தத் தொகுதி எழுத்தாளரின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இதன் மொழிநடை முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. கதைக்கருக்களும் முற்றிலும் வித்தியாசமானதாக இருந்தன. கதைத் தலைப்புகளும் கவர்ச்சியாக இடப்பட்டிருந்தன. உமா வரதராஜனின் உள்மன யாத்திரை என்ற நூலின் வசீகரமான மொழி நடையால் ஈர்க்கப்பட்டு அவர் இக் கதைகளை எழுதினார். இந்த நூலுக்கு பேராசிரியர் றமீஸ் அப்துல்லா, கவிஞர் மன்சூர் ஏ காதர், உமா வரதராஜன் ஆகியோர் அணிந்துரை வழங்கினார்கள். மேலும் சிறந்த சிறுகதைத் தொகுதிக்கான 2017ஆம் ஆண்டின் அரச சாஹித்ய விருது, கொடகே சாஹித்ய மண்டல விருது, கிழக்கு மாகாண சாஹித்ய விருது ஆகிய மூன்று விருதுகள் இந்நூலுக்கு கிடைத்ததுடன், வாசகர்களினதும், எழுத்தாளர்களினதும் பாராட்டைப் பெற்றிருந்தார்.


பூச்செண்டு போல் ஒரு மனிதன் என்ற தலைப்பிடப்பட்ட அடுத்த சிறுகதைத் தொகுதி 2021 இல் வெளிவந்தது. ஏழு சிறுகதைகளை உள்ளடக்கிய இந்தத் தொகுதி மாயயதார்த்த பாணி கலந்த இன்னுமொரு வித்தியாசமான பாணியில் அமைந்தது. மேலும் இக்காலகட்டத்தில் எழுத்தாளர் நௌஷாத், வாசகசாலை, கனலி, கலகம், வனம் போன்ற இணைய இதழ்களிலும் எழுத ஆரம்பித்ததால் இவரின் வாசக தளம் விரிவடைய ஆரம்பித்ததோடு அமேஸன் கிண்டில் இணையதளத்திலும் தனனுடைய நூல்களை வெளியிட்டார்.

2022 இல் வெளிவந்த "பேகம் கதீஜாவின் சாமானிய ஜீவிதம்" என்ற இவருடைய முதலாவது நாவலிற்கு 2023 இல் கொழும்பு, மருதானை எல்பின்ஸ்டன் அரங்கில் நடைபெற்ற 66வது அரச இலக்கிய விழாவில் மிகச் சிறந்த தமிழ் நாவலிற்கான அரச சாகித்திய விருது கிடைத்துள்ளது.

குயிலோசை என்ற இலக்கியச் சந்திப்பை சுமார் ஐந்து வருடங்களாக நடத்தி வரும் இவர் காசநோய் கையேடு, நீரிழிவு நோய் கையேடு ஆகிய மருத்துவ நூல்களையும் வெளியிட்டுள்ளார். தற்போது கல்முனைப் பிராந்திய மலேரியாத் தடுப்பு இயக்கத்தின் பொறுப்பு மருத்துவ அதிகாரியாகக் கடமையாற்றி வரும் இவருக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர். மனைவியின் பெயர் தைஹிபா. தாயின் பெயர் ஜெமீலா உம்மா. அவர் ஓர் ஆசிரியை ஆகவும், தந்தை அதிபராகவும் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் வபாத்தானார்கள்.

30 வருடங்களுக்கு மேலாக வைத்தியராக பணிபுரிந்து வருகின்ற நௌஷாத்தின் எழுத்துப் பணி மேலும் சிறப்பாக அமைய வாழ்த்துவோம்.

**–எம்.சி.அன்சார்–**
**(சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)**










தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181

## MOO AND MOON – BORNE

*My land*
*My Moon*
*My jungle*
*My sea*
*My Body*
*Everything happening*
*My Mind*
*My Woodland*
*My memory probes*
*my milkoozing Full Moon*
*of childhood days long gone*
*Land is my 'Ummaa'*
*Sea, my 'Vaappaa'*
*I am one who sprang of*
*the seaembracing wave*
*I tumbled there*
*rolled there*
*I am the memory of*
*the Sea and Land's communion*
*Forest is my Pappaa*
*Moon, my Mammaa*
*I am the ray of sun  yes*
*born of Moon wasted away*
*in wilderness*
*My Land*
*My Moon*
*My Timespan*
*Upon all blooms a flower*
*One and only fragrance; existence*
*Well, mine is but,*
*existence*
*away from homeland, alas.....*

## நிலமும் நிலவு நிமித்தமும்

**நிலமும் நிலவு**
**நிமித்தமும்**
**எனது நிலம்**
**எனது நிலவு**
**எனது காடு**
**எனது கடல்**
**எனது உடல்**
**எல்லாமும் நிகழ்வுறும்**
**எனது மனம்**
**எனது வனம்**
**பால்யத்தில் பால் வழிந்த**
**என் பௌர்ணமியை**
**துலாவுகிறது நினைவு**
**நிலம் என் உம்மா**
**கடல் என் வாப்பா**
**கடல் தழுவிக்கிடந்த**
**அலையில் எழுந்தவன் நான்**
**வீழ்ந்தவன் நான் புரண்டவன் நான்**
**பொங்கியவன் நான்**
**நான் கடலும் நிலமும்**
**புணர்ந்த நினைவு**
**காடு என் வாப்பா**
**நிலவு என் உம்மா**
**காட்டிலெறித்த நிலாவைத் தழுவி**
**விரிந்த சூர்யக்கீற்று நான்**
**எனது நிலம்**
**எனது நிலவு**
**எனது காலம்**
**எல்லாவற்றின் மீதும்**
**மலர்கிறது ஒரு பூ**
**ஒரேயொரு வாசம்**
**வாசம் துறந்த வாழ்வெனக்கு**

முல்லை முஸ்ரிபா
ஆங்கிலத்தில்:
லதா ராம கிருஸ்ணன்

# ஓவியம், கூத்து, சினமா, புத்தகம்

கலை வாழ்வின் கூற்று; அதனை நிகழ்த்துதல் பண்பாட்டின் தொடருறு வெளிப்பாடு தான். ஈழத்தில் அத்தகைய வெளிப்பாட்டு ஆளுமைகள் இயங்குவது உயிர்ப்பானது தான்.

ஈழத்தில் பரவலாக்கம் பெறவில்லையெனினும் குவி மையமாக இத்தகைய கலைகளின் அரங்கு கூடிக் கொண்டுதானுள்ளது. கடந்த வாரங்களில் மட்டக்களப்பை மையங்கொண்டு இந்த வடிவங்கள் இயங்கின. ஓவியத்திருவிழாவை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், விபுலானந்தர் அழகியல் கற்கை நிறுவகமும் இணைந்து செப்டம்பர் 21,22,23 இல் நடத்தியது. ஓவியம் என்கிற தூரிகைக்கலை வடிவத்துக்கு இது உயிரூட்டும் முயல்வாகும்.

மரபு வழி, நவீன ஓவியங்களின் சங்கமமாக அல்லது படிமுறையின் வெட்டுமுகமாக இது அமைந்தது.

மட்டக்களப்பு காந்தி பூங்காவை ஈழத்து ஓவியப்பூங்கா நிறைத்தது. இலங்கை சிங்கள ஓவிய மரபு, தமிழ் ஓவிய மரபு, இஸ்லாமிய ஓவியமரபு, ஐரோப்பிய ஓவியமரபு, பழங்குடி ஓவியமரபென நீண்ட பண்பாட்டுத்தளத்தைக் கொண்டது. அதனை புதிய தலைமுறைக்கு



பரிசளித்தல் மற்றும் ஆற்றுப்படுத்தலாக இதனைக் கொள்ளலாம்.

கூத்து கிராமியப் பண்பாட்டின் சாறு; நமது ஆடற்கலை வடிவ மக்கள் ஈர்ப்பு சாதனம் ஆடல்நிலம் எனும் மகுடத்தில் போதை அரக்கனை இல்லாதொழிக்க வீறுநடை போடும் ஆற்றுகை யொன்று அண்மையில் மட்டக்களப்பில் ஆடப்பட்டது. திறந்த அரங்கில் இரவுப் பொழுதில் மக்கள் அல்லது கூத்து விரும்பிகள் முன்னிலையில் கூத்துக்கலையாடிகள் நிகழ்த்திய இக்கலை ஒரு விழிப்பூட்டல் கருவியாக அமைந்தது.

கடந்த வாரத்தில் மட்டக்களப்பு சர்வதேச திரைப்படவிழா , சிறகு நுனி கலை ஊடக மையத்தின் ஏற்பாட்டில் நிகழ்ந்தேறியது. 'இலங்கையில் சமூக ஒத்திசைவையும் சமாதானத்தையும் வலுப்படுத்துவதற்கான செயற்றிட்டம்'என்ற வகையில்'சமூக ஒத்திசைவுக்கான சினிமா'அமைகிறது.

கல்லடிப்பாலத்தருகில் வெளிப்புற திருவிழாவும்,தென் கிழக்கு பல்கலைக்கழக தொழிநுட்ப பிரிவில் உள்ளக சினிமாவும் காட்சியாயின.

ஜேர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின், அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கென்யா, ஈரான், நைஜீரியா, எகிப்து, பொஸ்னியா, இந்தியா, இலங்கையென பத்தொன்பது முழுப்படங்கள் மற்றும் ஆவணப்படங்கள் திரைப்பட விழாவை சிறப்பித்தன.

ஒக்டோபர் வாசிப்பு மாதத்தினை முன்னிறுத்தி புத்தகத் திருவிழாக்களும் தொடங்கின. கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி இம்முறையும் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் தொடங்கியது. பேஜஸ் புத்தகமும் கிழக்கில் தொடங்குகிறது. ஓவியம், கூத்து, திரைப்படம், வாசிப்பு கலையுணர்வின் பெருவிழா.



# பாராட்டுக்குரிய வகையில் முஸ்லிம் சேவை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவைக்கு நீட்சியான வரலாறு இருக்கிறது. அதற்குள் லட்சக்கணக்கான குரல்கள் பொதிந்துள்ளன. இலங்கை முஸ்லிகளின் தனித்துவமான ஊடகமாகத் திகழும் முஸ்லிம் சேவை முஸ்லிம்களின் ஊடக அடையாளம். ஆன்மீகத்தளத்தில் மட்டுமல்லாது சமூக, கல்வி, கலை, இலக்கியம், மொழி, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியமென விரிந்த தளங்களின் சுவடிக்கூடமாக அமைகிறது.




முஸ்லிம் சேவை கலையகத்துக்குள் மட்டும் கட்டுப்பட்டு விடாமல் நேரடி ஒலிபரப்பு, புறக்கள ஒலிப்பதிவு போன்றவற்றினூடாக இஸ்லாமியச் சமூக செயற்பாடுகளுக்கு உயிரூட்டி வருவதும் கவனத்துக்குரியது, பாராட்டுக்குரியது. அந்தவகையில் அதன் தற்போதைய பிரதானியையும், SLBC தலைவர் ஹட்சன் சமரசிங்கவையும் பாராட்டாமல் இருக்க முடியாது.


குறிப்பாக விஷேட தினங்களில் ஒலிபரப்பு ஏற்பாடுகள், முறைகள்,புதிய போக்குகளென கவனம் செலுத்தப்படுகிறது. மறுபுறம் காத்திரமற்ற நிகழ்ச்சிகளுக்கு அதிக நேரம் ஒதுக்கவும் படுகிறது. மேலும் புதிய தொனியிலான புத்தாக்க நிகழ்ச்சிகள் மீது இன்றைய யுகத்தின் கவன ஈர்ப்பும் அவசியமாகப்படுகிறது.

கடந்த மீலாது தினத்தில் நேரலையாக ஒழுங்குபடுத்தப் பட்டிருந்த விஷேட ஒலிபரப்பு முஸ்லிம் சேவையை சமூக வானொலியாக முன்னகர்த்தும் சிறு ஏற்பாடாகப் பார்க்க முடியும்.

இனியும் எதிர்காலத்திலும் சமூகத்தின் சகல துறைக்குமான சமூக ஊடகமாக முஸ்லிம் சேவை விளம்பர ஒலிபரப்பு என்கிற மாயை தாண்டி தன் காலடிகளை முன்னகர்த்த வேண்டும்.

**மீரான்**

# புதுநானூறு 06



தீக்குச்சி விளக்கை ஏற்றியது/ எல்லோரும் விளக்கை வணங்கினார்கள்/ பித்தன் கீழே நீங்கள் உங்கள் தீக்குச்சிகளைக் கொண்டாடுவதில்லை /விளக்குகளையே

கொண்டாடுகிறீர்கள்/ அதனால்தான் உங்கள் திருவிழாக்கள் இருட்டிலேயே இருக்கின்றன/ தீக்குச்சி தான் பிரசவிக்கிறது / விளக்கோ வெறும் தொட்டில்/தீக்குச்சி தான் எழுதுகிறது/ விளக்கோ வெறும் காகிதம்/ தீக்குச்சி பிச்சை போடுகிறது/ விளக்கோ வெறும் பிச்சைப் பாத்திரம்/ தீக்குச்சி ஒரே வார்த்தையில் பேசி விடுகிறது/ விளக்கோ வளவளக்கிறது/ தீக்குச்சி ஒளிக்காக தன்னையே தியாகம் செய்து விடுகிறது/ விளக்கோ ஒளியினால் பிழைக்கிறது/ நீங்கள் உங்கள் தீக்குச்சிகளைக் கொண்டாடுவதில்லை/விளக்குகளையே

கொண்டாடுகிறீர்கள்/ அதனால்தான் உங்கள் திருவிழாக்கள் இருட்டிலேயே இருக்கின்றன/ நீங்களும் தீக்குச்சியாக இருக்க விருப்புவதில்லை/ விளக்காக இருக்கவே விரும்புகிறீர்கள்/ அது தான் சூரிய வேளையில் நீங்கள் அணைக்கப்பட்டு விடுகிறீர்கள்/ இதோ இந்த குச்சியிலிருந்து புறப்படும் அமர ஒளியை /உங்களால் காண முடிந்திருந்தால்/ உங்கள் ஆடம்பர விளக்குகளின் பிரகாசத்தில்/ உங்கள் கண் குருடாயிருந்திருக்காது. தீக்குச்சி கவிதை கவிக்கோவின் தத்துவ சிந்தனையின் வெளிப்பாடு; வாசக சிந்தனைக் கிளறல்;

எளிய மொழியால் அவர் வரையும் சொற்கோலம் அவருக்கேயான தனித்துவம். தீக்குச்சி குறியீடாகி நிற்கிறது. அது எழுப்பும் கேள்விகள் கனதியானவை. கவிக்கோ, தமிழ்க்கவிதைக்கு குறீயீடு, படிமம், கஸல், ஹைக்கூ, மீ மெய்ம்மை இயல் என அறிமுகங்கள் காட்டிய கவிமுகம்.

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்—26

நடிகர் சந்திரபாவுவை எம்.ஜி.ஆர் பழி வாங்கியதாக ஒரு கதை நிலவியது பற்றி பார்ப்போம். “மாடி வீட்டு ஏழை” எனும் படத்தில் எம்.ஜி.ஆரை கதாநாயகனாக போட்டு நடிகர் சந்திரபாபு இயக்கி, சொந்தப்படம் எடுத்தார். இதற்கு முன் “தட்டுங்கள் திறக்கப்படும்” என்ற படத்தை சந்திரபாபு இயக்கி வெளியிட்டிருந்து சுமாராக ஓடியது. எம்.ஜி.ஆர் மாடி வீட்டு ஏழை படத்தில் முதல் நாள் நடித்தார். இருவருக்கும் படப்பிடிப்பு தளத்திலேயே பிரச்சினை ஏற்பட்டது. மதிய சாப்பாட்டுக்காக வீட்டுக்குச் சென்ற எம்.ஜி.ஆர் திரும்பி வரவில்லை. படம் ஒருநாள் படப்பிடிப்போடு நின்றுவிட்டது. சந்திரபாபு வைத்த கெமரா கோணங்களை எம்.ஜி.ஆர் மாற்ற முற்பட்டது சந்திரபாபுவுக்கு பிடிக்கவில்லை. சந்திரபாபு எம்.ஜி.ஆரை நோக்கி படத்தின் இயக்குநர் நான்தான் எனவே கெமராக் கோணம் அமைப்பது எனது உரிமை அதை மாற்றுவதற்கு உங்களுக்கு உரிமை இல்லை என்று பேசினார். இந்தப் பிரச்சினையால்தான் எம்.ஜி.ஆர் சந்திபாபுவை பழி வாங்கி விட்டதாக கதை அடிபட்டது. ஆனால் உண்மை வேறு. சந்திரபாபுவின் மாடி வீட்டு ஏழை படத்திற்கு நிதி உதவி செய்யும் ஒரு வட்டிக்காரரை எம்.ஜி.ஆர் தான் சிபாரிசு செய்திருந்தார். சந்திரபாபு வட்டிக்காரரை அடிக்கடி பார்க்கச் சென்றார். அப்போது சந்திரபாபு ரசிகர்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்ற இளம் நடிகர். சந்திரபாபுவின் டான்ஸ் மக்களிடம் கைதட்டல் பெறும். அப்படியான நிலையில் அந்த வட்டிக்காரரின் வீட்டிற்கு அடிக்கடி சென்ற போது வட்டிக்காரரின் மனைவியுடன் காதல் ஆசை உண்டாகிவிட்டது. வட்டிக்காரர் இல்லாத நேரத்தில் சந்திரபாபுவும் வட்டிக்காரரின் மனைவியும் அடிக்கடி சந்தித்தார்கள். இருவருக்கும் உள்ள கள்ளக் காதல் தொடர்பு வட்டிக்காரருக்கு தெரிந்து விட்டது. உடனே வட்டிக்காரர் எம்.ஜி.ஆரிடம் சென்று தனது குடும்பத்தை சந்திரபாபு கெடுத்துவிட்டார் என்று அழுதார். எம்.ஜி.ஆர் சந்திரபாபுவை வரவழைத்து இந்த விடயம் சம்பந்தமாக விளக்கம் கேட்டார். அதற்கு சந்திரபாபு எம்.ஜி.ஆரை நோக்கி அந்த வட்டிக்காரரின் மனைவிதான் தானாக தன்னை விரும்பினார். நான் அவளை பலவந்தப்படுத்தவில்லை என்றார்.



'பறக்கும் பாவை' படத்தில் எம்.ஜி.ஆருடன் சந்திரபாபு.

வட்டிக்காரரை சிபாரிசு செய்தது நான். நடந்த தவறுக்கு இப்போது நானும் பொறுப்பாளியாகிவிட்டேனே, இனி அவ்விடம் செல்ல வேண்டாம் என்றார் எம்.ஜி.ஆர். இது சம்பந்தமன வாக்குவாதத்தின் விளைவால்தான் எம்.ஜி.ஆர் மாடி வீட்டு ஏழையில் நடிக்க மறுத்துவிட்டார். இதுதான் உண்மை. இருந்தும் நடிகர் சந்திரபாபு படமெடுத்து நஷ்டப்பட்டதால் எம்.ஜி.ஆர் பணஉதவி செய்தார் என்பதுதான் உண்மை. எம்.ஜி.ஆர் எப்போதும் மற்றவர்களுக்கு உதவி செய்பவராகவே இருந்தார். அடுத்தவர்களுக்கு தொந்தரவு செய்பவராக இருக்கவில்லை. எம்.ஜி.ஆர் தனக்கு வேண்டியவர்கள் சினிமாத்துறை, அரசியல்துறை, அரசாங்கதுறையாக இருந்தாலும் அவர்களுக்கு யாருக்காவது ஏதேனும் விபத்து ஏற்பட்டால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் காலத்தில் எம்.ஜி.ஆருக்கு விஷயம் தெரிந்தால் உடனே அங்கு சென்று அவர்களைப் பார்த்து நலம் விசாரித்து ஆறுதல் சொல்லி அவர்களுக்கு ஏதேனும் பண உதவி தேவைப்படுமானால் அதை உடனே செய்பவராகவே இருந்தார். அடுத்து தனக்கு வேண்டியவர்களான சினிமாத்துறை, அரசியல்துறை, அரசாங்கதுறையில் யாராவது இறந்த செய்தி அறிந்தால் அதற்குத் தகுந்தாற்போல் உடனே அங்கு சென்று குடும்பத்தாருக்கு ஆறுதல் சொல்லி சற்றுநேரம் மௌனமாக இருந்துவிட்டு வருவதும் எம்.ஜி.ஆரின் பழக்கமாகவே இருந்தது. இது சாதாரண குடும்பத்தைச் சேரந்தவர்களாக இருந்தாலும் ஒன்றும் நினைக்கமால் தவறாமல் அந்த காரியத்திற்கு சென்று வருவார். இதேபோல் தன்னுடன் மிக நெருங்கி பழகிய தன்னிடம் பணி புரிந்த தொழிலாளர்கள், படமுதலாளிகள், இயக்குநர்கள், அரசியல் தலைவர்கள், எம்.எல்.ஏ எம்.பி. மந்திரிகள் போன்றவர்களுக்கு இறுதி சடங்கு நடக்கும் மயானம் வரை சென்று இறுதி சடங்கு முடியும் வரையில் இருந்து வருவார். இதை ஒரு கடமையாகவே செய்து வந்தார். 1969ஆம் ஆண்டு எம்.ஜி.ஆரால் தாங்;கிக் கொள்ள முடியாத சோதனை ஒன்று ஏற்பட்டது. எம்.ஜி.ஆருக்கு அரசியல் ஆசானாக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. கடைசிக் கட்டத்தில் சென்னை அடையார் புற்று நோய் மருத்துவமனையில் வைத்தியத்திற்காக பேரறிஞர் அண்ணா சேர்க்கப்பட்ட சமயம் ஆஸ்பத்திரிக்கு வந்து பேரறிஞர் அண்ணாவை பார்க்க வரும் வெளியூர் கட்சிப் பிரமுகர்கள் அத்தனை பேர்களுக்கும் மதிய உணவுக்காக சைவ சாப்பாடு, அடையாரிலுள்ள சத்யா ஸ்ரூடியோவில் பெரிய பந்தல் போட்டு பத்து சமையல்காரர்கள் நியமித்து சாப்பாடு போட்டார். அதாவது காலை, மதியம் ஆஸ்பத்திரிக்கு வந்து பேரறிஞர் அண்ணாவை பார்த்துவிட்டு மதியம் 12.00 மணிக்கெல்லாம் சாப்பாடு தயாராக இருக்கும். வந்தவுடன் சாப்பிட்டுவிட்டு போவார்கள். இப்படி இரண்டு வாரம் நடந்தது. 1969 ஆம் அண்டு பெப்ரவரி மாதம் பேரறிஞர் அண்ணா இறந்து போனதையடுத்து எம்.ஜி.ஆர் மிகுந்த கவலையுடன் காணப்பட்டார். எம்.ஜி.ஆர் பேரறிஞர் அண்ணாவின் இறந்த நாளன்று காலையில் சமாதிக்கு சென்று மலர் வளையம் வைத்து வணங்கிவிட்டு பிறகு அன்று முழுவதும் யாரிடமும் பேசமாட்டார். இரவு வரையிலும் எதுவும் சாப்பிடமாட்டார். இதேபோல் தன்னை எம்.ஆர்.ராதா துப்பாக்கியால் சுட்ட நாளன்றும் மௌனமாகவும் எதுவும் சாப்பிடாமலும் இருப்பார். எம்.ஜி.ஆர் அரசியல் வாழ்க்கையில் 1947 ஆம் அண்டிலிருந்து 1953 வரை காங்கிரஸிலிருந்து காமராஜரை குருவாக ஏற்று கதர் வேட்டி, கதர் ஜிப்பா அணிந்தவர். பிறகு 1954 ஆம் ஆண்டில் கலைஞர் கருணாநிதியின் தூண்டுதலில் பேரறிஞர் அண்ணாவினுடைய திராவிட முன்னெற்ற கழகத்தில் இணைந்து அண்ணாவின் அன்பைப் பெற்றார். (தொடரும்)



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# கடுகளவேனும் தற்பெருமை இல்லாத கலைஞன்

பாடும் நிலாவின் மூன்றாமாண்டு நினைவஞ்சலி தினம் 25.09.2023ஆம் திகதி ஆகும். எஸ்.பி.பாலசுப்பிரமணியம் எனும் ஓர் சங்கீத சாம்ராஜ்யம் ரசிகர்களின் துன்ப சாகரத்தில் மூழ்கி இரண்டு வருடம் கண்ணீரில் கரைந்தது. இந்திய சினிமா வரலாற்றின் இசையுலகில் யாரும் ஆற்ற முடியாத பல சாதனைகளுக்கு சொந்தக்காரர் "பாடும் நிலா அமரர்" எஸ்.பி.பாலசுப்பிரமணியம். 1946 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 04 ஆம் திகதி ஆந்திர மாநிலம் நெல்லூரில் சாம்பமூர்த்தி, சகுந்தலம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார் எஸ்.பி.பாலசுப்பிரமணியம். இரண்டு சகோதரர்கள், ஐந்து சகோதரரிகள், மகன் சரண், மகள் பல்லவி. இவர் தந்தையும் ஓர் பாடகரே. இருந்தும் எஸ்பிபியை ஓர் இன்ஜினியராக்க வேண்டும் என்பதே இவரின் கனவு.ஆனால் தந்தை வழியே மகனும் இசையில் ஆர்வம் கொண்டு பிற்காலத்தில் வையம் போற்றும் இசைக்கலைஞரானார். ஆந்திர மாநில அனந்தபூரில் JNTU யுனிவர்சிட்டி யில் படிக்கும்போது தைபோஃயிட் வந்ததால் தொடர்ந்து கல்லூரியில் படிக்க முடியாத சூழ்நிலையில் சென்னைக்கு விஜயம் மேற்கொண்டார். சென்னையில் ஓர் கல்லூரியில் படித்துக் கொண்டே இசைத்துறையில் ஈடுபடத்தொடங்கினார். பின், இளையராஜா, பாஸ்கர், கங்கை அமரன் போன்றோரின் நட்பு கிடைக்கவே அவர்களுடன் இணைந்து இசைக்கச்சேரிகளில் தனது ஆற்றலை பதித்தார். தமிழ்த்திரையில் பாட வேண்டும் என்பதே இவரின் லட்சியமாக இருந்தது. ஆயினும் கடும் பிரயத்தனத்திற்கு பின் 1966 இல் தெலுங்கு இசையமைப்பாளர் கோதண்டபாணியின் இசையில் "ஸ்ரீஸ்ரீஸ்ரீ மரியாதை ராமண்ணா "என்ற தெலுங்கு படத்தில் முதல் முறையாக பாடும் வாய்ப்பு எஸ்பிபிக்கு கிடைத்தது. இவரின் திறமையை அறிந்த எம்.எஸ்.விஸ்வநாதன் "ஹோட்டல் ரம்பா"என்ற தமிழ் படத்தில் "அத்தானோடு இப்படியிருந்து எத்தனை நாளாச்சு"என்ற பாடலை முதல் முறையாக தமிழில் பாடவைத்தார். ஆனால் படம் வெளிவரவில்லை. இதன் பின் "சாந்தி நிலையம்"படத்தில் ஜெமினி கணேசனுக்காக "இயற்கை எனும் இளைய கன்னி "என்ற பாடலை பாடினார். ஆனால் இப்படம் வெளிவருமுன் 1969 இல் எம்ஜியாரின் "அடிமைப்பெண்" வெளியாகி விட்டது. அப்படத்தில் எம்ஜியாருக்காக கே.வி. மகாதேவன் இசையில், புலவர் புலமைப்பித்தன் வரிகளில் இவர் பாடிய "ஆயிரம் நிலவே வா"என்ற பாடல் பிரபல்யமடைந்தது. தமிழ்த்திரையில் அப்போது இசைத்துறையின் வெற்றிக் கொடியை தன்னகத்தே கொண்டிருந்த டி.எம்.சௌந்தரராஜனுக்கு நிகரான ஓர் பாடகர் உதயமாகிவிட்டார் என ஊடகங்களில் செய்தி பரவி,எஸ்பிபி தமிழ் நாடு முழுவதும் அறியப்பட்டார். முதன்முதலாக நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு1971 இல் வெளியான "சுமதி என் சுந்தரி" படத்தில் "பொட்டு வைத்த முகமோ" என்ற பாடலை பாடினார். 1966 முதல் எஸ்பிபி மரணத்தை தழுவும் வரை இசையை தழுவிக்கொண்டிருந்தார். 16 மொழிகளில் சுமார் 42000 பாடல்களை பாடி உலக சாதனை செய்தவர் எஸ்பிபியே! இது ஓர் கின்னஸ் சாதனை. ஆறு முறை தேசிய விருது பெற்றுள்ளார். கர்நாடக சங்கீதம் தெரியமாலே "சங்கராபரணம்" படத்திற்காக குறுகிய காலத்தில் கர்நாடக சங்கீதம் பயின்று இப்படத்தின் மாபெரும் வெற்றிக்கு வித்திட்டவர் எஸ்பிபி. இவர் முதல் தேசிய விருது பெற்றது இப்படத்திற்குத்தான். என்.டி.ராமராவ், நாகேஷ்வரராவ் போன்ற பெரிய தெலுங்கு நடிகர்களுக்கு பின்னணி குரல் கொடுத்தவர் எஸ்பிபி. ஏறத்தாழ இந்திய மொழிகளில் நிறைய பாடல்களைப் பாடிய பெருமை எஸ்பிபிக்கு மட்டுமே உரிய சிறப்பு. இவர் பெறாத விருதுகளே இல்லை எனலாம். ஆந்திர மாநிலத்தின் உயர்விருதான "நந்தி" விருதினை பல தடவைகள் பெற்றுள்ளார். தமிழக அரசின் கலைமாமணி விருது, மத்திய அரசின் "பத்மஸ்ரீ" (2001) பத்மபூஷண் (2011) போன்ற உயர் விருதுகளை கொண்டவர் எஸ்பிபி. கமல் நடித்த ஹிந்தி திரைப்படமான "ஏக் தூ ஜே கேலியே "படத்தில் இவர் பாடிய அத்தனை பாடல்களும் மகராஷ்டிரா மாநிலத்தில் மட்டுமல்லாது உலகெங்கிலும் பட்டி தொட்டியெல்லாம் ஜனரஞ்சகம் கண்டது. மும்பை பாடகர்கள் இவரின் வரவையிட்டு வயிற்றில் புளி கரைத்தது போல் உணர்ந்தனர். தொடர்ந்து ஹிந்தியில் பாடினாலும், தமிழ் தெலுங்கு மொழிகளில் தான் அதிகம் பாடினார் எஸ்பிபி. மக்கள் திலகம், நடிகர் திலகம், கமல், ரஜினி முதற்கொண்டு இப்போதைய தலைமுறை நடிகர்கள் அனைவருக்கும் பாடிய பாடகர் என்ற சிறப்பினை பெற்றவர் எஸ்பிபி ஒருவரே! எல்லா நடிகர்களுக்கும் ஏற்றவாறு குரலில் மாற்றம் செய்து பாடும் திறமையை கொண்டவர் எஸ்பிபி. 50 இற்கும் மேற்பட்ட திரைப் படங்களில் நடித்து தனது இயற்கை நிறைந்த நடிப்பின் இயல்பை பதிவிட்டவர் எஸ்பிபி. சில திரைப்படங்களுக்கு இசையமைத்துமுள்ளார். ரஜினியின் துடிக்கும் கரங்கள், தான் கதாநாயகனாக நடித்த சிகரம் மற்றும் சில தெலுங்கு படங்களுக்கு இசையமைத்துள்ளார். அவற்றிலும் தனது நேர்த்தியான பங்களிப்பை நல்கியவர் எஸ்பிபி. பல நடிகர்களுக்கு பின்னணி குரல் கொடுத்தவர் எஸ்பிபி. கமலஹாசன் நடித்த 120 இற்கும் மேற்பட்ட தமிழ் படங்கள், தெலுங்கு மொழியில் டப்பிங் செய்யப்பட்ட போது கமலஹாசனுக்காக டப்பிங் கொடுத்தவர் இவராவார். கமல் பத்து வேடங்களில் நடித்த "தசாவதாரம் "தெலுங்கு பதிப்பில் ஏழு வேடங்களுக்கு ஏற்றவாறு டப்பிங் கொடுத்தவர் எஸ்பிபி. தனது 21 ஆம் வயதிலே சாவித்திரி என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார் எஸ்பிபி. தற்பெருமை என்பது இக்கலைஞனிடம் கடுகளவேனும் கிடையாது. யாவரிடமும் ஓர் குழந்தையைப் போல் பழகும் இயல்பை கொண்டவர் இம்மகாபுருஷர். இவர் போகாத நாடுகள் இல்லை, பாடாத மேடைகள் இல்லை. பல படங்கள் இவரின் தனித்துவமான குரலுக்காகவே வெள்ளி விழா கண்டன என்பது நிதர்சனமான உண்மை. கே.வி. மகாதேவன், எம்.எஸ்.விஸ்வநாதன், சங்கர் கணேஷ் , இளையராஜா, ஏ.ஆர்.ரஹ்மான் முதல் இப்போதைய ஜி.வி.பிரகாஷ் போன்ற இளம் தலைமுறை இசையமைப்பாளர்கள் வரை இசை யாகத்தில் வேள்வி செய்தவர் என்ற சிகரத்திற்கு உரியவர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம். இலங்கைக்கு பல தடவைகள் வந்து கலை நிகழ்ச்சிகள் நடாத்தி இசை வெள்ளத்தில் ரசிகர்களை மூழ்கச்செய்தவர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம். "முடிசார்ந்த மன்னரும் முடிவில் பிடிசாம்பராவர்" என்ற விதிக்கு யாரும் விதிவிலக்கல்ல. இசையெனும் தென்றலை சுவாசித்த சங்கீத சிகரத்தின் இறுதி சுவாசம் கடந்த 2020.09.25 அன்று காற்றோடு கலந்தது. எஸ்.பி.பி யின் ஈடு செய்ய முடியாத இந்த பேரிழப்பு உலகம் முழுதும் வாழும் அவரது கோடிக்கணக்கான ரசிகர்களுக்கு ஓர் பேரிடியாக அமைந்தது. இலங்கை வானொலிகளில் பல பாடல்கள் ஒலிபரப்பானால் அதில் பாதிப்பாடல்கள் "பாடும்நிலா"பாடியதாகவே இருக்கும். உலக இசை வரலாற்றில் எஸ்.பி.பாலசுப்பிரமணிம் ஓர் "துருவநட்சத்திரம்" கானக் குரலோன் மறைந்தாலும் காவியாய் ஓவியமாய் இசை வாழும் வரை எஸ்.பி.பி எனும் இசைக்கோமகன் ரசிகர்கள் நெஞ்சமதில் என்றென்றும் வாழ்வார் நீக்கமற!



கீழ் கண்ட படம் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் இலங்கை வந்த போது அவருடன் இணைந்து எடுத்தது...!



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

# சாய்ந்தமருது அஷ்ரப் வித்தியாலயம் சாதனை




சிறுவர் தடகள விளையாட்டு போட்டியில் சாய்ந்தமருது அஷ்ரப் வித்தியாலயம் சம்பியன் பட்டத்தைச் சுவீகரித்துள்ளது. சிறுவர் தடகள விளையாட்டு போட்டியில் கல்முனை வலய மட்டத்தில் தரம் 3 மற்றும் 4 ஆகிய இரண்டு பிரிவுகளிலும் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலயம் முதலிடம் பெற்றுள்ளது. இதற்காக மாணவர்களை பயிற்றுவித்த பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் எம்.எப்.எம்.றிபாஸ் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.என்.எம்.ஆபாக் ஆகியோரையும் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளையும் பாராட்டும் நிகழ்வு (27) பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.